வெளியீடு 24-8-2005 Issued 24-3-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மார்ச் 18, 2005—தொகுதி 74—எண் 1**

**Friday the 18th March, 2005 —Volume 74—No. 1**

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...e Assembly Secretariat, Chennai - 600 009

D
V211, 31' P05
P05.74.1
22664,

[Price Rs. 3.00

18-03-2005

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் II) | 1-33 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| தளி தொகுதியில் வனத் துறை மூலம் சாலைகள்-அமைத்தல் | 33-36 |
| **3. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 36 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு | 36 |
| (இ) மனுக்கள் குழு | 37 |

பக்கங்கள்

4. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை—தொடர்ச்சி ... 37-77

*மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ... 37-68

(ஆ) கோரிக்கை எண் 45–தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை ... 78-92

(இ) கோரிக்கை எண் 43 –சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ... 93-156

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி ... 78,104,135, 138-139, 155,156

*மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி ... 93,104, 113,146

திரு. வி. கணேசன் ... 97,105-113

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி ... 114-122

*திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி ... 122-128

திருமதி காசாம்பு பூமாலை ... 129-135





பக்கங்கள்

4. **மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. என். நன்மாறன் ... 99,135-141

திரு. வே. கிருஷ்ணமூர்த்தி ... 141-149

திரு. எச். ராஜா ... 149-155

5. **அரசினர் தீர்மானம்**—

விதி 32-ஐத் தளர்த்தல் ... 157-158

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**– ... 158-159

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

D
V211,31'P05
P05.74.1
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22664
சென்னை-600 008

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. **உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



10. **ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. **போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. **வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

19. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:

மீன்வளம்.

22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. | **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. | **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar:**<br>Law, Courts and Information Technology. |
| 5. | **Minister for Food and Co-operation** | .. **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**<br>Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

| | | |
|---|---|---|
| **20. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| **21. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| **22. Minister for Tourism** | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |
| **23. Minister for Labour** | .. | **The Hon. Thiru P. Annavi:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| **24. Minister for Information & Publicity and Local Administration** | .. | **The Hon. Thiru K.P. Anbalagan:** Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply. |
| **25. Minister for Sports and Youth Welfare** | .. | **The Hon. Thiru Inbathtamilan:** Sports and Youth Welfare. |

\- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அண்ணாதுரை, திரு. செ. .. ஜெயங்கொண்டம்
3. அண்ணாமலை, திரு. கு. .. தென்காசி
4. அண்ணாவி, திரு. ப. .. தொட்டியம்
5. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
6. அய்யாறு வாண்டையார், திரு. கே. .. திருவையாறு
7. அரசன், திரு. ப. .. அறந்தாங்கி
8. அருணாசலம், திரு. அ. .. வரகூர் (செ.வ.)
9. அருள், திரு. பி.எஸ். .. புவனகிரி
10. அழகம்மாள், திருமதி வி. .. தலைவாசல் (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. ஆகு.சி. .. பெரணமல்லூர்
13. அன்பழகன், திரு. கு. .. நிலக்கோட்டை (செ.வ.)
14. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
15. அன்பழகன், திரு. ஜெ. .. தியாகராய நகர்
16. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
17. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
18. அன்வர் ராஜா, திரு. அ. .. இராமநாதபுரம்
19. ஆண்டிவேல், திரு. ப. .. வேடசந்தூர்

53-31—2a

20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. வி. - மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. கு.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. - சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா், திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சினிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. துரைமுருகன், திரு. - காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
131. நடராசன், திரு. வது. - இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
136. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி - போளூர்
138. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. - குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I
145. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
154. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. - சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
176. மணி, திரு. டி. - விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. - கடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. - தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. - சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
193. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். - காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

| | | |
|---|---|---|
| 204. | லட்சுமணன், திரு. வி.கே. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. அரவக்குறிச்சி |
| 206. | வடிவேல், திரு. ஆர். | .. வாணியம்பாடி |
| 207. | வளர்மதி, திருமதி பா. | .. ஆலந்தூர் |
| 208. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. மதுரை மேற்கு |
| 209. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. | வாசுதேவன், திரு. பெ. | .. மதுராந்தகம் |
| 211. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 212. | வில்வநாதன், திரு. இரா. | .. சோளிங்கர் |
| 213. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. பூங்கா நகர் |
| 214. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. புதுக்கோட்டை |
| 215. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. பனமரத்துப்பட்டி |
| 216. | வீரபாண்டியன், திரு. ஜெக. | .. மயிலாடுதுறை |
| 217. | வெங்கடாசலம், திரு. அ. | .. ஆலங்குடி |
| 218. | வெங்கடாஜலம், திரு. செ. | .. சேலம்-I |
| 219. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 220. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 221. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 222. | வேல் முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 223. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. தாம்பரம் |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 225. | ஜீவானந்தம், திரு. இரா. | .. நாகப்பட்டினம் |
| 226. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. | ஜெயக்குமார், திரு. கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 229. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 230. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 231. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. மதுரை மத்தி |
| 232. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. திருவட்டாறு |
| 233. | (வெற்றிடம்) | .. காஞ்சிபுரம் |
| 234. | (வெற்றிடம்) | .. கும்மிடிப்பூண்டி |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 5, தாரண—திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 18, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்."*

'என் குடியை மேன்மேலுயர்த்தக் கடவேன்' என்னும் உறுதிகொண்டு, அதற்கேற்ற முயற்சியைச் செய்யும் ஒருவருக்கு, உதவி செய்யும் பொருட்டுத் தெய்வமும் தன் ஆடையை வரிந்து கட்டிக்கொண்டு தானே அவருக்கு முன் வந்து நிற்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

### பட்டியல்-11@

1—

### சாலைகளில் வேகத்தடை

**வினா எண் 35148—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

(அ) பண்ருட்டி தொகுதி – எல்.என். புரம் ஊராட்சியில் உள்ள ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு எதிரில் சென்னை சாலையில் ஒரு வேகத்தடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வேகத்தடை அமைக்க கோரப்பட்டுள்ள சாலை, விக்கிரவாண்டி–கும்பகோணம்–தஞ்சாவூர் சாலை (மாநில சாலை) ஆகும். தற்போது, அரசு சாலைகளில் வேகத்தடை அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட இடத்தில் வேகத்தடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

2—

## சாலையினை மேம்படுத்துதல்

**வினா எண் 42426—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, திருவெள்ளரை–ஓமாந்தூர் சாலை 0/0 – 8/0 கி.மீ. சாலையினை நடப்பாண்டில் மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் பெயர் "திருவெள்ளரை – ஓமாந்தூர்" இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையின் மொத்த 8 கி.மீ. நீளத்தில், 4.4 கி.மீ. நீள சாலை போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள சாலையில் பழுதாகும் பகுதிகள் அவ்வப்போது தார்நொடிகள் போட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.



3—

## பயணியர் விடுதி கட்டடம்

**வினா எண் 42432—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான பயணியர் விடுதி கட்டடத்தைப் புதிதாக கட்டித்தர அரசு உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தற்போதைக்கு இல்லை.

4—

## பொது நீர்வழியைத் தூர்வாரிச் செப்பனிடுதல்

**வினா எண் 43774—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆண்டி வாய்க்காலில் உள்ள பொது நீர் வழியைத் தூர்வாரிச் செப்பனிட்டுக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் விவசாயத் தொழிலாளர்களுக்கான வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் கடந்த மே மாதம் 2003-ல் சீர்காழி தொகுதி, ஆண்டி வாய்க்கால் தலைப்பு முதல் 6 கி.மீ. வரை தூர் வாரப்பட்டுள்ளது.

5— [2005 மார்ச் 18

புதிய கிராம கூட்டுறவு அங்காடி

**வினா எண் 37354—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, சேத்தூர் ஊராட்சி, புதிய கிராம கூட்டுறவு அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** குத்தாலம் தொகுதி, சேத்தூர் ஊராட்சியில் கிளியனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் சேத்தூர் நியாயவிலைக் கடை முழுநேரக் கடையாக 246 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது.

இந்த அங்காடியில் ஏற்கெனவே மிகவும் குறைந்த அளவில் 246 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் சேத்தூர் ஊராட்சியில் புதிய கூட்டுறவு அங்காடி அமைப்பதற்கான அவசியம் எழவில்லை. கூட்டுறவு அங்காடிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தற்போதைய அரசுத் திட்டங்களின்கீழ் வழிவகை செய்யப்படவில்லை.

6—

கூட்டுறவு நியாயவிலைக் கடை

**வினா எண் 53453—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, கிளாப்பாக்கம் ஊராட்சி, நரப்பாக்கம் ஊராட்சியிலுள்ள அகஸ்தீஸ்வரமங்கலம் கிராமம் மற்றும் விட்டிலாபுரம் ஊராட்சி, விட்டிலாபுரம் கிராமம், இளையனார்குப்பம் கிராமத்தில் கூட்டுறவு நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2005 மார்ச் 18]

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** செங்கல்பட்டு தொகுதி, கிளாப்பாக்கம் ஊராட்சியில் உள்ள கிளாப்பாக்கம் கிராம கூட்டுறவு முழுநேர நியாயவிலைக் கடை 270 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாயவிலைக் கடைக்கு அரசுத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டித்தர தற்போது வழிவகை செய்யப்படவில்லை.

நரப்பாக்கம் ஊராட்சியில் உள்ள அகஸ்தீஸ்வரமங்கலம் கிராமத்தின் 48 குடும்ப அட்டைகள், அருகிலுள்ள நரப்பாக்கம் கூட்டுறவு நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. நரப்பாக்கம் கூட்டுறவுக் கடை தற்போது வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

விட்டிலாபுரம் ஊராட்சியிலுள்ள விட்டிலாபுரம் முழுநேர நியாயவிலைக் கடை 455 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடைக்கு அரசுத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டித்தர தற்போது வழிவகை செய்யப்படவில்லை.

விட்டிலாபுரம் ஊராட்சி, இளையனார்குப்பத்தில் 134 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது. நடைமுறையிலுள்ள வரையறைகளின்படி, பகுதிநேரக் கடைக்கு ஊர் மக்கள்தான் இலவசக் கட்டட வசதி செய்து தர வேண்டும்.

7—

சத்துணவுக் கூடத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 45656—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சக்தி எஸ்டேட் ஒன்றிய தொடக்கப் பள்ளியின் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட சக்தி எஸ்டேட் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி சத்துணவு மையக் கட்டடம், பேரூராட்சி பொது நிதியின்கீழ் 2003–2004 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ரூ.1,00,000/– மதிப்பீட்டில் புதிதாக கட்டடம் கட்டப்பட்டு 1-7-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

**8—**

## பள்ளிக்கு சத்துணவுக் கூடம்

**வினா எண் 45657—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் உருளிக்கல் சோதனைச்சாவடி தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட உருளிக்கல் சோதனைச்சாவடி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு புதிய சத்துணவுக் கூடம் கட்ட ரூ.1,00,000/– பேரூராட்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**9—**

## சத்துணவு மையத்திற்கு புதிய கட்டடம்

**வினா எண் 46298—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பன்னிமேடு எஸ்டேட், பங்களா பிரிவு 14–வது வார்டு, யானைகள் இடித்து தரைமட்டம் செய்துவிட்ட தொடக்கப் பள்ளியை சத்துணவுக் கூடத்தை மீண்டும் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பேரூராட்சி, பன்னிமேடு பங்களா டிவிஷனிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் மற்றும் சத்துணவு மையம் ஆகியவற்றை யானைகள் இடித்து சேதப்படுத்தியதைத் தொடர்ந்து, பேரூராட்சி பொது நிதியிலிருந்து பள்ளிக் கட்டடம் கட்ட ரூ.55,000/– புதிய சத்துணவு மையம் கட்ட 11–வது நிதிக் குழு மானியம் 2003–2004–ல், ரூ.1,00,000/– செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு சத்துணவு மையம் தற்போது செயல்பட்டு வருகிறது.

**10—**

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 47179—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், வெட்டிவயல் ஊராட்சி, வீரராகவபுரம் கிராமத்தில் சத்துணவுக் கூடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், வெட்டிவயல் ஊராட்சி, வீரராகவபுரம் கிராமத்தில் 2003–2004 ஆம் ஆண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய். (சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜ்னா) திட்டத்தின் மூலம் சர்வே எண் 47/2–ல் பள்ளி சத்துணவுக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**11—**

## ஐஸ் வியாபாரிகளுக்குக் கடனுதவி

**வினா எண் 62968—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 18

(அ) உடுமலை நகரில் ஐஸ் வியாபாரிகளுக்கு கடனுதவி வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தொழில் வணிகத் துறை மூலமாக ஐஸ் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு சிறு தொழில் பதிவுச் சான்றிதழ் வழங்குவதுடன், அந்த நிறுவனங்களுக்குத் தேவையான மூலதனத்திற்கு கடன் உதவிக்கு, வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது. மாறாக ஐஸ் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு தொழில் வணிகத் துறையின் மூலம் கடனுதவி வழங்கிட நடவடிக்கை எடுக்க இயலாது.

மேலும் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வியாபாரம் போன்ற இனங்களுக்கு வங்கியில் கடனுதவி பரிசீலிக்கப்படுவதால், 8 ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்து 35 வயது முடிவடையாதவராக உள்ள நபர்களுக்கும், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவராக இருந்தால் 45 வயது பூர்த்தி அடையாதவராக இருக்கும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் ஐஸ் வியாபாரம் செய்ய கடனுதவி பெற தொழில் வணிகத் துறைமூலம் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

**12—**

## தேயிலைத் தரகர்களின் லைசென்சை இரத்து செய்தல்

**வினா எண் 64027—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் தேயிலைத் தொழிற்சாலையில் தேயிலை விலையை குறைக்க காரணமாக இருக்கும் தேயிலை தரகர்களின் லைசென்சை இரத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 மார்ச் 18]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை ஏதும் இல்லை. ஆனால், வனத் துறையின்கீழ் உள்ள தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் (TANTEA) நிறுவனத்தைச் சார்ந்த தொழிற்சாலைகளும், தனியார் எஸ்டேட் தொழிற்சாலைகளும் இப்பகுதியில் செயல்பட்டு வருகின்றன. தேயிலைத் தரகர்கள் தேயிலையின் விலையைக் குறைத்து விற்பனை செய்வது தெரிய வந்தால் அதனால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கே, தங்களுக்குரிய தரகரை மாற்றவும் வேறொரு தரகரை நியமித்துக்கொள்ளவும் உரிமை உண்டு. தரகரின் உரிமத்தை இரத்து செய்வது குன்னூரில் உள்ள மத்திய அரசின் தேயிலை வாரியத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

**13—**

## அச்சிடப்பட்ட பயணச்சீட்டுகள்

**வினா எண் 14797—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள அனைத்து புறநகர் பேருந்துகளிலும் முன்னால் அச்சிட்ட (Pre-printed) டிக்கெட் புத்தகங்களை வழங்க அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள அனைத்து புறநகர் பேருந்துகளிலும் முன்னரே அச்சிடப்பட்ட பயணச்சீட்டுகள் வழங்குவது 100% நடைமுறையில் இருந்து வருகிறது.

**14—**

## சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயின்ற மாணவர்கள்

**வினா எண் 34306—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 18

(அ) காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 2001–2002 ஆம் ஆண்டில் மாவட்ட சாலைப் போக்குவரத்து நிறுவனத்தில் பயின்ற மாணவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) சாலைப் போக்குவரத்து நிறுவனம், ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி, கும்மிடிப்பூண்டியில் மொத்தம் 246 மாணவர்கள் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 2001–2002 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்றனர்.

(ஆ) காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 2001–2002 ஆம் ஆண்டில் (1) பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவர்கள்–87 பேரும் (2) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள்–101 பேரும் (3) தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள்–58 பேரும் பயிற்சி பெற்றனர். பழங்குடி வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் எவரும் பயிற்சிக்கு வரவில்லை.

**15—**

## பயணச் சீட்டு முன்பதிவு மையம்

**வினா எண் 38768—திரு லா. சந்தானம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டியிலிருந்து சென்னை செல்ல பயணச் சீட்டுகள் முன்பதிவு செய்யும் மையம் (Reservation Booking Ticket Counter) உசிலம்பட்டி கிளை அலுவலகத்தில் வழங்கப்படுவதை பொதுமக்கள் வசதிக்காக பேருந்து நிலையத்தில் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** உசிலம்பட்டி – சென்னை பேருந்துகளுக்கு தற்போது உசிலம்பட்டி கிளையில் முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. இத்தடத்தில் இயக்கப்பட்டு வரும் 39 இருக்கைகள் கொண்ட பேருந்துகளுக்கு முக்கிய



2005 மார்ச் 18]

நபர்களுக்கான ஒதுக்கீடு போக 37 இருக்கைகளுக்கு மட்டுமே முன்பதிவு செய்யப்படுகிறது. மேலும் பயணிகள் தொலைபேசி மூலம் முன்பதிவு செய்யும் வசதியும் உள்ளது. இருந்தும் சராசரியாக நாளொன்றுக்கு 10 பயணிகள் மட்டுமே முன்பதிவு செய்கின்றனர். எனவே, உசிலம்பட்டி – சென்னை பேருந்துக்கு உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் தனியாக முன்பதிவு மையம் அமைக்கும் தேவை எழவில்லை. மேலும், இது பொருளாதார அடிப்படையில் நடைமுறை சாத்தியமில்லை.

**16—**

## பேருந்தில் அமர்வதற்கு இடம்

**வினா எண் 40677—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொகுதி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிராமப்புற பேருந்தில் பயணம் செய்தால் அமர்வதற்கு இடம் ஒதுக்கித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தொகுதி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிராமப்புற பேருந்துகளில் பயணம் செய்யும்போது அவர்களுக்கு உரிய மரியாதை அளித்து இருக்கை ஒதுக்கித் தரும் வழக்கம் அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

**17—**

## பயண அனுமதிச் சீட்டு

**வினா எண் 44085—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 18

2002–2003 ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டத்தில் தொழிலாளர் நலத் திட்டத்தின்கீழ் போக்குவரத்துத் தொழிலாளர் பிள்ளைகள் எவ்வளவு பேருக்கு இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** 2002–2003 ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டத்தில் தொழிலாளர் நலத் திட்டத்தின்கீழ் 1891 போக்குவரத்துத் தொழிலாளர் பிள்ளைகளுக்கு இலவச பயண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

**18—**

## இலவச பஸ் பாஸ் வழங்குதல்

**வினா எண் 44530—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரம் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கும்பகோணத்திலிருந்து ஆவுடையார்கோவில் வரை (வழி சுப்பிரமணியபுரம்) வந்து செல்லும் (சோழன் போக்குவரத்துக் கழகம்) பேருந்திலும் இலவச பஸ் பாஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** கும்பகோணத்திலிருந்து ஆவுடையார்கோவில் செல்லும் பேருந்து புறநகர் பேருந்தாகும். இதன் தட நீளம் 140.7 கி.மீ. ஆகும். தற்போதுள்ள அரசாணைப்படி, நகர் பேருந்துகள் இயங்காத தடத்தில் மட்டும்தான் புறநகர் பேருந்துகளில் அதிகபட்சம் 30 கி.மீ. வரை பள்ளி மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. ஆவுடையார்கோவில்–சுப்பிரமணியபுரம் தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் (முந்தைய தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்–கோ–4) லிமிடெட், புதுக்கோட்டை நகரப் பேருந்து பள்ளி நேரத்திற்கு (காலை 7-45 மணிக்கு ஆவுடையார்கோவிலிலிருந்தும், மாலை 5-00 மணிக்கு சுப்பிரமணியபுரத்திலிருந்தும்) இயக்கப்படுவதால் புறநகர்ப் பேருந்தில் மாணவர்கள் பயணம் செய்ய அனுமதிக்க இயலாது.



2005 மார்ச் 18]

**19—**

## இலவச பயண அட்டை

**வினா எண் 46068—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர், மாணவியர்களுக்கு சனிக்கிழமையன்றும் பேருந்துகளில் இலவச பயண அட்டையை உபயோகப்படுத்த அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** அரசாணை எண் 135, போக்குவரத்துத் துறை, நாள் 20–5–2004–ன்படி அனைத்து பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் மாதத்தின் அனைத்து நாட்களிலும், விடுமுறை நாட்கள் உட்பட, இலவச பயண அட்டையை உபயோகப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

**20—**

## பேருந்தில் பயண அட்டை வழங்குதல்

**வினா எண் 46077—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மலைப் பகுதியாக உள்ளதால், தனியார் பள்ளிகளில் பயிலும் ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 மாணவ/ மாணவிகளுக்கும் பேருந்து இலவச பயண அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தற்போது தமிழகத்திலுள்ள தனியார் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் அரசுப் பேருந்துகளில் அவர்கள் இல்லத்திலிருந்து பள்ளிக்குச் சென்று வர விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் இலவசப் பேருந்து பயணச் சலுகை வழங்கப்படுகிறது.

**21—**

## இலவசப் பேருந்து பயண அட்டை

**வினா எண் 48095—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள ஏழை கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள ஏழை கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும், தமிழகத்திலுள்ள தனியார் கலைக் கல்லூரிகள் உட்பட அனைத்து அரசு மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் அவர்கள் இருப்பிடங்களில் இருந்து கல்லூரிக்குச் சென்றுவர விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் ஐம்பது சதவிகித பேருந்துப் பயண சலுகை வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் பயிலும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மேற்காணும் சலுகையுடன் கூடுதலாக மாதத்திற்கு அதிகபட்சம் 60 டோக்கன்கள், டோக்கன் ரூ.2/– வீதம் வழங்கப்படுகிறது.



**22—**

## பணிமனைகள்

**வினா எண் 53481—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-I) சேலத்தில் தற்போது எத்தனை பணிமனைகள் உள்ளன?

(ஆ) போக்குவரத்துக் கழக பணிமனைகளில் சொந்தக் கட்டடத்தில் இயங்குபவை எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-I) லிமிடெட், சேலத்தில் தற்போது 16 பணிமனைகள் உள்ளன.

(ஆ) இவற்றில் சேலம் மாவட்டம் ஓமலூரில் உள்ள பணிமனையைத் தவிர மற்ற அனைத்துப் பணிமனைகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. ஓமலூரில் உள்ள பணிமனை தனியார் நிலத்தினை வாடகைக்குப் பெற்று இயங்கி வருகிறது.

**23—**

## பேருந்துகளுக்குக் கணினி மூலம் முன்பதிவு

**வினா எண் 53825—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விரைவுப் பேருந்துகளுக்கு கணினி மூலம் முன்பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—** [2005 மார்ச் 18

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு கணினி மூலம் கீழ்க்கண்ட 26 இடங்களில் தற்போது முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது.

1 பெங்களூர்

2 சென்னை – ஆவடி

3 சென்னை – கோயம்பேடு பேருந்து நிலையம்

4 சென்னை – கே.கே.நகர்

5 சென்னை – பாரிமுனை

6 சென்னை – தாம்பரம்

7 சென்னை – திருவான்மியூர்

8 சென்னை – திருவொற்றியூர்

9 சென்னை – தி.நகர்

10 கோயம்புத்தூர்

11 எர்ணாகுளம்

12 கன்னியாகுமரி

13 கும்பகோணம்

14 மதுரை மாட்டுத்தாவணி

15 நாகப்பட்டினம்

16 நாகர்கோவில் புறநகர் பேருந்து நிலையம்

17 நாகர்கோவில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம்

18 பாண்டிச்சேரி

19 சேலம்

20 தஞ்சாவூர்

21 திருநெல்வேலி

22 திருப்பதி

23 திருச்சி

24 திருவனந்தபுரம்

25 தூத்துக்குடி

26 வேளாங்கண்ணி

**24—**

## மாதிரி உரங்களின் எண்ணிக்கை

**வினா எண் 34009—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 18]

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயங்கும் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரி உரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அதில் தரம் மற்றும் தரமில்லாதவை எவ்வளவு விழுக்காடு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயங்கும் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஆய்வு செய்யப்பட்ட உர மாதிரிகளின் எண்ணிக்கை, மேலும் தரம் மற்றும் தரமில்லாத உர மாதிரிகள் எண்ணிக்கை மற்றும் விழுக்காடு பற்றிய விவரம் பின்வருமாறு:

| வருடம் | ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள் எண்ணிக்கை | தரமான உரங்கள் | | தரமற்ற உரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | விழுக்காடு | எண்ணிக்கை | விழுக்காடு |
| 1. 2000–01 | 2160 | 2018 | 93.4 | 142 | 6.6 |
| 2. 2001–02 | 2215 | 2119 | 95.4 | 96 | 4.3 |
| 3. 2002–03 | 2255 | 2193 | 97.3 | 62 | 2.7 |

மற்றும் 2003-2004 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட உர மாதிரிகள் எண்ணிக்கை மற்றும் விழுக்காடு பற்றிய விவரம் பின்வருமாறு:–

| வருடம் | ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள் எண்ணிக்கை | தரமான உரங்கள் | | தரமற்ற உரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | விழுக்காடு | எண்ணிக்கை | விழுக்காடு |
| 2003–04 | 2211 | 2165 | 98 | 46 | 2.6 |

25—

[2005 மார்ச் 18

## தினசரி பத்திரிகை

**வினா எண் 22948—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் இயங்கும் தலைமை நூல் நிலையத்தில் முக்கியமான தினசரி பத்திரிகை எத்தனை வைக்கப்படுகிறது? அதன் விவரம் என்ன?

(ஆ) ஆம் எனில், விடுபட்டுப் போன முக்கிய தினசரி பத்திரிகைகளையும் வைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் கிளை நூலகம்தான் இயங்கி வருகிறது. மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே தலைமை நூல் நிலையம் அமைக்கப்படும். கிளை நூலகத்தில் முக்கியமான தினசரி பத்திரிகைகளில் ஒன்பது தமிழ் பத்திரிகைகளும், ஆறு ஆங்கில பத்திரிகைகளும் வாங்கி வைக்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

**தமிழ்**

1. டாக்டர் நமது எம்.ஜி.ஆர்.
2. குமரி முரசு
3. விடுதலை
4. மக்கள் குரல்
5. தினத்தந்தி
6. தினமணி
7. தினமலர்
8. மாலைமுரசு
9. மாலைமலர்

**ஆங்கிலம்**

1. தி உறிந்து
2. இந்தியன் எக்ஸ்பிரஸ்
3. டைம்ஸ் ஆப் இந்தியா
4. பினான்ஷியல் எக்ஸ்பிரஸ்
5. எக்கனாமிக் டைம்ஸ்
6. பிஸினஸ் இந்தியா



2005 மார்ச் 18]

(ஆ) சேலம் மாவட்டத்தில் இயங்கும் முழுநேர நூலகங்களுக்கு வாங்கப்படும் அனைத்து நாளிதழ்களும் எடப்பாடி கிளை நூலகத்திற்கு வாங்கி வழங்கப்படுகின்றன.

26—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 55899—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியில் தொடக்கப்பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** (அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் விளையாட்டு மைதானம் ஏற்படுத்திட போதிய இடவசதியில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

27—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 21608—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்கப்படாத கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் குடிநீர் வழங்கப்படாத எடப்பாடி, மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஒன்றியங்களைச் சார்ந்த அனைத்துப் பகுதிகளுக்கும் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**28—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 21635—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் பஞ்சாயத்து நாச்சிமுத்தூர் (குண்டத்து மேட்டில்) உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு உடனடியாக குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட நாச்சிமுத்தூர் குடியிருப்புக்கு, ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 31-1-2003 முதல் குடிநீர் ஏற்றப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**29—**

**சுகாதாரக் கழிப்பிட வளாகம்**

**வினா எண் 22683—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அவிநாசி தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிப் பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து மகளிருக்கான சுகாதாரக் கழிப்பிட வளாகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) அவிநாசி தொகுதிக்கு உட்பட்ட அன்னூர், அவிநாசி மற்றும் திருமுருகன்பூண்டி சிறப்பு சிற்றூராட்சிகளில் மகளிருக்கான சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**30—**

**குடிநீர்ப் பற்றாக்குறை**

**வினா எண் 22947—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சி, அம்மன்கோயில் காடு– எரைச்சல்காடு பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அங்கு மேல்நிலைத் தொட்டி கட்டி காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சிக்கு உட்பட்ட அம்மன்கோயில் காடு மற்றும் எரைச்சல்காடு ஆகியவை மேட்டுக்காடு குடியிருப்பின் பகுதிகள் ஆகும். மேட்டுக்காடு குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலை தொட்டிக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரி குடிநீர் ஏற்றப்பட்டு 01-03-2003 முதல் இப்பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

31— [2005 மார்ச் 18

## குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி

**வினா எண் 25792—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமரத்து அள்ளி ஊராட்சி, நாயக்கனூர் கிராமத்திற்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** பெண்ணாகரம் ஒன்றியம், கூக்குட்டமரத்து அள்ளி ஊராட்சி, நாயக்கனூர் குடியிருப்பிற்கு நடப்பாண்டில் (2004–2005) 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்ட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

32—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 27254—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் கிராமம் வேவாரி தெருவில் உள்ள ஆழ்துளைக் கிணறு வறண்டு விட்டதால் அங்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சியில் உள்ள வேவாரி தெரு, விசைப்பம்பு ஆழ்துளைக் கிணறு வறண்டு விட்டதால், தொப்பவளவு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக் கிணறுமூலம் குடிநீர் விநியோகம்



2005 மார்ச் 18]

செய்யப்பட்டு வருவதாலும், மேலும் ஆற்றுக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாலும், இப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏதும் இல்லை.

33—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 29344—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், உத்தமநல்லூர் காலனி தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுத்து அந்த மக்களுக்கு குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுபாக்கம் ஒன்றியம், திருமுக்காடு ஊராட்சியில் உள்ள உத்தமநல்லூர் காலனியின் கூடுதல் குடிநீர் வசதிக்காக பொதுமக்களின் பங்களிப்புடன் பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் புதிதாக திறந்தவெளி கிணறு அமைக்கப்பட்டு ஏற்கெனவே உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டத்தில் இணைக்கப்பட்டு தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 30 லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

34—

## பாதுகாவலர் நியமனம்

**வினா எண் 30916—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரிலுள்ள குளங்களைச் சுற்றிலும் கம்பி வேலி அமைத்து பாதுகாவலர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகரிலுள்ள குளங்களைச் சுற்றிலும் கம்பி வேலி அமைத்து பாதுகாவலர் நியமிக்க நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லை.

**35—**

### போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல்

**வினா எண் 31704—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, முதல் அக்ரஹாரம் பகுதி சாலைகளில் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, முதல் அக்ரஹாரம் சாலையின் உட்புறம் திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டத்தில் ஆற்றோரம் தெருவை ஒட்டி இரண்டு சக்கர, மூன்று சக்கர, நான்கு சக்கர மற்றும் மிதிவண்டிகள் உட்பட அனைத்து வாகனங்கள் நிறுத்துமிடமாக அபிவிருத்தி செய்யப்பட்டு தற்போது போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**36—**

### காவிரி குடிநீர் வழங்கல்

**வினா எண் 34804—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு மக்களுக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் காவிரி குடிநீர் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சிக்குட்பட்ட அனைத்து குடியிருப்புகளுக்கும் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 10 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்ட 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலமாக 3/2003 முதல் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**37—**

### சாலைகளில் சாக்கடை மற்றும் சாலை வசதி

**வினா எண் 38632—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி 40-வது கோட்டத்தில் வித்யா நகர் 1,2,3 குறுக்கு மற்றும் பாண்டியன் சாலைகளில் சாக்கடை மற்றும் சாலை வசதிகள் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 40-வது கோட்டம், வித்யா நகர் குறுக்கு தெருவிற்கு ரூ. 3.50 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மற்றும் வடிகால் அமைக்கும் பணி செப்டம்பர் 2004-ல் முடிக்கப்பட்டது. பாண்டியன் தெருவில் சாலை மற்றும் சாக்கடை அமைக்கும் பணிக்கு ரூ.3,40,000/– மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி நடப்பு நிதியாண்டில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**38—**

### சாலைகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 38637—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் 46—வது கோட்டம் குகைப் பகுதியில் சாலைகளைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 மார்ச் 18

**விடை—**

**மாண்புமிகு திரு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 46—வது கோட்டம், குகைப் பகுதியில் உள்ள சாலைகளை ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் 1-வது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி 2004–2005 ஆம் நிதியாண்டிற்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**39—**

## பழுதடைந்த சாலையினைப் புதுப்பித்தல்

**வினா எண் 38639—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி கலரம்பட்டி பிரதான சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, 44-வது கோட்டத்தில் உள்ள கலரம்பட்டி பிரதான சாலை ரூ.4.95 இலட்சம் மதிப்பீட்டில் நல்ல முறையில் பணி முடிக்கப்பட்டு பொதுமக்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

**40—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 47873—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 மார்ச் 18]

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி, நயினார் தோப்பு மற்றும் 3—வது வார்டு கீழ்த் தெருவில் சிறு நீர்தேக்கத் தொட்டி (Mini tank) அமைத்து குடிநீர் விநியோகம் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) நயினார் தோப்பு மற்றும் 3—வது வார்டு கீழ்த் தெருவில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத் தொட்டி ரூ.3,00,000 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு 15–7–2004 முதல் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன்மூலம் 2,000 பொதுமக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

**41—**

## குளத்தை தூர்வாரி செப்பனிடுதல்

**வினா எண் 47878—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி, மருவத்தூரிலுள்ள காலனி சலவைக்குளம், வடுகன்குளம் மற்றும் 14—வது வார்டிலுள்ள காந்திநகர் குளம் முதலியவற்றை தூர்வாரி செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) மருவத்தூர் சாலை சலவைக்குளம், வடுகன்குளம் மற்றும் 14—வது வார்டு காந்திநகர் குளம் ஆகியவைகளை தலா ரூ.30,000/— மதிப்பீட்டில் மொத்தம் ரூ.90,000/— செலவில் மேற்படி இரண்டு குளங்களும் தூர் வாரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

42— [2005 மார்ச் 18

### குளத்தை தூர்வாரி செப்பனிடுதல்

**வினா எண் 47881—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயில் பேரூராட்சி, மருவத்தூர் திருக்குளம், காளியம்மன் கோயில் திருக்குளம், நல்லான்மணி திருக்குளம் மற்றும் தாமரைக்குளம் முதலியவற்றைத் தூர்வாரி செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தாமரைக்குளம், மருவத்தூர் திருக்குளம், நல்லான்மணி திருக்குளம், காளியம்மன் குளம் ஆகியவற்றை தலா ரூ.30,000/- மதிப்பீட்டில் மொத்தம் ரூ.1,25,000/- செலவில் மேற்படி நான்கு குளங்களும் தூர் வாரப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

43—

### தார்ச் சாலையாக மாற்றுதல்

**வினா எண் 50097—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் 1-வது வார்டு நித்தியவனம் பகுதிக்கு செல்லும் சாலையை தார் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் 1-வது வார்டில் நித்தியவனம் பகுதிக்கு செல்லும் சாலை ஏற்கெனவே தார் சாலையாகத்தான் உள்ளது.



2005 மார்ச் 18]

44—

### விளம்பர போர்டுமூலம் கிடைத்த வருவாய்

**வினா எண் 50514—திரு செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு 2002–2003 ஆம் ஆண்டில் விளம்பர போர்டுமூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு?

(ஆ) வருவாயைப் பெருக்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) சேலம் மாநகராட்சியில் 2002–2003–ல் விளம்பரப் போர்டுமூலம் கிடைத்த வருமானம் ரூ.7.95 இலட்சம் ஆகும்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 47, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்: 26–6–2003–ன்படி விளம்பரப் பலகைகள் தொடர்பான உரிமம் வழங்குதல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி அனுமதியற்ற விளம்பரப் பலகைகளை அகற்றவும், முறையான உரிம அனுமதிக்கு அவ்வப்பொழுது வரப்பெறும் விண்ணப்பங்களின் பேரில் உரிய அறிக்கையுடன் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மேலனுப்பி வைக்க மாநகராட்சி வார்டு அலுவலக உதவி ஆணையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

45—

### ஆதிதிராவிட காலனி வீடுகள்

**வினா எண் 52764—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், சட்டநாதபுரம் ஊராட்சி, சூரக்காடு கீழத்தெரு ஆதிதிராவிட காலனி மற்றும் திட்டை ஊராட்சி, ஆதிதிராவிட காலனி வீடுகளை பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**46—**

## ஆதிதிராவிடர் வீடுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 52766—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி, ஆதிதிராவிடர்கள் வாழும் கீழத்தெருவிலுள்ள பழுதடைந்துள்ள காலனி வீடுகளை பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** (அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.



**47—**

## அங்காடி கழிப்பிடத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 54169—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 27–வது பகுதி, ஔவையார் அங்காடி கழிப்பிடத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகராட்சி, 27–வது கோட்டம், ஔவையார் அங்காடியில் உள்ள பழைய கழிப்பிடத்தை அகற்றி புதியதாக வாம்பே திட்டத்தின்கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. 2004–2005 ஆம் நிதியாண்டிற்குள் இப்பணியினை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**48—**

## கிணற்றைத் தூர்வாரி சீர்செய்தல்

**வினா எண் 54173—திரு மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 49–வது பகுதி, நெத்திமேடு முனியப்பன் கோவில் கிணற்றை தூர்வாரி சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகர், 49–வது பகுதி, நெத்திமேடு முனியப்பன் கோவில் கிணறு தனியாருக்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது. எனவே, மாநகராட்சி மூலம் மேற்படி கிணற்றில் தூர் வார இயலாது.

[2005 மார்ச் 18

49—

## கிணற்றைத் தூர்வாரிப் பராமரித்தல்

**வினா எண் 54174—திரு மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 49—வது பகுதி, நெத்திமேடு பிரதான சாலையில் சிங்கப்பூர் சிற்றுண்டி நிலையத்திற்கும், துளசி சிற்றுண்டி நிலையத்திற்கும் மையத்தில் இருக்கும் பொதுக் கிணற்றைத் தூர் வாரி பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேலம் மாநகர், 49—வது பகுதி, நெத்திமேடு பிரதான சாலையில் சிங்கப்பூர் சிற்றுண்டி நிலையத்திற்கும், துளசி சிற்றுண்டி நிலையத்திற்கும் மையத்தில் இருக்கும் பொதுக் கிணறு தனியாருக்குச் சொந்தமான இடத்தில் இருக்கிறது. எனவே, மாநகராட்சியால் மேற்படி கிணற்றினைத் தூர் வார இயலாது.

50—

## சிறு வாய்க்கால் வெட்டுதல்

**வினா எண் 54645—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதிலுள்ள சரபங்கா நதியில் கழிவுநீர் தேங்குவதைத் தவிர்க்க சிறு வாய்க்கால் வெட்டி பெரிய ஏரிக்கு அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2005 மார்ச் 18]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகராட்சி மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு சரபங்கா நதி தாழ்வான பகுதியிலும் பெரிய ஏரி உயர்மட்டப் பகுதியிலும் அமைந்துள்ளது. எனவே, பெரிய ஏரிக்கு கழிவுநீர் கொண்டு செல்ல தொழில்நுட்ப ரீதியாக இயலாத சூழ்நிலையில் உள்ளது.

[**குறிப்பு**:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

# 2. கவன ஈர்ப்பு

## தளி தொகுதியில் வனத் துறை மூலம் சாலைகள் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55—ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே.வி. முரளிதரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே.வி. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் உடுபுராளி கூட்டு ரோடு முதல் அத்திநத்தம் வரை, கேரட்டி முதல் கெம்பக்கரை வரை மற்றும் ஜவளகிரி முதல் சென்னமாளம் வரை வனத் துறை மூலமாக புதிய தார்ச் சாலைப் பணிகள் தொடங்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

## அறிக்கை

தமிழ்நாடு அரசாணை எண் 147, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 27-9-2004-ன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், 2004-2005-ன்கீழ், 31.050 கி.மீ. தூரமுடைய சாலைப் பணிகளை ரூ.481.980 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் பின்வரும் 3 சாலைப் பணிகளும் அடங்கும்.

| | கி.மீ. | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) தளி முதல் சென்னமங்கலம் வரை சாலை அமைத்தல் | 7.600 | 124.200 |
| (2) அஞ்செட்டி உரிகம் சாலை முதல் அத்திநத்தம் வரை சாலை அமைத்தல் | 9.400 | 157.200 |
| (3) அஞ்செட்டி-நாட்றாம்பாளையம் சாலை முதல் கெம்பக்கரை வரை சாலை அமைத்தல் | 7.500 | 119.700 |
| மொத்தம் | 24.500 | 401.100 |

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ள சாலைப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு, மத்திய அரசிடமிருந்து பெறப்படவில்லை. மேற்படி சாலைகள் அமைக்கத் தேவையான தொகை பெறப்பட்டவுடன் சாலைப் பணிகள் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நன்றாகப் படித்துப் பார்த்தேன். மேற்படி சாலைப் பணிகள், மத்திய அரசிடமிருந்து தொகை வந்தவுடன் தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். சந்தோஷம். ஆனால், அந்தத் தொகை வந்தவுடனே, உடனடியாக வனத் துறைக்கு டெபாசிட் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாணை எண் 147, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 27-9-2004-ன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பிரதம மந்திரி



2005 மார்ச் 18] [திரு. கே.பி. அன்பழகன்]

கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், 2004-2005-ன்கீழ், 31.050 கிலோமீட்டர் தூரமுடைய சாலைப் பணிகள் ரூ.481.980 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் கீழ்க்கண்ட மூன்று சாலைப் பணிகளும் அடங்கும்:

ஜவளகிரி முதல் சென்னமாளம் வரை சாலை அமைத்தல்

அஞ்செட்டி உரிகம் சாலை முதல் அத்திநத்தம் வரை சாலை அமைத்தல்

அஞ்செட்டி-நாட்றாம்பாளையம் சாலை முதல் கெம்பக்கரை வரை சாலை அமைத்தல்

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் கவன ஈர்ப்பில் குறிப்பிட்ட மூன்று சாலைகளும், மேற்சொன்ன மூன்று சாலைப் பணிகளில் அடங்கும். இச்சாலைப் பணிகள் வனத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இப்பணிகளுக்கான நிதியொதுக்கீடு ஏதும் மத்திய அரசிடமிருந்து, கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் இதுவரை பெறப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில், வனத் துறைக்கு மேற்படி சாலைகளை அமைக்கத் தேவையான தொகையை உடனடியாக வழங்க இயலாத நிலை உள்ளது.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து தொகை பெறப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். தொகை வந்தவுடனே, அந்தத் தொகையை வனத் துறைக்கு deposit செய்து, உடனடியாக அந்த சாலைப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒகேனக்கல் சாலைக்கு 2 கோடி ரூபாய் 2003-லே sanction பண்ணி, இரண்டு வருடமாக வனத் துறைக்கு deposit பண்ணாமல், இந்த வருடம்தான் start பண்ணியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசிடமிருந்து P.M.G.S.Y. திட்டத்தின்கீழ் சாலைப் பணிகளுக்கான தொகை வந்தவுடனே, வனத் துறைக்குக் கொடுத்து, உடனடியாக அந்த சாலைப் பணிகள் நிறைவேற்றப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நாட்றாம்பாளையம் – ஒகேனக்கல் சாலையானது, நெடுஞ்சாலைத் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்ட சாலை. அந்தத் தொகை வனத் துறைக்கு ஒதுக்கப்பட்டு, அந்தப் பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், ஜவளகிரி முதல் சென்னமாளம்

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 மார்ச் 18

வரை செல்கின்ற சாலை, அஞ்செட்டி உரிகம் முதல் அத்திநத்தம் வரை செல்கின்ற சாலை, அஞ்செட்டி – நாட்றாம்பாளையம் முதல் கெம்பக்கரை வரை செல்கின்ற சாலை ஆகிய மூன்று சாலைகளும் வனப் பகுதி வழியாகச் செல்வதால், அவற்றை வனத் துறையின் மூலமாகச் செயல்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட உள்ளது. இப்பணிகளுக்கான தொகையினை வனத் துறைக்கு வழங்க வேண்டுமாயின், வனத் துறையினை பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டச் செயலாக்கப் பிரிவாக அங்கீகரிக்க வேண்டும். இதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அக்கருத்துருவுக்கு ஒப்புதல் அளிக்கும் வரை, தற்காலிகமாக வனத் துறை மேற்கொண்ட பணிகளுக்கான பட்டியல் தொகையினைத் திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக பட்டுவாடா செய்வதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன், இரண்டு கேள்விகள் கேட்டுவிட்டீர்கள். முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

**டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 170 மற்றும் 171 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 35–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



2005 மார்ச் 18] முற்பகல் 10–05

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2005 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று ஒன்றாவது முதல் நூற்று நான்காவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (4) மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், திப்பம்பட்டி என்கின்ற குக்கிராமத்திலே பிறந்த என்னை, பொள்ளாச்சி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக்கி, இன்று அமைச்சராகவும் ஆக்கி, உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் மேலான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் தாக்கல் செய்கிற ஒரு நல்ல நிலையை எனக்கு உருவாக்கித் தந்த மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையினைத் தொடங்குகின்றேன்.

ஆயிரம் ஆண்டுகள் நாங்கள் செய்த தவப்பயனே அம்மா, அறிவுத் திருவுருவே அம்மா, அன்புக்குத் தாயகமே அம்மா, சூழ்ச்சி வலைகள் சுற்றிக் கிடந்தாலும் வீழ்ச்சியையே அறியாத வீரத்திருவடிவே அம்மா, கயவர்கள் எழுப்புகின்ற கனத்த தடையை எல்லாம் காலடிப் படிக்கட்டாய் மாற்றுகின்ற காவியமே எங்கள் அம்மா, ஓய்வே அறியாமல் சுழலுகின்ற பூமியைப் போல் ஓய்வே இல்லாமல் உழைக்கின்ற இலட்சிய தீபமே

அம்மா, கொள்கையிலே கோபுரமே அம்மா, குணத்தினிலே பசும்பொன்னே எங்கள் அம்மா, உள்ளத்தின் உறுதியிலே இமாலயமே, உடையாத வைரமே அம்மா, தாயே, தமிழ்மகளே, தமிழ்க்குலத்தின் உயிர்த்துடிப்பே, அன்றாடம் காய்ச்சிகளின் அட்சய பாத்திரமே அம்மா, அன்னையே, எங்களை வழிநடத்தும் ஆசானே, இதயதெய்வத்தின் இணையடி போற்றி, எனது உரையைத் தொடங்குகிறேன் தாயே, அம்மா.

சங்க இலக்கியமான புறநானூற்றிலே ஓர் அருமையான காட்சி. மழைக் காலம் வருவதை உணர்ந்து எறும்புகள் வாயிலே முட்டைகளைக் கவ்விக்கொண்டு மேடான நிலம் நோக்கிப் போகும் அந்தக் காட்சி. சாதாரணமாகப் போகாது; பேரவைத் தலைவர் அவர்களே, வரிசை வரிசையாக, சாரை சாரையாக எறும்புக் கூட்டங்கள் சென்று கொண்டிருக்கும். அவ்வாறு, எறும்புகள் வாயிலே முட்டைகளைக் கவ்விக் கொண்டு வரிசை, வரிசையாகச் செல்வதைப்போல், சிறுவர்களும், பெரியவர்களும் சோற்றை உண்டுவிட்டு, கையிலே சோற்றோடு வரிசை, வரிசையாகப் போகிறார்களாம். இப்படி ஒரு வரிசையிலே அல்ல; பல்வேறு வரிசைகளிலே, சிறுவர்கள் சோறு ஏந்திய கையோடு போய்க் கொண்டிருக்கிறார்கள், அவர்களுடைய தாய்மார்களோடு. இவர்களுக்கு எல்லாம் இப்படி வாரி வழங்கிய வள்ளலின் பெயர் பண்ணன்.

ஓர் அரிய காட்சியை – அன்றைய வாழ்க்கையின் எதார்த்தத்தை விளக்கும் ஓர் அழகிய காட்சியை, அருமையான உதாரணத்தின் மூலம் விளக்கியிருக்கிறார், சோழன் குளமுற்றுத் துஞ்சிய கிள்ளிவளவன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் நடந்த அந்தக் காட்சியை இன்றைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆளுகிற செந்தமிழ் நாட்டிலே கண்டு கொண்டிருக்கிறோம். மதிய நேரத்திலே, பள்ளிக்கூடத்தில், பிள்ளைகள் மதிய உணவை ஏந்திச் செல்கின்றபோது, உண்டுவிட்ட மகிழ்ச்சியோடு வீட்டுக்கு கொண்டு செல்கின்ற அந்தக் காட்சியைத்தானே நாம் இங்கே காணுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றைய தமிழகத்துக்கு பண்ணன் என்ற வள்ளல். இன்றைய தமிழகத்துக்கு இதயதெய்வம் அம்மா; புரட்சித் தலைவி என்ற வள்ளல். (மேசையைத் தட்டும் ஒலி) காலங்கள் மாறினாலும், காட்சிகள் மாறவில்லை.



“முட்டை கொண்டு வன் புலம் சேரும்
சிறு நுண் எறும்பின் சில் ஒழுக்கு ஏய்ப்ப,
சோறுடைக் கையர் வீறு வீறு இயங்கும்
இருங் கிளைச் சிறார்”

இதுதான் அந்த புறநானூற்றுப் பாடல். அந்தக் காட்சியை இன்றைக்கும் பார்க்கிறோம். வாரி வழங்கும் பாரி வள்ளல் வரிசையிலே வந்த பெண் பாரி வள்ளல் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளல்களுக்கெல்லாம் வள்ளலாய் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றைய புறநானூற்றுத் தலைவனைப் போல், இன்றைய புறநானூற்றுத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களினுடைய அரசியல் வாரிசாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புறநானூற்றுப் பாடலைப் பாடியிருப்பவர் சாதாரணப் புலவர் அல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, சோழன் குளமுற்றுத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற மாமன்னர்தான் அந்தப் பாடலைப் பாடினார்.

இன்றைக்கு மன்னர்கள் போற்றுகின்ற வள்ளலாய் இங்கே வீற்றிருக்கிறார் எங்கள் மன்னாதி மன்னன் அரசியல் வாரிசு, இதயதெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உணவு – இந்த மூன்றெழுத்துச் சொல்லுக்குள்ளேதான் உயிர் என்ற மூன்று எழுத்துச் சொல்லின் அர்த்தமே அடங்கியிருக்கிறது. அதனால்தான், “உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே” என்று புலவர்கள் பாடியிருக்கிறார்கள். உயிர் கொடுப்பவனை இறைவன் என்கிறோம். எனவே, உணவைக் கொடுப்பவரை இறைவனுக்குச் சமமாகக் கருத வேண்டும். அதனால்தான் அம்மா அவர்களைத் தெய்வம் என்கிறோம். அந்தத் தெய்வத்தை இதயத்தில் வைத்து வழிபடுவதால் இதயதெய்வம் என்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிப் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, வறட்சிக் காலத்தில், காவிரி டெல்டா பகுதியில் ஏழை விவசாயிகளுக்கு உணவு அளித்த தெய்வம் அம்மா அவர்கள்.

உணவு எவ்வளவு முக்கியமானது. அதனைப் பாராட்டாத இலக்கியங்கள் உண்டா? அப்படிப்பட்ட உணவுக்கு உதாரணமாய் உணவுப் பொருளை வழங்கும் துறைக்கும், கூட்டுறவுத் துறைக்கும் என்னை அமைச்சராக ஆக்கியிருக்கும் ஆறரை கோடி தமிழ் மக்களின்

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 18

அருமை முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, வாழ் நாள் எல்லாம் நான் நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பலகோடித் தொண்டர்களிலும் கடைக்கோடித் தொண்டனான எனக்கு வரம் அளித்த அன்புத் தாயே, உங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன். இதயதெய்வம் அம்மா அவர்களின் பாதங்களில் எனது பணிவான நன்றியையும், வணக்கத்தையும் சமர்ப்பித்து என் உரையைத் தொடங்குகிறேன்.

முற்பகல் 10–10

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிகழ்த்திய சாதனைகள் பலப் பல. சென்ற 3 ஆண்டுகளில் இயற்கை பொய்த்து, 50 ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சி ஏற்பட்ட போதிலும், தமிழகத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் விலைவாசியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சரித்திர சாதனைப் புரிந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இது எதனால் முடிந்தது? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தெளிந்த அறிவினால், தொலைநோக்கு சிந்தனை மற்றும் மதி நுட்பத்துடன் கொண்டுவரப்பட்ட புதிய உணவுக் கொள்கைதான் இதற்குக் காரணம் என்பதை இங்கே அறுதியிட்டு உறுதியுடன் கூற விரும்புகிறேன்.

உணவுக் கொள்கையில் அன்றைய நிலை என்ன? மாநிலங்களிடையே நெல்லைக் கொண்டு செல்ல இருந்த தடை. சோதனைச் சாவடி என்ற பெயரில் விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட சொல்லொண்ணாத அநீதிகள் எத்தனை, எத்தனை? ஏகபோக நெல் கொள்முதல் என்ற பெயரில் விவசாயிகள் நெல்லை அரசிடமே விற்கவேண்டிய நிர்ப்பந்தம். விதைப்பான், பயிர் காப்பான், நீர் பாய்ச்சுவான், விளைவிப்பான்; ஆனால் வெளிச் சந்தையில் விற்கும் உரிமை மட்டும் அவனுக்குக் கிடையாது; வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல முடியாது. வருவாய்த் துறையின் கெடுபிடி, காவல் துறையின் கெடுபிடிகள். இப்படி விவசாயிகள் கசக்கிப் பிழியப்பட்டனர் சென்ற கால ஆட்சியில். அரசு நிர்ணயிக்கும் விலையை மட்டும் பெற்றுச் செல்கின்ற அவல நிலை. நெல் அரவை செய்பவர்களோ, வெளிச் சந்தையில் வாங்கி அரைக்க முடியாமல் நுகர் பொருள் வாணிபக் கழகம் வழங்கும் நெல்லைதான் அரைக்க வேண்டிய நிலை. இரட்டைப் பூட்டு முறையில் நடந்த அநியாயங்கள் எத்தனை? எத்தனை? பல இடங்களில் இதனால் அரவைத் தொழிலே நசுங்கி விட்டது. பல அரிசி ஆலைகள் மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.



2005 மார்ச் 18] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

அரசோ, தரமற்ற நெல்லை வாங்கி பல மாதம் இருப்பு வைத்து அரிசியின் தரம் கெட்டு, பல கோடி ரூபாய் நிதி இழப்பினைச் சந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. கொள்முதல் நிலையங்களிலே எங்கு பார்த்தாலும் பிரச்சினை. இதெல்லாம் கடந்த கால வரலாறு. இது ஒருபுறமிருக்க, நமக்குத் தேவையான கூடுதல் அரிசிக்கு மத்திய அரசிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிலை. அவர்கள் கைவிட்டு விடும்போது, அரிசியினை வெளிச் சந்தையில் வாங்க வேண்டிய நிலை. அதிக காலம் இருப்பு வைத்து, அரிசி வழங்கும்போது தரம் குறைந்து, பழுப்பு ஏறிய அரிசியினை பொது விநியோகத்தில் வழங்க வேண்டிய நிலை. இதனால் விவசாயிகள் முதல், பொது மக்கள் வரை பலதரப்பினரும் பாதிக்கப்பட்டதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இன்று, அதாவது 1–10–2002–க்குப் பிறகு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் தொலைநோக்கு சிந்தனையில் கொண்டுவரப்பட்டதுதான் புதிய உணவுக் கொள்கை என்னும் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம். இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தபோது, பலரும் பல ஐயப்பாட்டை எழுப்பினர். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தன் கூர்ந்த மதி ஞானத்தால், இது மக்களுக்கு நலம் தரும் என உணர்ந்து துணிவுடன் அறிவித்தார்கள். இந்தத் திட்டத்தால் ஏற்பட்ட நன்மை என்ன என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த மூன்று ஆண்டுகளில் வெளிச் சந்தையில் அரிசியின் விலை கிலோவுக்கு எவ்வாறு இருந்தது? 2002–ல் சன்ன இரக புழுங்கல் அரிசி கிலோவுக்கு குறைந்தபட்சம் 11 ரூபாய் 39 பைசாவாகவும், அதிகபட்சம் 12 ரூபாய் 88 பைசாவாகவும் இருந்தது. சராசரி விலை 2002–ல் 12 ரூபாய் 02 பைசா. 2003–ல் அதே சன்ன இரக புழுங்கல் அரிசி கிலோவுக்கு குறைந்தபட்சமாக ரூபாய் 12.00–ம், அதிகபட்சமாக 12 ரூபாய் 95 பைசாவாகவும், சராசரி விலை 12 ரூபாய் 41 பைசாவாகவும் இருந்தது. இது 2004–ல் குறைந்தபட்சம் 11 ரூபாய் 88 பைசாவாகவும், அதிகபட்சம் 12 ரூபாய் 56 பைசாவாகவும், சராசரி 12 ரூபாய் 21 பைசாவாகவும் குறைந்தது. மார்ச் 2005–ல், அதாவது இந்த மாத நிலவரம் சுமார் 11 ரூபாய் 98 பைசாவாக உள்ளது. கடுமையான வறட்சி ஏற்பட்ட சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டிலும்கூட விலை கட்டுப்பாட்டிலேயே இருந்தது. 2001–க்கு முன்பு தமிழகத்தில் விளைச்சல் நன்றாக இருந்தபோது, இங்கே விளைந்த நெல்லும் அரிசியும் இரவோடு இரவாக, பேரவைத் தலைவர் அவர்களே, 2001–க்கு முன்பு தமிழகத்தில் விளைச்சல் நன்றாக இருந்தபோது, இங்கே விளைந்த நெல்லும் அரிசியும் இரவோடு இரவாக ஆயிரக்கணக்கான லாரிகளிலே ஏற்றப்பட்டு,

வெளி மாநிலங்களுக்கு கண்மணிகளால் கடத்தப்பட்டு, இங்கே ஒரு செயற்கையான உணவுப் பஞ்சம் உண்டாக்கப்பட்டதையும், அதனால் விலைவாசி தாறுமாறாக ஏறியதையும் யாரும் மறந்திருக்க முடியாது. மரவள்ளிக் கிழங்கு, மக்காச் சோளம், கத்தாழைக் கிழங்கு போன்றவற்றை மக்கள் சாப்பிட்ட நிலையையும் மறந்திருக்க முடியாது. ஆனால், வரலாறு காணாத வறட்சி ஏற்பட்ட இந்த நிலையிலும் இன்று விலை கட்டுப்பாட்டில் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? தமிழ்நாட்டு உணவுச் சந்தையை, இந்திய உணவு மண்டலத்தோடு துணிச்சலோடு இணைத்து, ஓர் ஒப்பற்ற சாதனையை, மாண்புமிகு அம்மா அவர்கள் படைத்ததே காரணம். இதனால், தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும்போது, பிற மாநிலங்களிலேயிருந்து அரிசி, தமிழ்நாட்டுக்குள் வரவும், தமிழகத்தில் கூடுதல் விளைச்சல் ஏற்படும்போது, தமிழக விவசாயிகள், நல்ல விலைக்குப் பிற மாநிலங்களுக்கு விற்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10–15

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தில், விவசாயிகள் நெல்லை, அரசுக்குத்தான் விற்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. விவசாயிகள் நல்ல விலை கிடைத்தால், சுதந்திரமாக வெளிச் சந்தையிலும் விற்கலாம். மிகச் சன்ன இரக நெல்லை உற்பத்திச் செய்து, வெளிச் சந்தையில் அதிக விலையும் பெறலாம். வெளிச் சந்தையில், விலை குறையும்போது, அரசின் கொள்முதல் நிலையங்களில் விற்று, குறைந்தபட்ச விலை ஆதாரத்தையும் பெற வாய்ப்புள்ளது. கொள்முதல் நிலையங்கள், 'டெல்டா' பகுதிகளில் மட்டுமல்லாது, இதுவரையிலே வரலாற்றிலே இல்லாத வகையிலே, தமிழகத்திலேயுள்ள எல்லா மாவட்டங்களிலும், விவசாயிகளின் தேவைக்கேற்ப திறக்கப்படுவதால், வெளிச் சந்தையில், உற்பத்திக் காலத்தில் ஏற்படும் விலை வீழ்ச்சியினை, இத்திட்டம் கட்டுப்படுத்துகிறது. இந்த ஆண்டுகூட, ஈரோடு, இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, திண்டுக்கல், தேனி போன்ற மாவட்டங்களில் கொள்முதல் நிலையங்கள் திறந்தவுடன், விலை வீழ்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு, விவசாயிகள் பயன் பெற்றனர். இது, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின் மிகப் பெரிய சரித்திர சாதனையல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்பு, இந்த மாவட்டங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டதுண்டா?

இத்திட்டத்தில் தமிழகத்திற்குத் தேவையான அரிசியினை, மத்தியத் தொகுப்பிலிருந்து மைய அரசின் இந்திய உணவுக் கழகம் வழங்கவேண்டிய பொறுப்பினை ஏற்றுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நெல் கொள்முதலை, இந்திய உணவுக் கழகத்தின் முகவராக இருந்து



செயல்படுத்தி வருகிறது. இதனால், முந்தைய கொள்கையின்படி, ஆறு மாதம், ஒரு வருடம் என அரிசியை இருப்பு வைக்கவேண்டிய அவசியமில்லை. இரண்டு, மூன்று மாதங்களுக்குத் தேவையான இருப்பு மட்டும் வைக்கப்பட்டு, தரமான அரிசி, பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் கையாண்ட இந்தப் புதிய யுக்தியின் காரணமாக, தேவையற்ற சேமிப்பினால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவு, தர பாதிப்பு போன்றவை தடுக்கப்பட்டு, நுகர்பொருள் வாணிபக் கழகம், அநியாயமாக ஆண்டுக்குக் கோடிக்கணக்கான வட்டி செலுத்தவேண்டிய அவலநிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தரமில்லாத அரிசி எங்கும் வழங்கப்படவில்லை என்ற உறுதியான நிலையினை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தியது, ஒரு பெரிய சாதனையல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி) பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தை மாநில அரசு ஏற்ற பின்புதான், தமிழக அரசின் உணவு மானியத்தின் நிதிச் சுமை, வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை. இன்று, நெல் அரவை ஆலையிலும், நெல்லை வெளிச் சந்தையில் வாங்கி, நெல் அரவை செய்வதால், அதில் ஈடுபட்டுள்ள பல்லாயிரம் தொழிலாளர்கள், மாண்புமிகு அம்மா அவர்களை நெஞ்சார வாழ்த்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் இப்போது இரட்டைப் பூட்டு முறையையே மாற்றி, அரசுக்குப் பாதுகாப்பான எளிய முறையைப் பின்பற்றி, தனியார் அரிசி ஆலைகளில் நெல் அரவை செய்கிறது.

இன்று விவசாயிகளுக்குச் சுதந்திரம்; ஏழையெளிய மக்களுக்கு மிக நல்ல அரிசி; மிகக் கட்டுப்பாடான உணவு வழங்கும் முறை; அரசுக்கு நிதியிழப்புக் குறைவு எனப் பல தரப்பினரும், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் புதிய கொள்கையினால் பயன் பெற்றுள்ளார்கள். எனவே, இந்த அரசின் உணவுக் கொள்கை, நெல் கொள்முதல் திட்டம், அரிசி விலையைத் தமிழகத்தில் கட்டுப்படுத்தி, ஏழையெளிய மக்களைப் பாதுகாத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மிகப் பெரிய சாதனையைச் செய்துள்ளது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பு, உற்பத்தித் திறன் குறைவு என்ற பிரச்சினைகளையும் தாண்டி, நடப்பு சம்பாப் பருவத்திலே, 15–3–2005 வரையிலே, பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் முறைமூலம், 8 இலட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 18

செய்யப்பட்டுள்ளது என்கின்ற மகிழ்வான செய்தியையும், இந்த மாமன்றத்திலே பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

"பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைபிடிப்பதைவிட, பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்" என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, மிகத் திறன்வாய்ந்த, சீரிய கட்டமைப்பு கொண்ட, பொது விநியோகத் திட்ட முறையின்மூலம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எவ்விதத் தங்குதடையுமின்றி அரிசியை விநியோகித்து, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கப்படுவதை உறுதி செய்துள்ளது என்றால், அது மிகையாகாது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அகில இந்திய அளவிலான தனி ஆய்வு ஒன்று, தமிழ்நாட்டின் பொது விநியோக முறை, நாட்டிலேயே மிகச் சிறந்ததென அறிவித்துள்ளதை, இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நமது மாநிலத்தில் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குக்கீழ், வறுமைக் கோட்டிற்கு மேல் என்று இரு பிரிவினை செய்யாமல் அனைவருக்கும் பயன்படும் வகையில் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடும்ப அட்டைகள், குடும்ப அட்டைதாரர்களின் விருப்பத்திற்கு இணங்க அரிசி விருப்பு அட்டை, சர்க்கரை விருப்பு அட்டை மற்றும் மண்ணெண்ணெய் விருப்பு அட்டை என வழங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–20

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இதுவரை குடும்ப அட்டை பெறாது விடுபட்ட குடும்பங்கள் புதிய குடும்ப அட்டைகள் கோரி 1–6–2004 முதல் 30–6–2004 முடிய விண்ணப்பிக்கலாம் என 18–5–2004 அன்று அறிவித்தார்கள். அதன்படி பெறப்பட்ட 49 இலட்சத்து 31 ஆயிரத்து 757 விண்ணப்பங்களில் 37 இலட்சத்து 70 ஆயிரத்து 446 விண்ணப்பங்கள் குடும்ப அட்டை வழங்கத் தகுதியானவை எனக் கண்டறியப்பட்டன. இந்த விண்ணப்பங்களுக்கான குடும்ப அட்டைகள் "ELCOT" மூலம் அச்சிடப்பட்டு, பணி முடிவுற்று, இதுவரை 35 இலட்சத்து, 67 ஆயிரத்து 999 விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள், அவர்களது குடும்ப அட்டைகளைப் பெற்றுச் சென்றுள்ளனர். மிகக் குறுகிய காலத்திற்குள் விண்ணப்பங்களைப் பெற்று தகுதியுடைய



2005 மார்ச் 18] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

ஒருவருக்கு புதிய குடும்ப அட்டை வழங்கி பாமர மக்கள் வாழ்வினில் ஒளியேற்றியது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவரையிலே, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் ஒருசேர, விடுபட்டுப் போன குடும்ப அட்டைதாரர்கள் 37 இலட்சம் பேர் பயன் பெற்றது என்பது இந்திய வரலாற்றிலே இதுதான் முதல் மைல் கல் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்விதம் குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பம் செய்து, குடும்ப அட்டை கிடைக்கப்பெறாத 6 இலட்சத்து 33 ஆயிரத்து 418 நபர்கள் மேல்முறையீடு செய்துள்ளனர். இம்மனுக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் தற்போது நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளைப் புதுப்பித்து புதிய குடும்ப அட்டைகளாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி பொது விநியோகக் கடைகள் மூலம் இதற்கென விண்ணப்பப் படிவங்கள் 1–2–2005 முதல் 27–2–2005 முடிய கடையின் அனைத்துப் பணி நாட்களிலும் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் இதனை 6–3–2005 வரை நீட்டித்து அரசு ஆணையிட்டது. 6–3–2005 முடிய 1 கோடியே 48 இலட்சத்து, 46 ஆயிரத்து, 791 குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்கான விண்ணப்ப மனுக்களை பெற்றுள்ளனர். அட்டைதாரர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்ட 23 ஆயிரத்து 706 சிறப்பு மையங்களில் 28 ஆயிரத்து 177 கவுண்டர்கள் அமைக்கப்பட்டு, அதில் 56 ஆயிரத்து 354 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, 6–3–2005 முடிய 1 கோடியே, 44 இலட்சத்து, 88 ஆயிரத்து, 263 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இம்மையங்களில் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

மேலும், இவ்வரசு, 2004–2005 ஆம் ஆண்டில் தங்களது குடும்ப அட்டைகளை உள்தாள்கள் இணைத்து புதுப்பிக்காத குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களுக்கான புதுப்பித்தல் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலகங்களில் அலுவலகப் பணி நாட்களில் பெற்று பூர்த்தி செய்து வழங்கலாம் என அனுமதி அளித்து, 6–3–2005 முடிய 3 இலட்சத்து 68 ஆயிரத்து 852 குடும்ப அட்டைதாரர்கள் இதன்படி விண்ணப்பங்களைப் பெற்றுச் சென்று அவற்றில் 3 இலட்சத்து 49 ஆயிரத்து 79 குடும்ப அட்டைதாரர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலகங்களில் ஒப்படைத்துள்ளனர். பூர்த்தி செய்யப்பட்டு திரும்பப்

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 18

பெறப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையிலே புதிய குடும்ப
அட்டைகள் அச்சடிப்பதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருசேர அனைத்து மக்களுக்கும் ஏழையெளியவர்கள்
முதல் அனைத்துத் தரப்பினரும் ஒரே சமயத்திலே குடும்ப அட்டை
பெறுவதற்கான ஒரு வாய்ப்பு இந்த மாநிலத்தில் இதற்கு முன்பு வேறு
எப்போதும் அளிக்கப்பட்டதில்லை என்பதை இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

குடும்ப அட்டைகளின் விவரம். அரிசி குடும்ப அட்டைகள்; தற்போது
உள்ள நிலவரப்படி, 31–1–2005 நிலவரப்படி 1 கோடியே 44 இலட்சத்து
91 ஆயிரத்து 43. அரிசி குடும்ப அட்டைகள், கூப்பன் பெறாதவர்கள் 15
இலட்சத்து 96 ஆயிரத்து 47. சர்க்கரை விருப்பு அட்டைகள் 11 இலட்சத்து
5 ஆயிரத்து 451. மண்ணெண்ணெய் விருப்பு அட்டைகள் 13 இலட்சத்து
9 ஆயிரத்து, 552. காவலர் அட்டைகள் 31 ஆயிரத்து 217. மொத்த
குடும்ப அட்டைகள் ஒரு கோடியே 85 இலட்சத்து 33 ஆயிரத்து 310
குடும்ப அட்டைகள் இப்போது தமிழகத்திலே நடைமுறையிலே உள்ளன.
ஒரு கோடியே 85 இலட்சத்து 33 ஆயிரத்து 310 குடும்ப அட்டைகள்.
நமது மாநிலத்தில்தான் குடும்ப அட்டைதாரர்களுக்கு தரமான அரிசி
மிகக் குறைந்த விலையில், அதாவது கிலோவுக்கு ரூ.3.50 வீதம்
கொடுக்கப்படுகிறது. நமது மாநிலத்தில்தான் குடும்பங்களுக்கு தரமான
அரிசி மிகக் குறைந்த விலையில், அதாவது ஏழை, பணக்காரன் என்ற
வித்தியாசம் பாராவண்ணம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும்
3 ரூபாய் 50 பைசாவிற்கு இந்தியாவிலேயே தரமான அரிசி வழங்குகிற
ஒரே மாநிலம் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்
ஆளுகிற தமிழகம் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–25

நெல் அதிகமாக விளையும் பிற மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா,
ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் ரேஷன் அரிசி
விலை நம் மாநிலத்தைவிட மிக அதிக விலைக்கு விற்கப்படுகிறது.
ஆந்திரப் பிரதேசத்திலே ஒரு கிலோ அரிசியினுடைய விலை நியாய
விலைக் கடையிலே வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு
ரூ. 9 என்று வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு
5 ரூபாய் 25 பைசாவுக்கு வழங்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்திலே
வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு ஒரு கிலோ அரிசி 9
ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு



2005 மார்ச் 18] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

3 ரூபாய் 50 பைசா முதல் 6 ரூபாய் 15 பைசா வரை வழங்கப்படுகிறது.
கேரள மாநிலத்திலே வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்கு
ஒரு கிலோ அரிசி 8 ரூபாய் 90 பைசாவுக்கு விற்கப்படுகிறது. வறுமைக்
கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு ஒரு கிலோ அரிசி 6 ரூபாய் 20
பைசாவுக்கு விற்கப்படுகிறது. மகாராஷ்டிராவிலே வறுமைக் கோட்டிற்கு
மேல் உள்ள மக்களுக்கு ஒரு கிலோ அரிசி 10 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.
வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு ரூபாய் 6–க்கு விற்கப்படுகிறது.
இராஜஸ்தான் மாநிலத்திலே ஒரு கிலோ அரிசி வறுமைக் கோட்டிற்கு
மேலே உள்ள மக்களுக்கு 8 ரூபாய் 90 பைசாவுக்கு விற்கப்படுகிறது;
வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு 6 ரூபாய் 15 பைசாவுக்கு
விற்கப்படுகிறது. மேற்கு வங்காள மாநிலத்திலே ஒரு கிலோ அரிசி வறுமைக்
கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு 9 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு 6 ரூபாய் 15 பைசாவுக்கு
விற்கப்படுகிறது. சண்டிகர் மாநிலத்திலே ஒரு கிலோ அரிசி 8 ரூபாய் 79
பைசாவுக்கு வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள மக்களுக்கு விற்கப்படுகிறது.
வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்கு 6 ரூபாய் 02 பைசாவுக்கு
விற்கப்படுகிறது. ஆனால் வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத்
திட்டம் மூலம் தமிழகத்திலே மட்டும்தான் இத்தனை கோடி மக்களுக்கு
3 ரூபாய் 50 பைசாவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கிலோ அரிசி
வழங்குகிற இதயம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா
அவர்களுடைய இதயம் என்பதையும், 3 ரூபாய் 50 பைசாவுக்கு ஏழை
எளிய மக்களுக்கு அரிசி வழங்குகிற ஒரே மாநிலம் புரட்சித் தலைவி
அம்மாவினுடைய மாநிலம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது எதிர்கொண்ட கடுமையான
பிரச்சினைகளை—அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியாலும், முந்தைய
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய கால கட்டங்களிலே
தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் முறைகேடான செயல்களாலும்
கூட்டுறவு நிறுவனங்கள் எல்லாம் நசிந்து போய், ஒரு மயக்கச்
சூழ்நிலையில் இருந்த நிலையினை மாற்றி, மாண்புமிகு தமிழக முதல்வர்
இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய ஆலோசனையின்படியும்,
ஆணையின்படியும் கூட்டுறவுத் துறையானது சீரமைக்கப்பட்டது. அந்த
முயற்சியின் அடிப்படையில்தான் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனங்கள்
நடப்பு ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறந்த, சீரிய
வழிகாட்டுதலிலே 1,037 கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் வழங்க
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 2003–2004 ஆம் ஆண்டில் 616.59 கோடி
ரூபாய் அளவுக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டது. கடந்த மூன்றாண்டு
காலத்திலே கொடுக்கப்பட்ட பயிர்க் கடன் நிலுவை அனைத்தும் வசூல்

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 18

செய்யப்படாத நிலையிலும் நடப்பு ஆண்டிலே, இந்த ஆண்டிலே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய சீரிய கருணையின் அடிப்படையிலே 1,037 கோடி ரூபாய் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆண்டு பயிர்க் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

'உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.'

உலகம் எனும் தேருக்கு உழவர்களே அச்சாணி போன்றவர்கள் என்று உணர்த்தியுள்ள வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைக்கேற்ப 6 இலட்சத்து 11 ஆயிரத்து 193 விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்து இந்த அரசு ரூ.226.56 கோடி சலுகை அளித்துள்ளது.

குறுகிய கால பயிர்க் கடனை மாற்றியமைக்க மாநில அரசின் நிதி உதவி ரூ. 20 கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் பயிர்க் கடன்களுக்கு வட்டி 12 சதவீதத்திலிருந்து 31-7-2004 முதல் 9 சதவீதமாக விவசாயிகளுக்காகக் குறைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிருக்கு வழங்கப்படும் அனைத்துக் கடன்களுக்கும் கூடுதலாக ஒரு சதவீதம் வட்டியை மாண்புமிகு அம்மா அவர்கள் குறைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 39,346 பயனாளிகளுக்கு ஒரே தவணையில் கடன் தீர்வு திட்டத்தின் மூலம் ரூ.229.40 கோடியை சலுகையாக அளித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அபராத வட்டி தள்ளுபடி மூலம் நிலவள வங்கிகள் மூலம் 6,108 விவசாயிகளுக்கு 46 இலட்சம் அளவிற்கு சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு அம்மா அவர்கள் குறுகிய காலக் கடனாக ரூபாய் 2598.59 கோடியை இதுவரையிலே கடந்த மூன்று ஆண்டுகளிலே விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாக வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூட்டுறவுத் துறையின்மூலமாக கடந்த மூன்று ஆண்டு காலத்திலே மத்திய காலக் கடனாக 268.36 கோடியை வழங்கியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு



2005 மார்ச் 18] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

பண்ணைசாராக் கடனாக ரூபாய் 1,051.67 கோடியை கூட்டுறவுத் துறையின்மூலமாக கடந்த மூன்று ஆண்டுகளில் கடனாக வழங்கியுள்ளது. நகைக் கடனாக இன்றையத் தேதி வரையிலே கூட்டுறவுத் துறையின் மூலமாக 18,149.41 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டில் விவசாயிகள் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடிட ரூ.21 கோடி மதிப்பிலான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது. இதன்மூலம், 10 இலட்சம் விவசாயிகள் பயனடைந்தார்கள்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் 2002-2003 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகள் பெற்றிருந்த கூட்டுறவுக் கடன்கள்மீதான வட்டி ரூ.62 கோடியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இதன்மூலம் ஆறு இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின்மூலமாக அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள் இயற்கைச் சீற்றத்தாலோ, பூச்சிகளினாலோ, நோய்களாலோ அழிந்துவிடும் நிலையில், அப்பயிர்களுக்குக் காப்புறுதியும், நிதியுதவியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 1,50,325 விவசாயிகளுக்கு 60 கோடியே 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு 26.68 கோடியாகும்.

ஏழை எளிய மகளிருக்கான சிறப்புக் கடன் திட்டம். 1,72,971 நபர்களுக்கு சீரமைக்கப்பட்ட மகளிர் சிறு வணிகக் கடனாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி 64.46 கோடி ரூபாய் இந்த கூட்டுறவுத் துறையின்மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைப்படி, 8,795 நபர்களுக்கு மகளிர் பேறுகால கடனுதவி ரூ.4.05 கோடி வழங்கப்பட்டுள்ளது. 12,836 நபர்களுக்கு மகளிர் தொழில் முனைவோர் கடனுதவி ரூ.19.25 கோடியளவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி 22,738 நபர்களுக்கு உழைக்கும் மகளிர் கடன் திட்டத்தின்மூலம் கடன் உதவியாக ரூ.32.28 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி 64,395 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் புரிய கடன் உதவியாக நாட்டிலே வேறு எங்குமே இல்லாத வகையிலே இதுவரையிலே ரூ.244.48 கோடியானது கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு கூட்டுறவுத் துறையானது இன்றைக்கு நல்ல பல பணிகளைச் செய்து தலைநிமிர்ந்து நின்றாலும், கடந்த கால தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களுடைய காலத்தில், பல்வேறு முறைகேடுகள் நடைபெற்று, அந்த முறைகேடுகள்மூலம் பல கோடி ரூபாய் மக்களுடைய

பணமானது, கபளீகரம் செய்யப்பட்டுள்ளதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது குறிப்பிட்டார்கள். தமிழகத்தினுடைய மாநில கூட்டுறவு வங்கி முதல் கிராமங்களுடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வரையிலே பல்வேறு வங்கிகளிலே பல்வேறு முறைகேடுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினுடைய காலத்திலே நடைபெற்ற முறைகேடுகள் சொல்லிலே அடங்காது. கூட்டுறவின் வரலாறு மிகச் சிறந்த வரலாறு என்றால், அதில் கடந்த கால தி.மு.க. அரசாங்கம் தன்னாட்சி செய்த வரலாறு, வரலாற்றில் மிகப் பெரிய வரலாறாகும்.

இந்த வரலாற்றைச் செப்பனிட்ட பெருமை, செழுமை சேர்த்த பெருமை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களைச் சாரும். உன்னதமாக்கிய பெருமை, நாட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஊட்டிய பெருமை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களையே சேரும். கூட்டுறவுக் கொள்கைக்கு வெற்றி கிடைத்த காலம், கூட்டுறவுக்கு பசுமை உரம் ஊட்டிய காலம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சிக் காலமாகும். கடந்த கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுத் துறை என்ற மாளிகைக்குள் அரசியல் புகுந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளால் கூட்டுறவு நிறுவனங்கள் வாழும் திறனையிழந்தது; செயல்பாட்டினை இழந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் கூட்டுறவுத் துறையில் குடி கொண்டிருந்த ஊழல்களைக் களைய விரைவான நடவடிக்கையை எடுத்தார்கள். கடந்த கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினரால் செய்யப்பட்ட ஒரு சில குறைபாடுகளை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10–3.5

முதலாவதாக, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி முதல் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் வரை முறைகேடுகள் நடைபெற்றனவற்றில், தலையாய தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியில் அதன் தலைவராக இருந்தவர், 10 பேருந்துகளை வாங்க வாகனக் கடன் திரு. எஸ்.எம். சையது கலிமுல்லா என்பவருக்கு ரூபாய் 16.5 இலட்சங்களை அனுமதித்துள்ளார் போலி சொத்து ஆவணங்கள் மற்றும் போலி வில்லங்கச் சான்றிதழ்களின் அடிப்படையிலே இக்கடனானது அனுமதிக்கப்பட்டுள்ளது. முதலில் ரூபாய் 30.67 இலட்சம் இரண்டு பேருந்துகள் வாங்க நிர்வாக இயக்குநர் திரு. ஜே.எம். கிருஷ்ணன் அவர்கள் மறுத்துள்ள நிலையில் அதனுடைய நிர்வாகக் குழுவினுடைய



தலைவராக இருந்தவர் கடனாக வழங்கி இருக்கிறார். அதற்குப் பிறகு நிர்வாக இயக்குநர் இதுகுறித்து, பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுதே 1999 ஆம் ஆண்டு இரகசிய அறிக்கை ஒன்றினை அன்றிருந்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுப்பினார். அவ்வறிக்கையின்மீது கூட்டுறவுச் சங்கங்கள் சட்டப் பிரிவு 82–ன்கீழ் ஆய்வு ஒன்றை நடத்தி முறையற்ற கடன் வழங்கப்பட்டதை அறிந்து முன்னாள் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து ஏன் நீக்கக் கூடாது என்று பதிவாளரால் அறிவிப்பு வழங்கப்பட்டது. பதிவாளரால் அவ்வாறு அறிவிப்பு வழங்கப்பட்ட நிலையில் அதற்குப் பதில் தர வேண்டிய தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக, மேலிட அதிகாரத்தினால் நடவடிக்கை கைவிடப்பட்டது. இதனால் துணிச்சலுற்ற முன்னாள் தலைவர் மேலும் ரூபாய் 61.35 இலட்சம் நான்கு பேருந்துகள் வாங்க கடன் வழங்கினார். தலைவரைப் பதவியிலிருந்து அப்பொழுதே பதிவாளருடைய அறிவுரைப்படி நீக்கியிருந்தால் இரண்டாவது கடன் தொகையான ரூ.61.35 இலட்சம் கடன் வழங்கப்பட்டிருக்காது. இந்த இரண்டு கடன்களில் இதுவரையிலே 12.47 இலட்சம் ரூபாய் மட்டும் வசூலானது. இதற்குள் தலைவரின் பதவிக் காலம் முடிவுற்றுவிட்டது. முறையற்றக் கடனை வழங்கியதை அறிந்து அப்பொழுதே அதனுடைய நிர்வாக இயக்குநர் அந்தக் கடனை வழங்கக் கூடாது என்று பல்வேறு குறிப்புகளை எழுதியிருந்தும், அந்தக் குறிப்புகளை எல்லாம் உதாசீனப்படுத்திவிட்டு, பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வங்கியினுடைய தலைவராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி அவர்கள்—ஏறத்தாழ இன்று வரையிலே அந்த வங்கிக்கு வசூலாக வேண்டிய தொகையாக 2 கோடி ரூபாய் இன்றைக்கு வரையிலே நிலுவையிலே உள்ளது. இது தமிழக கூட்டுறவு வரலாற்றிலே மாநில கூட்டுறவு வங்கியிலே நடைபெற்றிருக்கிற மிகப் பெரிய முறைகேடான சம்பவம். (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை எடுத்துக் கொண்டால் அதிலும் ஊழல். நான்..(குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..(குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, உட்காருங்கள், பேசிமுடித்த பிறகு ஏதாவது கேட்டால், அனுமதி கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இவை அனைத்திற்கும் தேவையான ஆதாரங்கள் இந்த மாமன்றத்தில் நான் இப்போது வைத்திருக்கிறேன். அனைத்து ஆதாரங்களும் இங்கேயே உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கால ஆட்சியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே gas loan வழங்குவதாகச் சொல்லி, 133 கோடி ரூபாய் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட – இங்கு பல மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பேசும்போது பெறப்பட்ட deposit பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை, கொடுக்கப்படவில்லை என்று இங்கே குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள்; பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட deposit–கள் 133 கோடி ரூபாய் பணத்தை மாவட்டங்களுடைய மத்திய கூட்டுறவு வங்கிகளிலே அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளினுடைய தலைவர்கள் முறைகேடாக gas loan–ஆக வழங்கிய வகையிலே இன்றைக்கு வரையிலே 133 கோடி ரூபாய் வழங்கப்பட்ட கடன், அதற்குரிய 5 ஆண்டு, 6 ஆண்டு கால வட்டி உள்பட இதுவரையிலே வசூலாகியிருக்கிற தொகை 50 கோடி ரூபாய் மட்டும்தான். இன்னும் 150 கோடி ரூபாய் பொதுமக்களுடைய பணம் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட deposit பணம் இன்று அளவிலே தமிழகத்திலே இருக்கிற 23 தொடக்க மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே வழங்கப்பட்ட கடன் வசூலாகாத நிலையிலே உள்ளது.

அதேபோன்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட deposit–களிலேயிருந்து consumer loan –நுகர்வோர் கடன் என்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே நடைபெற்றவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாநிலம் முழுவதும் வழங்கப்பட்ட consumer loan –நுகர்வோர் கடன் தொகை 140 கோடி ரூபாயிலே அந்தக் கடன்கள் அனைத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய ஆணைப்படி 100 சதமானம் சரிபார்க்கப்பட்டபோது வழங்கப்பட்ட 140 கோடி ரூபாய் பணத்திலே, வழங்கப்பட்ட தேதியிலேயிருந்து இன்றைக்கு வரையிலே ஒரு பைசாகூட வசூலாகாமல் இருக்கிற தொகையினுடைய அளவு மட்டும் ரூபாய் 60 கோடி. 80 கோடி ரூபாய் பணத்திலே இதுவரை 30 கோடி அளவுக்கு வசூலாகி இருக்கிறது. இந்தப் பணம் எல்லாம் யாருடையது? வட்டியோடு 200 கோடி ரூபாய் பணம் மொத்தம் இதுவரை வசூலாகியிருக்க வேண்டிய பணம் 2001–க்கு முன்பு வழங்கப்பட்ட பணம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு காலத்திலே மாவட்ட கூட்டுறவு வங்கிகளிலே 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்பட்ட நுகர்வோர் கடன் 200 கோடி ரூபாயில் வட்டியோடு சேர்த்து இன்றைக்கு வரையிலே வசூலாகியிருக்கிற தொகை 40 கோடி ரூபாய் மட்டும்தான். அதற்கான ஆதாரங்களை நான் வைத்திருக்கிறேன்.



மீதிப் பணம் 160 கோடி ரூபாய் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட deposit –களுக்காகத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய கடன்கள்.

முற்பகல் 10–40

இதேபோன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பெறப்பட்ட deposit–கள், அந்தந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய தலைவருடைய விருப்பத்திற்கேற்ப அந்தந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளினுடைய நிர்வாகக் குழுவினுடைய உறுப்பினர்களுடைய விருப்பத்திற்கேற்ப ஆங்காங்கே நுகர்வோர் கடனாக, gas loan–களாக வழங்கப்பட்டு இன்றைக்கு வரையிலே, விசாரித்துப் பார்த்த வகையிலே, நூறு சதவிகிதம் விசாரித்துப் பார்த்த வகையிலே, வசூலாகாமல் இருப்பது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே வழங்கப்பட்ட நுகர்வோர் கடன், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே வழங்கப்பட்ட gas loan, இதெல்லாம் கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வழங்கப்பட்டது, பேரவைத் தலைவர் அவர்களே, சரியாகச் சொல்லப்போனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே வழங்கப்பட்டிருக்கிற கடன்கள் gas loan–களாகவும், நுகர்வோர் கடன்களாகவும் வழங்கப்பட்டிருக்கின்ற தொகையினுடைய அளவு அது மட்டும் சுமார், 119 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி).

இவையெல்லாவற்றின் காரணமாகத்தான், இன்றைக்கு ஏழை எளிய மக்கள், தாங்கள் செய்து வைத்த டெபாசிட்டை உரிய நேரத்திலே பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். தொடக்க அமைப்பான கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கத்தில் பல முறைகேடுகளும் நடந்துள்ளன. இச்சங்கத்தின் தலைவர் திரு. கனகராஜ் மற்றும் நிருவாகக் குழு உறுப்பினர், ரூ.35.96 இலட்சத்திற்கு முறைகேடுகள் செய்துள்ளனர். இவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டு 17–04–2003–ல் ரூ.35.96 இலட்சத்திற்கு தண்டத்தீர்வை ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு 22–6–2004 அன்று தடையாணை பெற்றுள்ளனர்.

தலைவர் மற்றும் உப தலைவர், அதனுடைய இயக்குநராக இருந்தவர் திரு. எஸ். இராமலிங்கம் என்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தஞ்சை மாவட்டத்தினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதேபோன்று முறைகேடுகள்

ஒன்றிரண்டு இடங்களிலே அல்ல, ஆயிரக்கணக்கான இடங்களிலே இப்படிப்பட்ட பட்டவர்த்தனமான முறைகேடுகள் கடந்த கால அரசாங்கத்தில் நடந்திருக்கிறது.

இன்றைக்கு மாநிலம் முழுவதும் 26 கூட்டுறவு அச்சகங்கள் செயல்பட முடியாத நிலைமை கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிறது. இக்கூட்டுறவு அச்சகங்களை நடத்துவதால் கூட்டுறவு நிறுவனங்களுடைய பணம் கூட்டுறவுக்கே வந்து சேரும், ஒரு பெருமைக்குரிய நிலை கடந்த காலத்தில் இருந்தது. இதுவரை கூட்டுறவு அச்சகங்களை தரக்குறைவாக யாரும் பார்த்ததில்லை. ஆனால், பார்க்க வைக்கும் நிலைமைக்கு ஏற்படுத்தியவர்கள் கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் ஆவார்கள்.

சென்னையிலே, மத்திய கூட்டுறவு அச்சகமும், தருமபுரியிலே, தருமபுரி கூட்டுறவு அச்சகமும், பல முறைகேடுகள் செய்துள்ளன. சென்னை மத்திய கூட்டுறவு அச்சக முன்னாள் தலைவர், திரு. ராஜேந்திரன் ரூ.17,10,000 முறைகேடுகள் செய்துள்ளார். அவர்மீது வழக்கு தொடரப்பட்டு தண்டத்தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று, தருமபுரி கூட்டுறவு அச்சகத்தில் ரூ.40,67,000 முறைகேடுகள் செய்த தலைவர் மற்றும் பணியாளர்கள்மீது வழக்கு தொடரப்பட்டு தண்டத்தீர்வை ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற முறைகேடுகளைக் களையவும், ஊழல்களை ஒழிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்பட்டுள்ள பயிர்க் கடன், நுகர்வோர் கடன், நகைக் கடன், பண்ணைசாராக் கடன், வீட்டு அடமானக் கடன் போன்ற பல்வேறு கடன்களின்மீது தீவிரமாக கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் உத்தரவிட்டதின் பேரில் தமிழகம் முழுவதும் 100 சதவிகித ஆய்வுப் பணியானது மேற்கொள்ளப்பட்டது. (குறுக்கீடு) 100 சதவிகித ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் பயிர்க் கடனில் மட்டும் பினாமி கடன் மற்றும் பல்வேறு முறைகேடு புரிந்த வகையிலே தமிழகம் முழுவதும், 12 இலட்சம் விவசாயிகள் பெற்றிருக்கின்ற மொத்த பயிர்க் கடன் அளவு 2,598 கோடி ரூபாய் என்றால், அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் இருந்து செயல்பட்ட காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட பயிர்க் கடன்கள் சரிபார்க்கப்பட்ட வகையிலே, 2,598 கோடி ரூபாய் பயிர்க் கடன்களிலே, இது வரையிலே பினாமியாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற பயிர்க் கடன்களுடைய அளவு மட்டும், ஆதாரங்களோடு 250 கோடி ரூபாய்க்கு மேலாக உள்ளது.



(மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே வழங்கப்பட்ட பயிர்க் கடன்களிலே ஏற்பட்டிருக்கிற முறைகேடுகளாகும். இவையெல்லாம் யாருடைய பணம்? இவையெல்லாம் பொதுமக்களிடமிருந்து டெபாசிட்டுகளாகப் பெறப்பட்ட பணம்.

இன்றைக்கு கூட்டுறவு இயக்கம், ஊழலை, முறைகேடுகளை களைந்து வெற்றிப் பாதையை நோக்கிச் செல்கிறது என்றால், அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய சிறந்த தலைமை என்பதையும், அவருடைய சிறந்த வழிகாட்டுதல் என்பதையும் இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பல்வேறு பத்திரிகைகளிலே பல்வேறு வகையான செய்திகளையும், பல்வேறு கட்சிகளுடைய மாநாடுகளிலே பல்வேறு வகையான தகவல்களையும் தமிழகத்தினுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின்மீது குற்றச்சாட்டுக்களை உருவாக்க முடியாதவர்கள் போலியாக, கற்பனையாக பல்வேறு கதைகளை கட்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது குறித்து, நான் சில விளக்கங்களை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கஜானா காலி என்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள். கஜானா காலியில்லையெனவும், அதில் நெல்லும், அரிசியும் இருந்ததாகவும் மறுப்புத் தெரிவித்தார்கள். ஆனால், அந்த கஜானாவில் எப்படிப்பட்ட நெல்லும், அரிசியும் இருந்தது? புழுத்த அரிசியை வைத்துச் சென்றதாக மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்மையைத்தான் அன்று சொன்னார்கள். மறுக்க வேண்டும் என்பதற்காக அதையும் மறுத்தார்கள். உண்மை நிலை என்ன? கடந்த ஆட்சியில் 25 சதவீதம் வரை ஈரப்பதம் நிறைந்த தரமில்லாத நெல்லை, 1997 குறுவைப் பருவத்தில் கொள்முதல் செய்து, தரமில்லாத அரிசியை உற்பத்தி செய்து, அதில் ஒரு பகுதியினை ஏலம்விட்டு, மீதியை பல ஆண்டுகள் இருப்பு வைத்துவிட்டுச் சென்றார்கள்.

இங்கே பத்திரிகைகளிலே எல்லாம் பார்த்திருப்பீர்கள். பொது மக்களுக்காக விநியோகிக்கப்பட்ட அரிசியை யாரும் ஏலத்தில் இதற்கு முன்பு விட்டதில்லை என்பதைப் போலக் குறிப்பிட்டார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே கொள்முதல் செய்யப்பட்ட

அரிசியிலே தரமற்றவை, பொதுமக்களுக்கு விநியோகிக்க லாயக்கில்லை என்று சொல்லி சரியாக 40 ஆயிரம் டன் அரிசியை அப்போதே பொது ஏலத்திலே விட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதற்கு அரசு ஆணை எண் 117, நாள் 19–6–1998–ல் 7 இலட்சத்து 4 ஆயிரம் டன் நெல், குறுவைப் பருவம் 1997–ல் வாங்கியதாகவும், அதில் பெரும் பகுதி பழுப்பு நிறமேறி, நியாய விலைக் கடைக்கு வழங்க இயலாத நிலை ஏற்பட்டதாகவும், எனவே, அவ்வாறு குறுவையில் வாங்கி அரவை செய்த அரிசியில் 5 சதவீதத்திற்கு மேல் பழுப்பேறிய தரமில்லாத அரிசியினை முதல்கட்டமாக 50 ஆயிரம் மெட்ரிக் டன் பொது ஏலம் மூலம் விட்டு விற்பனை செய்ய முந்தைய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசாணை எண் 117, நாள் 19–6–1998, அதன்படி 40,420.011 மெட்ரிக் டன் அரிசியானது விற்பனை செய்யப்பட்டுள்ளது. விற்பனை விலையானது 4 ரூபாய் 60 பைசா. இந்த நெல் கொள்முதல் செய்யப்பட்ட காலம் 1997. 1997–ல் வாங்கிய நெல்லிலிருந்து 1998–ல் அரைத்து, 1998–லேயே அரிசி தரமில்லாமல் போனதென்றால் வாங்கப்பட்ட நெல் தரமில்லை என்பதே உண்மை. முறையாகவும், பாதுகாப்பாகவும் இந்த நெல் சேமிக்கப்படவில்லை. இதனால், அதன் தரம் கெட்டுவிட்டது. அதே ஆணையில் குறுவை 1997 பருவத்தில் வாங்கிய நெல்லில் 2.59 இலட்சம் மெட்ரிக் டன் நெல் 30 முதல் 40 சதவீதம் வரை பழுப்பேறிவிட்டது என்று முந்தைய அரசே அரசாணை வெளியிட்டுள்ளது. இந்த 2 இலட்சத்து 59 ஆயிரம் டன் நெல்லிலிருந்து கிடைத்த தரமற்ற அரிசிதான் நாங்கள் விற்பனை செய்த அரிசி.

அடுத்த ஆண்டில், அதாவது 1999 ஆம் ஆண்டு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் கடித எண் 6/42233/99, நாள் 6–5–1999 கடிதத்தில் ஏற்கெனவே வெளியிட்ட அரசாணைப்படி பொது ஏலத்தில் விற்றதுபோக சுமார் 30 ஆயிரம் மெட்ரிக் டன் பழுப்பேறிய அரிசியில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்க இயலாத அளவிற்கு 13 சதவீதத்திற்கு மேல் அரிசி பழுப்பேறி உள்ளதாகவும், அந்த அரிசியை திறந்த ஒப்பந்த முறையில் ஏலம் மூலம் விற்பனை செய்ய வேண்டும் எனவும் அரசிடம் ஆணை கோரியுள்ளார். இதற்கு அரசாணை வெளியிட்டால் தங்களுடைய தவறு வெளியில் தெரிந்துவிடும் என்று அப்போதைய அரசு ஆணை வெளியிடவில்லை. இந்த 30 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியும் இதே போல் தரமில்லாத 1997 குறுவை நெல்லிலிருந்து அரவை செய்த அரிசியும் எவ்வாறு திடீரென்று நல்ல அரிசியாக மாறும் என்று தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதைத்தான் தெளிவாக எடுத்துரைத்தார்கள். இதற்கு முந்தைய அரசு வெளியிட்ட அரசாணையும்,



அப்போதைய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் கடிதமுமே இதற்கு ஆதாரங்களாகும். இவ்வாறு இவர்கள் விட்டுச் சென்ற தரமில்லாத அரிசியைத்தான் பொது ஏலம்மூலம் விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு இந்த அரசு தள்ளப்பட்டது.

T.K.M. 9 இரக அரிசி, குறிப்பாக குறுவைப் பருவத்தில் அதிக ஈரப்பதத்துடன் கொள்முதல் செய்யப்படும் நெல்லிலிருந்து பெறப்படும் அரிசியை தமிழக மக்கள் விரும்பிப் பயன்படுத்துவதில்லை.

முற்பகல் 10-50

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்ற பின்பு மக்கள் விரும்பி உண்ணக்கூடிய அரிசியையும், தரம் உள்ள அரிசியை மட்டுமே பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கி வருகிறோம். இவ்வாறு பொதுமக்கள் விரும்பாத 38,277.614 மெட்ரிக் டன் T.K.M. 9 அரிசியையும், பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்க இயலாத, தரம் இல்லாத T.K.M. 9 மற்றும் இதர இரக 87,238 மெட்ரிக் டன் அரிசியையும், இருப்பு வைப்பது அதன் தரத்தை மேலும் பாதிக்கும் என்ற காரணத்தினால் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டப்படி, Tender Transparency Act –ன்படி பரந்த விளம்பரம் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு விதிமுறைகளின்படிதான் ஏலம் விடப்பட்டது. இவ்வாறு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்க இயலாத அரிசியை கிட்டங்கிதோறும் கணக்கெடுக்கப்பட்டு பரிசோதனை செய்த பின்னரே 3–8–2001 ஆம் தேதி நிலவரப்படி 55,445.462 மெட்ரிக் டன் T.K.M. 9 இரக அரிசியும், 24–9–2001 தேதி நிலவரப்படி 70,370.722 மெட்ரிக் டன் T.K.M.. 9 அல்லாத இதர அரிசியும், ஆக மொத்தம் 1,25,816 மெட்ரிக் டன் அரிசி, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கத் தகுதியற்ற அரிசி என முடிவு செய்தது.

இதில் அரசு கடித எண் பி1/18916/2001–3, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 7–8–2001–ன்படி அனுமதி பெற்று T.K.M. 9 அரிசி ஏலத்தில் விடப்பட்டதில், 55 டெண்டர் படிவங்கள் விற்கப்பட்டு, 32 டெண்டர்தாரர்கள் கலந்துகொண்டு, இதில் 16 பேருக்கு அதிக விலைப்புள்ளி அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டு, 54,328.930 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டது. இதில் சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.4.80 கிடைத்துள்ளது. இதேபோல T.K.M. 9 அல்லாத அரிசிக்கு அரசு கடித எண் பி1/29054/2001–1 கூட்டுறவு,உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 19–9–2001–ன்படி அனுமதி பெற்று, 65 டெண்டர் படிவங்கள் விற்கப்பட்டு, 42 ஒப்பந்ததாரர்கள்

கலந்துகொண்டு, ஒப்பந்ததாரர்களுக்கு அதிக விலைப்புள்ளி அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது. இதன்மூலம் 68,643.668 மெட்ரிக் டன் அரிசி விற்கப்பட்டது.

இதில் சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ. 4.90 கிடைத்து உள்ளது. விதி முறைப்படி பொது ஏலம் விடப்பட்டதால், இத்தனை ஒப்பந்ததாரர்கள் கலந்துகொள்ள முடிந்தது. கடந்த அரசு நெல் கொள்முதல் செய்து பெறப்பட்ட அரிசியை அப்போதே அரைத்து விற்று கிலோ ஒன்றுக்கு ரூ.4.60 என்ற விலைக்குத்தான் கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு – இத்தோடு சேர்ந்த அரிசியை கிலோ ஒன்றுக்கு ரூ.4.60 என்கின்ற விலைக்குத்தான் விற்றுள்ளது. எனவே, இவர்கள் விட்டுச் சென்ற இந்த புழுத்த அரிசியைத்தான் வேறு வழி இல்லாமல் பொது ஏலம் மூலம் விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு இந்த அரசு தள்ளப்பட்டது என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்த அரசு விற்பனை செய்ததன்மூலம் கிடைத்த தொகை கிலோ ஒன்றுக்கு ரூ.4.90 என்பதை இங்கே கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே quality ஆக இருந்த அரிசியிலே– ஒரே நேரத்திலே அப்போதே அரிசியை அரவை செய்து விற்றபோது கிடைத்த தொகை கிலோ ஒன்றுக்கு ரூ.4.60. 4 ஆண்டு காலத்திற்குப் பிறகு இந்த அரசு அவர்கள் கொள்முதல் செய்து வைத்த அரிசியை விற்பனை செய்ததன்மூலம் கிடைத்த விலை ரூ.4.90. ஆக யார் விற்பனை செய்ததிலே தவறு நடந்து இருக்கிறது என்பதனை அவர்களுடைய பார்வைக்கே விட்டுவிடுகிறேன்.

அதேபோல் இந்த அரசானது பொறுப்பேற்றபோது சாக்குப் பைகள் வாங்கியதிலே ஊழல் என்று பல்வேறு வகையான குற்றச்சாட்டுகளை இந்த மாமன்றத்திலே எழுப்பாமல், பத்திரிகை வாயிலாகவும், அவர்களுடைய கட்சி மாநாடுகள் வாயிலாகவும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நடந்தது என்னவென்று சொன்னால் 2002 ஆம் ஆண்டு –இந்த அரசு பொறுப்பேற்றவுடன்– 2001 ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் முடிந்து 2002 ஆம் ஆண்டு தமிழக அரசினுடைய விவசாயத் துறையின் மூலம் அந்த ஆண்டு குறுவை மற்றும் சம்பா பயிர்கள் விளைச்சல் மூலம் 10 1/2 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று கணக்கு அறியப்பட்டு, நெல் கொள்முதல் பருவம் தொடங்கும் முன்னரே சாக்குப் பைகள் தேவையை கணக்கிட்டு, முன்னேற்பாடாக வாங்கி உரிய நேரத்தில் பயன்படுத்துவது ஒரு பொறுப்பான அரசின் கடமையாகும்; அவ்வாறு செய்யாவிட்டால், சாக்கு பை தட்டுப்பாடு



பெருமளவு பாதித்துவிடும். இவ்வாறு ஏற்பட்டு நெல் கொள்முதல் முன்னேற்பாட்டு நடவடிக்கையினை கடந்த அரசு எடுக்கத் தவறியதன் விளைவாக 2001 மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஆந்திரா, கொல்கத்தா ஆகிய இடங்களுக்கு அதிகாரிகள் நேரடியாகச் சென்று பல இலட்சம் சாக்குப் பைகள் வெளிச்சந்தையில் கொள்முதல் செய்தனர்.

முற்பகல் 10–55

இத்தகைய சூழ்நிலை மீண்டும் ஏற்படாமல் தவிர்க்க விவசாயத் துறையின் மதிப்பீட்டின்படி நெல் கொள்முதல் கணக்கிடப்பட்டு, அதற்குத் தேவையான சாக்குப் பைகள் எண்ணிக்கை இரண்டு கோடியே 50 இலட்சம் என்று கணக்கிடப்பட்டு, கையிருப்பிலே உள்ள 70 இலட்சம் சாக்குப் பைகள் போக ஒரு கோடியே 80 இலட்சம் சாக்குப் பைகள் மட்டும் புதிதாக வாங்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ல் உள்ள நிபந்தனைகளைப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. 180 இலட்சம் சாக்குப் பைகள் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரியிருந்தும், எதிர்பார்ப்புக்கு மாறாக பருவமழை பொய்த்துப்போனதாலும், குறுவை 2002 பருவ கால நெல் வரத்து இல்லாமையாலும், சாக்குப் பை தேவையை ஒரு கோடியே 40 இலட்சமாகக் குறைத்து, அக்டோபர் 2002 மாதத்தில் ஒப்பந்ததாரர்களுக்கு உத்தரவு எண் பி24/63248/2002 நாள் 17–10–2002–ன்படி ஆணைகள் வழங்கப்பட்டன. எனவே, அப்போதைய சூழ்நிலையின்படி தேவைக்கு அதிகமாக சாக்குப் பைகள் வாங்கப்படவில்லை. ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக, பருவமழை பொய்த்துவிட்டதாலும், மேட்டூர் அணையில் போதுமான அளவு பாசனத்திற்கு நீர் இல்லாததாலும் விவசாயிகளிடமிருந்து தொடர்ந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக, 2002–2003, 2003–2004–ல் எதிர்பார்த்த அளவுக்கு நெல் நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு வராததாலும், வாங்கப்பட்ட 140 இலட்சம் கோணிகளையும் உடனடியாகப் பயன்படுத்த இயலவில்லை. என்றாலும் இந்த ஆண்டு, நடப்புப் பருவத்திலே, 2004–2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட நல்ல விளைச்சல் காரணமாக இதுவரையில் 8 இலட்சத்து 31 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, கையிருப்பில் இருந்த புதிய சாக்குப் பைகள் அனைத்தும் செலவிடப்பட்டுள்ளன.

மீதம் உள்ள சாக்குப் பைகளின் எண்ணிக்கை 37 இலட்சம் மட்டுமேயாகும். இவையும் இந்த மாத இறுதிக்குள்ளாகப் பயன்படுத்தப்பட்டுவிடும் என்ற தகவலைச் சொல்லி, சாக்குப் பையின்

பிரதான விலையைப் பொறுத்தவரையில் Gunny Traders Association தினசரி Bulletin–னில் வெளியிடும் இறுதி விலை நிலவர அடிப்படையில் மாதாந்திர சராசரி விலை கணக்கிடப்பட்டு, அடிப்படை விலையாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அத்துடன் இரண்டு சதவிகித விற்பனை வரி மற்றும் Market Cess ஆகியவற்றையும் சேர்த்து, விலை நிர்ணயம் செய்து, அதற்குமேல் போக்குவரத்து, அச்சிடுதல், காப்பீடு மற்றும் இதர செலவுகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி, இதில் வரும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் சாக்குப் பைகள் வாங்கும் முறைதான் பல ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்ட காலம் முதல் இதே முறையைத்தான் கையாண்டு வருகிறது. இவ்வாறு Gunny Traders Association விலை நிலவரப்படி, வெளியீட்டின் அடிப்படையில் மாதாந்திர சராசரி விலையை அடிப்படை விலையாக எடுத்துக்கொள்வதற்குக் காரணம், மேற்படி அமைப்பு தினசரி சந்தையில் நிலவும் உண்மையான சாக்குப் பையின் விற்பனை விலை நிலவரத்தை Bullion Market தங்க விலை காட்டுவதைப்போல சுட்டிக்காட்டுவதால்தான்; எனவே சாக்குகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும்போதே சாக்கு delivery செய்யும் மாதத்திற்கு முந்தைய மாத சராசரி GTA விலையுடன், விற்பனை வரி ...(குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு சொல்லட்டும். *(குறுக்கீடு)* I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு நா. வீராசாமி, அமைச்சர் உரையை முடித்த பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மற்றும் Cess வழங்கப்படும் என்று குறிப்பிட்டு, முத்திரையிடுதல், போக்குவரத்து, காப்பீடு மற்றும் இதர செலவினங்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவது வழக்கம். GTA விலைப்புள்ளியிலோ, விற்பனை வரி மற்றும் Cess போன்றவற்றிலோ எந்த மாற்றமும் இருக்காது. இவை அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் ஒன்றே. ஆனால் ஒப்பந்ததாரர்கள் நியமிப்பது, சாக்குப் பைகள் மீது முத்திரையிடுதல், போக்குவரத்து மற்றும் இதர செலவுகளுக்கு அளிக்கும் மிகக் குறைவான விலைப்புள்ளியின் அடிப்படையில்தான் இதுபோன்ற கொள்முதல் முறையை கழகம் 1988 ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடித்து வருகிறது. அதைப்போலவே தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையமும், அதனைச் சார்ந்த சர்க்கரை ஆலைகளும் தங்களுக்குத் தேவையான சாக்குகளை GTA விலைப்புள்ளி அடிப்படையில்தான் கொள்முதல் செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒளிவுமறைவற்ற டெண்டர் சட்டம் 1998 மற்றும் 2000–ஐப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு,



13–8–2002 இல் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, இதர செலவுகளுக்கு குறைந்த விலைப்புள்ளி ரூபாய் 153 வழங்கிய இரண்டு நிறுவனங்களுக்கு சாக்குப் பைகள் வாங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஒப்புதல் அளித்தது. அதன் அடிப்படையில் 100 எண்ணிக்கை கொண்ட கோணிகள் அச்சிடுதல் போன்ற இதர செலவுகளுக்கான தொகை ரூபாய் 153 வீதம், அத்துடன் Gunny Traders Association விலையும் Cess–ம் மற்றும் வணிக வரியும் அளிக்க முடிவு செய்யப்பட்டது.

முற்பகல் 11–00

இதுபோன்ற முன்னேற்பாடு நடவடிக்கை எடுக்காததால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், 2001–ல் சம்பா பருவத்தில் சாக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு அதிகாரிகள் கொல்கத்தா, ஆந்திரா போன்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டு, நேரடி கொள்முதல், spot purchase, செய்ய நேரிட்டது. அது சமயம் 15 இலட்சம் சாக்குப் பைகள், 100 கிலோ கொள்ளளவு கொண்ட B – Twill இரண்டேகால் பவுண்ட் சாக்குப் பைகள் 3 விற்பனையாளர்களிடமிருந்து, 100 சாக்குகளுக்கு சராசரியாக GTA விலை 2,397.08 வுடன் விற்பனை வரி, செஸ் மற்றும் பிரிமியம் ரூபாய் 110 வீதம் வழங்கப்பட்டது. கூடுதலாக ரூபாய் 5 காப்பீட்டுச் செலவும், ரூபாய் 11 அச்சிடவும், ரூபாய் 153 போக்குவரத்துச் செலவும்—நம்முடைய அரசு கொள்முதல் செய்தது; போக்குவரத்துச் செலவு உட்பட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 153. இதற்கு முன்பு, இதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்; கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் கொள்முதல் செய்யப்பட்ட கோணிப் பைகளுக்குக் கொடுக்கப்பட்ட தொகை– அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சர்க்காரில் 153 ரூபாய் போக்குவரத்துச் செலவு உட்பட, 2001–ல் சாக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு அதிகாரிகள் கொல்கத்தா, ஆந்திரா போன்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டு நேரடி கொள்முதல், spot purchase செய்ய நேரிட்டபோது, அதுசமயம் 15 இலட்சம் சாக்குப் பைகள் 3 விற்பனையாளர்களிடமிருந்து 100 சாக்குகளுக்குச் சராசரி GTA அதாவது – Gunny Traders' Association விலை, இது மாறாதது, Plus Premium என்று 110 ரூபாயும், கூடுதலாக ரூபாய் 5 காப்பீட்டுச் செலவும், பைகளின் மீது முத்திரை போடுவதற்கென்று ரூபாய் 11–ம் போக, போக்குவரத்துச் செலவுக்கென்று மட்டும் 153 ரூபாய்க்கு, -- 100 சாக்குப் பைகளைக் கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 100 சாக்குப் பைகள் அங்கே கொள்முதல் செய்யப்பட்டு இங்கே கொண்டுவருவதற்கான செலவு ரூபாய் 278 ரூபாய்– நம்முடைய ஆட்சியிலே, பேரவைத் தலைவர்

அவர்களே, 2002–லே கொள்முதல் செய்யப்பட்ட சாக்குகளுக்கான கொள்முதல் செலவு ரூபாய் 153 (மேசையைத் தட்டும் ஒலி). 153–லே தவறு நடந்திருக்கிறதா? அல்லது 278–லே தவறு நடந்திருக்கிறதா என்பதனை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுடைய பரிசீலனைக்கே விட்டுவிடுகிறேன். அந்தச் சமயத்தில் கொடுத்த போக்குவரத்துச் செலவுடனான இதரச் செலவைவிட 2002–ல் வாங்கிய சாக்குகளுக்குக் கொடுத்த பிரிமியமான ரூபாய் 153 குறைவானதாகும். எனவே, GTA விலையை அடிப்படையாகக் கொண்டுதான் கடந்த பல ஆண்டுகளாக சாக்குப் பை வாங்கப்படுகிறது. இந்த முறையைத்தான் முந்தைய அரசும் பின்பற்றியது. இதில் எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன என்பதனை நான் இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உரையை முடித்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேண்டுமானால் கேட்டுவிடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பேசும்போது இங்கே மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது) இதோ ஒரு நிமிஷத்திலே உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஏதோ கேட்கிறார்கள்.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சில புள்ளி விவரங்களைச் சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட்டுறவு வங்கிகளிலே எல்லாம் தவறு செய்தார்கள் என்று சொன்னார்கள். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒரு இலட்சத்து 68,000 கோடி ரூபாய் இன்னும் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்போதுகூட இந்த 4 ஆண்டு காலத்திலே நீங்கள் பணத்தை விநியோகம் செய்திருக்கிறீர்கள். எவ்வளவு வசூல்



செய்தீர்கள் என்பது கணக்குத் தெரியாது. இருந்தாலும்கூட, நீங்கள் நடவடிக்கை எடுங்கள். தி.மு.க.–காரர்கள் யார் தவறு செய்திருந்தாலும் நடவடிக்கை எடுங்கள்.

நான் இப்போது கேட்க விரும்புவது, இரண்டு பிரச்சினைகள் பற்றி சட்டமன்றத்திலே யாருமே பேசவில்லை; எந்த உறுப்பினரும் பேசாத விவரங்களுக்கு, நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கக்கூடிய வழக்குகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, புழுத்த அரிசி ஏலம் விடப்பட்டது; அதிலே, இவ்வளவு வரவு வந்தது என்று சொல்லியிருக்கிறார். அந்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது.

கோணிப் பை வாங்கியதைப் பற்றியும் இங்கே சொன்னார்கள். அந்த வழக்கும் நீதிமன்றத்திலே இருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால், அரசாங்கத்திலே விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. புழுத்த அரிசி என்பதற்கு இலக்கணம் இருக்கிறது. 8.5 சதவீதத்திற்கு மேல் புழுத்திருந்தால் அதை மண்ணிலே போட்டு, கீழே பூமியிலே பள்ளம் வெட்டிப் புதைக்க வேண்டும்.

முற்பகல் 11–05

50 சதவிகிதத்திற்கு மேல் புழுத்திருந்தால், அது மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்த வேண்டும், 30 சதவிகிதத்திற்கு மேல் புழுத்திருந்தால், அது கோழித் தீவனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் Civil Supplies Godown–ல் இருக்கிறது. அதையும் மீறித்தான் அங்கிருந்த Civil Supplies Corporation தலைவர் நல்ல அரிசியை 12 ரூபாய் என்று வாங்கி 4 ரூபாய் 90 பைசாவிற்கு விற்றது தவறு என்று நீதிமன்றம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு விளக்கம் மாதிரி கேளுங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதுதான் குற்றம்சாட்டி இருக்கிறது. அதை இந்த மன்றத்திலே – நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையை, யாருமே எழுப்பாமல் அமைச்சர் இங்கே பதிவு செய்தது முறைதானா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தை, இது குறித்த விவரத்தை நேற்றே மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் கிளப்புவதற்கு முயற்சி செய்தார்கள். இரண்டு மூன்று உறுப்பினர்கள் இங்கே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவர் கிளப்பவில்லை. (குறுக்கீடுகள்) அவர் ஒன்றும் பேசவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) இல்லை, அரசுத் தரப்பிலே ஒரு விளக்கம் சொல்வதிலே ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடுகள்) அரசுத் தரப்பில் ஒரு விளக்கம் சொல்வது (குறுக்கீடுகள்) தவறில்லை. வெளியிலே பத்திரிகைகளில் சில பிரச்சினைகள் வருகின்றன. வெளியிலே பத்திரிகைகளில் சில பிரச்சினைகள் வருகின்றன. வெளியிலே சில கருத்துகள் பேசப்படுகின்றன. அதற்கு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் சொல்வதிலே ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசி ஏதோ திடீரென்று எங்களுடைய காலத்திலே உருவாக்கப்பட்டு, நாங்கள் வேண்டுமென்றே விற்பனை செய்ததாகக் குறிப்பிட்டார்கள். இதற்கான —

"G.O.Ms.No. 117

Dated 19–6–1998

Read:

From the Managing Director, Tamil Nadu Civil Supplies Corporation Letter No. M6–37800/98 dated 15–4–1998.

---

The Managing Director, Tamil Nadu Civil Supplies Corporation, in his letter read above has stated that since the Government had permitted the Tamil Nadu Civil Supplies Corporation to purchase kuruvai '97 paddy with moisture up to 25% in view of the heavy rains during kuruvai procurement season, a total quantity of 7.04 lakhs MTs of paddy was procured during the above season.

...The Managing Director, Tamil Nadu Civil Supplies Corporation has stated that for want of adequate hulling and drying facilities the entire quantity of paddy could not be processed into boiled rice immediately. Further the continuous inclement weather during October, November and December, 1997 had affected the hulling operations and as a result of such natural phenomenon, sprouting, moulding/fungus and the discolouration were noticed in the kuruvai paddy under storage. The Managing Director, TNCSC, has informed that by taking best positive efforts like abration, re–stacking, rebagging and staggered method of stacking etc., Tamil Nadu Civil Supplies Corporation could contain discolouration to some extent only. He has also informed that out of the total of



7.04 lakh MTs. of kuruvai paddy so procured, 4.25 lakh MTs. were converted into rice till 31–3–1998 both in the Tamil Nadu Civil Supplies Corporation owned Modern rice Mills ...

.. it could not be issued under the Public Distribution System as the maximum permissible limit is only 5% in the case of boiled rice. ..

.. Now the Tamil Nadu Civil Supplies Corporation is having a quantity of about 18,000 to 20,000 MTs of rice which has a high percentage of discolouration.

Further, it is estimated that there may still be 30% to 40% of discolouration out of the remaining stock of 2.59 lakhs MTs . இங்குதான் பேரவைத் தலைவர் அவர்களே, Further, it is estimated that there may still be 30% to 40% of discolouration out of the remaining stock of 2.59 lakhs MTs of kuruvai paddy '97.

இதை வைத்துதான், இந்த அரிசிதான் மாண்புமிகு நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 2002–லே பொது ஏலத்தின்மூலம் விற்பனை செய்யப்பட்டது என்பதைத் தங்கள் வாயிலாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–10

இதேபோன்று, நேற்று இந்த மாமன்ற உறுப்பினர்கள் மாதிரி கூட்டுறவுச் சட்டம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். மத்திய திட்டக் குழுவினால் உருவாக்கப்பட்ட, மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பி இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்களான கூட்டுறவுச் சங்கங்களுக்கு தன்னாட்சி போன்றவற்றை மாநில அரசுகளின் கூட்டுறவுச் சங்கங்கள் இடம்பெறச் செய்யும்படி மைய அரசு வலியுறுத்துகிறது. இதன் அடிப்படையில், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் தக்க திருத்தங்களைக் கொண்டு வருவது குறித்துப் பரிசீலிக்க ஒரு அலுவலர் குழுவினை அரசு அமைத்தது. அந்த அலுவலர் குழு இரண்டு பணிக் குழுக்களை அமைத்து, ஒரு குழு மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தையும், ஆந்திரா மாநிலத்தின் பரஸ்பர உதவி கூட்டுறவுச் சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரினால் தயாரிக்கப்பட்ட தமிழ்நாடு தற்சார்புக் கூட்டுறவுகளின் வரைவுச் சட்டத்தையும் ஆய்வு செய்தது. இக்குழு

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்] [2005 மார்ச் 18

மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தின் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கி, தற்போது நடைமுறையில் உள்ள 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திற்குத் திருத்தங்களை முன்மொழிந்துள்ளது. இது தற்போது அரசின் ஆய்வில் உள்ளது. மற்றொரு குழு மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தை ஆய்வு செய்து தமிழகத்தில் இச்சட்டத்தை நடைமுறைபடுத்துவது குறித்து பரிசீலனை செய்துள்ளது. மாதிரிக் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் வரும் சங்கங்கள் தன்னிச்சையாக அரசின் நிதி உதவியோ கட்டுப்பாடோ இல்லாமல் இயங்கக்கூடியவை என்பதால், இச்சட்டத்தின் அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ள 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திற்கு இணையாக தமிழ்நாடு தற்சார்புக் கூட்டுறவுச் சங்கங்களின் வரைவுச் சட்டம் என்ற புதிய சட்டத்தை உருவாக்கவும் அரசு பரிசீலித்து வருகிறது என்ற விவரத்தையும் மாமன்றத்தில் தெரிவித்து, மாமன்ற உறுப்பினர்கள் இங்கே பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்கள்மீது மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆணையின்படி, 2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள் நுகர் பொருள் வழங்கல் துறையின் மாவட்ட அலுவலகங்களை கணினிமயமாக்கும் திட்டம், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதியோடும், ஆணையின்படியும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 2,000 பெண் உறுப்பினர்களுக்கு அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தலா ரூபாய் 500 வீதம் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, நகரக் கூட்டுறவு வங்கியில் ஆயிரம் பெண் உறுப்பினர்களுக்கு, அவர்கள் பயனடையும் வகையில் தலா ரூபாய் 500 வீதம் கடன் வழங்க ஏதுவாக, ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை மேம்படுத்த 500 பெண் உறுப்பினர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ரூபாய் ஆயிரம் வீதம் கடன் வழங்க 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



2005 மார்ச் 18] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

ஆயிரம் உடல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, ஊனமுற்ற பெண்களுக்கு மறு வாழ்வு அளிக்க வட்டியில்லா கடனாக ரூபாய் 500 வீதம் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, நியாயவிலைக் கடைகளுக்கு மானியத்தின் அடிப்படையில் மண்ணெண்ணெய் பீப்பாய்கள் வாங்குவதற்கு ரூபாய் 34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி, கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு கடனாக ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் வீதம் மற்றும் மானியமாக ரூபாய் 2 இலட்சத்து 20 ஆயிரம் என்ற வீதத்திலும் மொத்தம் 21 இலட்சத்து 50 ஆயிரம், 5 சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, தலைமைச் செயலக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு கணினி மற்றும் இதர பாகங்கள் வாங்க ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மற்றும் அதன் புற நகர் பகுதிகளில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு நவீன எடை இயந்திரங்கள் – 879 இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூபாய் 72 இலட்சத்து 52 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, துணை ஆணையர், சென்னை (வடக்கு) மற்றும் திருவள்ளூர் மாவட்ட வழங்கல் அலுவலகத்தினை கணினிமூலம் ஒருங்கிணைக்க ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அலுவலர்களுக்கு புதிதாக 10 வாகனங்கள் வாங்க ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆக்கபூர்வமான தலைமையின்கீழ் தமிழ்நாட்டு மக்களின் ஆதரவோடு இத்துறை, பலதரப்பட்ட மக்களின் நலனுக்காக, குறிப்பாக நலிந்த பிரிவினரின் நலனுக்காக, தான் ஆற்றும் பணிகளை இன்னும் கூடுதலான

ஆர்வத்தோடு பாடுபடும் என்று இப்பேரவைக்கு மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பல்வேறு பொருள்கள் குறித்து 221 வெட்டுத் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளன. வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் தக்க முறையில் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்கின்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து தங்களது மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். அவ்வெட்டுத் தீர்மானங்களுக்குத் தேவையான விளக்கங்களை எனது பதிலுரையில் அளித்துள்ளேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11–15

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நாற்காலியிலிருந்து சொல்லப்படுகின்ற வார்த்தைகள் அத்தனையும் ஆணைகள் என்றுதான் நாங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்கிறோம். நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஜனவரி மாதம் 31 ஆம் தேதி Civil Supplies Corporation, Chairman ஓய்வு பெற்றால்கூட அவருக்கு எந்தவிதமான சலுகைகளும் அளிக்கக் கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்த வழக்கு இன்னும் நிலுவையிலே இருக்கிறது. அதுகுறித்து இங்கே எடுத்துச் சொல்லக் கூடாது என்று சொன்னேன். ஆனால், நீங்கள் வெளியிலே பேசுகின்றவற்றிற்கு எல்லாம் அமைச்சர் பதில் சொல்கிறார் என்று சொன்னீர்கள். அதே பதிலை, எங்களுக்கும் அதே சலுகைகளை நீதிமன்றத்திலே வழக்கு இருந்தாலும், வெளியிலே பேசக்கூடியவைகளுக்கும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நான் சொன்னது நீதிமன்றத்திலே இருக்கிறது என்பதற்காகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் அவர்கள் நாங்கள் கேட்காததற்கு சில விளக்கங்களைச் சொல்கிறார்கள் என்று சொல்லி கேட்டீர்கள். அதற்குத்தான் நான் பதில் சொன்னேன். நாங்கள் கேட்காமல், நாங்கள் பேசாமல் சிலவற்றுக்கு அமைச்சர் விளக்கம் சொல்கிறாரே என்று கேட்டதற்கு, அதற்குத்தான் நான் பதில் சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் இங்கே பேசவில்லை,



வெளியிலே தீர்மானம் போடுகிறீர்கள், வெளியிலே பத்திரிகைகளிலே எழுதுகிறீர்கள், அதுபோன்ற சில குற்றச்சாட்டுகள் வருகின்றன. (குறுக்கீடு) அதற்குத்தான் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள், நீதிமன்றத்தைப் பற்றிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதேதான், எங்களுக்கும். எங்களுக்கும் தயவுசெய்து அதேபோல வாய்ப்புத் தாருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அது நீதிமன்றத்திலே இருக்கின்ற ஒரு வழக்கு குறித்து இங்கே விவாதிப்பது என்றால் sub–judice என்று நிச்சயமாகத் தெரியும். ஆனால், வழக்கிற்கு உள்ளே அவர் செல்லவில்லை. தீர்ப்பையோ மற்ற வேறு எந்த ஒரு விஷயத்தையும் அவர் விவாதிக்கவில்லை. ஒரு general fact, it is a statistics, ஒரு புள்ளிவிவரத்தைத்தான், உங்களுடைய ஆட்சியிலே எந்த அளவுக்கு அந்தப் புள்ளிவிவரம் இருந்தது, அம்மாவினுடைய ஆட்சியிலே எந்த அளவுக்கு அந்தப் புள்ளிவிவரம் இருந்தது என்பதைத்தான் அவர் சொன்னாரேயொழிய தீர்ப்பிற்குள்ளே அவர் செல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உங்களிடத்திலே வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை. அமைச்சர் அவர்களுக்கு என்ன சலுகைகள் கொடுத்தீர்களோ, என்ன விதிகள் சொன்னீர்களோ, என்ன உத்தரவு போட்டீர்களோ அதே சலுகைகளை எதிர்க்கட்சியாகிய எங்களுக்கும் வெளியிலே பேசுகின்றவைகளுக்கெல்லாம் பதில் சொல்வதற்கு வாய்ப்பு தாருங்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருந்தாலும், அந்த வழக்கிற்குள்ளே போகாமல், அந்த விவரங்களைச் சொல்வதற்கும் வாய்ப்புக் கொடுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. வெளியிலே பேசுகின்ற எல்லாவற்றிற்கும் பதில் சொல்லக்கூடிய நிலைமையைச் சட்டமன்றத்திலே உருவாக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுடைய துறை சம்பந்தப்பட்ட காரணத்தினால், அந்தத் துறையிலே அது ஒரு முக்கியமான ஒரு விஷயம் அந்தத் துறையிலே இருக்கிற சில

பொருட்கள்மீது, அவை வாங்கப்பட்டது குறித்து சில விளக்கங்கள், சில குற்றச்சாட்டுகள் வெளியிலே எழுப்பப்பட்ட காரணத்தால் அதற்கு இங்கே விளக்கம் சொன்னாரே தவிர, மற்றபடி எதுவும் இல்லை. நீதிமன்றத்திலே உள்ள வழக்கிற்குள்ளே போகவில்லை என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதுதான் என்னுடைய கருத்து. திரு. பொன்முடி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification. நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 9 சதவீத வட்டியைப் பற்றிச் சொன்னார்கள். அந்த 9 சதவீத வட்டி என்பது புதிதாக வழங்கப்படுகிற கடன்களுக்கு மட்டுமா? குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக நீட்டித்திருக்கிறீர்களே, அந்தக் கடன்களுக்கு இந்தச் சலுகை உண்டா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை, முதலில் இரண்டு பேரும் பேசிவிட்டுச் சொல்லுங்கள்; நிதியமைச்சரும், கூட்டுறவுத் துறை அமைச்சரும். ஏனென்றால்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி (குறுக்கீடு) இல்லை, பொன்முடி, அதுதான், அந்தக் குறும்புதான் உங்களை விட்டுப் போகமாட்டேன் என்கிறது.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிட்டு, அவரிடம் விளக்கம் மட்டும்தான் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பயிர்க் கடன்களுக்கும் 9 சதவீதம்தான் வட்டி. பயிர்க் கடன்களைப் பொறுத்தவரையில் அனைத்துப் பயிர்க் கடன்களுக்கும் 9 சதவீதம்தான் வட்டி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்க் கடன்களுக்கு கூட்டுறவு வங்கிகள் 9 சதவீதம் வட்டிக்கு கடன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது பயிர்க்





கடனுக்கு மட்டுமா? வேளாண் சார்ந்த துணைத் தொழில்களுக்கும் — விவசாயக் கடன்கள் என்றுதான் அதுவும் இருக்கின்றது — அந்த விவசாயக் கடன்களுக்கும் அதே வட்டிதான் வசூலிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர்க் கடன்களுக்கு மட்டும்தான் அந்த 9 சதவீத வட்டியானது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 12, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி. கணேசன்.



**திரு. வி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

முற்பகல் 11–20

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,314,27,82,000/–, மூலதனக் கணக்கில் ரூ.54,72,65,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.9,17,71,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order,...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன?

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தால் அந்த வெட்டுத் தீர்மானம் கொடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு 'வற்புறுத்துகிறீர்களா' என்று கேட்கவேண்டும். ஏனென்றால் வெட்டுத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடு) ஆனால், நீங்கள் என்ன செய்கிறீர்கள்? யாரும் வந்து இங்கே என் வெட்டுத் தீர்மானத்தின்மீது நான் பேசுகிறேன் என்று சொல்வது இல்லை, விட்டு விடுகிறார்கள். They are entitled; சொல்லலாம், சில விஷயங்களை. ஆனால், நீங்கள் அந்த மரபையே எடுத்துவிட்டு, மொத்தமாக போட்டு 'ஏக் மார் தோ துக்கடா' என்று அடித்துவிடுகிறீர்களே, இது நியாயம்தானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. துரைமுருகன்:** இது நியாயம்தானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) இல்லை.

**திரு. துரைமுருகன்:** அந்த மரபே போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. உறுப்பினர்களை அழைப்பதற்கு முன்பே விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா? என்று கூறித்தான் ஒவ்வொருவராக அழைக்கிறேன். பெரும்பாலும் உறுப்பினர்கள் வலியுறுத்துவது இல்லை. இது ஒரு சம்பிரதாயம். யாருமே பேசுவது இல்லை. (குறுக்கீடு) யாருமே பேசுவது இல்லை. (குறுக்கீடு) யாருமே பேசுவது இல்லை. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** சட்டமன்றத்தினுடைய மரபே போய்விட்டது. அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரத்தின் நெருக்கடியைக் கருதி சில நேரங்களிலே பேரவைத் தலைவருக்குச் சில அதிகாரங்கள் உண்டு. அந்த அதிகாரத்தையாவது கொடுங்கள். பேரவை தயவுசெய்து நடவடிக்கைகளில் இது உரிய நடைமுறைப்படி பதிவு செய்யப்படும்.

**திரு. துரைமுருகன்:** நேரத்திற்காக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற அதிகாரங்களைத்தான் பறித்தீர்கள். இதையாவது கொடுங்கள்.

[2005 மார்ச் 18

## (ஆ) கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.51,60,000/–க்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 153, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள பெரிய மாரியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 535, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் திருவதிகை வீரட்டானேஸ்வரர் திருக்கோவில் மிகவும் பழமையானது, வரலாற்றுச் சிறப்பு மிக்கது ஆகையால், இந்தக் கோயிலை முக்கியத் தலங்களில் ஒன்றாக ஆக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



[திரு. தி. வேல்முருகன்]

2005 மார்ச் 18]

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 828, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் ஜலகாம்பாறை நீர்வீழ்ச்சி உள்ளது. இங்கு பிரசித்தி பெற்ற முருகன் கோயில் உள்ளது. இக்கோயிலில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான திருமண மண்டபம் பழுதடைந்துள்ளது. அதனைப் புதுப்பிக்கவும், அங்கு ஒரு குளம் வெட்டி நீர் சேகரிக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1287, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1336, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் உள்ள கோயில்களை அரசே புதுப்பித்ததுபோல ஏனைய வகுப்பினர்கள் (மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட) வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களுக்கும் நிதி வழங்கி உதவுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1576, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஆறழகரில் உள்ள மிகவும் சிறப்பு வாய்ந்த 8 வகையான பைரவர் சுவாமியுள்ள ஈஸ்வரன் கோயிலைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1765, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, பரமத்தி வேலூர் காவிரிக் கரையில் அமைந்துள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற அருள்மிகு ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயத்தைச் செப்பனிட்டு குடமுழுக்கு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1840, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2141, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் உள்ள கோயில்களில் காலை பூஜை செய்ய உதவித்தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2195, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து திருத்தலங்கள் பற்றியும் தல வரலாறு தொகுப்பு வெளியிடப் பெற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 352, திரு. எச்.எம் ராஜு.

**திரு. எச்.எம் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், ஊட்டி காந்தலில் அருள்பாலிக்கும் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் அன்னதான திட்டம் ஆரம்பிக்கும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1154, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம் அருள்மிகு புராதனவனேஸ்வரர் பெரியநாயகி அம்பாள் ஆலயத்திற்கு திருத்தேர் செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1593, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நீண்டகாலமாக குடமுழுக்கு நடத்தப்படாத கோயில்களை அடையாளம் கண்டு, உடன் குடமுழுக்கு நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 601, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 937, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1464, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக ஆலயங்களில் பரவலாக நடைபெற்று வரும் திருட்டு, கொள்ளை போன்றவற்றைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2032, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலையில் பௌர்ணமி தினத்தன்று இலட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சுற்றி வருகின்றனர். எனவே, மேற்படி மலையினைச் சுற்றி உலகத் தரம் வாய்ந்த சாலையினை அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2053, திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2097, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 269, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலை உலக அதிசயங்களில் ஒன்றாக இடம்பெறச் செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 741, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சோளிங்கரில் உள்ள ஸ்ரீலஷ்மி நரசிம்மசாமி திருக்கோயில் அமைந்துள்ள மலை உயரமாக உள்ளதால் பக்தர்கள் சென்றுவர 'ரோப்-கார்' வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1041, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1758, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை பேட்டராயசுவாமி, சிவனப்பள்ளி சென்ன வீரப்பசுவாமி கோயில்கள் வருமானமின்றி தவிக்கின்றன. கோயில்களுக்குத் தனி நிதி ஒதுக்கிடவும், திருப்பணிகள் செய்திடவும் பக்தர்களுக்காக அடிப்படை வசதிகளைச் செய்திடவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2082, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை அருள்மிகு கோபால்சாமி கோயிலுக்குத் திருப்பணி நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 944, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கொட்டுக்காரம்பட்டி மூப்பனார் அருள்மிகு சுவாமிக்கு ஒருகால பூஜைக்கு ரூபாய் 25,000 ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதியில் உள்ள ஆதிதிராவிடர் திருக்கோயில்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 74, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதிதிராவிடர் கோயில்களுக்கு வழங்கும் உதவித் தொகையை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1005, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதிக்கு உட்பட்ட ஆதிதிராவிடர் தெருக்களில் கட்டப்பட்டு முடிவடையாமல் உள்ள அனைத்து கோயில்களுக்கும் அரசின் நிதியுதவியான ரூபாய் 25,000/- வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2387, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர் வாழும் கிராமப் பகுதிகளில் கட்டும் திருக்கோயிலுக்கு ரூபாய் 25 ஆயிரம் வழங்குவது போல, சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர்

பகுதிகளிலுமுள்ள திருக்கோயில் கட்டும் பணிக்கு ரூபாய் 50 ஆயிரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1480, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் வருமானம் குறைவாக உள்ள கோயில்களில் சீரமைப்புப் பணி நிறைவேற்றிட அரசு உதவித் தொகைகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 975, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி செண்பக வள்ளியம்மன் கோயில் குளத்தை தூர் வாரி, மராமத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 219, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1631, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழனி திருக்கோயிலில் தண்டாயுதபாணி நிலையத்தில் பண்டிகைக் காலங்களில் பக்தர்கள் தங்குவதற்குப் போதிய இடம் இல்லாமல் அவதிப்படுவதால், அங்கு புதிதாக அடுக்குமாடி தங்கும் விடுதி கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2491, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி முருகன் கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக அதிக அளவில் தங்கும் விடுதிகள் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 427, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1951, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலையில் பௌர்ணமி தினத்தன்று இலட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சுற்றுவதால், கிரிவலம் சுற்றும் பாதையைச்

சுத்தப்படுத்தி, சுகாதாரமான முறையில் பராமரிக்கவும், மலைப்பாதையைச் சுற்றியுள்ள மின் விளக்குகளை பராமரித்தல் மற்றும் அதற்கான மின் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றை திருவண்ணாமலை திருக்கோயில் நிர்வாகமே மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1971, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சியிலுள்ள மலைக் கோயிலையும் மற்றும் மாநகரினைச் சுற்றியுள்ள கோயில்களையும் பராமரிக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2019, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டம், திருவெறும்பூரில் உள்ள எறும்பீசுவரர் ஆலயத்தின் தெப்பக்குளத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 660, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

***திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதிலுமுள்ள திருக்கோயில்களில் ஓடாமல் நிறுத்தப்பட்டுள்ள திருத்தேர்களை பழுதுபார்த்து மீண்டும் ஓடச் செய்து, ஆன்மீகப் பெரியோர்களின் நெடுநாளைய விருப்பத்தை பூர்த்தி செய்து தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1095, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயில் கடைகளில் வாடகை நிலுவைத் தொகைகளை விரைந்து வசூலிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1123, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 647, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல ஆண்டுகளாக அறநிலையத் துறை இடங்களில் குடியிருப்போரை முறைப்படுத்தி குத்தகைக்கோ, சந்தை மதிப்பிற்கோ வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மீ.அ. வைதியலிங்கம்] [2005 மார்ச் 18

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2422, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ள பல்கலைக்கழகம் மற்றும் கல்வி நிறுவனங்களில் பணி நியமனங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 448, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து சமய அறநிலையத் துறை கோயில்களில் அனைத்து சாதியைச் சார்ந்தவர்களும் அர்ச்சகராகும் வாய்ப்பு அமல்படுத்துதல் குறித்தும், பெண்கள் அர்ச்சகராகும் வாய்ப்பு குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,82,43,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.51,60,000/– ஆகியவற்றில் ரூ.100/– குறைக்க வேண்டும்."



2005 மார்ச் 18]

**(இ) கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.558,17,87,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 170, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகையினை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 545, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 836, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் சமூக நலத் துறையின்மூலம் தொழில் பயிற்சி மையம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1271, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1343, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்துள்ள நாட்ராம்பள்ளி தொகுதிக்குட்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு பாதுகாப்பு பத்திரம் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1573, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண் சிசுக் கொலை தடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1781, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறங்களில் வசிக்கும், பள்ளிப் படிப்பை வறுமையின் காரணமாக தவறவிட்ட மாணவ–மாணவிகள் பயன் பெறும் வகையில் இலவச தட்டச்சுப் பயிற்சி, கணினி பயிற்சி, தையல் பயிற்சி போன்ற தொழில் பயிற்சிகள் வழங்கி நிதியுதவி வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1847, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர்நிலை, மேல்நிலை, நடுநிலைப் பள்ளிகளில் உணவு தரமாகத் தயாரிக்க சத்துணவுக் கூடங்களில் நீராவி சமையல் அடுப்பை பயன்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/– மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2443, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2260, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 305, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குந்தா தாலுகா, குந்தா ஊராட்சிக்கு உட்பட்ட காமராஜ் நகரில் புதிதாக சத்துணவுக் கூட கட்டடம் ஒன்று கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1012, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1172, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் பேராவூரணி தொகுதியில் உள்ள அனைத்து சத்துணவு மையங்களுக்கும் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவை அதிகப்படுத்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1588, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு திட்டத்தில் நடக்கும் முறைகேடுகளைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1455, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2052, திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காலியாகவுள்ள சத்துணவு ஊழியர் பணியிடங்களை நிரப்பப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2402, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடங்களை சீர்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ப. ரங்கநாதன்] [2005 மார்ச் 18

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 658, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பதிவு செய்ய விரும்பி வரும் பொதுமக்கள் தேவையின்றி இழுத்தடிக்கப்பட்டு இறுதியில் பதிவு செய்ய மறுத்து இத்திட்டத்தின் பலன்கள் அப்பாவி பொது மக்களுக்கு மறுக்கப்பட்டு வருவதைத் தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1092, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உபதலை ஊராட்சி, சின்ன பிக்கட்டியில் உள்ள தேசிய மனவளர்ச்சி குன்றியோர் மையத்திற்கு மாநில அரசின் உதவி கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2182, திரு. கே. ஆறுமுகம்.



2005 மார்ச் 18]

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு கூர்நோக்கு இல்லத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 273, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை காமராஜர் சாலையில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளியை பாதுகாப்பாக நடத்தவும், அங்கு பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2401, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் 2–வது தொகுதியில் இலவச தையல் இயந்திரம் வேண்டி விண்ணப்பித்த தகுதியுடைய ஏழை விதவைகள் அனைவருக்கும் தையல் இயந்திரங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு வழங்கும் உணவுக்கு நல்ல அரிசியை உபயோகிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 75, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுடன் வாரம் ஓரிரு நாள் பால் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1889, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதியில் கூடுதலாக சத்துணவு மையங்கள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 731, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுப் பணியாளர்களை முழுநேர அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 756, திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 918, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கொட்டுக்காரம்பட்டி நடுநிலைப்பள்ளியில் மதிய உணவு சமையல் கூடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1124, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2492, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில் ஊனமுற்றோர், முதியோர், கணவனை இழந்த கைம்பெண்கள் ஆகியோர் அரசு உதவித் தொகைகள் கோரி மனு செய்த 15 தினங்களுக்குள் வழங்கிட வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



D V2", 3' P05 P05. 74' 1
தமிழ்நாடு ... 226641. சென்னை-600 009

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 600, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுத் துறையில் காலியாகவுள்ள அமைப்பாளர், சமையலர் பணியிடம் போன்றவற்றை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3934, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2073, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை தொகுதியில் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 977, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊனமுற்றோர் சுயதொழில் தொடங்குவதற்கு வங்கிக் கடன்கள் நிபந்தனையின்றி வழங்குவதற்காக எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1635, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் முதியோர் உதவித் தொகை பெறும் நபர்களுக்கும் சத்துணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1479, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் முதியோர் உதவித் தொகை திட்டத்தில் வழங்கப்பட வேண்டிய உதவித்தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைப் போக்கி உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 646, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலப்புத் திருமணம், விதவைத் திருமணம், ஆதரவற்ற பெண்கள் திருமணம், கருவுற்ற தாய்மார்களுக்கு அளிக்கும் நிதி போன்ற சமூக நலத் திட்டங்களோடு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் அரசின் மானியங்களை உரிய காலத்தில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.558,17,87,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 161 முதல் 197 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@@ 198 முதல் 303 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது



மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகளையும் இணைத்துப் பேசலாம். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இருவருமே பதிலுரை வழங்கவேண்டும். ஆகவே, நேரத்தை, 10 மணித் துளிகள் எடுத்துக்கொண்டு பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தினுடைய தானைத் தலைவரும், தன்மானத் தலைவரும், இன உணர்வு கொண்ட தலைவரும், தமிழகத்திலே வாழ்ந்துகொண்டு இருக்கின்ற தமிழர்களுக்கு மட்டுமல்லாமல், உலகெங்கும் பரவிக் கிடக்கின்ற தமிழ்ச் சமுதாயத்திற்காக தனது 16–வது வயதில் 'ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள், நீ நாடி வந்த கோடை நாடு இதுவல்ல' என தனது போர்க் குரலை எழுப்பி, அன்று முதல் இன்று வரை அல்லும் பகலும் அயராமல் ஓடி உழைத்துக் கொண்டிருக்கின்ற ஒப்பற்றத் தலைவரும், முத்தமிழ் அறிஞரும், கலைச் சக்கரவர்த்தியும், இராஜராஜன் விருது பெற்றவரும் தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரில்லாத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற கோபாலபுரம் நோக்கி வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

இந்த மாமன்றத்தில் 1989 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவும், 1996 இல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், 2001 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்ட பஞ்சாயத்துத் தலைவராகவும், 1996–லே மாவட்ட பஞ்சாயத்துத் தலைவராகவும், மீண்டும் இந்த மாமன்றத்தில் கடலூர் மாவட்டம், மங்களூர் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றிபெற்று, சுமார் 13,886 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று மீண்டும் இந்த அவையிலே பேசுவதற்கு எனக்கு ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கின்ற இன்றைய தமிழகத்தின் கதாநாயகன், வருங்கால தமிழகத்தின் வரலாற்று நாயகன் எங்கள் குறிஞ்சி மலர் நாயகன், என் நெஞ்சம் நிறைந்த ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களை வணங்கி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய வெற்றிக்காக அரும்பாடுபட்டு இருக்கின்ற எங்கள் கட்சியோடு கூட்டணியில் இருக்கின்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கழகத்தினுடைய பொருளாளர், அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், மரியாதைக்குரிய கழகத்தினுடைய முதன்மைச் செயலாளர், அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், கழகத்தினுடைய பொதுச் செயலாளர், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், நான் இந்த மன்றத்திற்கு வருவதற்கு அரும்பாடுபட்டு, இடைத் தேர்தலிலே வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்த, அருமை அண்ணன் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கழகத்தினுடைய கொறடா அருமை அண்ணன் இள. புகழேந்தி அவர்களுக்கும், மூத்த உறுப்பினர்களாக இருக்கக்கூடிய அருமை அண்ணன் பொன்முடி, அருமை அண்ணன் அன்பழகன், அண்ணன் கோ.சி. மணி, அண்ணன் எ.வ. வேலு போன்றவர்களுக்கெல்லாம் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–35*

இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, இந்த சமூக நலத் துறை மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களை நான் எடுத்துவைக்க விரும்புகிறேன். 1919-ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாநாட்டிலே, தந்தைப் பெரியார் அவர்கள் சுய மரியாதை மாநாட்டினைத் தொடங்கி வைத்துப் பேசுகின்றபோது, 'சமூகத்திலே பெண்களுக்கு அந்தஸ்தும், சமூகத்திலே வளர்ச்சியும் கொண்டுவரவேண்டும்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். எனவே, அந்த அடிப்படையில் 1989 ஆம் ஆண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும், இலட்சியங்களையும் மனதிலே தாங்கி பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவினுடைய தம்பியாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள் இந்த அவையிலே பெண்களுக்கு சொத்திலே சம பங்கு உரிமையுண்டு என்கின்ற சட்டத்தைக் கொண்டு வந்து நிலைநாட்டியவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



சமூக நலனிலே அக்கறை கொண்டிருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 1999–2000 ஆண்டில் ரூ.623,51,47,000 ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு 2005–06 ஆம் ஆண்டில் இந்தத் துறைக்கு ரூ.558,17,90,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மிகக் குறைவான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக நலனோடு இருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் என்கின்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தபோது ஒரு பெண் எட்டாம் வகுப்பு படித்திருந்தால் போதும், அந்தப் பெண்ணுக்கு திருமணத்திற்காக ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதற்குப் பிறகு 1996 ஆம் ஆண்டு ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தபோது ஒரு பெண் பத்தாம் வகுப்பு படித்திருந்தால் ரூபாய் பத்தாயிரம் வழங்கப்படும் என்கின்ற ஒரு ஆணையைப் பிறப்பித்தார்கள். இந்தப் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படுவது பெண்களுக்குக் கல்வி அளிப்பதன்மூலமாக சமுதாயத்தில் அவர்களுக்கு அந்தஸ்து உயர்த்தப்படும் என்கின்ற அந்த அடிப்படையிலேதான் ரூபாய் பத்தாயிரம் வழங்கப்பட்டது. ஆனால், அந்த அடிப்படையில் சற்றேறக்குறைய தலைவர் கலைஞர் அவர்களால் 2,28,593 எழைப் பெண்களுக்கு ரூபாய் 228,59,30,000 வழங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்தத் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

அஞ்சுகம் அம்மையார் கலப்பு திருமண உதவித் திட்டம், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது அந்தத் திட்டத்திற்கு 1989 ஆம் ஆண்டு ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது 1996 ஆம் ஆண்டு அந்தத் திட்டத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அதிலே கலப்புத் திருமணம் செய்துகொள்வோரில் மணமகனோ மணமகளோ ஆதிதிராவிடராக இருந்தால் ரூபாய் 20,000 வழங்கப்படும் என்கின்ற அந்த ஆணையும் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்த காலத்திலே வழங்கப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டம் என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தினை தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதனுடைய நோக்கம் என்னவென்று சொன்னால், கிராமப்புறத்திலே இருக்கின்ற தாய்மார்கள் கருவுற்று இருக்கின்ற காலத்தில் அவர்கள் சத்தான உணவு உட்கொள்ள

வேண்டுமென்கின்ற உயரிய சிந்தனையை தலைவர் மனதிலே கொண்டு, அவர்களுக்கு மகப்பேறு காலத்தில் குழந்தை பிறப்பதற்கு முன்பாக இரண்டு மாத காலத்திற்கு, மாதத்திற்கு 50 ரூபாய் வீதம் 100 ரூபாயும், குழந்தை பிறந்த பிறகு மாதம் 50 ரூபாய் வீதம் இரண்டு மாதத்திற்கு 100 ரூபாயும் ஆக 200 ரூபாய் வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மீண்டும் 1996 ஆம் ஆண்டு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபோது அந்தத் தொகை 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. இப்படி பெண்களுடைய நலனில் அக்கறை கொண்டிருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால், இன்றைக்கு அந்தத் திட்டம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன்.

அதுபோலவே பெண்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இந்தியாவிலேயே முதன்முதலாக உள்ளாட்சி மன்றங்களிலே 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு, உள்ளாட்சி மன்றங்களிலே நிர்வாகம் செய்வதற்கான ஆணை வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் முதியோர் உதவித் தொகை, உடல் ஊனமுற்றவர்கள், ஆதரவற்ற விதவைகள், நெசவாளர்கள், மீனவர்கள் ஆகியோருக்கு 150 ரூபாய் இருந்ததை 200 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற அரசு எவ்வளவு ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே இலவச சீருடைகள் 2003–04 ஆம் ஆண்டு சமூக நலத் துறையின்கீழ் செயல்படும் தையல் சங்கத்தின் மூலமாக பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சீருடைகள் பாதி தைக்கப்பட்டு, சமூக நலத் துறையிலேயும், பாதி தைக்கப்பட்டு மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்திலே வைக்கப்பட்டு இதுநாள் வரையில் வழங்கப்படாமல் உள்ளன. நான் சொல்வது 2003–2004. அதைப்போலவே 2004–2005 ஆம் ஆண்டு அந்த இலவச சீருடை....

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது கன்னிப் பேச்சு. முடிந்தவுடனே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். திரு. கணேசன், தண்ணீர் குடித்துக்கொள்ளுங்கள்.



**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவிகளுக்கு சைக்கிள் வழங்குகின்ற திட்டம், இப்போது நடைமுறையில் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு, ப்ளஸ்–2 படிக்கின்ற மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அதைப்போலவே, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் இருக்கிறது. எனவே, ஒரே பள்ளியிலே படிக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு மட்டும் வழங்குகின்றபோது, பிற சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகளும் சைக்கிள் வழங்குகின்றபோது... அந்தப் பள்ளியிலே படிக்கின்றபோது, தங்களுக்கும் சைக்கிள் வழங்கப்படவில்லையே என்ற ஆதங்கத்தோடு, அவர்களுக்கு மன உளைச்சலும் ஏற்படுகின்றது. எனவே, அனைத்து சமுதாய மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்குகிற திட்டத்தைச் செயல்படுத்துவீர்களா என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பெருந்தலைவர் காமராஜரின் தாயார் சிவகாமி அம்மையார் பெயரில், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் தாயார் பங்காரு அம்மையார் பெயரில், பங்காரு அம்மையார் மகளிர் குழுக்கள் மேம்பாட்டுத் திட்டம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தாயார் அன்னை சத்யா அவர்கள் பெயரில், அன்னை சத்யா குழந்தைகள் காப்பகம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களுடைய தாயார் அஞ்சுகம் அம்மையார் பெயரில், அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டம் என்ற திட்டம் இருந்தது. அந்தப் பெயர் இப்போது எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசு, பெருந்தன்மையோடு அந்தப் பெயரை விட்டிருக்கலாம் என்பதையும் இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டம். சத்துணவுத் திட்டத்திலே இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, எப்போதுமே கன்னிப்பேச்சு சுருக்கமாக இருக்க வேண்டும். (குறுக்கீடு) திரு. எவ. வேலு, உட்காருங்கள்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்தில், பல்வேறு இடங்களிலே வானமே கூரையாகக் கொண்டு, சமையல் அறைகளுக்குக் கட்டடங்கள் இல்லாமல், தமிழகத்திலே பல்வேறு இடங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேயும் பல்வேறு இடங்களிலே அப்படிப்பட்ட நிலைப்பாடுகள் இருக்கின்றன. எனவே, எல்லா இடங்களிலும் அந்த சத்துணவு சமையல் அறைக் கூடங்களைக் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே, இப்போது சமையல் எரிவாயு — gas — எல்லா இடங்களிலேயும் எளிதாகக் கிடைக்கிறது. எனவே, சமையல் எரிவாயு — gas — இணைப்பு கொடுத்தால், அது சமையலுக்கு மிகவும் எளிதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்து சமய அறநிலையத் துறை. தலைவர் கலைஞர் அவர்கள், 1953 ஆம் ஆண்டு, பராசக்தி படத்திலே, கதை வசனத்திலே சொல்லியிருக்கிறார்கள். "கோயில் கூடாது என்பதல்ல, எங்கள் நோக்கம். அது கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது என்பதற்காகத்தான்" என்று, 1953 ஆம் ஆண்டு, எதிர்காலத்திலே என்ன நிகழப்போகிறது என்பதை அடிப்படையாக வைத்துத்தான் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே தலைவர் கலைஞர் அவர்கள், சற்றேறக்குறைய 2,000 கோயில்களுக்குமேல் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில் சில கருத்துகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கோயில்கள், இந்து சமயக் கோயில்களெல்லாம் மிகப் பிரசித்தி பெற்ற கோயில்கள். இக்கோயில்களுக்கு முன்னாலே குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களில் தூர்வாரப்படாமல், பல்வேறு குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களைத் தூர்வாருவது, பொதுப் பணித் துறையிலா அல்லது உள்ளாட்சித் துறையிலா அல்லது எந்தத் துறையில் என்பது இன்னும் நிர்ணயிக்கப்படாமல் இருப்பதால், இப்படி பல்வேறு குளங்கள் தமிழ்நாட்டிலே பாழ்பட்டுக்கிடக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கோயில்கள், திருவண்ணாமலை, கடலூர், விருத்தாசலம், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலே இருக்கின்ற பெரிய, பழமைவாய்ந்த, தொன்மைவாய்ந்த கோயில்களிலே தேர்த் திருவிழா நடைபெறுகின்றபோது, தேர் சென்றுகொண்டிருக்கும்போது, அந்தத் தேரினுடைய சக்கரங்களெல்லாம் இடையிலே உடைந்து இருக்கின்ற





நிலையை நாம் பார்க்கிறோம். எனவே, இப்போது அண்மையிலே 'பெல்' நிறுவனத்தின் மூலமாக அந்தத் தேர்களுக்குச் சக்கரம் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு, மிகத் தொன்மைவாய்ந்த பழைய கோயில்களுக்கெல்லாம் அப்படிப்பட்ட இரும்புச் சக்கரங்களைச் செய்து கொடுத்தால், நிச்சயமாக ஏதுவாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, அண்டை மாநிலங்களான கர்நாடக மாநிலத்தில், தர்மஸ்தலா, மூகாம்பிகை, திருப்பதி போன்ற பெரிய கோயில்களின் கட்டுப்பாட்டில் பல்கலைக்கழகங்கள், பள்ளிகள், கல்லூரிகளையெல்லாம் வைத்து, இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக எல்லாக் கோயில்களையும்தானே ஏற்று நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்; அதுபோல் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றையும் ஏன் ஏற்று நடத்தக் கூடாது என்ற வினாவையும் இந்த நேரத்திலே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே, பழமைவாய்ந்த பிரசித்தி பெற்ற கோயில்களிலே, ஆண்டவனுடைய கழுத்திலே போடப்பட்டிருக்கின்ற நகைகள், ஊர்வலம் சென்றுகொண்டிருக்கும்போது, திடீரென அறுந்துவிடுகின்றன. எனவே, அப்படி அறுந்துவிடுகின்ற காரணத்தால், கோயிலிலேயிருந்து கொள்ளை போகின்ற நகைகள், எந்த நகைகள் கொள்ளை போயின, எந்த நகைகள் திருட்டுப் போயின என்று கண்டுபிடிக்க முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது. எனவே, இதனைக் கருத்திலேகொண்டு, இப்போது கம்ப்யூட்டர் மயமாகியிருக்கின்ற காரணத்தால், அந்த நகைகளையெல்லாம் கம்ப்யூட்டர் முறையிலே, மாதிரிப் படம் எடுத்து வைத்திருந்தால், நிச்சயமாக இந்த நகைகள் கொள்ளை போனால், அவற்றை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும் என்று நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திருவண்ணாமலையிலே இருக்கின்ற... (குறுக்கீடு) ஒரு நிமிடம், பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலே இருக்கின்ற அந்தக் கோயிலில், மாதந்தோறும் மிகப் பிரசித்திப்பெற்ற பௌர்ணமித் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அந்தக் கோயிலுக்கு வருகிறார்கள். ஆனால், இந்து சமய அறநிலையத் துறையின்

மூலமாக அந்தப் பக்தர்களுக்கு சிறப்பான ஏற்பாடு இன்னும் செய்யப்படவில்லை. சற்றேறக்குறைய அந்தக் கோயில் பணம் 8 கோடி ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பாக டெண்டர் விடப்பட்டு, அந்தப் பக்தர்கள் எல்லாம் செல்வதற்கு ஏதுவாக, ஷெல்டர்கள் போடுவதற்கு டெண்டர் போடப்பட்டு, இரண்டு ஆண்டு காலமாகிறது. இதுவரையிலும் அந்த ஷெல்டர் பணி முடிக்கப்படவில்லையென்பதையும், இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போலவே, நம்முடைய.(மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் பிறகு பேசலாம், கணேசன்.

**திரு. வி. கணேசன்:** என்னுடைய தொகுதியின் சார்பில் எனக்கு வாக்களித்த தொகுதி வாக்காளர் பெருமக்களுக்காக ஒரு கோரிக்கை. என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற வெல்லிங்டன் ஏரி என்கின்ற ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரி, கடலூர் மாவட்டத்திலே இருக்கின்ற வீராணம் ஏரியைவிட மிகப் பெரிய ஏரியாகும். அந்த ஏரியின் மூலமாக 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. கடந்த 5 ஆண்டு காலமாக, அந்த ஏரியிலே 300 மீட்டர் தூரம் உடைபட்டு, அந்த ஏரிக் கரையே நகர்ந்துகொண்டேயிருக்கிறது. டான்டன் என்கின்ற ஒரு பெரிய குழுவினர் வருகை தந்து பார்த்து, அந்த ஏரிக்கரையைப் பலப்படுத்த வேண்டுமென்று பல கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை அந்தக் கரை நகர்வது நின்றதா என்றால் இல்லை. எனவே, நவீன முறையிலே இன்றைக்கு எத்தனையோ ஏரிகளை கான்கிரீட் மூலமாகக் கட்டிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் அந்த ஏரிக்கரை இன்னும் நிறுத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதி விவசாயிகள், மங்களூர் தொகுதியில் இருக்கக்கூடிய திட்டக்குடி, விருத்தாசலம் வட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த ஏரியை ஆழப்படுத்திட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். அந்தக் கடைசி வாக்கியத்தோடு முடித்துக் கொள்ளுங்கள்.



**திரு. வி. கணேசன்:** மங்களூர் சட்டமன்றத் தொகுதியிலே அதிகமாக, பருத்தி பயிரிடப்படுகின்ற காரணத்தினால், அங்கே ஒரு ஸ்பின்னிங் மில் அமைத்தால் மிக நன்றாக இருக்கும். இறுதியாக, இடைத்தேர்தலிலே வெற்றி பெற்று வந்தால், அங்கே மருத்துவக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகளையெல்லாம் உருவாக்கித் தருகின்றீர்களே! நானும் இடைத்தேர்தலில்தானே, 13,886 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்று வந்திருக்கின்றேன்; என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலும் அதுபோல் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள், பள்ளிக் குழந்தைகளுக்கு சரியாக சீருடை வழங்கப்படவில்லையென்று பொத்தாம்பொதுவாகக் கூறியிருந்தார். ஏற்கெனவே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்தச் சீருடை வழங்கும் திட்டம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டுகூட அம்மா அவர்கள் இந்தச் சீருடைத் திட்டத்திற்காக, 42 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியிலும் எத்தனை குழந்தைகள் இருக்கின்றார்கள், எந்தெந்த வகுப்பிலே எத்தனை குழந்தைகள் இருக்கின்றார்கள் என்பதனைத் தெரிந்து, அதற்கேற்ப இப்போது சீருடை தைக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது. அதனால், இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அனைத்துப் பள்ளிகளிலும் படிக்கக்கூடிய இந்தக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கப்பட்டிருக்கின்றது. இருப்பினும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்துகளைக் கூறியிருக்கின்றார். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் எந்தப் பள்ளியில் குழந்தைகளுக்கு வழங்கப்படவில்லையென்பதை எடுத்துக்கூறினால் அதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கியமைக்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். காட்சிக்கு எளிமை, கருத்திலே புதுமை, மனதிலே வலிமை, வாக்கிலே தூய்மை, சாதித்துக் காட்டுவதிலே மற்ற முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதன்மை, தன்னிகரற்ற தனிப்பெரும் முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன்.

The measure of one civilization is the treatment of women என்றார் மாக்சிம் கார்கி என்கின்ற இரஷ்ய அறிஞர். ஒருவர் எந்த அளவிற்கு நாகரிகம் அடைந்தவர் என்பதை மதிப்பிட அவர் பெண்களை எப்படி மதிக்கின்றார், எப்படி நடத்துகின்றார் என்பதுதான் அளவுகோல் என்றார். மேலும் ஒரு நாடு எந்த அளவு முன்னேறியிருக்கிறது என்பதற்கு அந்த நாடு, அந்த நாட்டிலுள்ள பெண்களை எப்படி நடத்துகின்றது என்பதை வைத்துத்தான் மதிப்பிட முடியும் என்று அவர் மேலும் சொல்லியிருக்கின்றார். எனவே, நாகரீகம் உள்ள ஒரு நாடு என்றால், முன்னேறிய ஒரு நாடு என்றால், அங்கே பெண்கள் எந்த அளவுக்கு மதிக்கப்படுகின்றார்களோ, அந்த அளவுக்கு அந்த நாடும் முன்னேறும் என்பர். அதைப்போலவேதான் தமிழகத்திலே மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிக் காலத்தில் பெண்கள் மதிக்கப்படுகின்றார்கள், போற்றப்படுகின்றார்கள், உயர்த்தப்படுகின்றார்கள், பெருமைப்படுத்தப்படுகின்றார்கள். எனவேதான் தமிழகம் முதன்மை பெற்ற மாநிலமாக உருவெடுத்து வருகின்றது.

*முற்பகல் 11–50*

மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதைச் செயலாக்கும் ஆற்றல் படைத்தவர்கள். எதிலும் பெண்கள், எங்கும் பெண்கள், நிர்வாகத்திலும் பெண்கள், இயக்கத்திலும் பெண்கள், ஏன் இந்த மாமன்றத்திலும் பெண்கள் என்ற உயர்ந்த நிலையை, உன்னத நிலையை உருவாக்கி இருப்பவர் நம் மாண்புமிகு அன்னை ஒருவர் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) முன்பு எப்போதும் எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு செய்து வரும் ஒரே தலைவி நம் அம்மா ஒருவர் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே மாநிலம்



தமிழகம் மட்டுமே. ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் மட்டுமே. எந்த அரசியல் கட்சியிலும் இல்லாத அளவிலே, ஏன் திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலும் சரி, காங்கிரஸ் பேரியக்கம் என்றாலும் சரி, மற்ற எந்த அரசியல் கட்சியிலும் இல்லாத, எந்தக் கட்சித் தலைவரும் பின்பற்றாத பெண்களுக்கான 33 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பின்பற்றிய ஒரே தலைவி, மாபெரும் மக்கள் இயக்கத்தைச் சார்ந்த தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பெருமையும், சிறப்பும் மாண்புமிகு அம்மா அவர்களை மட்டுமே சாரும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலேகூட முன்பு எப்போதும் இல்லாத அளவிலே 19 பெண் சட்டமன்ற உறுப்பினர்களை உருவாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்த பெருமை நம் அம்மா ஒருவரை மட்டுமே சாரும். மேலும் இயக்கத்திலும் 33 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பின்பற்றி மகளிருக்கு பல்வேறு பொறுப்புகளை வழங்கிய ஒரே இயக்கம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில் இயங்கிவரும், மிகக் கட்டுக்கோப்பாக இயங்கிவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களும், திட்டங்களும், செயல்பாடும், பெண்களுக்கு வாழ்வில் ஒளி ஊட்டுவதாக அமைந்திருக்கின்றது. தன்னம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் அமைந்திருக்கின்றது,

"My strength is as the strength of ten.
Because my heart is pure''

என்றார் ஆங்கிலக் கவிஞன் Lord Tennyson. ஆனால், நம் மாண்புமிகு அம்மா அவர்களோ, ஆறரை கோடி தமிழர்களின் வலிமையும், என் வலிமை என்று சொல்லக்கூடிய ஆற்றல் மிக்கவர்கள், வலிமை படைத்தவர்கள், தன்னம்பிக்கை மிக்கவர்கள் நம் அன்னை ஒருவர் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

"தெய்வம் நீ என்று உணர்" என்றான் பாரதி. ஒவ்வொருவருக்குள்ளும் அறிவும், ஆற்றலும் நிறைந்திருக்கின்றது. ஆனால், தெய்வத் தன்மை படைத்த, அதிவலிமை படைத்த மாண்புமிகு அம்மா அவர்களை இறை என்று வைத்து தமிழக மக்கள் எல்லாம் இன்றைக்கு வணங்கி, போற்றி, வழிபட்டு வருகின்றார்கள் என்றால் அவர்களுடைய ஆற்றலும், வீரமும்தான் காரணம் என்று நான் சொல்வேன்.

40 ஆண்டுகளில் எவரும் சாதிக்க முடியாத சாதனைகளை நான்கே ஆண்டுகளில் சாதித்த வாழ்நாள் சாதனையாளர் என்ற பெருமையும், சிறப்பும் நம் அன்னை ஒருவருக்கு மட்டுமே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்காக உழைத்து வரும் உங்களுக்கு உவமை சொல்ல, அம்மா, உலகில் உங்களைவிட உயர்ந்தது ஒன்றும் இல்லை அம்மா.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை"

என்பர். ஆனால், யாமறிந்த முதல்வரிலே உங்களைப்போல் முதலமைச்சர் உலகத்தில் யாரும் பிறந்ததில்லை அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. பெண்களுக்காக எண்ணற்ற திட்டங்களை இயற்றி சீரிய முறையில் செயல்படுத்தி வருவதற்காகத்தானே தங்கத் தாரகை விருது உங்களை வந்தடைந்தது. அம்மா, இந்த விருதால் தாங்கள் பெருமைப்படவில்லை. தங்களை அடைந்ததால்தானே இந்த விருது பெருமைப் பெற்றிருக்கின்றது.

பெற்றவர்களே பெண் குழந்தைகளைப் பெரும் சுமையாக எண்ணிக்கொண்டிருக்கின்ற வேளையிலே, பெறாத தாயாக நான் இருக்கிறேன் என்று சொல்லி பெண் இனத்தைப் பேணிக் காக்கும் அன்னையாக, குழந்தைகளையெல்லாம் அரவணைத்து, கல்வியும் தந்து, திருமணத்திற்கும் உதவுவதற்காகக் கொண்டுவந்த திட்டம்தான் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற அற்புதமான திட்டம்.

முற்பகல் 11–55

ஒரு பெண் குழந்தை மட்டுமே இருந்து, பெற்றோரில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், தமிழ்நாடு மின்வள நிதி நிறுவனத்தில் தொடக்க வைப்பீடாக ரூ.22,200-ஐ அரசு செலுத்துகிறது. இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்தால், அக்குழந்தைகளுக்கு தலா ரூ.15,200—ஐ வைப்பீடாக அரசு செலுத்தி வருகிறது. இது மாண்புமிகு அம்மா அவர்களின் முன்னோடித் திட்டமாகும். வேறு எந்த அரசுமே, எந்த முதலமைச்சருமே அறிவிக்காத திட்டம் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குழந்தைகளின் வயிற்றில் மட்டுமல்ல, பெற்றோரின் வயிற்றிலும் பால் வார்த்தமைக்காக மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.



அடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் உயரிய திட்டம், உன்னதத் திட்டம் இந்தியா மட்டுமல்ல, அகில உலகமெல்லாம் பாராட்டக்கூடிய மிக அற்புதமான திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம். பெண்ணாகப் பிறந்துவிட்டால் இந்த மண்ணில் விட்டால் மாசுபடும் என்று என் கண்ணில் வைத்துக் காப்பேன் என்றார் பாவேந்தர். இக்கூற்றை மெய்ப்பிக்கக்கூடிய வகையிலே பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளைத் தொட்டிலிலே கிடத்தி, தாலாட்டி, சீராட்டி வளர்ப்பதோடு, கல்வியையும் புகட்டி, சமுதாயத்திலே உயரச் செய்த பெருமை மாண்புமிகு அம்மா ஒருவரை மட்டுமே சாரும்.

வேறு எந்த நாட்டிலும் இல்லாத திட்டம்; வேறு எந்த முதலமைச்சரும் தராத இந்தத் திட்டத்தால் தமிழகத்தில் பெண் சிசுவதை அடியோடு ஒழிக்கப்பட்டிருக்கிறது. பெண்மை தமிழகத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. பெண்மை தமிழகத்திலே பெருமைபடுத்தப்பட்டிருக்கிறது. சமுதாயத்தில் ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகளை எதிர்காலத்திலே சிறந்த குடிமக்களாக வாழ தமிழ்நாடு முழுவதிலும் 25 அரசு குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த 25 காப்பகங்களில் ஒன்று, எனது குளத்தூர் தொகுதியில், மாத்தூரில் அமைந்திருக்கின்றது. இதில் 240 குழந்தைகள் தங்கிப் பயின்று வருகின்றார்கள். இங்கு கட்டப்பட்ட கட்டடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. பழுது நீக்க ரூ. 4 இலட்சம் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவோடு வழங்க வேண்டும் என்பதோடு, குழந்தைகள் தங்கள் படுக்கை அறைகளையே படிக்கும் அறைகளாகவும் பயன்படுத்தி வருவதால், கூடுதலாக நான்கு அறைகளையும் கட்டித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போலவே புதுக்கோட்டையில் செயல்பட்டு வரும் அரசு குழந்தைகள் காப்பகம் ஒன்று வாடகைக் கட்டடத்தில் நீண்ட காலமாக இயங்கி வருகின்றது. இக்காப்பகத்தில் 250 குழந்தைகள் தங்கிப் படித்து வருகின்றார்கள். இக்காப்பகம் கட்டுவதற்கு இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இதற்கும் அரசு கட்டடம் கட்டித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் பெண்களை, குழந்தைகளை உயர்த்த பாடுபட்டுவரும் மாண்புமிகு அம்மா அவர்கள் உடல் ஊனமுற்றோர்களையும் கனிவோடு காத்து வருகின்றார்கள். கடந்த 9–3–2005 அன்று பார்வையற்ற

இளைஞர்களை அழைத்து அவர்களின் கோரிக்கைகளை எல்லாம் பரிவோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை அளித்ததோடு மட்டுமல்லாது, 117 வகையான பணியிடங்களைக் கண்டறிந்து, பணி நியமனத்தின்போது உடல் ஊனமுற்றோருக்காக 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தையும் தந்து, பார்வையற்றோருக்கு இதுவரை வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகையில் 50 சதவிகிதத்தை உயர்த்தியும் வழங்குவதாக அறிவித்த பெருமையும், பெருந்தன்மையும் நமது மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருவருக்கு மட்டுமே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் பார்வையற்றவர்களின் வாழ்வில் புத்தொளி பிறந்திருக்கிறது அம்மா.

மேலும் சிறப்புத் தேர்வின்மூலம் இளநிலை பள்ளி உதவி ஆசிரியர் 2:1 என்ற அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஆண்டுக்கு 35 இடங்கள் வீதம் மூன்று ஆண்டுகளுக்குக் கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்படும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பால் உடல் ஊனமுற்றோரும் பார்வையற்றவர்களும் புதுத் தெம்பையும் உற்சாகத்தையும் பெற்று மகிழ்ந்திருப்பதோடு, தங்களது நன்றியை காணிக்கையாகச் செலுத்தி காலமெல்லாம் தங்களுக்கு விசுவாசம் மிக்கவர்களாகவும் விளங்குவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மேலும், பெண்களைப் பொருளாதாரத்திலே மேம்படுத்த, வினையே ஆடவர்க்கு உயிர் என்றிருந்த நிலையை மாற்றி, வினையே பெண்களுக்கும் உயிர் என்ற உன்னத நிலைக்கு மாற்றிக் காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். பெண்களுக்கு சுய உதவிக் குழுக்களை அமைத்து, செயல்படுத்தி வருவதோடு 2003–2004 முதல் 2005–2006 வரையிலான மூன்றாண்டுகளில் 15 இலட்சம் பெண்களை இத்திட்டத்தில் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

நண்பகல் 12–00

இதுவரை பெண்கள் கடன்களைப் பெறுவதற்கு வங்கிகளை நாடிச் சென்ற நிலை மாறி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சிக் காலத்திலே, வங்கிகள் எல்லாம் பெண்களை நாடிவந்து சேமிப்பு நிதியினைப் பெற்று வரக்கூடிய காலம் ஏற்பட்டிருக்கின்றது அம்மா. இதனால் தொட்டதெல்லாம் துலங்கிவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கும் தன்னம்பிக்கையையும், வீரத்தையும், ஆற்றலையும், விவேகத்தையும் பெற்று தமிழகத்திலே இன்று பெண்கள் பீடு நடை போட்டு வருகின்றார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)



அடுத்து டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்பதாலோ என்னவோ, கடந்தகால ஆட்சியாளர்களால் கிடப்பிலே போடப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் புத்துணர்ச்சி தந்திருக்கின்றார்கள். சத்துணவிலே தற்போது 74 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறார்களுக்கு உருளைக்கிழங்கு, வேகவைத்த முட்டை, பயறு வகைகள் கொண்ட ஊட்டச்சத்து நிறைந்த உணவை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்து அந்தத் திட்டத்திற்கும், குழந்தைகளுக்கும் ஊக்கத்தை வழங்கியிருக்கின்றார்கள்.

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களும் உதவியாளர்களும் இதுவரை கேட்பாரற்றுக் கிடந்தார்கள். தங்களது நீண்டநாள் கோரிக்கை கவனிக்கப்படாத நிலையிலே ஏங்கிக் கொண்டிருந்தார்கள் அம்மா. வாட்டம் அடைந்தவர்களின் நிலையை எண்ணிப்பார்த்த மாண்புமிகு அம்மா அவர்கள், நான் உங்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட இருக்கிறேன் என்று சொல்லி, தன்னுடைய ஆட்சிக் காலத்திலே யாரும் சோர்ந்திருக்கக் கூடாது, உங்களை அரவணைப்பதற்கும் நான் இருக்கின்றேன் என்று சொல்லி, தாயுள்ளம் மிக்க அம்மா அவர்கள், அன்புள்ளம் கொண்ட அம்மா அவர்கள், கருணை உள்ளம் படைத்த நம் அம்மா அவர்கள், அவர்களுக்குச் சலுகைகளையும் சம்பளத்தையும் அள்ளி அள்ளிக் கொடுத்து, 'வன்மை இல்லை, ஒரு வறுமை இல்லை' என்ற நிலையைத் தமிழகத்தில் உருவாக்கிக் காட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர் போன்றவர்கள் பணி ஓய்வுபெறும்போது ரூ. 50,000–ஐ அரசு ஒட்டுமொத்தத் தொகையாக அளிக்கவும், தொகுப்பு மதிப்பூதியம் பெறும் பணியாளர் ஒவ்வொருவருக்கும் ஓய்வுபெறும்பொழுது ரூ. 20,000–ஐ ஒட்டுமொத்தத் தொகையாக அரசு அளிக்கும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவிப்பால் அப்பயன் பெறுவோர் எல்லாம் தங்களுக்குப் பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

பணி ஓய்வு பெறும்போது வழங்கப்படும் சிறப்பு வருங்கால வைப்புநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டத்தில் அரசின் பங்களிப்பை ரூ.5,000–லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தியும், இதுவரை ரூ. 450 தொகுப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ள அங்கன்வாடி உதவியாளர் நிலை–1 மற்றும் மதிய உணவுத் திட்ட சமையலர்களின் அடிப்படை தொகுப்பூதியத்தில் மேலும் ரூ. 330–ஐ உயர்த்தி, இனி மாத ஊதியமாக அவர்கள் எல்லாம் ரூ. 1,100 பெறுவர் எனவும், ஆறாவது ஊதியக் குழு

பரிந்துரையின் பேரிலே மாதம் ஒன்றுக்கு ரூ.400 தொகுப்பூதியம் பெறும் அங்கன்வாடி உதவியாளர்கள் நிலை-2 மற்றும் சத்துணவு உதவியாளர்களின் மதிப்பூதியமாக ரூ. 290—ஐக் கூடுதலாக உயர்த்தி மாதம் ஒன்றுக்கு ரூ. 850 சம்பளமாகப் பெறுவீர் என்ற தங்களின் மேலான அறிவிப்பால் அப்பணியாளர்கள் எல்லாம் தாங்கள் புதுவாழ்வு பெற்றிருப்பதாக எண்ணி ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் இருக்கின்றார்கள் அம்மா.

மேலும் நேற்றையதினம் இந்த மாமன்றத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் சத்துணவு அமைப்பாளர்களுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும் அவர்களின் கோரிக்கையை ஏற்று இதுவரை யாரும் அறிவிக்காத அளவிலே, எந்த முதலமைச்சரும் செய்யாத அளவிலே, இதுவரை பெற்று வந்த ரூ. 1,513—ஐ ரூ. 1,835 ஆக (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஒட்டுமொத்த சத்துணவுப் பணியாளர்கள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பங்கள் மட்டுமல்ல, அனைத்துத் தரப்பு மக்களும் தங்களது கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கக்கூடிய சாதனைகளை எல்லாம் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

பிற்பகல் 12—05

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"

என்ற உன்னத அறத்தை உணர்ந்து தமிழகத்தில் பசி என்ற சொல்லை இல்லாமையாக்க 171 திருக்கோயில்களிலும், 16 தர்காக்களிலும் அன்னதானத் திட்டம் தந்து, ஏழை எளியோரின் பசியைப் போக்கியதால் வறியோர் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களை வாயார, மனதார வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை முன்னெப்போதும் இல்லாத வகையிலே 3501 ஆலயங்களுக்கு திருப்பணிகளைச் செய்தும், 6,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் உள்ள ஆலயங்களுக்கு தலா ரூ. 25 ஆயிரத்தில் மேம்பாடு செய்தமைக்காக ஒட்டுமொத்த ஆதிதிராவிட மக்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பணிவான நன்றியை செலுத்திக்கொண்டிருக்கின்ற இந்த



நேரத்திலே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பின்தங்கிய கிராமப் பகுதிகளிலும், ஆதிதிராவிட மக்களுக்கு ஆலயங்கள் கட்டித் தருவதைப் போல தங்களுக்கும் கோயில்களைக் கட்டித் தரவேண்டும் என்ற பணிவான கோரிக்கையினை மக்களின் சார்பாக இங்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னிடத்திலே பல்வேறு சமுதாயத்தினரும், பல்வேறு கிராம மக்களும் கோரிக்கையை தந்திருக்கின்றார்கள் அம்மா. மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து ஆலயங்களைக் கட்டித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் "மனிதர்கள் மட்டுமல்ல, ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவைதான்" என்று எண்ணி முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் யானைகள் நல்வாழ்வு முகாமை நடத்திய பெருமையும், சிறப்பும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தனது மாதச் சம்பளத் தொகையை, ரூ. 10 ஆயிரத்தை ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என இதுவரை, 35 திருக்கோயில்களுக்கு ரூ. 3,50,000/— ஐ நன்கொடையாக வழங்கியவர் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா ஒருவர் மட்டுமே என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் திருக்கோயில் குளங்கள் தூர்வாரப்படவில்லையென்று எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. கணேசன் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிக் காலத்திலேதான் கோயில் திருக்குளங்களெல்லாம் தூர்வாரப்பட்டுள்ளன என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன். திருக்கோயில் விவரங்களை அறிவதற்கு சிறப்பு இணையதளத்தை ஏற்படுத்தி, அம்மா அவர்கள் மகத்தான சாதனையை நிகழ்த்தியிருக்கின்றார்கள்.

என்னுடைய தொகுதியிலே ஒரே ஒரு கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நீண்ட காலமாக அரசு கட்டடம் இல்லாமல் இருக்கின்றது. அதற்கு அரசு கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று பணிவான கோரிக்கையைச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களை நினைக்க, நினைக்க நெஞ்சம்

நிறைகிறது; மாண்புமிகு அம்மா அவர்களைப் பற்றி பேசப் பேச நா மணக்கிறது; மாண்புமிகு அம்மா அவர்களைப் பற்றி எழுத எழுத என் வாழ்க்கை சிறக்கிறது என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமர்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சமூக நலன் மற்றும் சத்துணவுத் துறை ஆகிய இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் கருத்துகளை எடுத்து வைப்பதற்காக எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் மாண்புமிகு அமைச்சர் திரு. ராமசாமி அவர்களின் பொறுப்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை திருப்தியான முறையில் செயல்பட்டு வருவதாகவே நான் எடுத்துக்கொள்கின்றேன். அமைச்சரவை மாற்றங்கள் எத்தனையோ நடைபெற்றாலும், திரு. ராமசாமி அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பில் தொடர்ந்து நீடிப்பது ஒன்றே அவரின் செயல்பாடுகள் திருப்தியாக இருக்கின்றது என்பதற்கான அடையாளமாகும். முதல்வரின் நம்பிக்கையைப் பெற்றுள்ள அவர் அறங்காவலர்கள் நியமன விஷயத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக எதிர் வரிசையில் உள்ளவர்களின் நம்பிக்கையையும் பெற வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–10*

நம்முடைய முதல்வர் தெய்வ பக்தி உள்ளவர்; தெய்வ நம்பிக்கை உள்ளவர். அதன் காரணமாகவே திருக்கோயில்களில் நடைபெற்றுவரும் திருப்பணி நிகழ்ச்சிகளும், பக்தர்களுக்கான சேவைகளும் ஒவ்வொரு நாளும் மெருகு பெற்று வருகின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பூட்டிய திருக்கோயில்கள் திறக்கப்பெற்று, பூஜைகள், வழிபாடுகள் அனைத்தும் முறையாக நடைபெற்று வருவது மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. அதேநேரத்தில், ஆலயங்களுக்குச் சம்பந்தப்பட்ட சொத்துக்களைப் பராமரிப்பதிலும், வாடகையைச் சரியாக நிர்ணயித்து ஒழுங்காக வருவாயைப் பெருக்குவதிலும், ஆலயத்தின் சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலே இருக்கின்றவைகளை எல்லாம் அப்புறப்படுத்துவற்கான



முயற்சிகளிலேயும், நடைபெறுகின்ற காரியங்களிலே திருப்தி இல்லை என்பதை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். இதன் உள்ளாக சென்று நான் கருத்துகளைச் சொல்ல விரும்பவில்லை. இந்தத் துறையைப் பொறுத்தமட்டிலே, மூன்று விஷயங்களிலே என்னுடைய கருத்துகளைப் பதிய வைக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்.

ஒன்று, முதல்வர் அவர்கள் 2002–ல் கொண்டுவந்த அன்னதானத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன். இன்று 171 திருக்கோயில்களில் பக்தர்களுக்கு மதிய வேளைகளில் உணவு வழங்கப்பட்டு வருவதாகவும், இதுவரையிலே 1,76,59,630 பேர்கள் பயனடைந்துள்ளதாகவும், கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனை வரவேற்கின்றேன். இந்தத் திருக்கோயில்களில் பக்தர்களுக்கு அன்னதானத்தை வழங்குகிற நிலையிலே, கோயில் வாயில்களிலே நின்றுகொண்டிருக்கின்ற பரதேசிகளைப் பற்றியும்கூட நாம் கருத்திலே கொள்ள வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். பிச்சை எடுப்பது தடை செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும், ஒவ்வொரு கோயிலின் வெளியிலேயும் பிச்சைக்காரர்கள் தங்கியிருக்கின்றார்கள். சென்னை போன்ற பெரு நகரங்களில் ஒவ்வொரு signal point –லேயும் பிச்சை எடுப்பது வாடிக்கையாக இருந்துகொண்டிருக்கின்றது. நம்மைப் பொறுத்த அளவிலே இவையெல்லாம் வாடிக்கையான விஷயங்களாக இருந்தாலும்கூட, எங்கேயாகிலும் வெளிநாட்டவர்கள் வரும்போது அவர்கள் முன்னாலே இந்தப் பிச்சை எடுக்கின்றவர்கள் செய்கின்ற அலங்கோல நிலைகளை எல்லாம் பார்க்கின்றபோது, நமக்கு ஒரு தலைக்குனிவு ஏற்படுகின்றது என்பதை எல்லோருமே புரிந்து வைத்துக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, மிக அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொள்வேன். இந்த பக்தர்களுக்கான அன்னதானம் கொடுக்கின்ற நிலையோடு, ஒவ்வொரு பெரிய திருக்கோயிலின் பக்கத்திலேயும் இந்த பிச்சை எடுப்பவர்களுக்கு ஒரு மறுவாழ்வு இல்லத்தைக் கட்டிக் கொடுத்து, அவர்களுக்குக் கொடுக்கின்ற சோற்றிலே ஒரு பகுதியை இவர்களுக்கும் கொடுக்கின்ற ஒரு நிலைப் பாட்டினை உருவாக்கினால் இந்தச் சமுதாயம் நம்மை வாழ்த்தும் என்று சொல்லிக்கொள்கின்றேன்.

இரண்டாவதாக, வழிபாட்டுத் தலங்களில் நடைமுறையில் நிலவிடும் புரையோடிப் போயிருக்கின்ற சில மூடப் பழக்க வழக்கங்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். முதல்வர் அவர்கள் என்னை சந்தேகப் பார்வையோடு பார்க்க மாட்டார்கள். ஏற்கெனவே, இந்தச் சபையிலே, நான் நாத்திகன் அல்ல, கடவுள் நம்பிக்கை உள்ளவன் என்று அவர்கள்

சொல்லி, என்னைச் சரியாகப் புரிய வைத்திருக்கின்றார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு இந்த மூடப் பழக்க வழக்கங்கள் என்பது எவ்வளவு வேரூன்றி இருக்கின்றது என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். இவற்றைச் சீர்திருத்த வேண்டும் என்று முயற்சிகள் செய்கின்றபோது, பெரிய தலைவர்கள் எல்லாம்கூட பின்னடைவைச் சந்திக்கின்றார்கள் என்பது உண்மை. இந்த அவையிலேகூட சென்ற ஆண்டு முதல்வர் அவர்கள் ஒரு சீர்திருத்தமாக கோயில்களில் ஆடு கோழிகள் பலியிடுவதைத் தடை செய்வதற்கான ஒரு தடைச் சட்டம் கொண்டுவந்தார்கள். என்ன காரணத்தினாலோ அதற்கு ஒரு பின்னடைவு ஏற்பட்டது. அதைப்போலவே, முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் தீ மிதிப்பதைப்பற்றி ஒரு விமர்சனம் செய்தார்கள். அது கடுமையான விமர்சனத்திற்கு ஆளானது. இப்படி மூடப் பழக்க வழக்கங்கள் என்பது வேரூன்றிக் கிடக்கின்றவை. இவற்றை மாற்ற வேண்டும் என்று சொல்வது என்பது கடுமையான முயற்சி என்பதை நான் புரிந்துகொள்கின்றேன்.

*பிற்பகல் 12–15*

இந்தப் பழக்க வழக்கங்களைச் சொல்கின்றபோது, superstition is the daughter of ignorance and fear—அறியாமையும், அச்சமும் கூடிப் பெற்றக் குழந்தை மூட நம்பிக்கை என்று இங்கர்சால் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆக இந்த மூடப் பழக்க வழக்கங்களை சட்டத்தின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ மாற்றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆகவே, மக்களிடத்திலே இருக்கின்ற அறியாமையையும், அச்சத்தையும் போக்குகின்ற அளவிற்குச் சரியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

மூன்றாவதாக நான் சொல்ல வருகின்ற விஷயம் மிகவும் சிந்திக்க வேண்டிய விஷயம் என்பதை முன்னாலேயே சொல்லிக்கொள்கிறேன். யானைகளுக்குப் புத்துணர்வு முகாம்கள் 48 நாட்கள் நடத்தப்பட்டதாக கொள்கை விளக்கக் குறிப்பு சொல்கிறது. அதைப்போலவே அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்களுக்கு 3 மாத காலப் புத்தொளிப் பயிற்சி நடத்தப்படுவதாக கொள்கை விளக்கக் குறிப்பு சொல்கின்றது. இவர்களுக்கு எல்லாம் புத்துணர்ச்சி முகாம்கள் நடத்துகின்ற முதல்வர் அவர்கள் ஒரு விஷயத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதாவது ஏன் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒரு புத்துணர்ச்சி முகாம் நடத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளக் கூடாது என்று நான் அவர்களை அன்போடு



கேட்டுக்கொள்கின்றேன். இன்றைய முதல்வரிலேயிருந்து நேற்றைய முதல்வர் வரையிலே இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற 235 உறுப்பினர்களும் ஒரே இடத்தில் ஒரு வார காலம் கூடியிருந்து தேசத்தின் பிரச்சினைகளை, தமிழ் மாநிலத்தின் பிரச்சினைகளை சுமுகமான நிலையிலே விவாதித்தால் இந்த ஜனநாயகம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள். இதைச் சட்டமன்ற மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இதை முடித்துவிடுகின்றேன்; இதை முடித்துவிடுகின்றேன். அவருடைய சிந்தனைக்கு, பரிசீலனைக்கு வைக்கின்றேன். அவ்வளவுதான். ஜனநாயகம் புத்துணர்ச்சி பெறும். இந்தச் சபையில் ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற வழிவகுக்கும் என்று நான் நம்புகின்றேன்.

அடுத்ததாக சமூக நலத் துறையின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன். சமூக நலம் என்பது மிக முக்கியமான ஒரு இலாகா. இந்தச் சமூக நலத்தினுடைய திட்டங்கள் மட்டுமே நிறைவேறினால் இந்த மாநிலம் வளர்ச்சி பெறும் என்பதுதான் எல்லோருடைய கருத்தாக இருக்க முடியும். Social Welfare should lead to welfare State என்ற வகையிலே இந்த மாநிலம் Welfare State என்கின்ற அந்தஸ்துக்குப் போக வேண்டும் என்று சொன்னால், Social Welfare திட்டங்கள் சரியாக அமைந்திருக்க வேண்டும். மகளிர் மேம்பாடு, குழந்தைகள் நலம், நலிவடைந்தோர் மற்றும் ஊனமுற்றோர் மேம்பாடு, வயதான முதியவர்களுக்கு ஆதரவு ஆகிய இலட்சியங்களை முன்நிறுத்தி இந்தச் சமூக நலத் துறை செயல்பட்டு வருகின்றது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட மேலும் 13 புதிய திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது. திட்டங்கள் நிறைந்து அறிவிக்கப்படுகின்றன. எத்தனைத் திட்டங்கள் இருக்கின்றன என்று சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு வேண்டுகோள். ஒவ்வொரு கோட்டாட்சியர் அலுவலகத்தின் முன்னால் ஒரு நீண்ட பலகை வைத்து இன்னின்ன திட்டங்கள், இன்னின்ன அளவிற்கு உதவி கொடுக்கப்படும் என்கின்ற ஓர் அறிவிப்பு வைத்தால், அது சாதாரண மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை பணிவோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடு அங்கே இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே சில விஷயங்களைச் சொல்ல விரும்புகின்றேன். திட்டங்கள் அறிவிப்பது மட்டும் போதாது. அதை அமல் நடத்துவதிலே எந்தக் குறைபாடும்

இல்லாமல் நடத்த வேண்டும் என்பதை வேண்டுகோளாக நான் சொல்ல விரும்புகின்றேன். உதாரணத்திற்கு கணவன் இறந்தவுடனே பெண்களுக்குக் கொடுக்கப்படுகின்ற 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை என்பது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கொடுக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் குறைபாட்டினை நீக்க வேண்டும். கணவன் இறந்தவுடனே நிராதரவாகிவிடுகின்ற அந்தப் பெண்களுக்கு உடனடி நிவாரணம் கிடைத்தால்தான் ஓரளவு நிம்மதியாக இருக்க முடியும் என்பதைச் சொல்லி அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியில் முடித்துவிடுங்கள். இன்னும் நான்கு பேர் பேசவேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

*பிற்பகல் 12–20*

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** நேற்று முன்தினம் ஊனமுற்றோர்களுக்கான ஊதியம், அவர்களுக்கான சலுகைகளைப் பற்றி முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். நேற்றையதினம் சத்துணவு ஊழியர்களுக்கும், அங்கன்வாடி பணியாளர்களுக்கும் ஊதியத்தை உயர்த்தி ஓர் அறிவிப்பினைக் கொடுத்தார்கள். இன்றைய தினம் நான் எதிர்பார்க்கின்றேன், இந்த விவாதம் முடிந்த உடனே அறிவிக்கலாம் என்று எதிர்ப்பார்க்கின்றேன். இல்லையானால் வேண்டுகோளாக எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். இந்தச் சமூக நலத் துறையின் மூலமாக கொடுக்கப்படுகின்ற உதவித் தொகைகளிலே முதியோருக்கும், விதவைகளுக்கும் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகை 200 ரூபாய் என்பது நீண்ட காலமாக இருந்துகொண்டிருக்கின்றது. அதை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு முதல்வர் அவர்கள் முன்வரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு, இந்த உதவித் தொகைகளுக்காக கோட்டாட்சியர் அலுவலகங்களிலே விண்ணப்பிக்கின்ற விண்ணப்பங்களெல்லாம் முறையாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை. 15 தினங்களுக்குள்ளாக முடிக்கவேண்டும் என்கின்ற உத்தரவை, கடுமையாக அதை அமல் நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.



ஒவ்வொரு கோட்டாட்சியர் அலுவலகத்திலேயும் உலாவிக்கொண்டிருக்கின்ற–Brokers–தரகர்களை ஒழிப்பதற்கான நடவடிக்கையை கடுமையாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதையும்கூட நான் சொல்லிக் கொள்கின்றேன். ஓரே ஒரு விஷயம். இத்தனை விஷயங்களிலே, ஒரு பின்னடைவோ அல்லது சிறிது மந்த நிலை நிலவினாலும்கூட, பெண்களுடைய திட்டங்களை நிறைவேற்றுவதிலே தமிழ்நாடு சிறப்பாகப் பணியாற்றுகின்றது என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன். அதற்கு உதாரணமாக, அகில இந்தியப் பெண்கள் அமைப்பின் தலைவி, திருமதி அபர்ணா பாசு அவர்கள் ஒரு குறிப்பிலே சொல்லியிருக்கின்ற கருத்தை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். "கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், அரசியல் பங்கேற்பு உட்பட 12 முக்கிய தளங்களில் உலக மகளிர் மாநாடு நிர்ணயித்த இலக்கை எட்டுவதில் பல மாநிலங்கள் பின்தங்கி இருந்தாலும், பெண்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் மற்றும் கேரளத்திடமிருந்து பிற மாநிலங்கள் நிறைய கற்றுக்கொள்ளவேண்டும்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, பெண் முதல்வராக இருக்கின்ற காரணத்தினாலோ அல்லது தமிழ்ச் சமுதாயத்தில் வழி வழி வருகின்ற ஆட்சிகள் பெண்களின்மீது எடுத்துக்கொண்ட அக்கறையின் காரணமாகவோ இந்த நிலைப்பாடு நமக்கு கிடைத்திருக்கின்றது. இது பொதுவாக எல்லோருக்குமே மகிழ்ச்சி கொடுக்கின்ற விஷயம் என்பதை நான் சொல்லிக்கொள்கின்றேன். இன்றைக்குப் பெண்கள் பல துறைகளிலும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** முன்னேறி வருகின்றார்கள். அவர்கள் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து, விண்வெளிக் கலங்கள் இயக்குகின்ற வரையிலே முன்னேறியிருக்கின்றார்கள் என்பது உண்மை. அதேநேரத்திலே, இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பெண்களுக்கு 33 சதவிகிதம் கொடுத்திருக்கின்றார்கள் என்று இங்கே சொல்லப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத்தில் இடம்பெறுவதற்காக, பிற மாநில சட்ட சபைகளில் இடம் பெறுவதற்காக இன்றைக்கு அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு வரும், நாளைக்கு வரும் என்று எதிர்பார்த்து, ஒவ்வொரு நேரத்திலும் ஏமாந்த நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றார்கள். நான் இந்த நேரத்தில் எங்கள் தலைவர் ராஜீவ் காந்தியை நினைத்துப் பார்க்கின்றேன். பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா சட்டத்தின் மூலமாக உள்ளாட்சி அமைப்புகள் அத்தனையிலேயும் 33 சதவிகிதம் பெண்கள் இடம்பெற்று, இல்லை;

30 சதவிகிதம் பெண்கள் இடம்பெற்று இன்றைக்கு தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருவதை நினைக்கின்றபொழுது, அவர் உயிரோடு இருந்திருந்தால், ஒருக்கால் இந்த 33 சதவிகித மசோதா என்றோ நிறைவேற்றப்பட்டிருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த நேரத்தில் இந்திய பெண்கள் சமுதாயம் ராஜீவ் காந்தி அவர்களுக்கு நிரம்பக் கடமைப்பட்டிருக்கின்றது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை (குறுக்கீடு) போதும், போதும்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** அதே நேரத்தில் ஒரே ஒரு விஷயம். பெண்களைப் பற்றி, பெண்கள்மீது இழைக்கப்படுகின்ற கொடுமைகள் குறைந்தபாடில்லை. அது நாளுக்கு நாள்...

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை. (குறுக்கீடு) இன்னொரு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடு) இன்னும் நான்கு பேர் பேச வேண்டும். அமைச்சர் இரண்டு பேர் பதில் சொல்ல வேண்டும். நிர்ணயித்த நேரத்தைவிட நான்கு நிமிடங்கள், ஐந்து நிமிடங்கள் தங்களுக்கு அதிகமாகிவிட்டது. திருமதி காசாம்பு பூமாலை.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை முடியுங்கள், சரி. இவ்வளவு பேர் பரிந்துரையா?

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** சில வாரங்களுக்கு முன்னால் 'India Today' தமிழ் வாரப் பத்திரிகையில் ஒரு பெண் வாசகர் எழுதியிருந்த குறிப்பை மட்டும் வாசிக்கின்றேன். பெண்கள் மீதான வன்முறைகள் துரியோதனன், துச்சாதனன் என்று புராண காலம்தொட்டே தொடர்கின்றன. இன்று அதற்கு ஓட்டைச் சட்டங்கள் உத்தரவாதம் தருகின்றன. ரோஜாவை முள் காப்பாற்றாத நிலையில் ரோஜாவே முள்ளாக மாறினால்தான் பெண்மை பாதுகாக்கப்படும் என்று வேதனையோடு குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த நிலைப்பாட்டை உணர்ந்து, பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற முயற்சியிலே இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி சொல்லி அமைகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இம்மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்த தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா, சின்ன அய்யா அவர்களுக்கும் மற்றும் எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி என் உரையைத் தொடங்குகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2003–2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், சமூக நல மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, எந்தவொரு நபரும் தன் பெயர் முன்னே, முத்தாக தாயின் தலைப்பெழுத்தை சேர்த்துக்கொள்ளலாம் என்ற சிறப்பான அறிவிப்பை வெளியிட்டார்கள். பட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள். யாரும் கோரிக்கை எழுப்பாமலேயே அந்தத் தன்மையை உணர்ந்து தாயின் எழுத்தை initial–ஆக போட வேண்டுமென்று உத்தரவிட்டது நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருமதி காசாம்பு பூமாலை:** தீர்மானம் போட்டு தந்து...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக யாரும் சொந்தம் கொண்டாட வேண்டாம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நாங்கள்...

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காசாம்பு பூமாலை அவர்கள் தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். கடந்த ஆண்டு, 2003–2004 ஆம் ஆண்டு அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்ற உத்தரவை நான் ஏற்கெனவே போட்டுள்ளேன், இது ஏன் கடந்த ஆட்சிக் காலத்திலே மறைக்கப்பட்டிருக்கிறது என்று

சொல்லி, அன்றைக்கு கல்வி அமைச்சராக இருந்த மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் மூலம் அந்தக் கல்வி இலாகாவிலேபோய், அந்த அரசாணையைப் பெற்றுக்கொண்டு வந்து மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த அவையிலே ஏற்கெனவே நான் இந்த உத்தரவைப் போட்டிருக்கிறேன் என்று நிரூபித்துக் காட்டியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, குழந்தையின் பெயருக்கு முன்னால் தாயின் தலைப்பெழுத்தைப் போட வேண்டுமென்று உத்தரவாக நிரூபித்துக் காட்டியவர், ஆணையை செயலாக்கிக் காட்டியவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டீர்களோ இல்லையோ என்பதற்காக நான் சொல்லவில்லை. 1989–லேயிருந்து, இயக்கம் ஆரம்பித்த காலத்திலிருந்து அப்போது தீர்மானமாக ஒவ்வொரு மாநாட்டிலும் போட்டு அன்றைய அரசாங்கம், அதற்கடுத்து வந்த அரசாங்கம் எல்லோரிடத்திலும் நாங்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். அதை ஏற்றுக்கொண்டீர்களா, நீங்களே போட்டீர்களா என்று எங்களுக்குத் தெரியாது. கோரிக்கையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, தெரியாது என்று எப்படிச் சொல்ல முடியும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கோரிக்கை எங்கள் அரசுக்குத் தரப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தரப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களே மகளிர் நலனில் உள்ள அக்கறை காரணமாக உலகுக்கே எடுத்துக்காட்டாக இந்த உன்னதத் திட்டத்தை அறிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திருமதி காசாம்பு பூமாலை, நீங்கள் பேசுங்கள்.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கோரிக்கையை வைத்து அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) யார் ஆட்சி நடத்தினார்களோ அந்த அரசாங்கத்திற்கு அனுப்பினோம்.



பிற்பகல் 12–30

2003–2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 61, பத்தி 122–ல் ஏலாமையுற்றோரின் நலன் குறித்து சொல்லப்பட்டுள்ளதுபோல, மாநில வாய்ப்புவள மையம் ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த வள மையம் அமைக்கப்பட்டுள்ளதா? அவ்வமைப்பின் பணிகள் என்ன என்பதை இந்த மாமன்றத்திற்கு விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் பேசும்போது எங்கள் தலைவர் தியாகச் செம்மல் கோ.க. மணி அவர்கள் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோருக்கு சம்பளம் உயர்த்தி வழங்க (குறுக்கீடுகள்) கோ.க. கோ.க. (சிரிப்பு) பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கோரிக்கையை வைத்தார். நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பளம் உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டார்கள். அதை வரவேற்று நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாதாந்திர ஓய்வூதிய திட்டத்தின்கீழ் கிடைக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன் சென்றடையும் வகையில், அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவரையும் இந்தத் திட்டத்தில் சேர்க்கும்வண்ணம், தக்க நடவடிக்கைகளைப் பரிசிலிக்க பணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்படும் என்று 2003–2004 நிதிநிலை அறிக்கையில் பக்கம் 62–63–ல் பத்தி 124–ல் சொல்லப்பட்டது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறோம்.

2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பக்கம் 47, பத்தி 104–ல் அரசின் அனைத்துச் சட்டம் மற்றும் சட்டம்சாராக் குழுக்களிலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய தக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அரசுச் செயலாளர்கள், துணைத் தலைவர்கள், பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், நீதிபதிகள் போன்ற உயர் பதவிகளுக்கு 33 சதவிகிதம் இல்லை. இதுகுறித்து அரசு வெள்ளை அறிக்கை தயார் செய்து இந்த அவையில் சமர்ப்பிக்க வேண்டுமென நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

1990–1991–ல் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் மக்கள் தொகையின் அளவு 40.9 சதவிகிதம் என்று மதிப்பிடப்பட்டதாகவும், இந்த சதவிகிதம் 2015–க்குள் பாதியாக குறைக்கப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. 1991–லிருந்து தற்போது 15 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் தமிழ்நாடு 2015 ஆம் ஆண்டு இலக்கு நோக்கி பயணம் செல்கிறதா? இன்றைய

நிலவரப்படி, தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்வோரின் சதவிகிதம் என்ன? மிகவும் வறிய நிலையில் உள்ள 3 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் வகையில் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக, 2005-2006 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்படுவதாக, 2005-2006 நிதிநிலை அறிக்கை பக்கம் 80, பத்தி 149-ல் சொல்லப் பட்டுள்ளது. 3 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ.20 கோடி எனில் இத்திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு 400 ரூபாய் கிடைக்கும். 400 ரூபாயைக் கொண்டு ஒருவருடைய குடும்பத்தின் சமூகப் பொருளாதாரம், எப்படி மேம்பாடு அடையும் என்பதை அரசு விளக்க வேண்டும்.

அடுத்து, இது ஒரு சர்க்கரைப் பொங்கல் செய்தி. கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 33-ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாளன்று மதிய உணவு பயனாளிகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கிட ஆணையிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. முதலமைச்சர் பிறந்த நாளில் வடை, பாயசத்துடன் முழு சாப்பாடு, இலை சாப்பாடு போட்டால் ஏழை மாணவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். கோயிலில் அன்னதானத் திட்டத்தைவிடவும் வடை, பாயசம் சாப்பாடு முதலியவை பெருமையைச் சேர்க்கும். எனவே வடை, பாயசம், முதலமைச்சர் பிறந்த நாளன்று போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். (சிரிப்பு)

2004-2005 ஆம் ஆண்டு சமூக நலம், கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் பக்கம் 27-ல் தருமபுரி, மதுரை அரசினர் அனாதை இல்லங்களில் புதிய கட்டடங்கள் கட்டுவதாக ரூ.20 இலட்சமும் தாம்பரம் சேவை இல்லம் - 6 கூடுதல் வகுப்பறைகள் கட்ட (குறுக்கிடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12.34-க்கே பசியை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.

**திருமதி காசாம்பு பூமாலை:** வகுப்பறைகள் கட்ட ரூ.19.8 இலட்சமும் ஒதுக்கீடு- புதிய திட்டங்கள் என்ன தலைப்பில் ஒதுக்கப்பட்டன? இந்தக் கட்டடங்கள், புதிய அறைகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டனவா என்று அறிய விரும்புகிறோம்.



பிற்பகல் 12-35

தமிழ்நாட்டில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் எண்ணிக்கை 10 இலட்சத்திற்கு மேல் இருக்கும். இவர்கள் சேர்ந்து படிக்கும் தனியார் நடத்தும் பள்ளிகள் 70-க்கு மேல் இருந்தாலும், சென்னையில் ஒரே ஒரு பள்ளியை மட்டும் அரசு நடத்தி வருகிறது. கிராமப்புற ஏழை எளிய மக்களின் நலன் விரும்பும் இந்த அரசு எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள், சிறுவர்கள் பள்ளியில் சேர்ந்து படிக்க ஏதுவாக சிறப்புப் பள்ளிக்கூடங்கள் நிறுவிட வேண்டுகிறோம்.

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு கூடிக்கொண்டே போகிறது. தற்போது அரசு நடத்தும் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் 8-தான் உள்ளன. பெண்களின் பாதுகாப்பில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பணிக்குச் செல்லும் பெண்களுக்கான மகளிர் விடுதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி காசாம்பு பூமாலை:** இதன்மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கும், பெண்களுக்குப் பாதுகாப்பு கூடும், அரசுக்கும் பெருமை சேரும்.

தமிழகத்திலுள்ள கோயில்களில் அர்ச்சனைகள் தமிழில் செய்ய வேண்டும் என்பதற்கான ஒரு சட்டத்தையும் இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்த் திருமணங்களின் நன்மைகளையும், பண்புகளையும் உணரச் செய்வதற்காக மாநிலம் தழுவிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழ் முறை திருமணத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் கோயில்களில் அன்னதானம் எவ்வளவு முக்கியமானதோ அதைப்போல தமிழ்மொழி வழிபாடும் முக்கியம். அன்னதானத்தில் அரிசி சோறு போடுகிறோம். சப்பாத்தி, ரொட்டி போடுவதில்லையே? வயிற்றுக்கு சாப்பாடு, தமிழ் வழி சாப்பாடு போடும்போது தமிழ்நாட்டில் தமிழ் வழிபாடு இயல்புதானே? தமிழ்நாட்டில் தமிழ் வழிபாடும் ஒன்றாக இருக்கக் கூடாதா? எனவே,

[திருமதி காசாம்பு பூமாலை] [2005 மார்ச் 18

தமிழில் மட்டுமே வழிபாடு, பாடல்கள் இருக்க வேண்டும் என்று ஆணை போடவேண்டும். தமிழ்க் கடவுளுக்குத் தமிழ் வழி வேண்டுதல் புரியாமல் போகுமா? தமிழ்தான் தெரியாத மொழியா?

இந்து ஆலயங்களின் நிர்வாகம் கணினிமயமாக்கப்பட வேண்டும். கோயில்களின் சொத்துக்கள், குத்தகை விவரங்கள், வரவு செலவு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித் துளியில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி காசாம்பு பூமாலை:** கோயில்களின் வரலாறு ஆகியவற்றைப் பற்றி புள்ளிவிவரங்கள் சேகரித்து வைக்கப்பட வேண்டும். கோயில்களின் சொத்துக்களை தனியார் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவித்து, கோயில் சொத்து நிலமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். கோயில் சொத்துக்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிப் பிரச்சினைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். சங்கராபுரத்தின் கடைக்கோடியில் இருக்கின்ற மூங்கில்துறைப்பட்டில் இரண்டாயிரம் மகளிர் படிக்கின்ற பள்ளிக்கு ஒரு மாணவியர் விடுதி கட்டித் தரும்படியும், அங்கு மக்கள் அரசு மருத்துவமனைக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதால், ஓர் அரசு மருத்துவமனைக்கு ஏற்பாடு செய்து தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

மலையில் பேருந்துகள் செல்வதற்கான தடுப்புச் சுவர்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அந்த தடுப்புச் சுவர்களை சரி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் பணிமனை அமைப்பதற்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டும், இன்று வரை எந்த ஒரு வேலையும் தொடங்கப்படவில்லை. இந்த ஆண்டாவது அந்தப் பணிமனையைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேருந்து நிலைய இடத்திற்கு அரசாங்கம் நிதி கொடுத்து விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்ட நிலையில், இதுவரையில் அந்தப் பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படவில்லை என்பதைச் சொல்லி, அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2005 மார்ச் 18] [திருமதி காசாம்பு பூமாலை]

என்னுடைய தொகுதியில், மலைவாழ் மக்கள் வாழ்கின்ற இடத்தில் ஒரு சிறு தொழிலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மலைவாழ் மக்கள் கல்வி அறிவு இல்லாத நிலைமையில் இன்றைக்குக்கூட மைசூர், பெங்களூர், கேரளா போன்ற எல்லா இடங்களுக்கும் சென்று, ஓடிப் பிழைக்க வேண்டிய, நாடோடி வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கருணை உள்ளம் கொண்டு, வெள்ளிமலையில் ஒரு சிறு தொழிலையாவது அமைத்துத் தரவேண்டுமாய் கேட்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களினுடைய நிலங்களை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். யார், யாரிடத்திலே இருக்கின்றன என்று குறிப்புகள் இருக்கின்றன. சென்ற கூட்டத் தொடரிலே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதை எடுப்பதற்கு வேண்டுமென்றால் சொல்கிறோம். இப்போது எடுத்தால் காலதாமதம் ஏற்படும் என்ற முறையில் (குறுக்கீடு) reply—ல் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி பண்பாடு, இந்து சமய அறநிலையத் துறை, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகியவற்றின்மீது எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வழங்கிய வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் முதலில் நான் குறிப்பிட விரும்புவது, அதிலே பணியாற்றுகின்ற ஆலயப் பணியாளர்கள், அதில் அடங்கியிருக்கிற அர்ச்சகர்கள் மற்றும் பல்வேறு துப்புரவுப் பணி, பூ கட்டுதல், இசைக் கருவிகள் இசைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பிட்ட சிலர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், அவர்களுடைய ஊதியம் என்பது உயர்த்தப்படாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய ஊதிய உயர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொகுப்பூதியம் என்கிற முறையில் நீண்டகாலமாக பலபேர் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கும் உரிய முறையில் பணி நிரந்தரத்திற்கு வழி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் இருக்கிற ஆலயப் பணியாளர்கள், திருவிதாங்கூர் கொச்சியிலிருந்து இணைக்கப்பட்டிருக்கிற முறையில், பாகுபாடாகத் தாங்கள் நடத்தப்படுவதாகக் கருதுகிறார்கள். எனவே, மற்றவர்களுக்கு வழங்குகிற சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில். அந்தக் கோயிலைப் பொறுத்தவரையில், அது நம்முடைய முன்னோர்களுடைய சிற்பத் திறனுக்கும், கட்டடக் கலைக்கும் மகத்தான சான்றாக விளங்குகிற ஆலயம். உலக அதிசயங்களில் ஒன்றாக இதை இடம் பெறச் செய்யவேண்டுமென்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. அந்தக் கருத்துக்கு ஒத்துழைப்புத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அருள்மிகு வண்டியூர் மாரியம்மன் திருக்கோயில். அந்தத் திருக்கோயில் தெப்பக் குளம் என்பது பாரம்பரியம் மிக்கது. அந்தத் தெப்பக் குளத்தில் நிரந்தரமாக தண்ணீர் நிரப்புவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், இடையிலேயே அவை நின்று விடுகின்றன. தற்போது வைகையாற்றில் கிணறு தோண்டும் பணி நடைபெற்று, ஒரு கட்டத்தோடு அது நின்றிருக்கிறது. அதை முழுமை பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, காமராஜர் சாலையில் மழைக் காலத்தில் தேங்குகிற தண்ணீரை தெப்பக் குளத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆவின் பாலகம் வைகை வடகரையில் இருக்கிறது. அங்கு பயன்படுத்தப்பட்டு பிறகு வெளியேற்றப்படுகிற தண்ணீரைச் சுத்திகரித்து இந்தக் குளத்தில் நிரப்பலாம் என்கிற கருத்தும் உண்டு. அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தெப்பக் குளத்தில் உள்ள மைய மண்டபத்தில் சூரிய மின்சக்தி விளக்கு அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்பணி விரைவில் நடைபெறுவதற்கு மீனாட்சியம்மன் திருக்கோயில் நிர்வாகம் அந்தப்



பணியை நிறைவேற்ற வேண்டும். அது விரைவில் நடைபெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆலயத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் பலபேர் குடியிருக்கிறார்கள். அதற்குப் பெயர் நியாய வாடகை என்று பெயர் இருக்கிறது. ஆனால், ஒரே நேரத்தில் திடீரென்று பன்மடங்கு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே, நியாய வாடகை, நியாயமாக உயர்த்தப்பட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல முறை இந்த அவையிலே நான் கூறியிருக்கிறேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு எந்த நியாய வாடகையினையும் நிர்ணயிக்கவில்லை. இதற்கு முன்னாலே ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் நியாய வாடகை நிர்ணயித்ததைத்தான் இன்றைக்கும் நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, ஒரு Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அவர் பேசட்டும். பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) நேரம் இல்லை.

**திரு. என். நன்மாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மற்றொன்றையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோயில் நிலங்கள், அதிலுள்ள குத்தகையாளர்கள் — பல்வேறு நேரங்களில் புயலால், வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்படுகிற விவசாயிகளுக்குச் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன — இதே சலுகைகள் கோயில் குத்தகையாளர்களுக்கும், கோயில் நிலங்களை குத்தகை எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கும் பொருந்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் அர்ச்சனை உறுதி செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அர்ச்சகர்கள், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள் ஆவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன். அதே சமயத்தில், அர்ச்சகர்களாக இருக்கிறவர்கள் மிகவும் மோசமான வாழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை பாதுகாப்பிற்கும் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமண, சமய நிறுவனங்கள் பற்றி இதிலே கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது. 17 சமண நிறுவனங்கள் என்று வருகிறது. இந்த 17 நிறுவனங்கள் பற்றியும் விவரம் தந்து, அவையும் ஊக்கப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–45*

அதேபோல, ஆலய வருமானம். இதிலே பல்வேறு விதத்தில் தரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. மிக உயர்ந்த வருமானம் இருக்கிற ஆலயங்கள் பற்றிய விவரத்தை மன்றத்தில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனுடைய வரவு செலவு, எது எதற்கு அது செலவு செய்யப்படுகிறது என்பதை – அவை முன்னால் பல்வேறு பொது நிறுவனங்கள் குழுவினுடைய அறிக்கைகள் இங்கே முன் வைக்கப்படுகின்றன, அதேபோல அந்த அறிக்கையும் முன்வைக்கப்பட்டால் சமூகத்தின் பொதுப் பார்வையோடு அவை செயல்பட உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மதுரை கிழக்குத் தொகுதியில் அருள்மிகு மரகதவள்ளி முத்தீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அதிலுள்ள சிவலிங்கத்தின்மீது சூரிய ஒளி குறிப்பிட்டக் காலத்தில் படர்கிறது. இது நம்முடைய முன்னோர்களுடைய கட்டடக் கலைக்கு மகத்தான சான்று. ஏராளமான மக்கள் வந்து வழிபடுவார்கள். மீனாட்சி அம்மன் திருக்கோயில் கட்டுப்பாட்டில் அது இருக்கிறது. சூரிய ஒளி அதில் படுவதையும் பிரபலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமூக நலத் துறை.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சில திருக்கோயில்கள் உள்ளன. இது, கட்டட வல்லுநர் தன்மையின் வெளிப்பாடு. இதுபோன்ற அமைப்புகள். ஒரு குறிப்பிட்ட நாளில் இறைவன்மீது சூரிய ஒளி படும் வகையில் கட்டட அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை தல வரலாறுகள்,



திருக்கோயில்கள் பற்றிய கையேடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலே இருக்கிற பக்தர்களுக்கு வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். நன்மாறன்:** அதேபோன்று, மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் தூண்களில் இசை ஒலி கேட்கும். அது இப்போது பாதுகாப்பாக – நம்முடைய மக்கள் அதை அடித்து, அடித்து நெளித்து விட்டார்கள்; ஆகவே அதற்கு பாதுகாப்பான வலை பின்னப்பட்டிருக்கிறது. மக்களுக்குத் தெரியும், இந்தக் கல்லில் தட்டினால் ஓசை வரும். அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலிலும் அப்படிப்பட்ட sound pillars உண்டு. எனவே, இதிலே இசை ஒலி வரும் என்பதை அங்கே எழுதிப் போட வேண்டுமென்று பக்தர்கள் விரும்புகிறார்கள். அதனையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பழனியில் இருக்கிற rope car திட்டம்போல திருப்பரங்குன்றத்திலும், கள்ளழகர் திருக்கோயிலிலும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலத் துறை.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். ஆகவே, பெண் கல்வி, அவர்களிடையே விழிப்புணர்ச்சி மற்றும் பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெற்றெடுக்கும் பிள்ளைகளிலேயே பேதம் பார்க்கின்ற பெற்றோர்களுக்கு அவர்களுடைய அறியாமையை போக்குகின்ற முயற்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும், இன்னும் கூடுதலாக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், இரண்டு மணித் துளிகளுக்குள் முடியுங்கள்

**திரு. என். நன்மாறன்:** சரி. அடுத்து சமூக நலத் துறையில் என்னென்ன சலுகைகள் இருக்கின்றன என்பது பாமரர்களுக்கும் விரிவாகத் தெரிய வேண்டும். என்னுடைய அபிப்பிராயம், 5 ஆம் வகுப்பு பாடத்திலேயே இந்த விவரங்களை இணைத்தால், அந்தத் தலைமுறைக்கும், வருங்காலத் தலைமுறைக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலத் துறைக்கு அனுப்பப்படுகிற விண்ணப்பங்கள், அதற்குக் கிடைக்க வேண்டிய உதவித் தொகைகள் விரைவில் கிடைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதவைகள், முதியோர் ஆகியோருக்கு வழங்கப்படும் உதவித் தொகைகளினுடைய தொகை அளவு உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதில் இருக்கக் கூடிய ஏராளமான நிபந்தனைகள் தளர்த்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தில் ஏற்கெனவே இருந்த தலைவர், தற்போது இல்லை; ஓய்வு பெற்றுவிட்டார்; புதிய தலைவர் நியமிக்கப்பட வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். கும்பகோணம் தீ விபத்திற்கான காரணங்களில் அதுவும் ஒன்றாக இருக்கிற காரணத்தினால், சத்துணவுக் கூடங்களை தகுந்த முறையில் அமைக்கவும், அங்கன்வாடி மையங்களும் அதுபோல் பாதுகாக்கப்படுவதற்கும் உரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு ஊழியர்களை பணி நிரந்தரம் செய்து அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றோரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் ரூ.3,000 + ரூ.7,000 என்பதை இன்னும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், வாய் பேசாதோர் ஆகியவர்களுக்கும் பொருந்த வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

பார்வையற்றோர் அனைவரும் 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யலாம் என்று இருப்பதை 3 மடங்காக உயர்த்த வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். ஏனைய உடல் ஊனமுற்றோருக்கும் இது பொருந்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்புத் தொகை ரூ.200 என்பதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பார்வையற்றோருக்கு unemployment relief—வேலையற்றோர் நிவாரணத் தொகை வழங்குவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே படித்து வேலையில்லாத அனைத்து இளம் பெண்களுக்கும் வழங்கப்பட்டு வந்த அந்தத் தொகை என்பது அனைவருக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மதுரை காமராஜர் சாலையிலுள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளி பாதுகாப்பாக இயங்க வேண்டும். அங்குள்ள சிறுவர்கள் அவர்களுடைய தண்டனை காலம் முடிந்த பிறகு வெளியே வருகிற காலத்தில் பணி செய்வதற்கு உரிய முறையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள ஊழியர்களுடைய பணிப் பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்து, வழங்கிய வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

*முற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நலன் என்றாலே, மனித நலன், சமுதாய நலன், மகளிர் நலன், குழந்தைகள் நலம், சமூகத்தில் பாதிக்கப்பட்டோர் ஆகிய அனைவரின் நலமும் சேர்ந்தே பொருள்படும். இவர்கள் எல்லோரும் மேம்பாடு அடைவதே சமூக மேம்பாடாகும். சமுதாயத்தில், சரிபாதியாக இருக்கக்கூடிய பெண்கள் இன்றைக்கு பின்னுக்குத் தள்ளப்பட்டு இழி நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே, பெண்களுக்கு மூன்று வகையான பாதுகாப்புகள் இருந்தன. பெற்றோரால் பாதுகாப்பு, கணவனால் பாதுகாப்பு, பிறகு மகனால் பாதுகாப்பு என்பதெல்லாம் இன்றைக்கு மாற்றப்பட்டு, பாதுகாப்பற்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பணியாற்றும் பட்டதாரிகளுக்கு உச்ச வயது வரம்பை நீக்கி, அவற்றிலிருந்து விதி விலக்கு அளித்து ஆசிரியர் பணியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் அமைச்சுப் பணிகளில் இளநிலை உதவியாளர்கள் பணியில் அமர்த்த சிறப்புத் தேர்வு நடத்தப்படும் என்றும், இதன்மூலம் 5,500 சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் பயன்பெறுவர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, அவர்களுக்கு அந்த வாய்ப்பினை இந்த அரசு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தாய், தந்தை, உற்றார், உறவினர்களை இழந்த குழந்தைகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டி அரவணைக்கும் இந்த அரசு, கல்விக்காகவும், வயது வந்த – 18 வயது வந்த பெண்களுக்கு ரூபாய் மூன்று இலட்சம் நிதி உதவியும் அளிப்பதாக அறிவித்திருக்கிறது. இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. முன் பருவ காலக் குழந்தைகளுக்கு விளையாட்டு என்ற தலைப்பில் ஆண்டிற்கு 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்வதாகவும், ஒவ்வொரு சத்துணவு மையங்களுக்கும் 500 ரூபாய் வீதம் ஒதுக்கீடு செய்து அந்தக் குழந்தைகளுக்கு நல்ல வாய்ப்பினை உருவாக்குவதாக சொல்லப்படுகிறது. இன்று இந்த வயதுக் குழந்தைகள் எல்லாம் பெரிய அளவில் ஆங்கிலம் படிக்கின்ற வாய்ப்பை பெறுகின்றன. அதாவது L.K.G., U.K.G. போன்ற படிப்புகளெல்லாம் வசதி படைத்த குழந்தைகள் படிக்கின்றனர். இந்தச் சாதாரண வீட்டுக் குழந்தைகளும் அவ்வாறு படிப்பதற்கான வசதிகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுக் குடும்பம் சிதைந்து முதியோர் புறக்கணிக்கப்பட்டு, ஆதரவற்ற நிலையில் முதியோர் இல்லங்களில் தள்ளப்பட்டு வருகின்றனர். மேலும் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த பெரியோர்கள் கைவிடப்பட்டு, ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோருக்கு, அன்றாட வாழ்வில் உணவு, உடை, உறைவிடம் ஆகியவை கிடைக்காமல் அவதிப்படுவோருக்கு, 650 முதியோர்களுக்கு, 16 தனியார் தொண்டு நிறுவனங்களின்மூலம், நபர் ஒருவருக்கு 500 வீதம் இந்த அரசு உதவி செய்வதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் திட்டம் அநேகமாக அனைத்து ஊராட்சிகளிலும் தொடங்கப்படவேண்டும். ஏனென்றால், இன்றைக்கு ஏழைகள் பெரும்பாலும் இப்படிப்பட்ட வயதான காலங்களிலே அநாதைகளாக்கப்படுகிறார்கள். அவர்களையும் இணைத்து, முதியோர் உதவித் தொகை பெறுவோரையும் இணைத்து, இந்தத் திட்டத்தை அனைத்து ஊராட்சிகளிலும் செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு ஏற்கெனவே தொட்டில் குழந்தைகள் திட்டம் என்கின்ற ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறது. அதேபோன்று முதியோர் கட்டில் திட்டம் என்கின்ற ஒரு திட்டத்தையும் இந்த அரசு அறிவிக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பெற்ற தாய், சுற்றும், முற்றும் பார்த்து யாரும் இல்லாத நேரத்தில் முட்புதரிலோ, சாக்கடை ஓரத்திலோ,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் வயதானால் கட்டிலிலே படுக்கப்போட்டு விடுவீர்கள் போல் இருக்கிறது. (சிரிப்பு)



**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அல்லது குப்பைத் தொட்டியிலோ, தான் பெற்ற குழந்தையைத் தூக்கி எறிந்து விட்டு ஓடிவிடும் இந்த வேளையில், அக்குழந்தைக்கு ஆதரவுக்கரம் நீட்டி, தாலாட்டுத் தொட்டில் இருக்கிறது என்று ஒரு திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அது மேலும் சிறக்கவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1979 ஆம் ஆண்டு வழிகாட்டி மையம் என்று மாவட்ட சமூக நல அலுவலர்களின்கீழ் 20 வழிகாட்டி மையங்கள் செயல்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அரசால் பெண்களுக்கு அறிவிக்கப்படும் நலத் திட்டங்களை விளக்குவதும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாகும். இன்று இம்மையங்கள் மூலம் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு தொழில் புரிய பெண்கள் கடன்பெற வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், கடன்பெற்றுத் தொழில் செய்து உற்பத்திப் பொருள்களை விற்பதற்கு அந்தப் பெண்கள் பெரிய அளவிலே அவதிப்படுகிறார்கள். அதற்கு ஒரு சந்தை தேவைப்படுகிறது. இன்றைக்கு அந்தப் பெண்கள் தேடி அலைவதைப் பார்க்கிறபோது, உற்பத்திப் பொருள்களை விற்க முடியாமல் இருக்கிறபோது மறு உற்பத்திகள் செய்யமுடிவதில்லை. அவர்கள், இதனால் கடன் கட்டவும் முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, கூட்டுறவு மையங்களில் அந்த உற்பத்திப் பொருள்களை எடுத்து விநியோகிப்பதன்மூலம் அவர்களுக்கு உதவி புரிவதாக அமையும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

தமிழகத்தில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை, விகிதாசாரம் பல மடங்கு குறைந்துகொண்டே போகிறது. பெண் சிசுக் கொலை, பெண் கருச் சிதைவு என்பதெல்லாம் உத்தரவாதம் இல்லாத வாழ்க்கை என்பதால் ஏற்படும் பிரச்சினைகளாகும். எனவே, சொத்தில் பெண்களுக்குச் சம பங்கு என்கின்ற முறை மிகச் சரியான முறையில் அமல்படுத்தப்பட வேண்டும்.

முதியோர் உதவித் தொகை பெறும் வாய்ப்பு இருந்தும், அரசாங்கத்திற்கு மனு கொடுத்தால் — ஏற்கெனவே உதவித் தொகை பெறும் நபர் ஒருவர் இறந்தால்தான் அந்த இடத்திற்கு வேறு ஒருவர் பூர்த்தி செய்யப்படுகிறார். இந்த நிலை மாற்றப்பட்டு–தகுதி வாய்ந்த அனைவருக்கும், மனு செய்கிற அனைவருக்கும், O.A.P. கிடைக்க ஏற்பாடு செய்வதோடு, ஆண் வாரிசு

இருந்தாலும் இந்தத் தொகையைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு ஆண் குழந்தைகள் இருந்தாலும், அவர்களும் வேலையில்லாமல் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். 100 நாள் வேலைவாய்ப்புத் தரப்படும் என்று அரசு அறிவித்திருந்தாலும், வேலை கிடைக்குமா, தன் குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமா என்று ஆண்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் வயதான பெற்றோர்களுக்கு சோறு போடுவது, பராமரிப்பது என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, ஆண் குழந்தைகள் இருந்தாலும், அவர்களின் வருவாயைக் கணக்கீடு செய்து, அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமணப் பெண்களுக்கு 10,000 ரூபாய் வழங்கும் திட்டம் அமலில் உள்ளதா என்பது தெரியவில்லை. இன்றைக்கு ஏராளமான பெண்கள் அந்தத் திட்டத்திற்கு மனு செய்து காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக ஒரே தேதியில் அந்தத் தொகையை வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வரதட்சணை ஒழிப்புச் சட்டம் அமலில் இருக்கும்போதே பெண்கள் பெரிய அளவில் வஞ்சிக்கப்படுகிறார்கள். கணவனால் கைவிடப்பட்டவர்களோ, வேறு திருமணம் செய்துகொண்டு, கைவிடப்பட்ட பெண்களோ, கணவன்மீது வழக்குத் தொடுத்தால் அநேகமாக கணவனின் சூழ்நிலைக்கு ஏற்ப, மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் சொன்னாலும்கூட அதைப் பெறுவதிலே பெண்கள் பெரிய அளவிலே கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கொடுக்க மறுக்கிறபோது நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் போட்டால், பாதிக்கப்பட்ட பெண் கணவனை உள்ளே வைப்பதற்கு அதற்கான செலவுத் தொகையைக் கட்ட வேண்டுமென்று இருக்கிறது. அவ்வாறு கட்டத் தவறினால், கோர்ட் தீர்ப்பை அவமதித்ததாக இருந்தாலும் உள்ளே போட முடியாது. கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், வாழ வழியில்லாமல் பிழைப்பூதியம் கேட்டுத்தான் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். அவர்கள் கணவனை உள்ளே வைப்பதற்கு எங்கே பணம் கட்ட முடியும்? எனவே, இப்படி நடைமுறையில் இருக்கிற சிக்கல்களை நீக்கி, அதற்கேற்ற முறையிலே சட்டத் திருத்தம் கொண்டு வந்து, அந்தத் தொகையை வசூலிக்காமல், பெண்கள் வாழ உத்தரவாதம் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அரசுப் பணியாளர்களுக்கு சிறப்பு நிலை உள்ளதுபோல், சத்துணவுப் பணியாளர்களுக்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சத்துணவு மற்றும் ஊட்டச் சத்து மையங்களில் உள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில், வேலை நியமனத் தடை உத்தரவை இந்த அரசு வாபஸ் பெற்று அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அந்தக் காலியிடங்களை நிரப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுத் தொண்டு நிறுவனங்களுக்கு சிறு தொழில்களுக்கான பயிற்சி அளிப்பதுபோல சுயநிதி உதவிக் குழுக்களுக்கும் வேலைக்கான பயிற்சி அளிக்க வேண்டும் என்பதோடு எங்கு, எத்தனைக் குழுக்கள் இருந்தாலும் அங்கெல்லாம் அவர்களுக்கு கடன் கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தகுதி வாய்ந்த விதவைகளுக்கு உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஆதிவாசிகள் வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது. இவர்களின் நிலங்களை வாங்குவதும் விற்பதும் பல மாநிலங்களில் தடை செய்யப்பட்டுள்ளது. வட மாநிலங்களில் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 244–ன்கீழ் ஐந்தாவது, ஆறாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளதால் 1996–ல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரம்பரியக் கலாச்சாரம், நில உரிமை, உள்ளூர் நிருவாக மேலாண்மை பாதுகாக்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் அவ்வாறு இல்லை. எனவே, இந்தியாவின் பல பகுதிகளில் எப்படியெல்லாம் அரசாங்கங்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறதோ, அவ்வாறு தமிழகத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி, இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்துக்கொள்கிறேன். சத்துணவு சமைக்க தற்போது காய்கறி வாங்க 15 பைசாவும், விறகு வாங்க 11 பைசாவும், மளிகைக்கு $8\frac{1}{2}$ பைசாவுமாக மொத்தம் $34\frac{1}{2}$ பைசா மட்டுமே கொடுக்கப்படுகிறது. ஆனால், இப்போது கூடுதலாக கொண்டைக் கடலை, பாசிப் பருப்பு போன்றவைகளை வேக வைக்கவும், உப்பு போடுகின்ற முறையும் இருப்பதால் இவற்றுக்கு ஏறத்தாழ ஒரு 50 பைசாவாவது கொடுக்கிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஏற்கெனவே சில்வர் தட்டு,

டம்ளர் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நடைமுறைப்படுத்தவில்லை. அதையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சத்துணவுத் திட்டத்தில் செயல்படுகின்ற, சத்துணவு மையத்தில் இருக்கின்ற காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று இங்கு பேசினார். நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஏற்கெனவே ஒவ்வொரு மையத்திலும் எத்தனைப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் காலியாகவுள்ள சமையலர், அமைப்பாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் 3–ல் உள்ள உபரிப் பணியாளர்களைக் கொண்டு ஏற்கெனவே நிரப்பப்பட்டு வருகின்றது. அதோடு மட்டுமல்லாமல், மேலும் மாநிலம் முழுவதும் உள்ள காலிப் பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அனைத்துக் காலிப் பணியிடங்களையும் நிரப்ப நிதித் துறையுடன் கலந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1–00*

மேலும், சத்துணவுத் திட்டத்தில் ஒவ்வொரு பொருளும் வாங்குவதற்கு ஏற்கெனவே 23 பைசா ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட்டு வந்தது. நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான் அதை 35 பைசாவாக உயர்த்துகின்ற ஆணையை (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்து, ஏற்கெனவே அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நன்றி. அதேபோன்று சத்துணவு மையத்தில் பணிபுரியும் ஆயாக்களின் பணி என்பது ஏறத்தாழ இருவருக்கும் சமமான பணியாக இருந்து கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் சத்துணவு பெறக்கூடிய குழந்தைகளுக்கு எல்லாம் இப்போது இலவச தட்டும், டம்ளரும் வழங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டு அந்த திட்டத்திற்காக 1 கோடி ரூபாய் அம்மா அவர்கள் அளித்திருக்கின்றார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு முதலமைச்சராக வருவதற்கு முன்னால் அலுமினியத் தட்டு, அலுமினிய டம்ளரிலேதான் சத்துணவு சாப்பிடுகிற பிள்ளைகளுக்கு உணவு வழங்கப்பட்டு வந்தது. முதலாவதாக ஆய்வு நடத்துகிறபோதே அலுமினியம் இருக்கக்கூடாது என்று சொல்லி எவர்சில்வர் தட்டு, டம்ளர் வாங்குவதற்கு ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி. பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** பேச்சை முடித்து விடுகிறேன். ஆயாக்களுடைய பணி < இரண்டு ஆயாக்களுக்கும் சமமான பணி இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அவர்களுக்கு சமமான ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊட்டச்சத்து அங்கன்வாடி மையத்தில் தாயாக பணிபுரிந்து வருகின்றவர்கள் சுமார் 12 ஆண்டு காலம் 250 சம்பளத்தில் பணியாற்றுகிறார்கள். தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 300–க்கும் மேற்பட்டோர் இந்தப் பணியில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் நிலங்களில் வாடகை, ஏற்கெனவே இந்தப் பிரச்சினைக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு வந்துதான் கூட்டியது என்று கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. பக்கம் 18–ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த அரசு நிறுத்தி வைத்திருந்ததை இந்த அரசு 1–11–2001 முதல் நியாய வாடகை நடவடிக்கைகளைத் தொடருமாறு ஆணை பிறப்பித்திருக்கிறது என்று பக்கம் 19–ல் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இந்த வாடகையைப் பொறுத்தவரைக்கும் நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு 62 ரூபாய் ஏற்கெனவே வாங்கியிருந்தால் இப்போது

[திரு. வே. கிருஷ்ணமூர்த்தி] [2005 மார்ச் 18

1958 ரூபாய் – 16 மடங்கு கூட்டி வாங்கப்படுவதாக சொல்லப்பட்டது. 46 ரூபாய் ஏற்கெனவே வாங்கியிருந்தால் 712 ரூபாய் – 16 மடங்கு கூட்டப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. நிறைய வாடகை இருப்பதால் இந்த வாடகையை மறுபரிசீலனை செய்து ஏழைகளுக்கு உதவுகிற முறையில் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதி பிரச்சினை சிங்காரப்பேட்டையில் குருகப்பட்டிக் கடைக்கு மல்லிப்பட்டியிலிருந்து ஏறத்தாழ 3 கி.மீ. நடந்து வந்து உணவுப் பொருட்கள் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுக்கு ஒரு பகுதிநேர கடை ஒன்று அளிக்க வேண்டும். அதேபோன்று பாம்பாறு அணையில் ஒரு பகுதிநேரக் கடையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனுமன்தீர்த்தத்திலிருந்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற மானியக் கோரிக்கைகளில் பேசுங்கள்; இல்லாவிட்டால் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** பேச்சை முடித்து விடுகிறேன். 2 கோரிக்கைகள், அவ்வளவுதான். பேச்சை முடித்து விடுகிறேன். அனுமன்தீர்த்தத்திலிருந்து தீர்த்தமலை வரை உள்ள சாலை முற்றிலுமாக பழுதடைந்து போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சாலையை உடனடியாக செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் அம்பேத்கர் அவர்களால் தொன்றுதொட்டு சொல்லப்பட்ட அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர்கள் ஆகலாமென்பது ஏற்கெனவே சொல்லப்பட்டு இருந்தாலும்கூட அதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு முன்முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் நிறைய போக்குவரத்து அடங்கிய பாம்பாற்றின் குறுக்கே பாவக்கல் அருகில் உடைந்த பாலத்தைக் கட்ட வேண்டும். தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் அன்னயோஜனா அந்தியோதயா திட்டத்தின்கீழ் 100 நாள் வேலைவாய்ப்பும், 35 கிலோ மலிவு விலை அரிசியும் கிடைக்கிற வாய்ப்பு அந்த பின்தங்கிய மாவட்ட மக்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது. தமிழக அரசு பட்டியலைக் கொடுக்கிறபோது அந்த 2 மாவட்டங்கள் விடுபட்டிருக்கிறது. எனவே, அதைச் சேர்த்து இப்போது அந்தத் திட்டத்தைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.



2005 மார்ச் 18]

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** ஒரே ஒரு கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதி கோரிக்கையை எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள். மானியக் கோரிக்கைக்கு சம்பந்தம் இல்லாதது. தொகுதி கோரிக்கைகளை எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவர் பேச வேண்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** பாம்பாறு அணையின் குறுக்கே ஒரு நீர்த் தடுப்பு சுவர் அமைத்து ஊராட்சியின் குடிநீர் நிலைகளை பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு, அரூர் தொகுதி தீர்த்தமலையிலிருந்து அம்மாபேட்டை செல்லும் வழியில் வறட்டாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டுவதோடு, கல்லணை அருகே ஒரு அணை கட்டி இந்த அரசு அந்தப் பகுதி மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு பாயிண்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி காசாம்பு பூமாலை அவர்கள் பேசுகின்றபோது Working Women's Hostel— வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு Hostels அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார். ஏற்கெனவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும், ஒவ்வொரு Municipal Corporation–னிலும் வேலைக்குச் செல்லும் மகளிருக்கு இத்தகைய Hostels நடத்தப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை, திருவாரூர், கரூர், இராமநாதபுரம், விழுப்புரம், நாகப்பட்டினம் இந்த நகரங்களைத் தவிர மற்ற அனைத்து Municipal Corporation–களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் வேலைக்குச் செல்லும் மகளிருக்கான hostels நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மாநில அரசே 8 hostel–களை நேரடியாக நடத்துகிறது. சென்னையில் இரண்டு hostels, கடலூரில் ஒன்று, புதுக்கோட்டையில் ஒன்று, திருச்சிராப்பள்ளியில் ஒன்று, தூத்துக்குடியில் ஒன்று, ஓசூரில் ஒன்று, மதுரையில் ஒன்று. இந்த 8–ஐயும் மாநில அரசே நடத்துகின்றது. மற்ற அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், Municipal Corporation–களிலும், Social Welfare

Department, N.G.O.s மூலமாக அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், வசதிகளையும் அளித்து, அவர்கள் மூலமாக வேலைக்குச் செல்லும் மகளிருக்கான hostels நடத்தப்பட்டு வருகின்றன.

*பிற்பகல் 1–05*

2005–2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் Part – II, Budget Estimates என்ற பகுதியில் N.G.O.s மூலமாக சேலம், கோயம்புத்தூர், நாகர்கோவில், சென்னை ஆகிய நகரங்களில் வேலைக்குச் செல்லும் மகளிருக்கான இன்னும் 4 hostel–களைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இல்லாத நகரங்கள், அதாவது Working Women's Hostels இல்லாத நகரங்களான திருவண்ணாமலை, திருவாரூர், கரூர், விழுப்புரம், இராமநாதபுரம், நாகப்பட்டினம், அனைத்துமே மாவட்ட தலைநகரங்களாக இருப்பதால் இந்த இடங்களிலும், நகரங்களிலும் அரசாங்கம் நேரடியாகவோ அல்லது N.G..O.–கள் மூலமாகவோ உடனடியாக Working Women's Hostel தொடங்க ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள்.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு முக்கியமான விஷயம். அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா. (குறுக்கீடு)

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள் அம்மா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.. (குறுக்கீடு)

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டதற்கு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொடுத்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு நிமிடத்திலே சொல்லிவிடுகிறேன், பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. இரண்டு அமைச்சர்கள் பேசவேண்டும். திரு. எச். ராஜா, பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசிவிட்டார். திரு. எச். ராஜா, பேசுங்கள். (குறுக்கீடு) அப்புறம் (குறுக்கீடு) அப்புறம் கேளுங்கள். சந்தேகம் இருந்தால் அமைச்சர் சொன்ன பிறகு கேளுங்கள். திரு. எச். ராஜா, பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்புறம் அமைச்சர் பேசும்போது கேளுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பேசும்போது அப்புறம் கேளுங்கள். திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மற்றும் சமூக நலத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை சட்டத்தை இயற்றும் காலத்திலேயே இது பற்றிய ஆழமானதொரு விவாதம் நடந்தது, about the desirability in having such an Act. ஏனென்றால் ஒரு மதத்தை வழிபடுபவர்கள் அனுசரிப்பவர்களுடைய அடிப்படை உரிமை அவர்களுடைய வழிபாட்டுத் தலங்களை நிர்வகிப்பது என்பது, அதிலும் ஒரு மதசார்பற்ற அரசாங்கம், ஒரு குறிப்பிட்ட மதத்தினுடைய வழிபாட்டுத் தலங்களை நிர்வகிப்பது என்பது கொள்கை ரீதியாகக்கூட சரியானதாக இருக்க முடியாது.

[திரு. எச். ராஜா] [2005 மார்ச் 18

நாட்டிலுள்ள வடமாநிலங்கள் அனைத்திலுமே அரசாங்கம் கோயில்கள் நிர்வாகத்தை கவனிப்பது கிடையாது. எனவே, ஏற்கெனவே Justice கிருஷ்ணசாமி ரெட்டியார் மற்றும் மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அடங்கிய குழு இந்துக்களுடைய ஆலயங்கள் ஆன்றோர்கள், சான்றோர்கள் அடங்கிய தனித்து இயங்கும் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும் என பரிந்துரை செய்திருப்பதை அரசாங்கம் செயல்படுத்த வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் எட்டாயிரத்திற்கும் அதிகமான கோயில்களிலே இன்னும் நியமிக்க இயலாத நிலை உள்ளது என கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கான அறங்காவலர்களை விரைவிலே நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–10*

கோயில் குத்தகை பாக்கிகளைப் பொறுத்தவரையில், கோயில்களுக்கும், திருமடங்களுக்கும் 4,79,138 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இதில் நஞ்சை நிலங்கள் மாத்திரம் 2,05,135 ஏக்கர் இருக்கின்றன. இதில் குத்தகைதாரர்கள் 1,20,339 பேர் இருக்கிறார்கள். ஆனால், இதுவரை வருவாய் நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்ற வழக்கிலே ரூ.25.73 கோடிக்குக் குத்தகை பாக்கியிருக்கிறது. அதிலே ரூ.4.48 கோடி வசூலுக்காக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே எவ்வளவு வசூலானது என்று குறிப்பிடப்படவில்லை. குத்தகை பாக்கி, வாடகை தராதவர்களை வெளியேற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனென்றால், கோயில்களுக்கு வரவேண்டிய குத்தகை பாக்கிகள் வராமல் இருக்கின்ற காரணத்தால், கோயில்களுக்கான பல்வேறுவிதமான நலப் பணிகள் தடைபட்டுப் போகின்றன.

அதேபோல, சற்று நேரத்திற்கு முன்பாகக்கூட அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள். 2002–2003 ஆம் ஆண்டு கூட்டத் தொடரிலே அமைச்சர் அவர்கள், ஒருசில சட்டமன்ற உறுப்பினர்களே கோயில்களுடைய சொத்துகளை ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். அப்போது இதுபற்றி மிகப்பெரிய சர்ச்சை ஏற்பட்டது. குறிப்பிட்ட உறுப்பினர்கள் பெயரைச் சொல்லி அமைச்சர் சொல்லலாமா? அது ஒரு சார்பாக இருக்கிறது என்று சொல்லி கேட்டார்கள். அப்போது அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்களை ஆக்கிரமித்திருப்பவர்களுடைய



2005 மார்ச் 18] [திரு. எச். ராஜா]

பட்டியலைத் தருவதற்குத் தயார் என்று சொன்னார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அமைச்சர் அவர்கள் பதிலுரையின்போது, எவ்வள்வு மணி நேரமானாலும் பரவாயில்லை. இருக்கின்ற அனைத்துக் கோயில்களுடைய சொத்துகளை ஆக்கிரமித்திருப்பவர்களுடைய பட்டியலை, அதிலே முன்னுரிமையாக அரசியல்வாதிகள், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், எந்தக் கட்சியாக இருந்தாலும், பாகுபாடில்லாமல் பட்டியலை அமைச்சர் அவர்கள் வெளியிட வேண்டுமென நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருக்கோயில்கள் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், பல்வேறு இடங்களிலே கோயில்களுடைய நகைகள் மற்றும் விக்கிரகங்கள் காணாமல் போகின்றன. திருஈங்கோய் மலையிலே மரகத லிங்கம் காணாமல் போயிருக்கிறது. அதேபோல, உத்திரமேரூர் முருகன் கோயிலிலே நகைகள் காணாமல் போயிருக்கின்றது. மேலும், அனைத்துக் கோயில்களுடைய நகைகளையும் ஒரு குழுவை நியமித்து, பக்தர்கள் முன்னிலையிலேயே அவற்றைச் சரிபார்ப்பதற்கான நடவடிக்கையினை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களுடைய வருமானத்திலிருந்து 113 கல்வி நிலையங்களும், சமூக நல நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக மாற்று மதங்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அவர்களுடைய மத சம்பந்தமாகக் கொடுக்கப்படுகின்ற நன்கொடைகள் வகையறாக்களை வைத்து உருவாக்கப்படுகின்ற கல்வி நிலையங்கள், சமூக நிறுவனங்களை அந்தந்த மதத்தைச் சார்ந்தவர்களே நிர்வகித்துக் கொள்கிறார்கள். ஆனால், இங்கு இந்துக் கோயில்களைப் பொறுத்தவரையில், இந்து கோயில்களுடைய நிறுவனங்கள் மத சார்பற்ற, அரசாங்கம் நிர்வகிப்பது என்பது சரியாக இருக்காது. எனவே, நான் ஆரம்பத்தில் வலியுறுத்திய தனித்தியங்கும் வாரியத்திடம் இவை அனைத்தும் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே 52–வது பக்கத்திலே சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து என்றிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள்மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு, அரசியல் தலைவர் என்ற முறையிலே. ஆனால், அண்ணா அவர்களே இப்போது இருந்தால்கூட இந்த விஷயத்தை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த கோயில்களிலே, வழிபாட்டுத் தலங்களிலே, secular leaders–க்கு அல்லது secular days–க்கு சிறப்பு வழிபாடு, பொது விருந்து என்பது பொருத்தமானதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். எனவே, அது தமிழர் திருநாளாக அல்லது தமிழ் வருடப் பிறப்பாக, ஆழ்வார்கள்,

நாயன்மார்களது நினைவு தினங்களாக இருக்கின்ற நாட்களிலே, அம்மாதிரியான சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்துக்கு ஏற்பாடு செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கமுடியும்.

இங்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பும், அதோடு கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களையும் பார்க்கும்போது, இணை ஆணையரிலிருந்து உதவி ஆணையர் வரை 4,751 அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். அதுதவிர, 37,819 முழுநேரப் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். கோயில்கள் கட்டப்பட்டதே, இந்து சமய பண்பாடு பற்றியும், அதன் பாரம்பரியத்தை வெளிப்படுத்துவதற்காகவும்தான். பூஜை, புனஸ்காரங்கள் நடக்கவேண்டும், இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகள் கோயில்களிலே சொல்லப்படவேண்டும். இன்ன இன்ன மதச் சடங்குகளுக்காகத்தான் ஆலயங்களே அன்றைக்கு நிறுவப்பட்டன. ஆலயங்களை நிறுவியவர்கள் தாங்கள் எந்தவிதமானதொரு பண எதிர்பார்ப்பையும், வருவாயையும் எதிர்பாராமல், அதை மக்கள் சேவைக்காக, சமூக ஒற்றுமைக்காக ஆலயங்களை நிறுவினார்கள். ஆனால், இன்றையதினம் இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கும்போது, தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிர்வாகிகளுடைய சம்பளம், ஆடிட்டர்களுக்கான செலவு, Engineering Staff–க்கான செலவு, இவையெல்லாம் 23,87,89,000/– ரூபாய். ஆனால், ஆலயங்கள் எதற்காகத் தொடங்கப்பட்டதோ அதற்கான பூஜை புனஸ்காரங்களிலே ஈடுபடக்கூடியவர்களுக்காக, வேத பாராயணம் செய்பவர்களுக்கு ரூ.2 இலட்சத்து 15 ஆயிரம், அர்ச்சகர்களுக்கு ரூ.32 இலட்சத்து 82 ஆயிரம், இசைக் கலைஞர்களுக்கு ரூ.4 இலட்சத்து 93 ஆயிரம், பூஜாரிகளுக்கு ரூ.1 கோடியே 52 இலட்சத்து 90 ஆயிரம். அதாவது, கோயில்களுடைய மத சம்பந்தமான காரியங்களில் ஈடுபடுகின்ற பணியாளர்களுக்கு கொடுக்கின்ற சம்பளமானது, அவர்களுக்காக செலவு செய்கின்ற செலவினங்கள் ரூ.1 கோடியே, 92 இலட்சத்து 80 ஆயிரம். ஆனால், அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கான செலவு 23 கோடியே 87 இலட்சத்து 89 ஆயிரம். அதாவது, — கோயில்களுக்காக அலுவலர்களா, அலுவலர்களுக்காக கோயில்களா என்று தெரியாத அளவிற்கு மத சம்பந்தமான விஷயங்களுக்கான செலவுகள் மிகக் குறைவாக இருக்கின்றன.

பிற்பகல் 1–15

அதேபோல், கிராமக் கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம் 3,000 பேருக்கு வழங்க அனுமதிக்கப்பட்டு 2,632 பேருக்கு மட்டுமே தரப்படுகிறது. இதை 5,000–ஆக உயர்த்தித்தர வேண்டுமென நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன், வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்றால், ஆரம்பத்திலே இது 4,500 பேருக்கு தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 2,500 பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. பிறகு, 3,000 பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டு, ஆனால் 2,632 பேருக்கு மட்டுமே இதுவரை தரப்பட்டு வருகிறது. எனவே, இதை அரசாங்கம் 5,000 பூசாரிகளுக்கு ஓய்வூதியத் திட்டத்தை உயர்த்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாநகரிலே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** பத்து நிமிடங்கள், ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து நிமிடங்கள்தான் எல்லாருக்குமே. இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** மதுரை மாநகரில் அறுபது, எழுபது ஆண்டுகளாக இருக்கின்ற கோயில்கள், மரங்கள், அனைத்துமே இடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், அங்கே அரசாங்கக் கட்டடங்கள் இருக்கின்றன, அரசியல் கட்சித் தலைவர்கள் சிலைகள் இருக்கின்றன. ஆனால், ஆண்டவன் விக்கிரகங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, அரசாங்கம் அந்தக் கோயில்களை மீண்டும் அங்கேயே இருப்பதற்கு...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே நடைபெற்ற சம்பவம், உயர் நீதிமன்றத்தினுடைய ஆணையின் அடிப்படையில்—அங்கே இருக்கின்ற ஆலயங்களெல்லாம், அறநிலையத் துறைக்கு சொந்தமான மூன்று ஆலயங்களும், தனியாருடைய ஆலயங்களாக இருக்கக்கூடிய 104 ஆலயங்களும் அந்த உயர் நீதிமன்ற ஆணையின் அடிப்படையிலே எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதைச் சட்டமன்ற உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், சத்துணவு கட்டடங்கள் எதுவுமே தொடப்படவில்லை. கோயில்கள் மட்டுமே எடுக்கப்பட்டு இருக்கின்றன. அது அனைத்திற்குமே என்னிடம் ஆதாரம் இருக்கிறது...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கின்ற உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், அனைவருக்கும் தகவல்

கொடுத்து, எங்கே எப்படிப்பட்ட பிரச்சினைகள் இருந்தாலும் அதை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்றுதான் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைச் சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து கோயில்களிலே தமிழிலே வழிபாடு நடத்துவதை பாரதிய ஜனதா கட்சி வலிமையாக வரவேற்கிறது, ஆதரிக்கிறது. தேவாரமும், திருவாசகமும், நாலாயிர திவ்வியபிரபந்தமும், திருப்பாவையும், திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும் நாம் யாரும் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே இயற்றப்பட்டவை; வழிபாட்டிலே இருந்துகொண்டு இருக்கின்றன. அதேபோல், பயிற்சி பெற்ற எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்து கோயில்களிலே அர்ச்சகர்களாகப் பணிபுரிவதை பாரதிய ஜனதா கட்சி வரவேற்கிறது, வலியுறுத்துகிறது.

இறுதியாக, ஒரு விஷயத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசின் கட்டுப்பாட்டில் ஆலயங்கள் இருக்கின்ற காரணத்தால், ஒரு இந்து மதத் தலைவருக்கு எதிரான வழக்கினைக்கூட கோயிலிலே வைத்து பூஜை செய்து கொண்டு போய் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அதைப்போல சேலத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசப்பட்டுவிட்டது, ஏற்கெனவே பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள் இதெல்லாம்.

**திரு. எச். ராஜா:** அதற்கு நான் விளக்கம் சொல்லவேண்டும்...

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு நீதிமன்றத்திலே இருக்கும்போது அதைப்பற்றி பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற நேரத்தில் அதைப்பற்றி விவாதிப்பதற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா, தங்களுடைய நேரம் முடிந்துவிட்டது. 21-3-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



பிற்பகல் 1–20

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குமுன்னால், தி.மு.க. உறுப்பினர், திரு. கணேசன் அவர்கள் 1999–2000 ஆம் ஆண்டு சமூக நலத் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கியதாகவும், இந்த ஆண்டு குறைந்த நிதி ஒதுக்கியதாகவும் கூறினார். அது தவறான தகவல். 1999–2000 ஆம் ஆண்டைப் பொறுத்தவரைக்கும் Demand 29 என்ற தலைப்பிலே அப்போது ரூ.612.09 கோடி ஒதுக்கப்பட்டது. அதிலே 170.44 கோடி Old Age Pension முதலியவற்றிற்கும் சேர்த்து ஒதுக்கப்பட்டது. அது தற்போது Demand 39–லே 2002–03–லிருந்து மாற்றப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தால் தற்போது அந்தத் தொகையையும் சேர்த்துப் பார்த்தால் 612.09–உடன் சேர்த்து 861 கோடி ரூபாய் தற்போது இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. மிக அதிகப்படியான நிதியைத்தான் தற்போது அரசு ஒதுக்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் பதிலுரையை திங்கட்கிழமை அன்று வழங்குவார்கள்.

## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 21–3–2005 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 21–3–2005, திங்கட்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

[2005 மார்ச் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

21-3-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 21-3-2005 ஆம் நாள், திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

59. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

60. 2003-2004 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

61. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)



2005 மார்ச் 18]

62. 2003-2004 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

72. மானியக் கோரிக்கை எண் 43 – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (2005-2006). (தமிழ், ஆங்கிலம்)

73. மானியக் கோரிக்கை எண் 45 – தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (2005-2006). (தமிழ், ஆங்கிலம்)

74. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் செயல்முறைத் திட்டம் (2005-2006). (தமிழ், ஆங்கிலம்)

75. இந்து சமய அறநிலையத் துறை பற்றிய "மக்கள் சாசனம்" என்கிற சிறுநூல். (2005-2006)

76. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபதாவது அறிக்கை. (2003-2005)

77. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2003-2005)

78. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2003-2005)

79. மனுக்கள் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. (2003-2005)

80. மனுக்கள் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2003-2005)

81. மனுக்கள் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2003-2005)

82. மனுக்கள் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை. (2003-2005)

83. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

## இணைப்பு I

(104 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 45–

## தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–

## இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

**முகவுரை:**

தமிழகத்தின் வரலாறு, பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றை உலகெங்கும் பறைசாற்றி வருவன இங்கு நிறைந்துள்ள திருக்கோயில்களாகும். மக்கள் கூடி வழிபடும் மையங்களாக மட்டுமின்றி, தமிழர்களின் கலை வளர்ச்சியின் சின்னங்களாகவும், இந்து சமய பண்பாட்டுப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் காலச் சுவடாகவும் இத்திருக்கோயில்கள் விளங்குகின்றன. இத்திருக்கோயில்களின் நிருவாகத்தை முறையாக பராமரிப்பது, மேற்பார்வையிடுவது, அறக்கட்டளைகளை திறனுடன் நிருவகிப்பது ஆகியன அரசின் தலையாய பொறுப்புகளில் ஒன்றாக இருந்து வருகிறது. திருக்கோயில் சொத்துக்களைப் பாதுகாத்துப் பராமரிப்பதிலும், தொன்று தொட்டு நிலவி வரும் பழக்க வழக்கங்களை அனுசரித்து வழிபாடுகளை நடத்தவும், பக்தர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலும் இத்துறை முழுக் கவனம் செலுத்தி வருகிறது.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

என்ற புறநானூற்று வைர வரிகளுக்கு வடிவம் கொடுக்கும் வகையில், திருக்கோவிலுக்கு வரும் மெய்யன்பர்களுக்கு மதியம் அமுது படைக்கும் அரிய திட்டத்தை இந்த அரசு 171 திருக்கோயில்களில் செயல்படுத்தி வருகிறது.

**இந்து சமய அறநிலையங்களும் சட்டமுறை நிருவாகமும்:**

1925 ஆம் ஆண்டிற்கு முன்னரே இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம் திறம்பட நடைபெறவும், அதன் பணிகளை மேற்பார்வையிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1925 ஆம் ஆண்டில் இந்து சமய மற்றும் அறக்கொடைகள் வாரியம் ஒன்று நிறுவப்பட்டு, அதன்

மூலம் இந்து சமய திருக்கோயில்கள், அறக்கொடைகள் மற்றும் திருமடங்கள் கண்காணிக்கப்பட்டன. 1927 ஆம் ஆண்டு மேற்கண்ட சட்டம் நீக்கப்பட்டு வேறு சட்டம் கொண்டு வரப்பட்டது. 1927 முதல் 1951 வரை பல திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. 1951 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை வாரியம் கலைக்கப்பட்டு, அரசுத் துறையாக இயங்கிட வழி வகுக்கப்பட்டது. 1951 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் இருந்த இந்து சமய அறநிலையத் துறை சட்டம் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, திருத்தப்பட்ட சட்டம் 22/1959, 1-1-1960 ஆம் நாள் முதல் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. 1959 ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தில் பல்வேறு சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு 1996 ஆம் ஆண்டு சட்டம் (திருத்தச் சட்டம் 39/1996) இயற்றப்பட்டு 9-12-1996 முதல் செயல்பாட்டில் உள்ளது. இச்சட்டத்தின் மூலம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு அதிகார வரம்புகளை நிர்ணயித்து, திருக்கோயில் மற்றும் அறக்கொடைகள் நிருவாகத்தைக் கண்காணித்திட வழி வகுக்கப்பட்டுள்ளது.

**இந்து சமய அற நிறுவனங்கள்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் தமிழ்நாட்டில் 38,409 இந்து சமய மற்றும் சமண சமய நிறுவனங்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:–

| | |
|---|---|
| • திருக்கோயில்கள் | 36,369 |
| • திருமடங்கள் | 56 |
| • திருமடங்களின் நிருவாகத்தின்கீழ் உள்ள திருக்கோயில்கள் | 57 |
| • அறக்கட்டளைகள் | 189 |
| • குறிப்பிட்ட கட்டளைகள் | 1721 |
| • சமண நிறுவனங்கள் | 17 |
| மொத்த நிறுவனங்கள் | 38,409 |

சமய நிறுவனங்கள், அந்நிறுவனங்களின் ஆண்டு வருவாய் அடிப்படையில், பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலில்





சேராத நிறுவனங்கள் என இரு வேறு வகைகளாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

| வ.எண் | வகைப்பாடு | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | <u>பட்டியலில் சேராத நிறுவனங்கள்</u><br>ரூ.10,000/–க்குக் குறைவாக வருவாய் ஈட்டும் நிறுவனங்களின் எண்ணிக்கை | 34,420 |
| 2 | <u>பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள்</u><br>(அ) வருடாந்திர வருமானம் ரூ.10,000/–க்குக் குறையாமலும், ரூ.2 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 3,398 |
| | (ஆ) வருடாந்திர வருமானம் ரூ.2 இலட்சத்திற்குக் குறையாமலும் ரூ.10 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 438 |
| | (இ) வருடாந்திர வருமானம் ரூ.10 இலட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | 153 |
| | மொத்தம் | 38,409 |

**நிருவாக அமைப்பு:**

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தின் (திருத்தச் சட்டம் 39/1996) கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிருவாகத்திற்கு, தலைமை பொறுப்பில் இந்திய ஆட்சிப் பணி நிலையில் ஆணையர் செயல்படுகின்றார். இத்துறையின் பொது நிருவாகம், செயல்பாடுகள் மற்றும் மேற்பார்வை அனைத்திற்கும் ஆணையரே பொறுப்பாளர். ஆணையருக்கு உதவியாக துறையின் தலைமையிடத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் உள்ளனர்:–

1. கூடுதல் ஆணையர்
2. இணை ஆணையர் (தலைமையிடம்)
3. இணை ஆணையர் (திருப்பணி)

[2005 மார்ச் 18

4. ஆணையரின் நேர்முக உதவியாளர் (உதவி ஆணையர் நிலை)

5. ஆணையரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (உதவி ஆணையர் நிலை)

6. உதவி ஆணையர் (சட்டச் சேர்மம்)

7. உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு )

ஆணையருக்கு உதவியாக அயல்பணியிலிருந்து இத்துறையில் பணிபுரியும் அலுவலர்கள் விவரம்:-

I. (1) தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) – மாவட்ட வருவாய் அலுவலர் நிலை

(2) சிறப்பு வட்டாட்சியர்கள் – 3 (கும்பகோணம், சிதம்பரம், மதுரை)

II. (1) கண்காணிப்புப் பொறியாளர்

(2) செயற்பொறியாளர்

(3) உதவி கோட்டப் பொறியாளர்

(4) உதவிப் பொறியாளர்

(5) வரைவாளர்கள்

III. (1) முதுநிலை கணக்கு அலுவலர் (கருவூல கணக்குத் துறை)

(2) உதவி கணக்கு அலுவலர் (கருவூல கணக்குத் துறை)

IV. தலைமை தணிக்கை அலுவலர் (நிதித் துறை துணைச் செயலர் நிலை)

மேற்கண்ட அலுவலர்கள், தலைமையிட நிருவாகம், அனைத்து சார்நிலை அலுவலகங்களின் நில நிருவாகம், பணியாளர்களின் பணியமைப்பு, திருக்கோயில்கள் மேலாண்மை நிருவாகம், திருப்பணி, நீதிமன்ற வழக்குகள், திருக்கோயில்கள் தணிக்கை ஆகியவற்றில் ஆணையருக்கு உதவிட பொறுப்பு வகிக்கின்றனர்.



2005 மார்ச் 18]

இத்துறை, மாநில அளவில் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் ஒரு இணை ஆணையரின் நிருவாகத்தின்கீழ் உள்ளது. மேலும், இத்துறை மாநில அளவில் 22 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகிறது. அவை பின்வருமாறு:-

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | அதிகார வரம்பு |
|---|---|---|---|
| 1 | இணை ஆணையர், சென்னை. | 1. உதவி ஆணையர், சென்னை. | சென்னை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர், பொன்னேரி, திருவள்ளூர், ஊத்துக் கோட்டை வட்டங்கள். |
| 2 | இணை ஆணையர், வேலூர். | 2. உதவி ஆணையர், காஞ்சிபுரம். | காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி, பூந்தமல்லி, திருத்தணி வட்டங்கள். |
| | | 3. உதவி ஆணையர், வேலூர். | வேலூர் மாவட்டம். |
| | | 4. உதவி ஆணையர், திருவண்ணாமலை. | திருவண்ணாமலை மாவட்டம். |
| 3 | இணை ஆணையர், சேலம். | 5. உதவி ஆணையர், தருமபுரி. | தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| | | 6. உதவி ஆணையர், சேலம். | சேலம், நாமக்கல் மாவட்டங்கள். |
| 4 | இணை ஆணையர், கோயம்புத்தூர். | 7. உதவி ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள். |

[2005 மார்ச் 18

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | அதிகார வரம்பு |
|---|---|---|---|
| | | 8. உதவி ஆணையர், ஈரோடு. | ஈரோடு மாவட்டம். |
| 5 | இணை ஆணையர், தஞ்சாவூர். | 9. உதவி ஆணையர், தஞ்சாவூர். | தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, பாபநாசம், பேராவூரணி, தஞ்சாவூர், திருவையாறு வட்டங்கள் திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி, நீடாமங்கலம், வலங்கைமான் வட்டங்கள். |
| | | 10. உதவி ஆணையர், நாகப்பட்டினம். | நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், நாகப்பட்டினம், திருக்குவளை, வேதாரண்யம் வட்டங்கள். திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல், நன்னிலம், திருத்துறைப்பூண்டி திருவாரூர் வட்டங்கள். |
| 6 | இணை ஆணையர், மயிலாடுதுறை. | 11. உதவி ஆணையர், கும்பகோணம். | தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், திருவிடைமருதூர், கும்பகோணம் வட்டங்கள். நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி வட்டங்கள் |
| | | 12. உதவி ஆணையர், கடலூர். | கடலூர் மாவட்டம். |



2005 மார்ச் 18]

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | அதிகார வரம்பு |
|---|---|---|---|
| | | 13. உதவி ஆணையர், விழுப்புரம். | விழுப்புரம் மாவட்டம். |
| 7 | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 14. உதவி ஆணையர், | திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம் வட்டங்கள். |
| | | 15. உதவி ஆணையர், அரியலூர். | அரியலூர் மாவட்டம். |
| | | 16. உதவி ஆணையர், புதுக்கோட்டை. | புதுக்கோட்டை மாவட்டம், கரூர் மாவட்டத்தில் குளித்தலை. |
| 8 | இணை ஆணையர், மதுரை. | 17. உதவி ஆணையர், மதுரை. | மதுரை, திண்டுக்கல் மாவட்டங்கள். |
| 9 | இணை ஆணையர், சிவகங்கை | 18. உதவி ஆணையர், விருதுநகர். | விருதுநகர் மாவட்டம். |
| | | 19. உதவி ஆணையர், பரமக்குடி. | சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள். |
| 10 | இணை ஆணையர், திருநெல்வேலி | 20. உதவி ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி மாவட்டம். |
| | | 21. உதவி ஆணையர், தூத்துக்குடி. | தூத்துக்குடி மாவட்டம். |
| | | 22. உதவி ஆணையர், நாகர்கோயில். | கன்னியாகுமரி மாவட்டம். |

[2005 மார்ச் 18

திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு ஒரு உதவி ஆணையரும், இணை ஆணையர் மண்டலங்களில் மண்டலத்துக்கு ஒருவர் வீதம் 9 உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) மற்றும் ஒரு துணை ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) ஆகியோரும் பணிபுரிகின்றனர். சமய நிறுவனங்களின் திருப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மதிப்பீடுகள் தயாரித்தல், மேற்பார்வையிடல் போன்ற பணிக்காக ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திலும் ஒரு உதவி கோட்டப் பொறியாளர் மற்றும் ஒரு வரைவாளர் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு உதவி ஆணையர் கோட்டத்திலும் மதிப்பீடுகள் தயாரிக்கவும், கண்காணிக்கவும் ஒரு உதவி பொறியாளர் பணிபுரிகின்றார்.

சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய, 2 துணை தணிக்கை அலுவலர்களும், 17 மண்டல தணிக்கை அலுவலர்களும், 28 உதவித் தணிக்கை அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

திருமடங்களை ஆய்வு செய்ய தலைமையிடத்தில் மண்டல தணிக்கை அலுவலர் ஒருவர் ஆணையருக்கு உதவிட பணிபுரிகின்றார்.

**சமய நிறுவனங்கள் நிருவாகம்:**

திருக்கோயில்களின் முக்கியத்துவம், வருமானம், சொத்துக்கள், அதன் செயல்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் செயல் அலுவலர்கள் பதவியிடங்கள் கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டு, சமய நிறுவனங்கள் நிருவகிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகின்றன:

| | |
|---|---|
| 1. இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் | 6 |
| 2. துணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் | 14 |
| 3. உதவி ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் | 27 |
| 4. செயல் அலுவலர் நிலை 1 | 66 |
| 5. செயல் அலுவலர் நிலை 2 | 112 |
| 6. செயல் அலுவலர் நிலை 3 | 250 |
| 7. செயல் அலுவலர் நிலை 4 | 154 |
| மொத்த செயல் அலுவலர்கள் | 629 |

**திருமடங்கள் நிருவாகம்:**

தமிழகத்தில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் தற்போது 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. இவைகளின் நிருவாகம் முறையாக நடைபெறுவதை உறுதி



2005 மார்ச் 18]

செய்ய, ஒரு மண்டல தணிக்கை அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய ஒரு ஆய்வுப் பிரிவு, ஆணையருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் இயங்கி வருகிறது.

**மாவட்டக் குழுக்கள்:**

இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலைவர் மற்றும் 4 உறுப்பினர்கள் அடங்கிய மாவட்டக் குழு அரசால் அமைக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களுக்கும் மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளராக அந்தந்த உதவி ஆணையர்கள் செயல்படுகிறார்கள்.

**அறங்காவலர்கள் நியமனம்:**

திருக்கோயில்களின் நிருவாகத்தை இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தின்கீழ் நிருவகிக்க ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அறங்காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

பட்டியலைச் சேர்ந்த சமய நிறுவனங்களில் ரூ.10,00,000/– மற்றும் அதற்கு மேல் ஆண்டு வருமானம் பெறும் நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள், அரசால் நேரடியாக நியமிக்கப்படுவர்.

பட்டியலைச் சேர்ந்த ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு குறையாமலும், ரூ.10,00,000/–க்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களுக்கான அறங்காவலர்கள், மாவட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணையரால் நியமிக்கப்படுவர். இதனடிப்படையில் தமிழகத்தில் உள்ள பெரிய திருக்கோயில்களுக்கு புகழ்பெற்ற பிரமுகர்கள் அறங்காவலர் குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டு, இக்கோயில்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கி வருகின்றனர்.

பட்டியலைச் சேராத சமய நிறுவனங்கள் மற்றும் பட்டியலைச் சேர்ந்த, ரூ.10,00,000/–க்குக்கீழ் ஆண்டு வருமானம் பெறும் சமய நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்ய, இந்த மாவட்டக் குழுக்கள் சமய நிறுவனம்வாரியாக தகுதியுள்ள நபர்களின் பெயர்களைத் தெரிவு செய்தளிக்க வேண்டும்.

பட்டியலைச் சேர்ந்த ஆண்டு வருமானம் ரூ.10,000/–க்குக் குறையாமலும், ரூ.2,00,000/–க்கு மிகாமலும் உள்ள நிறுவனங்களுக்கு மாவட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அந்தந்த மண்டல இணை ஆணையர்களால் அறங்காவலர்கள் நியமிக்கப்படுவர்.

[2005 மார்ச் 18

பட்டியலைச் சேராத நிறுவனங்களான ரூ.10,000/–க்குக் குறைவாக ஆண்டு வருவாய் பெறும் நிறுவனங்களுக்கு, மாவட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அந்தந்தக் கோட்ட உதவி ஆணையர்களால் அறங்காவலர்கள் நியமிக்கப்படுவர்.

அரசால் நேரடியாக அறங்காவலர்கள் நியமிக்கப்படும் அறநிறுவனங்கள் தவிர, இதர அறநிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 அறங்காவலர்கள் மட்டும் மேலே குறிப்பிட்டபடி அந்தந்த அலுவலர்களால் நியமனம் செய்யப்படுவர். கூடுதலாக 2 அறங்காவலர்கள் நியமனம் தேவையெனில் அரசால் நேரடியாக நியமனம் செய்யப்படும்.

மேற்கண்ட அடிப்படையில் 452 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பொறுப்பேற்றுள்ளனர். எஞ்சிய அறநிறுவனங்களுக்குப் பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரம்பரை அறங்காவலர்கள் நிருவாகத்தில் உள்ள மற்றும் அறங்காவலர்கள் தொடர்பாக வழக்கு நிலுவை உள்ள 8,633 அறநிறுவனங்களுக்கு பரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமிக்க இயலாத நிலை உள்ளது.

**சமய நிறுவனங்களின் நில நிருவாகம்:**

(அ) நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் விவரம்:

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக தமிழ்நாடு முழுமையும் 4,79,138.28 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி அடங்கியுள்ளன:

| நிலத்தின் தன்மை | திருக்கோயில்களுக்குச் சொந்த மானவை | | திருமடங்களுக்குச் சொந்த மானவை | | மொத்தப் பரப்பளவு | |
|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் |
| நன்செய் | 1,83,853 | 43 | 21,282 | 05 | 2,05,135 | 48 |
| புன்செய் | 2,18,704 | 75 | 34,543 | 15 | 2,53,247 | 90 |
| மானாவாரி | 20,754 | 90 | — | — | 20,754 | 90 |
| மொத்தம் | 4,23,313 | 08 | 55,825 | 20 | 4,79,138 | 28 |



2005 மார்ச் 18]

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,20,339 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 22,599 கட்டடங்களும், 33,627 கிரவுண்டு மனைப் பகுதிகளும் முறையே 23,388 மற்றும் 58,936 குத்தகைதாரர்களின் அனுபவத்தில் உள்ளன.

(ஆ) வருவாய் நீதிமன்றம்:

நிலக்குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், நிலுவைகளை வசூலிக்கவும், நியாய வாடகை நிர்ணயம் செய்யவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும், தனித் துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

முழு நேர நீதிமன்றம்

1. தஞ்சாவூர்
2. திருச்சிராப்பள்ளி
3. மயிலாடுதுறை
4. திருவாரூர்
5. கடலூர்
6. மதுரை

முகாம் நீதிமன்றம்

1. மன்னார்குடி
2. கும்பகோணம்
3. சேலம்

வருவாய் நீதிமன்றங்களில் ரூ.25.73 கோடி குத்தகைத் தொகை நிலுவைக்காக மொத்தம் 21,365 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 7,292 வழக்குகளில் மொத்தம் ரூ.4.48 கோடிக்கு வசூல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, தொகையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் ரூ.21.25 கோடி குத்தகை பாக்கி குறித்த 14,073 வழக்குகள் வருவாய் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

(இ) நியாய வாடகை நிர்ணயம்: [2005 மார்ச் 18

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கான வாடகை குறைந்தது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையேனும் ஆணையரால் அமைக்கப்பட்டுள்ள மண்டலம்தோறும் செயல்படும் நியாய வாடகைக் குழுவினால் திருத்தியமைக்கப்பட வேண்டும். இது தொடர்பான அரசாணையின்படி நிலத்தின் சந்தை மதிப்பு மற்றும் கட்டடத்தின் மதிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்குழு நியாய வாடகை நிர்ணயம் செய்து வருகிறது. 04-06-1999-ல் நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கான கணக்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. அவ்வுத்தரவு 27–4–2000-ல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் மேற்கண்ட அரசு உத்தரவு மறுபரிசீலனை செய்யப்பட்டு 1–11–2001 முதல் நியாய வாடகை நடவடிக்கைகளைத் தொடருமாறு ஆணையிடப்பட்டது. இதன்படி, நியாய வாடகை நிர்ணயிக்கும் பணி மீண்டும் தொடங்கப்பட்டு, திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், மனைகள் ஆகியவற்றிற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வருகின்றது.

இதுவரை, 17,402 கட்டடங்களுக்கும், 35,184 மனைப் பகுதிகளுக்கும் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், ரூ.4.75 கோடி வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. நியாய வாடகை குழுவினரால் எஞ்சிய திருக்கோயில்களுக்குச் சொந்தமான அனைத்து கட்டடம் மற்றும் மனைகளுக்கும் நியாய வாடகை நிர்ணயம் செய்ய துரித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**அன்னதானத் திட்டம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான அன்னதானத் திட்டம், 23-3-2002 அன்று மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் பின்பு படிப்படியாக பல கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. தற்போது, இத்திட்டத்தின்கீழ் 171 திருக்கோயில்களில் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு மதிய வேளையில் நாள்தோறும் உணவு வழங்கப்படுகிறது. அன்னதானத் திட்டத்தின் மூலம் 1,76,59,630 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

இத்திட்டத்திற்கென, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது மாத சம்பளத் தொகையான ரூ.10,000/–ஐ ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கென இதுவரை 35 திருக்கோயில்களுக்கு ரூ.3,50,000/– நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.



2005 மார்ச் 18]

அன்னதானத் திட்டத்திற்கென ஆணையர் பதவி பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று துவங்கப்பட்டு, தொழிலதிபர்கள் மற்றும் செல்வந்தர்களிடமிருந்து ரூ.365 இலட்சம் நன்கொடையாக பெறப்பட்டது. அதில் ரூ.44 இலட்சம் பற்றாக்குறையுள்ள திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டது. எஞ்சிய ரூ.321 இலட்சம் இருப்பிலுள்ளது.

இத்திட்டத்திற்கென நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20 கோடி பெறப்பட்டு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வைப்புநிதி வட்டித் தொகையிலிருந்து ரூ.33 இலட்சம் பற்றாக்குறையுள்ள திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டது.

திருக்கோயில்களில், அன்னதானத் திட்டத்திற்கென நிறுவப்பட்ட உண்டியல் மூலமும், நன்கொடை மூலமும் ரூ.19.74 கோடி பெறப்பட்டுள்ளது. இவற்றில் ரூ.13.99 கோடி அன்னதானத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை ரூ.5.75 கோடி இருப்பிலுள்ளது.

**ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்பு:**

அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் 171 திருக்கோயில்களில் ஞாயிற்றுக்கிழமைதோறும் சிறுவர் மற்றும் சிறுமியர்களை நெறிப்படுத்தும் பொருட்டு கற்றறிந்தோர்களைக் கொண்டு ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறி வகுப்புகள் பொதுமக்களின் ஒருமித்த ஆதரவுடன் நடத்தப்பட்டு வருகிறது.

**யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம்:**

"மனிதர்கள் மட்டுமல்லாமல் ஏனைய உயிரினங்களும் நம்முடைய அன்புக்கும் உரியவை தான்" என்ற கருத்தின் அடிப்படையில், விலங்குகளிடத்தில் அன்பும், கருணையும் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களில் யானைகளை தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தாமல் போதுமான ஓய்வு தரப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், அவற்றை முறையாக பராமரிப்பது குறித்தும், அவற்றின் உடல்நலத்தை தொடர்ச்சியாகக் கண்காணித்து, தேவையான மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் அளிப்பது குறித்தும் அறிவுரை நல்கியுள்ளார்கள். இதற்கெல்லாம் மேலாக, தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் தனியாரால் பராமரிக்கப்பட்டு வரும் யானைகளின் உடல்நிலை பேணப்பட்டு அவற்றுக்குப் புத்துணர்ச்சி அளிக்கவும், புத்திளமை அளிக்கும் சிறப்பு உணவும், மருத்துவ வசதியும் வழங்கப்பட்டு அவற்றின் உடல்நலமும், மனநலமும் பேணும் வகையில் ஆண்டுதோறும் ஒரு நலவாழ்வு முகாம் நடத்த வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் நீர் வசதியுடைய, ஏற்ற சுற்றுச்

[2005 மார்ச் 18

சூழல் அமைந்த முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் யானைகள் நலவாழ்வு முகாம் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு, 2003-2004 ஆம் ஆண்டில் 16-11-2003 முதல் 15-12-2003 வரை 30 நாட்கள் 100 யானைகள் பங்கேற்க சீரும், சிறப்புடன் முகாம் நடத்தப்பட்டது. 2004-2005 ஆண்டில் 18-11-2004 முதல் 4-1-2005 வரை 48 நாட்கள் 113 யானைகள் பங்கேற்க யானைகளின் உடல்நலமும், மனநலமும் ஆரோக்கியமான சூழ்நிலைக்குக் கொண்டு வரப்பட்டன. மருத்துவ வல்லுநர்கள் மூலம் அதிநவீன சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பல்வேறு நோய்கள் குணப்படுத்தப்பட்டன. இவ்வாண்டு இம்முகாமிற்கான முழுச் செலவையும் அரசே ஏற்றுக் கொண்டது. இம்முகாம் இனி ஆண்டுதோறும் அரசு செலவிலேயே தொடர்ந்து நடத்தப்படும்.

**பழனி திருக்கோயிலில் கம்பி வட ஊர்தி:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் தென்னகத் திருக்கோயில்களில் முதன்முறையாக பக்தர்கள் நலனைக் கருதி ரூ.4 கோடி மதிப்பீட்டில் கம்பி வட ஊர்தி அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3-11-2004 அன்று கம்பி வட ஊர்தியைத் தொடங்கி வைத்து பக்தர்களுக்கு அர்ப்பணித்தார்கள். இக்கம்பி வடம் 323 மீட்டர் நீளம் உடையது. பயணியர் பயணிக்க 24 பெட்டிகள் அமைக்கப்பட்டு, ஒரு பெட்டியில் 4 நபர்கள் அமர்ந்து பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வூர்தி ஒரு மணி நேரத்திற்கு 800 நபர்களை ஏற்றிச் செல்லும் திறன் படைத்தது. நொடிக்கு 3 மீட்டர் வேகத்தில் ஒருவழிப் பயணம் செய்ய 165 நொடிகள் ஆகும்.

இதன் மூலம் ஊனமுற்றோர், வயது முதிர்ந்தோர், உடல்நலம் குன்றியோர், சிறு குழந்தைகளோடு வரும் குடும்பத்தார் மற்றும் ஏனைய பலரும் எளிதில் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமியை வழிபட்டு அருள்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**திருப்பணி:**

ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடி பரவப்பெற்ற புகழ்மிகு புனித திருத்தலங்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டிலேயே உள்ளன. இவற்றில் பல சிதிலமடைந்து பராமரிப்பின்றி உள்ளன. இத்திருக்கோயில்களையும், வரலாற்று முக்கியத்துவம், முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களையும், தொல்பொருள் பிரார்த்தனை தலங்களையும், இன்னபிற பிரசித்தி பெற்ற கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களோடு திருக்கோயில்களையும் மற்றும்



2005 மார்ச் 18]

ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளிலுள்ள சிறிய திருக்கோயில்களையும் நன்முறையில் பேணிப் பாதுகாத்திட அவற்றிற்கு திருப்பணி செய்வது இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு திருப்பணிகள், கீழ்க்கண்ட நிதியாதாரங்களின் அடிப்படையில் செய்து வரப்படுகிறது:

(1) பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை

(2) அந்தந்தத் திருக்கோயில்களின் நிதி

(3) நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து வழங்கப்படும் நிதி.

(4) அரசு மானியம்

(5) ஆணையர் பொதுநல நிதி

(6) ஆலய மேம்பாட்டு நிதி

(7) கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி

(8) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

(9) தாமே முன்வந்து திருப்பணி செய்யும் செல்வந்தர்கள் உபயம்

திருக்கோயில் திருப்பணிகளை அந்தந்தப் பகுதி மக்களோ, பக்தர்களோ, செல்வந்தர்களோ ஏற்று செய்திட முன்வரும்போது, அவர்களின் முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தேவைக்கேற்ப துறையின் மூலமாகவும் நிதியுதவி செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில், திட்ட மதிப்பீட்டில் துறையின் மூலம் வழங்கப்படும் உதவி 25 விழுக்காடாக இருக்கும்.

**(1) பொதுமக்கள் அளிக்கும் நன்கொடை:**

சமயம் மற்றும் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டோர், தொழிலதிபர்கள், தனியார் நிறுவனங்கள், செல்வந்தர்கள் மற்றும் பொதுமக்கள் மனமுவந்து அளிக்கும் நன்கொடை தொகையைக் கொண்டு பெரும்பாலான திருப்பணிகள் நடைபெறுகின்றது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூ.946.13 இலட்சம் மதிப்பில் நன்கொடைகள் மூலம் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

**(2) அந்தந்தத் திருக்கோயில்களின் நிதி:**

நிதிவசதியுள்ள திருக்கோயில்களில் அந்தந்தத் திருக்கோயில்களின் நிதியிலிருந்து முழுமையாகவோ, பகுதியாகவோ திருப்பணி செய்வது வழக்கத்தில் உள்ளது. அதன்படி, 2004–2005 ஆம் ஆண்டில், ரூ.14.54.17 இலட்சம் செலவில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

**(3) நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி:**

நிதிவசதியற்ற திருக்கோயில்களில் திருப்பணி செய்திட இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டப்பிரிவு 36–ன்கீழ் நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.177.18 இலட்சம் உபரி நிதி அனுமதிக்கப்பட்டு திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

**(4) அரசு மானியம்:**

ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காக அரசு நிதியிலிருந்து மானியமாக இத்துறை வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.75 இலட்சம் அரசு மானியம் வழங்க்ப்பட்டு, திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(5) ஆணையர் பொதுநல நிதி:**

சமய நிறுவனங்கள் அல்லது தனி நபர்களால் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு ஆணையரின் பதவிப் பெயரில் பொது நலநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதி திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், அவற்றைப் பேணிக் காத்தலுக்கும் வழங்கப்படுகின்றது. இந்நிதியின் மூலம், 2004–2005 ஆம் ஆண்டில் 25 திருக்கோயில்களுக்கு ரூ.52.36 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(6) ஆலய மேம்பாட்டு நிதி:**

நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி பெற்று வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இவ்வைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையினைக் கொண்டு அரசின் அனுமதியுடன் பழமை வாய்ந்ததும், சரித்திர முக்கியத்துவம் பெற்றதும், முன் பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப் பெற்றதுமான திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் 4 திருக்கோயில்களுக்கு ரூ.8.38 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



**(7) கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரு.2 கோடி முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் கிராமப்புறங்களிலும், இத்துறையின் கட்டுப்பாட்டிலும் உள்ளதுமான திருக்கோயில்களின் திருப்பணிக்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம், இதுவரை 1,625 கிராமப்புறத் திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன. திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/– தற்போது வழங்கப்படுகிறது. இதுவரை, இத்திட்டத்தில் பயனடைந்த திருக்கோயில்களுக்கு ரூ.3,23,24,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**(8) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி:**

திருக்கோயில்களின் தொன்மை வாய்ந்த பழம்பெரும் கலை, பண்பாட்டுச் சிறப்பு மிக்க தன்மையை பேணிக் காப்பதற்காக முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட ரூ.1,08,000/–ஐக் கொண்டு 5-8-1991–ல் தொடங்கப்பட்ட திட்டமாகும். இந்நிதிக்கு தொண்டுள்ளம் கொண்ட செல்வந்தர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்பட்டன. இந்நிதி திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி என்று தற்போது வழங்கப்படுகிறது.

**(9) தாமே முன்வந்து திருப்பணி செய்யும் செல்வந்தர்கள் உபயப் பணி:**

திருக்கோயில்களின் திருப்பணியை செல்வந்தர்கள் தாமே முன்வந்து உபயப் பணியாக ஏற்று இத்துறையின் கண்காணிப்புக்குட்பட்டு செய்வது வழக்கத்தில் இருந்து வருகிறது. இவர்களை ஊக்குவிப்பது இத்துறையின் தலையாய நோக்கமாகும். இவ்வகையில் 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.1,285.18 இலட்சம் அளவில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

**ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணி:**

ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதியில் உள்ள இத்துறை ஆளுகையின்கீழ் வரும் சிறிய திருக்கோயில்களைப் புனரமைப்பு செய்து தரவேண்டும் எனும் நீண்டநாளையக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்பொருட்டு இத்திட்டம் துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், சென்ற ஆண்டு வரை 275 திருக்கோயில்களுக்கு, தலா ரூ.25,000/– வீதம் அரசு மானியம் மூலம் நிதியுதவி செய்யப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்திட்டத்தின் கீழ் மேலும் 6,000 திருக்கோயில்கள் 2004–2005 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளன. நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.15 கோடி பெறப்பட்டு, இவை ஒவ்வொன்றுக்கும் தலா ரூ.25,000/– நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

**குடமுழுக்கு செய்தல்:**

ஆகம விதிப்படி, ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் குடமுழுக்கு நடைபெற வேண்டும். அதனடிப்படையில் தமிழகத்தில் ஆண்டுதோறும் பல திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்து குடமுழுக்குகள் செய்யப்படுகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 2004–2005 முடிய 3,817 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. கடந்த ஆண்டில் கீழ்க்கண்ட முக்கிய திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது:

(1) அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

(2) அருள்மிகு தாணுமாலயசுவாமி திருக்கோயில், சுசீந்திரம்.

(3) அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி.

(4) அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர்.

(5) அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி.

(6) அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர்.

(7) அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில், குணசீலம்.

(8) அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி.

(9) அருள்மிகு நவநீதேஸ்வரர் திருக்கோயில், சிக்கல்.

**தங்க ரதத் திருப்பணி:**

திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்களது பிரார்த்தனைகளை நிறைவேற்ற, உற்சவ மூர்த்தியை தங்க ரதத்தில் எழுந்தருளச் செய்து,



தங்க ரதம் இழுப்பது வழக்கத்தில் இருந்து வருகிறது. கீழ்க்கண்ட 20 திருக்கோயில்களில் தங்க ரதம் பயன்பாட்டில் உள்ளது:

(1) அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

(2) அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

(3) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

(4) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.

(5) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை.

(6) அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை.

(7) அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில்.

(8) அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில்.

(9) அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.

(10) அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.

(11) அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்.

(12) அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், பூங்காநகர், சென்னை.

(13) அருள்மிகு வடபழனியாண்டவர் திருக்கோயில், வடபழனி.

(14) அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு.

(15) அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்.

(16) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.

(17) அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், ரத்னகிரி.

(18) அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி.

(19) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சிவன்மலை.

(20) அருள்மிகு தெய்வநாயகப் பெருமாள் திருக்கோயில், நாங்குனேரி.

தங்கரதத் திருப்பணி நடைபெற்று வரும் திருக்கோயில்கள் விவரம்:–

(1) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி.

(2) அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்.

(3) அருள்மிகு கோட்டைமாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்.

(4) அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர்.

**தங்க விமான திருப்பணி:**

சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மூலஸ்தான விமானத்தை தங்க விமானமாக மாற்றி அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு வருகைத் தரும் பக்தர்களின் நீண்டநாள் அவாவை பூர்த்தி செய்யும் நோக்கோடு, பக்தர்களால் காணிக்கையாகச் செலுத்திய பொன்னினங்களை உருக்கி, அதிலிருந்து கிடைக்கப் பெற்ற 71 கிலோ சுத்தத் தங்கத்தினைப் பயன்படுத்தி தங்க விமானம் அமைக்கும் பணி ரூ.6 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**திருத்தேர் திருப்பணி:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான 823 மரத் தேர்கள் உள்ளன. அவற்றில், 148 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. நின்றுபோன தேர்த்திருவிழாக்களை நடத்தவும், திருத்தேர்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில், 22 திருத்தேர்கள் பழுதுநீக்கப்பட்டு தேர்த் திருவிழா நடைபெற வழிவகுக்கப்பட்டுள்ளது. ஒன்பது திருக்கோயில்களில் 10 திருத்தேர்கள் புதியதாக செய்யப்பட்டு தேர்த் திருவிழாக்கள் நடைபெற்றுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

1) அருள்மிகு மயூரநாதசுவாமி திருக்கோயில், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.

2) அருள்மிகு பவஔஷதீஸ்வரர் திருக்கோயில், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் மாவட்டம்.

3) அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில், தாரமங்கலம், சேலம் மாவட்டம்.

4) அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், வீரபாண்டி, தேனி மாவட்டம்.

5) அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம்.

6) அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.

7) அருள்மிகு திந்திரிணீஸ்வரர் திருக்கோயில், திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம்.



8) அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை.

9) அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பாஷ்யக்காரசுவாமி திருக்கோயில், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

**திருக்குளங்கள் திருப்பணி:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள 1,552 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2,235 திருக்குளங்கள் உள்ளன. இத்திருக்குளங்களைத் திருப்பணி செய்து தெப்பத் திருவிழா நடத்துவதற்கு ஏதுவாகவும், மழைநீரைச் சேகரித்து, வறட்சியை எதிர்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வரசு பொறுப்பேற்றது முதல் 507 திருக்குளங்கள் திருப்பணி செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய திருக்குளங்களில் திருப்பணி செய்ய வேண்டிய திருக்குளங்களை எதிர்வரும் ஆண்டுகளில் திருப்பணி செய்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற பழம்பெரும் திருக்கோயில்களின் காலபூஜைகளைப் புதுப்பித்தல்:

நலிவுற்ற, வரலாற்றுச் சிறப்புமிக்கதும், பாடல் பெற்றதுமான பழம்பெரும் திருக்கோயில்கள் சிலவற்றில் காலபூஜைகள் செய்வதில் ஏற்பட்ட தொய்வினைக் கருத்தில்கொண்டு, நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முழு அளவிலான காலபூஜைகளை செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பயனாக, 11 நிதிவசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து 22 நலிவுற்ற திருக்கோயில்களுக்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஓராண்டிற்கு ரூ.3,13,564/– செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**ஒருகால பூஜைத் திட்டம்:**

ஒருகால பூஜையைக்கூட செய்திட இயலாது நிதிவசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜையினை நடத்திட உதவும் வகையில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பொதுமக்களையும் ஈடுபடுத்தும் நோக்கில், பொதுமக்கள் நன்கொடையாக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.2,500/– அளித்தால், நிதிவசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000/–ம், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணியிலிருந்து ரூ.1,300/–ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200/–ம் வழங்கி அத்திருக்கோயிலின் பெயரில் மொத்தம் ரூ.25,000/– நிரந்தர முதலீடு செய்யப்படுகிறது. அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும்

வட்டித் தொகையிலிருந்து குறிப்பிட்ட திருக்கோயிலில் ஒருகால பூஜை [2005 மார்ச் 18
நாள்தோறும் நடைபெற வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டு 432 திருக்கோயில்கள் பயன் அடைந்துள்ளன. இதுவரை, மொத்தம் 10,227 திருக்கோயில்கள் பயன் அடைந்து வருகின்றன.

**திருக்கோயில்களின் அடிப்படை வசதிகள்:**

**(i) பக்தர்களின் காலணி பாதுகாப்பு:**

திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களின் காலணிகளின் பாதுகாப்பிற்குக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. பக்தர்கள் நலன் கருதி, 1-07-2004 முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி காலணி பாதுகாப்பு இலவசமாக்கப்பட்டது.

**(ii) குடிநீர் வசதி:**

திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்கள் அனைவருக்கும் தூய்மையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் 2,091 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

**(iii) கழிப்பறை வசதி:**

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு ஆண்கள்–பெண்களுக்கென தனித்தனியாக நவீன கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக 272 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

**(iv) குடில்கள், அறைகள், பொருள் பாதுகாப்பு அறை வசதிகள்:**

பெருவாரியான பக்தர்கள் வருகைபுரியும் திருக்கோயில்களில் தங்குவதற்குத் தேவையான குடில்கள், அறைகள் மற்றும் பொருட்களைப் பாதுகாத்திட தனி அறைகள் ஆகிய வசதிகள் செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நிதிவசதியில்லாத திருக்கோயில்களுக்கு பரிவட்டங்கள் வழங்குதல்:**

பல சிறிய திருக்கோயில்கள் நிதிவசதியற்று உள்ள நிலையில், அத்திருக்கோயிலிலுள்ள திருவுருவங்களுக்குப் பரிவட்டங்கள் (ஆடைகள்) போதுமான அளவு இல்லாத நிலை உள்ளது. அந்நிலையினைக் களையும்பொருட்டு, அதிக எண்ணிக்கையில் பரிவட்டங்கள் காணிக்கையாக வரப்பெற்று, உபரியாக உள்ள கோயில்களிலிருந்து



2005 மார்ச் 18]

பரிவட்டங்களை சிறிய திருக்கோயில்களுக்கு வழங்கிட வசதிமிக்க திருக்கோயில்களுக்கு ஆணையிடப்பட்டு பண்டிகைக் காலங்களிலும், விழாக் காலங்களிலும் இதர தேவையான காலங்களிலும் அவை வழங்கப்பட்டு வருகின்றன.

**உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் பாதுகாப்பு:**

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாத்திட கள்வர் எச்சரிக்கை மணிகள், கோள்சொல்லிக் கடிகாரம், தொட்டிப்பூட்டுகள் மற்றும் இரும்புக் கதவுகள் நிறுவுதல், இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில்கள் பாதுகாப்புப்படை நியமனம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விலைமதிக்க இயலாத உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்க, கீழ்க்கண்ட பெரிய கோயில்களில், உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் இப்பாதுகாப்பு மையங்களில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. திருவிழாக் காலங்களில் அவற்றை எடுத்துச் சென்று விழா முடிந்ததும், மீண்டும் பாதுகாப்பு மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையத்தில் உள்ள உலோகத் திருமேனிகளுக்கு நாள்தோறும் பூஜைகள் செய்யப்பட்டு வருகின்றன.

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம், (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்) திருவாரூர்.
2. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.
3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.
5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

இப்பாதுகாப்பு மையங்களில் 3,188 உலோகத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கும்பகோணம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலில் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டு விரைவில் செயல்பட உள்ளது. காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் கடலூர்

[2005 மார்ச் 18

ஆகிய இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைக்க கட்டுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை மற்றும் சிவகங்கை ஆகிய நான்கு இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைப்பதற்கு ரூ.120 இலட்சம் அரசு, பகுதி–II திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்து கட்டுமானப் பணிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருக்கோயில் பாதுகாப்புப் படை:**

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், நகைகள், மற்றும் விலையுயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காகத் திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இதில் 1,000 இரண்டாம் நிலை காவலர்களும், 3,000 முன்னாள் படைவீரர்களும் நியமனம் செய்யப்பட அனுமதிக்கப்பட்டது. தற்போது 1,000 இரண்டாம் நிலை காவலர்களும், 2,751 முன்னாள் படைவீரர்களும் ஆக மொத்தம் 3,751 பாதுகாப்புப் படையினர் திருக்கோயில்களில் பணிபுரிகின்றனர்.

**கருணை இல்லம்:**

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கும் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் துவக்கப்பட்டன. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 37 திருக்கோயில்களில் 42 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றில் 893 சிறுவர்களும், 461 சிறுமியர்களும் ஆக மொத்தம் 1,354 சிறார்கள் பயன்பெற்று வருகின்றனர். இக்கருணை இல்லங்களுக்கான செலவினை, திருக்கோயில் நிருவாகங்களே ஏற்று வந்தன. 1998–1999 ஆம் ஆண்டு முதல் இச்செலவில் சிறார் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் சமூக நலத் துறையும், ரூ.400/– வீதம் அந்தந்தத் திருக்கோயில் நிதியிலிருந்தும் செலவிட ஆணையிடப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இதன்படி 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.76,15,000/– அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**கல்வி நிறுவனங்களும் பிற நிறுவனங்களும்:**

நன்னெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாசாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும், கலை மற்றும் பண்பாட்டினையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு, திருக்கோயில்கள் சமயம், கலை, பண்பாடு மற்றும் பொதுக் கல்வி தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள் பாடசாலைகள் மற்றும் சமூக நல



2005 மார்ச் 18]

நிறுவனங்கள் ஆகியவற்றைப் பேணி வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

**I. கல்வி நிறுவனங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரிகள் | 5 |
| 2. | தொழில்நுட்பப் பயிலகங்கள் | 2 |
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 12 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 10 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 6. | ஆரம்பப் பள்ளிகள் | 10 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. | நாதசுரம் மற்றும் தவில் பள்ளிகள் | 4 |
| 9. | வேத ஆகம பாடசாலைகள் | 4 |
| 10. | தேவாரப் பாடசாலைகள் | 2 |
| 11. | திவ்யபிரபந்த பாடசாலைகள் | 3 |
| 12. | காதுகேளாதோர்–பேச இயலாதோர் பள்ளி | 1 |

**II. சமூக நல நிறுவனங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | சித்த வைத்தியசாலைகள் | 9 |
| 2. | ஆங்கில மருத்துவமனைகள் | 2 |
| 3. | கருணை இல்லங்கள் | 42 |
| 4. | முதியோர் இல்லங்கள் | 3 |
| | மொத்த நிறுவனங்கள் | 113 |

**இலவசத் திருமணம்:**

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை எளிய மக்களுக்கு நிதிவசதி மிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் நடத்திவைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம், இணை ஒன்றுக்கு

ரூ.5,500/– செலவு செய்யப்படுகின்றது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 2,550 இணைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்திருமணத்தின் மூலம் ஆதி திராவிடர் வகுப்பினர், பழங்குடி இனத்தவர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நலிவுற்ற நிலையில் உள்ளோர் ஆகிய பிரிவினர் பயனடைந்துள்ளனர்.

**தமிழில் வழிபாடு:**

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவிக்க தமிழில் அர்ச்சனை (போற்றி) நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் வாயிலாகத் தமிழில் வழிபாடு நெறிப்படுத்தப்பட்டு வருகிறது.

**சேக்கிழார் விழா:**

தெய்வப் புலவர் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் நடைபெற ஏதுவாக திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்பட்டு, வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இம்முதலீட்டிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகையைக் கொண்டு சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சேக்கிழார் பிறந்த நாளன்று சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது. 2004 மே திங்களில் 18 ஆம் நாளில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவிற்கு ரூ.31,900/–வழங்கப்பட்டது.

**திருஞானசம்பந்தர் இசை விழா:**

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் நினைவைப் போற்றும் வகையில், திருஞானசம்பந்தர் இசை விழா இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை ஆண்டுதோறும் ஆணையர் பொதுநல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டு 4–6–2004 அன்று நடைபெற்ற விழாவிற்கு ரூ.15,000/– வழங்கப்பட்டுள்ளது.

**ஔவை விழா:**

அருள்மிகு ஔவையார் மற்றும் விஸ்வநாத சுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாபட்டினம் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் ஔவை விழாவை அரசு விழாவாக நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.



இதன்படி, வரும் ஏப்ரல் மாதத்தில் ஔவையார் விழா நடத்தவும், அதற்கான செலவினங்களுக்கு ரூ.50,000/– வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தாயுமானவர் விழா:**

பக்தி நெறியில் தத்துவங்களுக்கு முதலிடம் தந்து பாடிய தாயுமான அடிகள் மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தியை வணங்கித் திரும்பும் போது, திருமூலர் மரபில் வந்த மௌன குருவைக் கண்டு அவரால் ஈர்க்கப் பெற்றார். நல்ல தமிழ் ஞானப் பாடல்களைத் தமிழ் உலகிற்கு அளித்த தாயுமான அடிகளுக்கு, கடந்த பிப்ரவரித் திங்கள் 2 ஆம் நாள் திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் விழா எடுக்கப்பட்டது. இவ்விழாவை ஆண்டுதோறும் சிறப்புறக் கொண்டாட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தல வரலாறு மற்றும் தல புராணம்:**

திருக்கோயில்களின் வரலாறு, சிறப்புகள், கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள் புராண சிறப்புகள், வழிபாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் திருக்கோயில்களில் தல வரலாறு மற்றும் தல புராணங்கள் வெளியிடப்படுகின்றன. வரலாற்றுச் சிறப்புகள் மற்றும் புராணச் சிறப்புகள் இல்லாத திருக்கோயில்களுக்கு அதன் வழிபாட்டுச் சிறப்பினை அறிய ஏதுவாக சிற்றட்டைகள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் 743 திருக்கோயில்களுக்குத் தல வரலாறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**பயணியர் கையேடு:**

பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள திருக்கோயில்களைப் பற்றி அறிந்துகொள்ள ஏதுவாக கீழ்க்கண்ட முக்கிய நகரங்களில் உள்ள திருக்கோயில்கள் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள திருக்கோயில்கள் தொடர்பான விவரங்களைச் சேகரித்து பயணியர் கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

(1) காஞ்சிபுரம்

(2) கும்பகோணம்

(3) தஞ்சாவூர்

(4) திருச்சி

(5) புதுக்கோட்டை

(6) கரூர்

(7) பெரம்பலூர்

(8) மதுரை

(9) திண்டுக்கல்

(10) தேனி

(11) கோவை – நீலகிரி

(12) சேலம்

(13) நாமக்கல்

(14) தருமபுரி – கிருஷ்ணகிரி

(15) திருநெல்வேலி

(16) கன்னியாகுமரி

(17) தூத்துக்குடி

(18) சிவகங்கை

(19) இராமநாதபுரம்

**ஆகமம் மற்றும் இதர நூல்களைத் தமிழில் வெளியிடுதல்:**

(i) சமஸ்கிருத மொழியில் உள்ள ஆகம சாஸ்திரங்கள் மற்றும் சிற்ப சாஸ்திரங்கள் நூல்களை அனைவரும் எளிதில் அறிய ஏதுவாக தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் முதற்கட்டமாக உத்ரகாமிக ஆகம நூலினைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப்பட்டது. இந்நூல் கடந்த ஆண்டில் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

(ii) ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்பநூல் என்ற நூல் மொழியாக்கம் செய்து தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

(iii) குமார தந்திரம் என்ற நூல் மொழியாக்கம் செய்து தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.





(iv) இதுபோல் இந்துமத இணைப்பு விளக்கம், சைவமும் வைணமும் போன்ற அரிய தமிழ் நூல்களை அனைவரும் படித்து உணர ஏதுவாக மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

**"திருக்கோயில்" – திங்கள் இதழ்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் மூலம் "திருக்கோயில்" என்ற பெயரில் திங்கள் இதழ் 1958 ஆம் ஆண்டு முதல் வெளிவருகிறது. இவ்வெளியீட்டிற்கென ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார். 2004 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இவ்விதழை புதுப்பொலிவுடன் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, இத்துறை அலுவலர்களின் சீரிய ஒத்துழைப்பின் காரணமாகப் பல வண்ணங்களில் வாசகர்களின் எதிர்பார்ப்பினை ஈடுசெய்யும் வகையில் பல நல்ல கருத்துகளுடன் பிரபல எழுத்தாளர்களின் கட்டுரைகளுடன் அதிகப் பிரதிகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. கடந்த நவம்பர் மாதம் இவ்விதழ் தீபாவளி மலராக 30,000 பிரதிகளாக வெளியிடப்பட்டது. புதுப்பொலிவுடன் வெளியிடப்பட்டு வரும் இவ்விதழ் வாசர்களிடையே பெரும் வரவேற்பையும், பிரபல நாளிதழ்கள் மற்றும் வார இதழ்களின் பாராட்டுதலையும் பெற்றது. தொடர்ந்து புதுப்பொலிவுடன் வெளியிடப்பட்டு வரும் 'திருக்கோயில்' திங்களிதழ் திருக்கோயில்களில் மட்டுமல்லாது பல விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும் வண்ணம் அனைத்து மக்களுக்கும் திருக்கோயில் திங்களிதழில் உள்ள கருத்துகள், செய்திகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இத்துறையின் சிறப்பு இணையதளம்: www.tntemple.org**

இத்துறையின் செயல்பாடு மற்றும் பல்வேறு நலத் திட்டங்கள், முதலியவற்றுடன் பற்பல திருக்கோயில்களின் அரிய தகவல்களை அறிவதற்கு www.tntemple.org என்ற இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளம் மூலம் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் எந்த நேரத்திலும் எவர் ஒருவரும் தான் விரும்பிய திருக்கோயிலின் பூஜைகளை விரும்பிய நாள் மற்றும் நேரத்தில் பதிவு செய்து கொள்ள e-pooja எனும் சிறப்புத் திட்டம் வசதியளிக்கிறது.

இந்த இணையதளம் பல்வேறு திருக்கோயில்களின் இணையதளத்துடன் தொடர்பு ஏற்படுத்தக்கூடியதாகையால், அத்திருக்கோயில்களின் வரலாறு, புராணம், வளர்ச்சிப் பணிகள் போன்ற

தகவல்களுடன் தெய்வத் திருவுருவங்களின் படங்கள் பலவற்றையும் கண்கவர் வண்ண வடிவமைப்பில் ஒளி-ஒலியுடன் காணும் வசதியும் அளிக்கிறது.

**பட்டயப் பொறியாளர் அங்கீகாரம்:**

திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தொய்வு ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பொறியாளர்கள், பட்டயப் பொறியாளர்களாக அங்கீகாரம் செய்யப்படுகின்றனர். இவ்வாறு அங்கீகாரம் பெறும் பட்டயப் பொறியாளர்கள், திருக்கோயிலுக்குத் தேவையான மதிப்பீடுகளைத் தயாரித்து அளிக்க வேண்டும். இதுவரை ஓய்வுபெற்ற 86 பொறியாளர்கள் பட்டயப் பொறியாளர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

**ஸ்தபதிகள் நியமனம்:**

திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளும் போது திருக்கோயில்கள் அமைப்பு முறை, சிற்ப சாஸ்திரங்களின்படியும், கலை நுணுக்கம் உள்ள வேலைப்பாடுகளுடனும் அமைந்திட ஏதுவாக ஆலோசனைகள் வழங்கிட கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் ஸ்தபதி ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளும்போது சிற்ப சாஸ்திர முறைப்படி பணிகளைச் செய்திட ஏதுவாக வரைபடங்களைப் பரிசீலித்தும், மதிப்பீடுகளைப் பரிசீலித்தும் அளித்திட சிற்பக் கலையில் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பெற்ற ஐந்து ஸ்தபதிகள் ஐந்து மண்டலங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/- தொகுப்பூதியமாக வழங்கப்படுகிறது. இச்சம்பளச் செலவு நிதிவசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படுகிறது.

**ஸ்தபதிகள் அங்கீகாரம்:**

திருக்கோயில்களின் திருப்பணிகளை ஆகம மற்றும் சிற்ப சாஸ்திரத்தின்படி மேற்கொள்வதற்கு வழிவழியாக இத்தொழிலில் ஈடுபட்டு, அதன்வாயிலாகக் கற்றறிந்தோர்களை ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்தும், சிற்பக் கலையில் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பெற்றவர்களையும், ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்தும், திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து:**

நிதி வசதியுடைய திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத் தாழ்வு இன்றி பங்குபெறும் வகையில் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது. 2004-2005 ஆம் ஆண்டில் 324 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்பட்டது.

**புத்தொளிப் பயிற்சித் திட்டம்:**

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள் மற்றும் ஓதுவார்கள் ஆகியோர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்ய ஏதுவாக 1991 ஆம் ஆண்டு புத்தொளிப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டு, செம்மையுடன் நடைபெற்று வந்தது. கடந்த ஆட்சிக் காலத்தில் தொய்வு ஏற்பட்டதை நிவர்த்தி செய்து இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்க முடிவு செய்யப்பட்டது. புத்தொளிப் பயிற்சித் திட்டம் ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவிலும் முக்கியத் திருக்கோயில்களைத் தெரிவு செய்து நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 3 மாத புத்தொளிப் பயிற்சித் திட்டம் 54 திருக்கோயில்களில் அளிக்கப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் 23 திருக்கோயில்களில் புத்தொளிப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் 488 நபர்கள் பயனடைந்துள்ளனர். விரைவில் மாநில அளவில் சென்னை, மயிலாடுதுறை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய மண்டலங்களாகப் பிரித்து புத்தொளிப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திருக்கோயில்களில் நாதசுர இசைப் பணியாளர்கள் நியமனம்:**

நிதி வசதி இல்லாத காரணத்தால் நாதஸ்வர இசை பல பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வரலாற்றுப் புகழ் வாய்ந்த பழமையான திருக்கோயில்களில் காலபூஜை மற்றும் திருவிழாக்களின் போது இசைக்கப்படுவது குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, நாதசுரம், தவில் மற்றும் தாள இசைக் கலைஞர்களை நியமனம் செய்து முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/- வீதம் மாத ஊதியம் இத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூபாய் ஒரு கோடி மூலதனம் முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை

மூலம் மாத ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [2005 மார்ச் 18
இத்திட்டத்தின் மூலம், நாதசுரம் 6 நபர்கள், தவில் 4 நபர்கள், தாளம் ஒருவர் ஆக மொத்தம் 11 இசைக் கலைஞர்கள் தொடர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

**தமிழ்ப் புலவர்கள் நியமனம்:**

நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் திருமுறை, திவ்யபிரபந்தங்கள் பாடுதல், முற்றோதல் செய்தல், சொற்பொழிவுகள் செய்தல், சமயக் கருத்துகளைப் பரப்புதல், தல வரலாறு, தல புராணம் வெளியிட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நூல் நிலையம் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களுக்கு, தொடக்க காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/– தொகுப்பு ஊதியமாகத் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்பட்டது. அவ்வூதியத்தினை 2002 ஆண்டில் 1–7–1999 முதல் 30 விழுக்காடு உயர்வு அளிக்கப்பட்டு தற்பொழுது மாதம் ஒன்றுக்கு ரூ.1,950/– ஊதியமாகப் பெற்று வருகின்றனர்.

**திருக்கோயில் பணியாளர்கள்:**

தமிழ்நாடு முழுவதும் உள்ள இந்து சமய அறநிலையங்களில், 37,819 முழு நேரப் பணியாளர்கள் பல்வேறு பதவித் தரங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு ரொக்கம் மற்றும் தானியமாகச் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மொத்த பணியாளர்களில் 4,751 பணியாளர்கள் இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் நிலைகளில் உள்ள செயல் அலுவலர்கள் நிருவாகத்தில் உள்ள நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

இப்பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1) பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி
2) குடும்ப நல நிதி
3) சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை
4) ஆலய ஊழியர் நல நிதி
5) ஓய்வூதியம் (அர்ச்சகர், ஓதுவார், இசைக் கலைஞர், வேதபாராயணர் மட்டும்)



6) கருணைத் தொகை வழங்குதல்
7) திருமண முன்பணம்
8) வாகன முன்பணம்
9) மருத்துவப் படி
10) சலவைப் படி
11) பண்டிகை முன்பணம்
12) விடுப்புச் சலுகை
13) வீட்டு வாடகைப் படி
14) தட்டச்சர்களுக்குச் சிறப்பூதியம்
15) 1-7-97 முதல் தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு 30 சதவீத ஊதிய உயர்வு
16) நகர ஈட்டுப் படி
17) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதிய நிர்ணயம்
18) கருணை அடிப்படையில் பணி நியமனம்
19) அகவிலைப் படி உயர்வு 1–7–2004–ல் 4 சதவீதமும், 1–1–2005 முதல் 2 சதவீதமும் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

**குடும்ப நல நிதி:**

திருக்கோயில்களில் பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளரது குடும்பத்தாருக்கு உதவும் பொருட்டு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, பணியிலிருக்கும் போது மரணமடையும் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு, ரூ.75,000/– உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென, உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து, ஐந்து கோடி ரூபாய் மூலதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 90 குடும்பங்களுக்கு ரூ.57.80 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

**சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்:**

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் எட்டு இலட்சம் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பணியாளர் ஓய்வு பெறும்போது, அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை திருக்கோயில்மூலம் வட்டியுடன் வழங்கப்படுவதுடன், துறைமூலம் ரூ.1,000/– பணிக்கொடை வழங்கப் படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் 20 பணியாளர்களுக்கு ரூ.20,000/– பணிக்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆலய ஊழியர் நல நிதி:**

ஆண்டு வருமானம் ரூ.40,000/–க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில், மாத ஊதியம் ரூ.400/–க்கும் குறைவாகப் பெறும் பணியாளர்களுக்குச் சம்பள நிலுவை ஏற்படின், அப்பணியாளர்களுக்கு துறை மூலம் சம்பள நிலுவைத் தொகை வழங்கிட ஆலய ஊழியர் நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதன வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு இத்திட்டம் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2004–05 ஆம் ஆண்டு, 488 திருக்கோயில்களில் பணிபுரியும் 718 பணியாளர்களுக்கு ரூ.18,21,647 சம்பளப் பாக்கி வழங்கப்பட்டுள்ளது. 1–7–2001 முதல் 31–12–2003 வரையான சம்பளப் பாக்கி நிலுவையாக ரூ.54,12,770/– வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கென ஒரு கோடி ரூபாய் மட்டுமே மூலதன வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டிருந்ததால், வங்கி வட்டி விகிதங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருவதாலும், சம்பளப் பாக்கிகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் உயர்ந்து கொண்டு வருகின்றன என்பதைக் கருத்தில் கொண்டும், அரசு ஆணையின்படி மேலும் கூடுதலாக 4 கோடி ரூபாயை நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து நிதிமாற்றமாகப் பெற்று வைப்புநிதி ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**ஓய்வூதியத் திட்டம்:**

திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள்,



2005 மார்ச் 18]

திவ்விய பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்கள் போன்றோருக்கு அரசு நிதியிலிருந்து இத்துறை மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– ஓய்வூதியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:

| வ. எண் | ஓய்வூதியம் பெறும் கலைஞர்கள் | அரசால் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஓதுவார் | 125 | 83 |
| 2 | வேதம்/பிரபந்தம்/அரையர் | 59 | 25 |
| 3 | இசைக் கலைஞர்கள் | 125 | 84 |
| 4 | அர்ச்சகர் (சைவம் மற்றும் வைணவம்) | 691 | 530 |
| | மொத்தம் | 1000 | 722 |

**கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்:**

இத்துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை அடைந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு, நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் 3,000 கிராமப் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,632 கிராமக் கோயில் பூசாரிகள் பயன்பெற்று வருகின்றனர்.

**கருணை அடிப்படையில் நியமனம்:**

திருக்கோயில்களில் பணியாற்றும் போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் அமலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2004–2005–ம் ஆண்டில் 19 திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**பகுதி–II திட்டங்கள்:**

நடப்பு நிதியாண்டில் 2005–2006-ல் பகுதி-II திட்டத்தின்கீழ் இத்துறைக்கு பின்வரும் விவரப்படி திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

[2005 மார்ச் 18

| வ. எண் | திட்டப் பணி விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருச்சி ஆகிய இணை ஆணையர் அலுவலகங்களுக்கும் மற்றும் 22 உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் கணினி மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல். | 13.75 |
| 2. | மயிலாடுதுறை, திருச்சி ஆகிய இணை ஆணையர் அலுவலகங்களுக்கும் மற்றும் கடலூர், கும்பகோணம், விழுப்புரம் மற்றும் திருச்சி உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு நகலி கருவி வாங்குதல். | 03.63 |
| 3. | மயிலாடுதுறை, திருச்சி இணை ஆணையர் அலுவலகங்களுக்கும் மற்றும் கடலூர், கும்பகோணம், விழுப்புரம், ஈரோடு உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் தொலை நகலி கருவி வாங்குதல். | 00.72 |
| 4. | மயிலாடுதுறை இணை ஆணையர் அலுவலகத்திற்கும் கடலூர், கும்பகோணம், விழுப்புரம் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கும் பிராங்கிங் பொறி வாங்குதல். | 02.64 |
| 5. | தஞ்சாவூர் இணை ஆணையர் அலுவலகம் கட்டுமானப் பணி. | 24.00 |
| 6. | மயிலாடுதுறை, இணை ஆணையர் அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வாங்குதல். | 00.24 |
| | மொத்தம் | 44.98 |



2005 மார்ச் 18]

**நிறைவுரை:**

திருக்கோயில்களைப் பராமரித்தல், அவற்றைப் புதுப்பித்தல் தொடர்பாக, பொதுமக்களிடையே புதிய விழிப்புணர்ச்சியும், ஆர்வமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நமது திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாது, நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தின் பெருமைக்குரியதாகவும் அமைந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் இவற்றிற்குப் புத்துயிரூட்டி ஊக்குவிப்பதற்கு ஏற்றதொரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. வரும் தலைமுறையினரின் நலனைக் கருதி, இந்து சமய நிறுவனங்களை நெறிப்படுத்துவதும், பேணிக் காப்பதும் நமது தலையாய கடமையாகும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும் தங்களது தன்னலமற்ற, நேர்மைத் திறமுடைய சேவையின் மூலம் சமய நிறுவனங்களின் பெருமையையும், தெய்வீகத் தன்மையையும், புனிதத் தன்மையையும், பேணிப் பாதுகாக்கும் நற்பணியில்

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப தங்களை அர்ப்பணித்துக் கொள்ள உறுதி பூண்டுள்ளனர்.

[2005 மார்ச் 18

# இணைப்பு II

(104 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

## அத்தியாயம் 1

### முன்னுரை

கோரிக்கை எண் 43-ன்கீழ் 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ.5,58,17,90,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

2. ஒரு நாட்டின் மேம்பாடு அந்நாட்டின் மனித வளத்தின் தரத்தைப் பொறுத்தே அமைகிறது. மேலும் மகளிரின் தகுதி நிலையே நாட்டின் சமூக முன்னேற்றத்தின் குறியீடாகும். பொருளாதாரம், சமூகம் மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றில் மகளிரை மேம்படுத்துவது நாட்டின் வலிமைக்கு முக்கியப் பங்களிப்பாக உள்ளது.

3. மகளிர், குழந்தைகள் மற்றும் பொருளாதார மற்றும் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவின் மேம்பாடு ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நம்பிக்கையாகும்.

4. ஆற்றல் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் இவ்வரசு, குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரின் நலத்திற்கென பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், பணிபுரியும் மகளிர் விடுதிகள், ஆதரவற்றோருக்கான இல்லங்கள், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட மகளிருக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல், முதியோர் இல்லங்கள், சுய உதவிக் குழுக்கள்



2005 மார்ச் 18]

ஏற்படுத்துதல், ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு நலத் திட்டங்கள், கைவிடப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பு, குழந்தைகள், கர்ப்பிணி மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கான சத்துணவுத் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் சமூக நலத் துறை மற்றும் சத்துணவு திட்டத் துறையால் செயல்படுத்தப்பட்டு ,வரும் முக்கிய திட்டங்களாகும்.

5. மேற்கூறப்பட்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் இயக்குநரகங்கள் பயனாளிகள் மற்றும் 2005-2006 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடுகள் ஆகியவை குறித்த விவரங்கள் சுருக்கமாகப் பல்வேறு அத்தியாயங்களின் கீழ் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

### 2.1 மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

தமிழக அரசு, குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் அவர்களது மன வளர்ச்சிக்கும் ஆதரவளிப்பதில் மிக்க அக்கறை கொண்டு, மாநிலத்தில் குழந்தைகள் மற்றும் மகளிர் நலனுக்குத் தலையாய முன்னுரிமை வழங்குகிறது. பெண் குழந்தைகள் மற்றும் மகளிருக்கு சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கி அதன்மூலம் பாலியல் வேறுபாட்டினைக் குறைத்து மற்றும் வளரிளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தும் முனைப்பில் தமிழக அரசு பல கொள்கைகளை வகுத்து, அவற்றை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

### 2.2 பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

குடும்பக் கட்டுபாடு மற்றும் பெண் சிசு வதை ஒழிப்பு ஆகியவற்றிற்கு ஊக்கமளித்து ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக் கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் பெண்கள் இச்சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையாக பீடுநடை போடுவதை உறுதிப்படுத்தும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தன்னிகரில்லா இத்திட்டம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்குக் கல்வி உதவி அளித்து வருகிறது.

மறுவடிவாக்கம் செய்யப்பட்ட இத்திட்டம் 2001 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள, வேறு குழந்தைகள் எவரும் இல்லாத குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு இருந்தால், அக்குழந்தையின் பெயரில், தமிழ்நாடு மின் வள நிதி நிறுவனத்தில் தொடக்க வைப்பீடாக ரூ.22,200/– அரசால் செலுத்தப்படுகிறது. இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக வழங்கப்படும் ரூ.150/– அப்பெண் குழந்தை முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வியை முடிக்க உதவுகிறது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாக வழங்கப்படும் வட்டியுடன் கூடிய முதிர்வுத் தொகை, அப்பெண்ணின் மேற்கல்வி அல்லது திருமணச் செலவிற்கு உதவும். இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில்



பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு இருந்தால், அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவரின் பெயரிலும் தமிழ்நாடு மின் வள நிதி நிறுவனத்தில் ரூ.15,200/–ஐத் தொடக்க வைப்பீடாக அரசு செலுத்துகிறது. இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் முன்னர் தெரிவித்துள்ளபடி மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக ரூ.150/- வழங்கப்படுவதோடு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன் கூடிய முதிர்வுத் தொகை முழுமையாக வழங்கப்படும். இத்திட்டம், பெண் குழந்தைகள் மட்டும் உள்ள பெற்றோருக்கு புதிய நம்பிக்கை அளிப்பதோடு ஒவ்வொரு பெண் குழந்தையும் கல்வி கற்பதை உறுதிப்படுத்தும்.

2005–2006 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.3 தொட்டில் குழந்தைத் திட்டம்

புதுமையான தொட்டில் குழந்தைத் திட்டம், இந்தியா மட்டுமல்லாது பிற நாடுகளிலும் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின்படி, சமூகச் சூழ்நிலை காரணங்களினால் பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிக்கும் வண்ணம், இக்குழந்தைகளைப் பெரும்பாலும் விட்டுச் செல்லக் கூடிய இடங்களான மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், குழந்தைகள் இல்லம் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டுள்ளன. மதுரை, தேனி, சேலம், திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய வரவேற்பு மையங்கள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பெண் சிசு வதை பாதிப்பில் உள்ள மாவட்டங்களின் ஆரம்ப சுகாதார மையங்களில் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளைப் பெற்றுப் பாதுகாக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மாவட்ட சமூக நல அலுவலகங்களிலும், ஆரம்ப சுகாதார மையங்கள்/துணை ஆரம்ப சுகாதார மையங்களிலும் மொத்தம் 188 தொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொட்டில் மையங்களில் பெறப்படும் குழந்தைகள் வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது. பெண் சிசு வதைக்கு எதிராக, அரசு பிரசாரமும் மேற்கொண்டு வருகிறது.

2005–2006 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 6.81 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

## 2.4 அரசு குழந்தைகள் காப்பகங்கள்

சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளைப் பிற்காலத்தில் நாட்டின் நல்ல குடிமக்களாக வாழ வைக்கும் உயரிய நோக்குடன் தமிழ்நாடு முழுவதிலும் 25 குழந்தைகள் காப்பகங்களை அரசு நடத்தி வருகிறது. இக்காப்பகங்களில் உள்ளுறையும் குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், உடை, கல்வி மற்றும் சுகாதார வசதி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

இக்காப்பகங்களில் சேர்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

- பெற்றோரோ அல்லது உறவினரோ இல்லாத ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்.
- பெற்றோரில் ஒருவரை இழந்ததாலோ அல்லது பெற்றோரில் ஒருவர் நீண்டநாள் கைதியாக இருப்பதால்/கைவிடப்பட்டதால் ஒரே ஒரு பெற்றோரைக் கொண்ட, ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கும் குறைவாகப் பெறும் குடும்பங்களில் வாழும் குழந்தைகள்
- தொழுநோய் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

25 சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட வசதிகளை அரசு அளித்து வருகின்றது:

- ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.225/- வீதம் உணவிற்குச் செலவிடப்படுகிறது.
- 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் வெளிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.
- இக்காப்பகக் குழந்தைகள் தன்னிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்குத் தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது.
- தேவையான புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் கழகம் மூலம் வாங்கி வழங்கப்படுகிறது.



2005 மார்ச் 18]

- 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் இரண்டு சீருடைகள் வழங்கப்படுகின்றன.
- 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் வெளிப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டு தோறும் முறையே ரூ.400/- மற்றும் ரூ.500/- மதிப்பீட்டில், இரண்டு சீருடைகள் வழங்கப்படுகின்றன.
- ஆண்டொன்றுக்கு தலா ரூ.150/- வீதம் படுக்கைச் செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. (நீலகிரி மாவட்ட அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு மட்டும் ஒரு குழந்தைக்கு ரூ.250/- வீதம் படுக்கைச் செலவினத்திற்காக வழங்கப்படுகிறது)
- ஒவ்வொரு குழந்தைக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.50/- மதிப்புள்ள காலணி வாங்கி வழங்கப்படுகிறது.
- மருத்துவச் செலவினம்.

250 குழந்தைகள் வீதம் உள்ள 20 அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம்

100 குழந்தைகள் வீதம் உள்ள 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500/- வீதம் காப்பகங்களை அவ்வப்போது ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சிறந்த சேவை அளிக்கப்படுகிறது.

இக்காப்பகங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென சமூகப் பணியாளர்களைக் கொண்ட குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்காப்பகங்களை நல்ல முறையில் நிர்வகிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்க்கண்ட 7 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு ஏற்படுத்தி உள்ளது:

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | — | தலைவர் |
| 2 | மாவட்டக் கல்வி அதிகாரி | — | உறுப்பினர் |
| 3. | பகுதிநேர மருத்துவ அலுவலர் | — | உறுப்பினர் |
| 4. | மாவட்ட சமூக நல அலுவலர் | — | உறுப்பினர் |

[2005 மார்ச் 18

5. மாநில சமூக நல வாரிய உறுப்பினர் — அலுவல் சாரா உறுப்பினர்

6. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் சமூகப் பணியில் முன்னணியில் உள்ள இரண்டு சமூக சேவகர்கள் — அலுவல் சாரா உறுப்பினர்கள்

இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி காப்பகங்களின் முன்னேற்றத்தினையும், குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் குழந்தைகளைக் காப்பகத்தில் சேர்த்தல் ஆகியவை குறித்தும் கண்காணிக்கும். காப்பகங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் இக்குழு உதவும்.

ஒரே மாதிரியான சூழ்நிலையில் வாழும் தினசரி வாழ்க்கையிலிருந்து இக்காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு மாறுதல் அளிக்கும் பொருட்டும், அன்றாட வாழ்க்கையினைத் தொடர்வதற்குத் தேவையான வெளி உலகப் பரிமாற்றம் நல்கும் பொருட்டும், அவர்கள் அருகிலுள்ள சுற்றுலா தலங்களுக்கு ஆண்டிற்கொருமுறை சுற்றுலா அழைத்து செல்லப்படுகின்றனர்.

1-1-2005 அன்று வெளியிடப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் விளைவாக, 26-12-2004 அன்று தமிழகத்தைத் தாக்கிய சுனாமி அலைகளின் பேரழிவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா 100 குழந்தைகள் பயனடையும் வகையில் அரசு குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இக்காப்பகங்களை நடத்துவதற்கென 2005–2006 ஆம் நிதியாண்டிற்கு ரூ.540.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நலத் திட்டங்கள்

26–12–2004 அன்று தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை சுனாமிப் பேரலைகள் தாக்கியதன் காரணமாக கடலோர மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின. கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் மிகவும் கடுமையாகவும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவாரூர், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட் ..ங்கள் கடுமையாகவும் பாதிக்கப்பட்டன.



2005 மார்ச் 18]

இந்தச் சுனாமிச் சீற்றம், தனக்குப்பின்னால், அதிக அளவிலான குழந்தைகளை அனாதையாகவும், வளரிளம் பெண்கள் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் ஆகியோரை ஆதரவற்றவர்களாகவும் விட்டுச் சென்றுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, அனைத்து ஆதரவற்ற குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் ஆகியோருக்கு அரசே மறுவாழ்வு அளிக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இவ்வறிப்பிற்கிணங்க, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் தலா 100 குழந்தைகளைப் பராமரிக்கும் வசதியுடன், மூன்று புதிய குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இக்காப்பகங்களில், இதுவரை 210 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறே, ஆதரவற்ற வளரிளம் பெண்களுக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கும், மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சேவை இல்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இச்சேவை இல்லங்களில் தற்போது 44 நபர்கள் உள்ளனர்.

## 0–14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நிதியுதவி

ஒவ்வொரு ஆதரவற்ற குழந்தைக்கும், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சமும், இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சமும், பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து ரூ.1 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.5 இலட்சம் வீதம் நிதியுதவி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆதரவற்ற குழந்தைகள், ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டு இருக்குமேயானால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நிவாரண நிதியுதவி அளிக்கப்படும். இந்நிதியுதவி, குழந்தைகளின் பெயரில், தமிழ்நாடு மின்விசை மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்படும். இக்குழந்தைகளுக்கு 18 வயது நிரம்பியவுடன், அவர்கள் சொந்தத் தொழில் தொடங்கவோ அல்லது உயர் கல்வி கற்கவோ பயன் அளிக்கும் வகையில் இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை வழங்கப்படும்.

## வளரிளம் பெண்களுக்கான நிதியுதவி

ஆதரவற்ற வளரிளம் பெண்களுக்கு நிதிப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆதரவற்ற வளரிளம் பெண்ணுக்கும் ரூ.5 இலட்சம்

வீதம் நிதியுதவி, ஆதரவற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படும் வழிமுறைகளின்படி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஒரு குடும்பத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட ஆதரவற்ற வளரிளம் பெண்கள் இருப்பின், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5 இலட்சம் வீதம் நிதியுதவி அளிக்கப்படும். இந்தத் தொகை, வளரிளம் பெண்களின் பெயரில், தமிழ்நாடு மின்விசை மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்படும். இவர்களுக்கு 18 வயது நிரம்பியவுடன், அவர்கள் சொந்தத் தொழில் தொடங்கவோ அல்லது உயர் கல்வி கற்கவோ பயனளிக்கும் வகையில் இந்த வைப்பீட்டின் முதிர்வுத் தொகை வழங்கப்படும்.

### திருமணமாகாத பெண்களுக்கு நிதியுதவி

சுனாமிச் சீற்றம் தனது சோதனையில், அதிக அளவிலான 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களையும் ஆதரவற்றவர்களாக விட்டுச் சென்றுள்ளது. இந்த ஆதரவற்ற திருமணமாகாத பெண்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.3 இலட்சம் வீதம் நிதியுதவி அளிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஒரு குடும்பத்தில் ஆதரவற்ற, 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்கள் ஒருவருக்கு மேல் இருப்பின், அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.3 இலட்சம் வீதம் நிதியுதவி வழங்கப்படும். இவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கு அல்லது சுயதொழில் செய்வதற்கு உதவியாக இவர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் கல்வி அளிக்கப்படும். இவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி தமிழ்நாடு மின்விசை நிதி மேம்பாட்டு நிறுவனத்தில் அவர்களின் பெயரில் வைப்பீடு செய்யப்படும். அவர்கள் வாழ்க்கைத் தொழிற் கல்வி முடித்தவுடன், வேலைவாய்ப்பு பெறவோ அல்லது சுயதொழில் தொடங்கவோ ஏதுவாக, வைப்பீட்டின் முதிர்வுத் தொகை வழங்கப்படும்.

### சமூக உளவியல் அரவணைப்பு மற்றும் அதன் ஆதரவுத் திட்டங்கள்

சுனாமிச் சீற்றம் பாதிக்கப்பட்டவர்களுக்கு, குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆழ்ந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. இந்த திடீர் மன உளைச்சலிருந்து மீண்டு வருவதற்கு ஏதுவாக, மனநல நிபுணர்கள், உளவியலாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் ஆகியோர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு, குறிப்பாக நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள மறுவாழ்வு முகாம்களுக்கு சுனாமிச் சேதம் ஏற்பட்ட முதல் வாரத்திலேயே உடனடியாக விரைந்து சென்று மனரீதியிலான முதலுதவியை அளித்தனர்.



இந்த ஆலோசனைகள் அவர்களுக்கு உடனடியாக மன ஆறுதலை அளித்தன. இருப்பினும், இந்தப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு மனரீதியான பாதுகாப்பும், ஆலோசனைகளும் நீண்ட நாட்களுக்குத் தேவைப்படும் என்று உணரப்பட்டது.

பயிற்சி பெற்ற ஆலோசகர்களின்கீழ் அடுத்த ஆறு மாதங்களுக்கு குறைந்தது 15 முதல் 20 குடும்பங்களுக்குத் தொடர்ந்து ஆலோசனைகள் வழங்குவதன்மூலம் அவர்களை பழைய வாழ்க்கைக்குத் திரும்பக் கொண்டு வரலாம் என்று கருதப்பட்டது. ஆகையால் ஐக்கிய நாட்டு சபை நிறுவனங்களான யூனிசெப் (UNICEF), யூஎன்டிபி (UNDP), யூஎன்ஓடிசி (UNODC), டபிள்யூஎச்ஓ (WHO) மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இணைந்து உளவியல் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சார்ந்த திட்டத்தை சமூக நலத் துறை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்திற்கு யூஎன்டிபி (UNDP) ரூ.32,24,500/– நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிம்ஹான்ஸ் (NIMHANS), ஸ்கார்ப் (SCARF), ஸ்நேகா (SNEHA) போன்ற நிறுவனங்களிலிருந்து செயல்படும் தொழில் சார்ந்த மனநல நிபுணர்கள், உளவியல் மருத்துவர்கள், சமூகப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்டு அரசு மற்றும் அரசு சாரா 3000 சமுதாயக் களப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களிலும் பயிற்சி பெற்ற சமுதாயக் களப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் தலா 20 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மனநல ஆலோசனைகளை தொடர்ச்சியாக ஆறு மாத காலம் வழங்குவார்கள். இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் படிப்படியாக மன உளைச்சலிலிருந்து மீண்டு இயல்பான வாழ்க்கைக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.5 குழந்தைகள் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

பாதுகாப்பும், பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளைப் பராமரிக்கும் தொடர் செலவினமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு உணவு, உடை போன்றவை வழங்கத் தேவையான ரூ.250/–ல் தமிழக அரசால் 80 சதவீதம் மானியமாக ரூ.200/– 1–4–1992 முதல் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 20 சதவீதமான ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.50/–ஐ தன்னார்வத் தொண்டு நிறுவனங்களே ஏற்றுக் கொள்கின்றன. தற்பொழுது இவ்வில்லங்களில் பராமரிக்கப்படும் 14,377 குழந்தைகளுக்காக, 183 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசிடம் மானியம் பெறுகின்றன.

[2005 மார்ச் 18

இத்திட்டத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.6 தத்து எடுத்தல்

அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தக்கதொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து அதன்மூலம் அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அன்பும், அரவணைப்பும் கிடைக்கவும், அவர்களிடமுள்ள செயல்திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் தத்து திட்டம் ஒரு முக்கியமான வாயிலாக உள்ளது. குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும், இயல்பான வளர்ச்சியைப் பெறவும், அறிவாற்றலையும் பொருளாதார நிலையையும் உயர்த்திக் கொள்ளவும் இது உதவி செய்வதோடு, சமூக விரோத செயல்களில் இக்குழந்தைகள் ஈடுபடுத்தப்படுவதைத் தவிர்க்கிறது.

உள் நாட்டில் தத்துக் கொடுக்க 21 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோவை, தருமபுரி, திருச்சி, தூத்துக்குடி, மதுரை, சேலம், நாமக்கல், திண்டுக்கல், நாகப்பட்டினம், திருநெல்வேலி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. உரிமம் பெற்ற 21 நிறுவனங்களில், 9 நிறுவனங்களுக்கு வெளிநாட்டினருக்கு தத்துக் கொடுக்கவும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாவட்டத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு தத்து நிறுவனம் செயல்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உரிமம் அளிக்கப்பட்ட எல்லா நிறுவனங்களும் சட்டப்பூர்வ தத்தெடுத்தலை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்களிடையே தத்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, மற்றும் ஒதுக்கப்பட்ட குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. உரிமம் பெற்ற 21 நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. புதிதாக உரிமம் அளிக்கப்பட்ட நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாவட்ட சமூக நல அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

## 2.7. ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கு குறைவாகப் பெறும் விதவைத் தாய்மார்களின் குழந்தைகள் பயனடையும் வகையில், இத்திட்டத்தின்



2005 மார்ச் 18]

மூலம் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவாறு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன.

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கான செலவு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ.50/- |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.125/- |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.175/- |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | ரூ.300/- |
| +1 மற்றும் + 2 வகுப்பு | ரூ.600/- |

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,000 குழந்தைகள் பயனடைகின்றனர்.

2005–2006 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 13.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.8 வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள், அவர்களுக்குப்பின் பிறக்கும் மழலையர்களை கவனிக்க வேண்டிய சூழ்நிலையாலும், சமூக விரோதச் செயல்பாடுகளில் ஈடுபடுவதாலும், பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதைத் தடுப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 141 குழந்தைகள் காப்பகங்களுக்கு, காப்பகம் ஒன்றிற்கு ரூ.25,410/– வீதம் தொடர் செலவினமாக வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு காப்பகமும் 25 குழந்தைகளைப் பராமரித்து வருகிறது. இத்திட்டம் சமூக நல இயக்குநரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட சமூக நல அலுவலர்கள்மூலம் நிறைவேற்றப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.9 திருமண நிதியுதவித் திட்டங்கள்

[2005 மார்ச் 18

தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட திருமண நிதியுதவித் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் |
|---|---|---|
| 1. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டம் (ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்) | ரூ.10,000/– (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | ஆண்டு வருமானம் ரூ.12000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20–30–க்குள் இருக்க வேண்டும். |
| 2. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.10,000/– (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20–30–க்குள் இருத்தல் வேண்டும். |
| 3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் | ரூ.10,000/– (ரூ.7,000/– தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000/– கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | மணப்பெண்ணின் வயது 20–30–க்குள் இருத்தல் வேண்டும். |
| 4. தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் | அ) ரூ.20,000/- (ரூ.10,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.10,000/- கேட்பு வரைவோலை அல்லது காசோலை)<br>ஆ) ரூ.10,000/-(ரூ.7,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000/- கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | அ) மணமக்களில் ஒருவர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினராக இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20–30–க்குள் இருத்தல் வேண்டும்.<br>ஆ) முற்பட்ட வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை திருமணம் செய்தல். |



2005 மார்ச் 18]

2005–2006 ஆம் ஆண்டிற்கு அனைத்துத் திருமண நிதியுதவித் திட்டங்களுக்கென ரூ.575 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.10 சேவை இல்லங்கள்

விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு எவருமில்லாத பெண்களுக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. அத்தகைய பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்திடவும், அவர்கள் தமது வாழ்க்கையை மீண்டும் அமைத்துக் கொள்ளவும் உதவும் வகையில், சமூக நலத் துறையின்மூலம் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் மதுரை ஆகிய 7 இடங்களில் சேவை இல்லங்களை அரசு உருவாக்கியுள்ளது.

சமீபத்திய சுனாமிப் பேரலைத் தாக்கத்தின் பிறகு வெளியிடப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடனடி அறிவிப்பினையொட்டி, நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வளரிளம் பெண்கள் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத இப்பேரழிவில் தங்கள் பெற்றோரை இழந்த பெண்களுக்காக 100 எண்ணிக்கை கொண்ட இரண்டு சேவை இல்லங்கள் அரசால் துவக்கப்பட்டுள்ளன.

சேவை இல்லங்கள் உள்ளுறைவோருக்கு உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழில் கல்வி ஆகியவற்றை அளித்து வருகின்றன. இவ்வில்லங்களில் உள்ளுறையும் பெண்கள் அவர்களது குழந்தைகளைத் தங்களோடு தங்க வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதோடு, அக்குழந்தைகளுக்கு கல்வி வசதியும் செய்து தரப்படுகிறது. தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் கலைப் பாடங்களைக் கொண்ட மேல்நிலை வகுப்புகளும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடத்தில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. உணவூட்டுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு தலா ரூ.300 வீதமும், சிறியவர்களுக்கு தலா ரூ.225 வீதமும் வழங்கப்படுகிறது. பெரியவர்களுக்கு ரூ.500 மதிப்பில் இலவச சீருடை வழங்கப்படுகிறது. இச்சேவை இல்ல சிறுவர்களுக்கு ஆண்டிற்கொருமுறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் சீருடை வழங்கப்படுகிறது. இவைதவிர, இவ்வில்லங்களில் வசிக்கும் கல்வி பயில்வோருக்குத் தேவையான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி இலவசமாக வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கெனத் தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்கி வருகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவையில்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பாடங்களில் பயிற்சி வழங்கும் செயலகப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது. ஆண்டொன்றிற்கு 65 மாணவிகளுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சிக்குப்பின் அவர்கள் அரசு தொழில்நுட்பத் தேர்வு எழுத தகுதியுடையவராகின்றனர். உயர்நிலை வகுப்புகளில் பயில்வோருக்கு செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகத் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றில் திருநெல்வேலி, கடலூர், காரைக்குடி, சேலம் மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றது. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு முடித்த சேவையில்ல மாணவிகளுக்கு நவீன தொழில்நுட்பத்தில் ஈடுபாடு கொள்ளும் வகையில் கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு முடித்து மேற்கண்ட பயிற்சியையும் பெற்ற பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர். மதுரை சேவை இல்லத்தில் தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் தாம்பரம், காரைக்குடி, கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் சேவை இல்லங்கள் மூலம் பயன்பட்டு வரும் உள்ளுறைவோருக்கு கணிப்பொறிப் பயிற்சி வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.235.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.11 தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு மானிய உதவி

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும், சென்னையிலுள்ள ஸ்ரீ சேவா மந்திரிலும், கோவையில் சரணாலயத்திலுமாக மொத்தம் மூன்று சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களுக்கு அரசின் நிதி உதவியாக உள்ளுறைவோருக்கு பயிற்சி உதவித் தொகையும், ஆசிரியர்களுக்கு ஊதியமும் மானியமாக வழங்கப்படுகிறது.

1. சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்களுக்காக ஸ்ரீ சேவா மந்திரால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் செயலக வகுப்பு (தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து) மற்றும் தொழிற் பயிற்சி நடத்தப்படுகின்றன.

2. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு நிலையில் குறுகிய கால பயிற்சி வகுப்பு நடத்தப்படுகின்றது.



3. கோயம்புத்தூரில் உள்ள சரணாலயம் என்ற தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் உள்ளுறைவோர் பயனடையும் வகையில் தையல் மற்றும் திரை அச்சீடு பயிற்சி வழங்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கென இத்திட்டத்திற்கு ரூ.10.04 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.12 பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள்

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடவசதியின் தேவையும் அதிகரிக்கிறது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடம் அல்லது சுற்றுப்புறத்தில் தங்குவதற்கு தக்கவாறு இடவசதியினை நாட வேண்டியுள்ளது. இப்பெண்களுக்கு உதவும் வகையில் சென்னையில் இரண்டும், கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரில் தலா ஒன்று வீதம் 8 பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. பணிபுரியும் மகளிர் விடுதியில் சேருவதற்கான மாத வருமான உச்ச வரம்பு ரூ.10,000/– ஆகும். வாடகையாக, மாதமொன்றுக்கு, சென்னையில் ரூ.200/–ம், இதர மாவட்டங்களில் ரூ.150/–ம் வசூலிக்கப்படுகிறது. தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளுறைவோரால் சரிசமமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவ்விடுதியில் பணிபுரியும், கண்காணிப்பாளர், இளநிலை உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதரப் பணியாளர்களின் ஊதியம் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

மாவட்டந்தோறும் பணிபுரியும் பெண்கள் விடுதி துவக்கப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கத்தின் அடிப்படையில் நான்கு புதிய இல்லங்கள் தொண்டு நிறுவனங்கள்மூலம் துவக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் நிதியாண்டிற்கென இத்திட்டத்திற்கு ரூ.29.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.13 வழிகாட்டி மையம்

வழிகாட்டி மையம் 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது மாவட்ட சமூக நல அலுவலர்களின்கீழ் 20 வழிகாட்டி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் முக்கிய நோக்கம் மகளிர் முன்னேற்றத்திற்காக அரசால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை

பெண்களிடையே விளக்குவதும் அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும் ஆகும். மேலும் இம்மையங்கள் மகளிர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு தொழில் புரிய பெண்கள் கடன் பெறுவதற்கு பலதரப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரை செய்து வருகின்றன. இம்மையங்கள் அரசுக்கும் மக்களுக்கும் ஒரு பாலமாக விளங்கி வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.64.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.14 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்குதல்

வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் சுய வேலைவாய்ப்பினைப் பெருக்கி அவர்கள் நற்பாங்கான வாழ்க்கையினைத் தொடரவும் இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

2005–2006 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 121 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.15 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மானியம்

கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காகச் செயல்படும் பதிவு செய்யப்பட்ட குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் நல்ல நிலையில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றன. திறன் பயிற்சி அளிப்பதற்கான தையல் இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள், கயிறு இராட்டினங்கள் முதலிய உபகரணங்களும், பகல் நேர பராமரிப்பு மையங்களுக்காக குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை வாங்குவதற்கு 200 தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தலா ரூ.5,000/- மானியமாக அரசால் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2005–2006 ஆம் நிதியாண்டிற்கு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## 2.16 குடும்ப ஆலோசனை மையம்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நாமக்கல், கரூர், ஈரோடு, விழுப்புரம், வேலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் நடைபெற்று வரும் 6 குடும்ப ஆலோசனை மையங்களுக்கு, தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் வாயிலாக அரசு உதவி வருகிறது. குடும்ப ஆலோசனை மையத்தின் நோக்கமானது, குடும்பத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையை நிலவச் செய்வதாகும். இம்மையங்கள் வரதட்சணைக் கொடுமை, குடும்பத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கம் ஆகிய துன்பங்களுடன் அணுகும் பெண்களுக்கு அவற்றை நீக்க உதவி செய்வதுடன், எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகளுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.4.80 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.17 பெண்களுக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

(i) மகளிருக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை, தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின்மூலமாக மகளிருக்கான அதிகாரப் பகிர்வு சமூக, பொருளாதார ரீதியாக உறுதி செய்யப்படுகிறது. மகளிர் சமுதாயத்தின் உயர்வினை கூட்டுறவு முறையில் எய்துவதற்கும், இதன் வாயிலாக குறிப்பாக மகளிர், சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளின் நிர்வாகத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(ii) வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மகளிரை மட்டுமே அங்கத்தினர்களாகக் கொண்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி சுய உதவியின்மூலம் சமுதாய முன்னேற்றம் அடையப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மகளிர்க்கு இலாபகரமான வேலைவாய்ப்பு வழங்குவதற்காக தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை அரசு உருவாக்கி உள்ளது. இந்த வகையில் 104 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளரின்கீழும் இயங்கி வருகின்றன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நலத் துறை செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைப் பணிகளை மேற்கொள்ளவும் ஈடுபடுத்தப்படுகின்றன.

[2005 மார்ச் 18

| வ. எண் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | 80 | 41704 |
| 2 | எழுதுபொருள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | 16 | 908 |
| 3 | இதர சங்கங்கள் | 8 | 1051 |
| | மொத்தம் | 104 | 43663 |

80 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு பாலியஸ்டர் இழை கலந்த பருத்தித் துணியாலான இலவச சீருடைகளைத் தைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 61.89 இலட்சம் மாணவ மாணவியர்கள் பயனடைந்தனர்.

இத்திட்டத்திற்கான சீருடைகளைத் தைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 80 தையல் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக 40,384 பெண்கள் வேலைவாய்ப்பு பெற்று பயனடைகின்றனர்.

16 எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு அலுவலகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணி மேற்கொள்வதன்மூலம் சங்கப் பெண் அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு அனைத்து மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகச் செலவிற்காக ரூ.92.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

36 தையல் பயிற்சி மையங்களையும், 2 பனை ஓலை, 1 பாய் நெசவு மற்றும் 1 தும்பு பயிற்சி மையங்களோடு 3 உற்பத்தி நிலையங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சி மையங்களில் ஆண்டொன்றுக்கு 798 மகளிர், பல்வேறு வகையான தொழிற் கல்வியினைப் பெற்று பயனடைகிறார்கள்.



2005 மார்ச் 18]

2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.157.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடி மகளிர் மட்டுமே பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் இரண்டும், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக, 4 தையற் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் 65 பழங்குடி மகளிர் பயிற்சி பெற்று பயனடைகின்றார்கள்.

இதற்காக 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.6.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினருக்காக குடிசைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.7.16 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மகளிருக்காக 7 தையற் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.10.81 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.18 முதியோர் இல்லங்கள்

மாறி வரும் குடும்பச் சூழ்நிலை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் கூட்டு குடும்ப அமைப்பு சிதைந்ததன் காரணமாக பெரும்பாலான குடும்பங்களில் முதியோர்கள் புறக்கணிக்கப்பட்டு ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த பெரும்பாலான கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் முதலியவை இன்றி துயருறுகின்றனர். முதியோர்கள் சந்தித்து வரும் பிரச்சனைகளின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. தற்போது 605 முதியோர்கள் பயனடையும் வகையில் 16 தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு முதியோர் இல்லம் நடத்துவதற்காக அரசு மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. முதியோர் இல்லங்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.500/–வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. மாவட்ட அளவில் மாவட்ட சமூக நல அலுவலர்களும்,

சமூக நல இயக்ககத்திலிருந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களும் அந்நிறுவனங்களுக்குச் சென்று இத்திட்டம் சரிவர செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்து வருகின்றனர்.

தனியார் தொண்டு நிறுவனங்களால் அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், ஊனமுற்றோர்களுக்கான இல்லங்கள், ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள், ஆதரவற்ற இரவு பாதுகாப்பு விடுதிகள் முதலியவற்றை ஆரம்பிக்க அரசு ஊக்குவித்து, இத்திட்டத்தை இலாப நோக்கில்லாமல் செயல்படுத்த முன்வரும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு இலவசமாக நிலம் வழங்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் அளித்துள்ளது.

மூத்த குடிமக்களாகிய முதியோரைப் பராமரித்து பாதுகாப்பதை பல குடும்பங்களில் உள்ள இளையோர் சுமையாகக் கருதி ஒதுக்குகின்றனர். எனவே, இளைய சமுதாயத்திற்கு முதியோர் பராமரிப்பில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.19 தமிழ்நாடு சமூக நல வாரியம், சென்னை

1954 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது.

1. சமூக நல தன்னார்வ அமைப்புகளை ஏற்படுத்த ஊக்குவித்தல்.
2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.
3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

மத்திய சமூக நல வாரியத்திடமிருந்தும், மாநில அரசிடமிருந்தும் பெறும் நிதியுதவியைக் கொண்டு தொண்டு நிறுவனங்கள்மூலம் குழந்தைகள், மகளிர் மற்றும் ஊனமுற்றோரின் நலனுக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும் இந்த வாரியம் பணியாற்றுகிறது. நிதியுதவி 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையும், மீதமுள்ள தொகை நிறுவனங்களாலும் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.





2004–2005 ஆம் ஆண்டில் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ.443.43 இலட்சம் நிதியுதவியைக் கொண்டு 810 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 1,126 தொண்டு மையங்களுக்கு உதவி வழங்கப்பட்டது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.14.80 இலட்சம் 206 தன்னார்வ அலகுகளைக் கொண்ட 206 தொண்டு மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 2.20 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993–ல் பெண்களின் நலனுக்காகவும் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தொடங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்களிடமிருந்து இவ்வாணையம் மனுக்களைப் பெறுகிறது. இந்த மனுக்கள் உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்கவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நிவாரணமும், பாதுகாப்பும் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பல பெண்களுக்கு இதன்மூலம் நிவாரணமும் தீர்வும் கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் இந்த ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1 விருதுநகரில் தலித் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய பொது விசாரணை.

2 மதுரையில் பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய பொது விசாரணை.

3 பெண் குழந்தைகள் உரிமை மீறல்கள் பற்றிய பொது விசாரணை.

4 தமிழ்நாட்டில் பெண்களின் நிலை பற்றிய கலந்துரையாடல்.

5 சென்னை, கடலூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் வேலூரில் 10 குழுக்களாக அரசு சாரா நிறுவனத்தைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களுக்கான முதல் கட்ட சட்ட விழிப்புணர்வு பயிற்சி முகாம்.

6 மதுரை, சென்னை மற்றும் திருச்சி மாவட்டங்களில் சுய உதவிக் குழுக்களிலுள்ள பெண் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கான இரண்டாம் கட்ட சட்ட விழிப்புணர்வு பயிற்சி முகாம்.

7 வெகுஜன ஊடகங்களில் பாலியல் பண்புணர்வு குறித்த பயிற்சி முகாம்.

[2005 மார்ச் 18

8 கல்வி நிறுவனங்களில் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை பற்றிய பொது விசாரணை.

9 வணிக பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உள்ளறை விசாரணை.

10 பெண் துப்புரவுத் தொழிலாளர் பிரச்சினைகள் பற்றிய பொது விசாரணை.

11 சுனாமியால் பாதிக்கப்பட்ட பெண்களுடன் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பற்றிய கலந்துரையாடல்.

- **சிறைகளைப் பார்வையிடல்**

வேலூர் மற்றும் திருச்சியிலுள்ள பெண்களின் சிறப்பு சிறைச்சாலைகள் பார்வையிடப்பட்டு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 3.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

சமூக நலம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | அரசு சாரா அமைப்புமூலம் கரூரில் அரசு அனாதை இல்லத்தைத் தொடங்குதல் | 2.00 |
| 2 | 25 அரசு அனாதை இல்லங்களுக்கு 200 அவசர கால விளக்குகள் வாங்குதல் | 1.00 |
| 3 | அரசு சாரா அமைப்புகள்மூலம் கோயம்புத்தூர், சேலம், நாகர்கோயில் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் பணிபுரியும் மகளிருக்கான 4 இல்லங்களைக் கட்டுதல் (ஆண்டு மானியம் ரூ.5.00 இலட்சம்) | 20.00 |
| 4 | திருநெல்வேலியிலுள்ள சேவை இல்லத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல் | 12.00 |



2005 மார்ச் 18]

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 5 | பணிபுரியும் மகளிருக்கான 8 அரசு இல்லங்களுக்கு மாவரைக்கும் இயந்திரம் வழங்குதல் | 0.80 |
| 6 | தாம்பரம் சேவை இல்லத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம் வழங்குதல் | 1.00 |
| 7 | மாநில மகளிர் ஆணையத்திற்கு 2 கணினிகள், ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் மற்றும் ஒரு நிகரி ஆகியவற்றை வழங்குதல் | 2.50 |
| 8 | பழங்குடியின பெண் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி உதவித் தொகையை மாதமொன்றுக்கு ரூபாய் 50–லிருந்து ரூபாய் 75–ஆக அதிகரித்தல் | 0.17 |
| 9 | 9 மாவட்டங்களில் துணி வெட்டும் மையங்களை ஏற்படுத்துதல் | 11.25 |
| 10 | சிறப்புக் கவனம் தேவைப்படுகிற குழந்தைகளைப் பராமரிப்பதற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு உதவி மானியம் | 9.00 |
| 11 | சேவை இல்லம், அனாதை இல்லம் ஆகியவற்றில் உள்ளவர்களுக்குக் கணினிப் பயிற்சியில் சான்றிதழ் பயிற்சி வகுப்புகளை நடத்துதல் | 11.64 |
| 12 | முதியோர் பராமரிப்பாளருக்கான பயிற்சி | 1.76 |
| 13 | குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்வதில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 2.24 |
| | **மொத்தம்** | **75.36** |

# அத்தியாயம் 3

## சத்துணவு

### 1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் குழந்தைகளின் உடல் நலத்தையும் அவர்கள் சத்துணவு பெறும் நிலைமையையும் நன்கு பாதுகாத்து, அவர்களின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் முன்னோடித் திட்டமாக உள்ளது.

இத்திட்டம் 01–07–1982 முதல் அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஊரகப் பகுதியிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் பயனடைந்தனர். 15–09–1982 முதல் இத்திட்டம் நகர்ப்பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 15–09–1984 முதல் 10 வயது முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. குழந்தைகள் தவிர, 15–01–1983 முதல் ஓய்வூதியம் பெறும் முதியோர்களும் 07–12–1995 முதல் கருவுற்ற தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி அதன்மூலம் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைவினை அகற்றவும், படிக்கும் குழந்தைகளின் விகிதத்தினை அதிகரிக்கவும் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பள்ளிக்குச் செல்லாமல் இடையில் அகல்வதைக் குறைக்கவும் ஒரு ஆற்றல் மிக்க ஊக்கியாகச் செயல்படுகிறது.



**2005–2006 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு (ரூபாய் கோடியில்)**

| வ. எண் | துறையின் பெயர் | புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டம் | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் * | உலக வங்கி உதவி பெறும் ஒ.கு.வ.தி.–3 ** | உதிஷா |
|---|---|---|---|---|---|
| 1 | உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.தி–3 | 126.16 | *** 206.25 | 8.53 | 1.00 |
| 2 | ஊரக வளர்ச்சி இயக்குநரகம் | 211.61 | | | |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 10.09 | | | |
| 4 | நுகர்பொருள் ஆணையரகம் (அரிசி போன்ற உணவுப் பொருள்கள் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை) | 178.80 | | | |
| | மொத்தம் | 526.66 | 206.25 | 8.53 | 1.00 |

மொத்த நிதி ஒதுக்கீடு = ரூபாய் 742.44 கோடி.

* மைய அரசு மற்றும் மாநில அரசு நிதி ஒதுக்கீடுகள்

** உலக வங்கியின் நிதி ஒதுக்கீடு

*** இவற்றோடு பிரதம மந்திரியின் கிராம யோஜனா திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்து வழங்குவதற்காக ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

### அங்கன்வாடிகள் மற்றும் பள்ளிகளில் உள்ள சத்துணவு மையங்கள்

### 1. அங்கன்வாடி மையங்கள்

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | குழந்தைகள் | | கருவுற்ற பாலூட்டும் தாய்மார்கள் (+) முதியோர் உதவித் தொகை பெறுவோர் | மொத்தம் |
| | | | இணை உணவு | மதிய உணவு | | |
| | | | 6 முதல் 36 மாதம் வரை | 2 முதல் 5 வயது வரை (24 முதல் 60 மாதங்கள்) | | |
| 1. | ஒருங்கிணைந்த குழந்தைகள வளர்ச்சிப் பணிகள் திட்டம். | 23177 | 314462 | 319076 (24–60 மாதங்கள் | 150780 (+) 10975 | 795293 |
| 2. | உலக வங்கி உதவி பெறும் ஒ.கு.வ.ப.–3 திட்டம் | 19500 | 357086 | 720691 (37 மாதம் முதல் 60 மாதம் வரை) | 359116 (+) 33428 | 1470321 |
| | மொத்தம் | 42677 | 671548 | 1039767 | 554299 | 2265614 |

### 2. பள்ளி சத்துணவு மையங்கள்

| வ.எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 39747 | 5786726 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 1843 | 370802 |
| | மொத்தம் | 41590 | 6157528 |

**மொத்தப் பயனாளிகள் எண்ணிக்கை 22,65,614+61,57,528=84,23,142**



2005 மார்ச் 18]

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பயனாளிக்கும் (பல்வேறு வயது தொகுதிக்கு) வழங்கப்படும். உணவுப் பொருட்களின் அளவு வீதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | உணவுப் பொருட்கள் | வயது விவரம் (வருடங்களில்) | | | | கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 2–5 | 5–9 | 10–15 | | |
| | | | 1–5 ஆம் வகுப்பு | 6–8 ஆம் வகுப்பு | 9–10 ஆம் வகுப்பு | |
| 1. | அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 100 கிராம் | 120 கிராம் | 200 கிராம் |
| 2. | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| 3. | எண்ணெய் | 2 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் |
| 4. | உப்பு | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9கிரரம் |
| 5. | காய்கறிகள் தாளிதம், உப்பு* மற்றும் எரிபொருள் | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா |
| 6. | வேகவைத்த உருளைக் கிழங்கு (திங்கட்கிழமை களில்) | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | |
| 7. | வேகவைத்த முழு கொண்டைக் கடலை அல்லது வேகவைத்த முழு பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில் மாற்றி மாற்றி) | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | 20 கிராம் | |
| 8. | வேகவைத்த ஒரு முட்டை (வியாழக் கிழமைகளில்) | 46 கிராம் | 46 கிராம் | 46 கிராம் | 46 கிராம் | |

*காய்கறிகள்–15 பைசா, தாளிதம் மற்றும் உப்பு–9 பைசா, எரிபொருள்–11 பைசா.

[2005 மார்ச் 18

இணை உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் இணை சத்துணவு விகிதம் பின்வருமாறு:

| ஊட்டச்சத்து நிலை | சத்து மாவு அளவு | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் (6–24) மாதங்கள் | குழந்தைகள் (25–36) மாதங்கள் | கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் |
| சாதாரண நிலை | 50 கிராம் | 100 கிராம் | 100 கிராம் |
| நிலை 1 மற்றும் 2 | 50 கிராம் | 100 கிராம் | |
| நிலை 3 மற்றும் 4 | 100 கிராம் | 150 கிராம் | |

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது)—அனைவருக்கும் ஊட்டச்சத்து

உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்–3–தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு ஊட்டச்சத்து (சாதாரண நிலை–வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள்)

### புரதச் சத்து மிகுந்த உணவு

சத்துணவுடன் சேர்த்து புரதச் சத்து மிகுந்ததாக ஒரு பயனாளிக்கு வாரத்தில் முறையே, திங்கட்கிழமைகளில் 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கும், செவ்வாய்க்கிழமைகளில் 20 கிராம் முழுக் கொண்டைக் கடலை அல்லது 20 கிராம் முழு பச்சைப் பயறு (மாற்றி மாற்றி ) மற்றும் வியாழக்கிழமைகளில் வேகவைத்த முட்டை ஒன்றும் ஒவ்வொரு வாரமும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்–3 2 முதல் 15 வயது பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்மூலம் ஒவ்வொரு பயனாளிக்கும் வாரம் ஒருமுறை கூடுதலாக 168.40 கலோரியும், 10.93 கிராம் புரதச் சத்தும் கிடைக்கிறது.



2005 மார்ச் 18]

### உணவுப் பொருட்கள் வழங்குதல்

வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அளிக்கும் தேவைப் பட்டியலின் அடிப்படையில் அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வட்டக் கிடங்கிலிருந்து நேரடியாக சத்துணவு மையங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பொதுவாக ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதி மற்றும் 25 ஆம் தேதிக்கு இடையில் மேற்கண்ட உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. சத்துணவுப் பொருட்கள் வழங்கப்பட்டமைக்கான பட்டியல்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. சென்னை மாநகராட்சிப் பள்ளி மையங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கியதற்கான தொகைகள் மட்டும் நகராட்சி நிர்வாக ஆணையரால் வழங்கப்படுகிறது. காய்கறி, தாளிதம் மற்றும் எரிபொருளுக்கான விறகு ஆகியவை சம்பந்தப்பட்ட சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூரில் வாங்கப்படுகின்றன. மேற்கண்டவை தவிர, மையங்களைத் துப்புரவு செய்யத் தேவைப்படும் சோப்பு, பினாயில் மற்றும் துடைப்பம் வாங்குவதற்கு 500–க்கும் குறைவான பயனாளிகள் உள்ள மையத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20/–ம் மற்றும் 500–க்கு மேற்பட்ட பயனாளிகள் உள்ள மையத்திற்கு ரூ.30/–ம் சில்லறைச் செலவினமாக வழங்கப்படுகிறது.

### மதிய உணவில் கறிவேப்பிலை பொடி, முருங்கைக் கீரைப் பொடி சேர்த்து வழங்குதல்

குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சத்து குறைபாட்டைப் போக்க ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் காய்கறிகளுடன் முருங்கைக் கீரைப் பொடி அல்லது கறிவேப்பிலைப் பொடியினை ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றிற்கு 2 கிராம் வீதம் 20 பைசா செலவில் 5 தினங்களுக்கு (திங்கள் முதல் வெள்ளி வரை), மதிய உணவுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் முன்னோடித் திட்டமாக தேனி, காஞ்சிபுரம், பெரம்பலூர், கடலூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு வட்டாரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் 35,000 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

[2005 மார்ச் 18

### சர்க்கரைப் பொங்கல்

மதிப்பு வாய்ந்த தலைவர்களின் பிறந்த நாளன்று மதிய உணவு பெறும் பயனாளிகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டு வருகிறது.

### சத்துணவு மற்றும் அங்கன்வாடி மைய பயனாளிகளுக்கு எவர் சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குதல்

சத்துணவு மற்றும் அங்கன்வாடி மைய பயனாளிகளுக்கு எவர் சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவதற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பெண்களுக்கு வேலைவாய்ப்பு

இத்திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குகிறது. விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையமும் ஒரு சத்துணவு அமைப்பாளர், ஒரு சமையலர் மற்றும் ஓர் உதவியாளர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. 500-க்கு மேற்பட்ட பயனாளிகள் உள்ள மையங்களுக்குக் கூடுதலாக ஒரு சமையலர் மற்றும் ஓர் உதவியாளர் நியமிக்கப்படுகின்றனர். அங்கன்வாடி மைய மிகைப்பணியாளர்கள் சத்துணவு மையங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 3.2 ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு தேசிய திட்டத்தின்கீழ் சத்துணவு வழங்குதல்

15–08–1995 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு சமீபத்தில் மத்திய அரசால் திருத்தி அமைக்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் மனித வள மேம்பாடு மற்றும் கல்வித் துறையின் மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் வீதம் ஒரு கல்வி ஆண்டில் வருடத்தில் 10 மாதங்களுக்கு (200 நாட்களுக்கு) மதிய உணவு வழங்குவதற்காக இலவச அரிசி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த உள்ளமைப்பு வசதிகளைக் கொண்டு, இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, சமைத்த உணவாக குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. உணவு சமைப்பதற்காக ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் உதவி வழங்க மத்திய அரசு இசைவளித்துள்ளது.



2005 மார்ச் 18]

### 3.3 கண்காணித்தல்

சத்துணவு மையங்களில் மாணவர்களின் வருகைக்குத் தக்கவாறு உரிய அளவில் தரமான உணவு வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க மாவட்ட / வட்டார / மாநகராட்சி / நகராட்சி மற்றும் ஊராட்சி மன்ற அளவிலும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு செயலாற்றி வருகின்றன. இக்குழுக்களில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் இடம் பெற்றுள்ளனர்.

### உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3–வது திட்டம் மற்றும் பொது ஒருங்கிண்ணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது)

### 3.4 முன்னுரை

ஊட்டச் சத்து நிலை என்பது மக்களின் ஒட்டுமொத்த நலனைப் பற்றிய ஒரு குறியீடாகும். முன்பருவ பள்ளிக் குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை என்பது சமுதாயத்தில் மக்களின் ஊட்டச் சத்து நிலைமையினை அறிய பெரிதும் உதவுவதோடு சமுதாயத்தின் ஒட்டுமொத்த வாழ்வுத் தரம் பற்றிய குறியீடாகவும் விளங்குகிறது. கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது தற்சமயம் குழந்தைகளிடையே ஊட்டச் சத்து நிலை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. 1992–1993-ல் 41.40 சதவிகிதமாக இருந்த இயல்பு நிலை குழந்தைகள், தற்சமயம் 60 சதவிகிதமாக உயர்ந்துள்ளனர். 1999 ஆம் ஆண்டில் 0.45 சதவிகிதமாக இருந்த குழந்தைகளின் கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாடு டிசம்பர் 2004-ல் 0.12 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. 1998-ல் 1000-ல் 53 ஆக இருந்த குழந்தைகளுக்கான இறப்பு விகிதம் 2002-ல் 1000-ல் 44 ஆக குறைந்துள்ளது. பத்தாம் ஐந்தாண்டு திட்ட கால இறுதிக்குள் குழந்தைகள் இறப்பு விகிதம் 1000-க்கு 30 என்கிற அளவில் குறைக்கப்பட்டுவிடும்.

உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் நமது மாநிலத்தில் உள்ள 318 கிராமப்புற வட்டாரங்களில் செயல்படும் ,19,500 மையங்களின் மூலமாக தன்னுடைய சேவையினை அளித்து வருகிறது. தற்போது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் (பொது) திட்டத்தின்கீழ் 116 நகர்ப்புற/ கிராமப்புற வட்டாரங்களில் செயல்படும் 23,177 மையங்களின் மூலமாக சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. சமவெளிப் பகுதிகளில் 1,000

[2005 மார்ச் 18

மக்களுக்கு ஓர் அங்கன்வாடியும், பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 700 மக்களுக்கு ஓர் அங்கன்வாடியும் அமைக்கப்பட வேண்டும் என்பது வரையறுக்கப்பட்ட அளவுகோலாகும். கடந்த மாவட்ட ஆட்சியர்களின் கூட்டத்தின்போது மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டபடி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 398 புதிய அங்கன்வாடி மையங்கள் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது. செப்டம்பர் 2004-ல் நிறைவடைந்த உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.ப.-3-வது திட்டம் மத்திய அரசு மற்றும் உலக வங்கியின் ஒப்புதலுடன் மேலும் 9 மாதங்களுக்கு ஜூன் 2005 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய குறிக்கோள்கள்**

உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.ப. – 3-வது திட்டம் மற்றும் பொது ஒ.கு.வ.திட்டம் ஆகியவற்றின் முக்கிய குறிக்கோள்களாவன:

(அ) 0–6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்தி அதன் மூலம் 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச் சத்துக் குறைபாட்டைத் தடுப்பதுடன் குழந்தை பராமரிப்புப் பழக்கத்தினை குடும்ப அளவில் மேம்படுத்துதல்.

(ஆ) பெண்களிடையே, குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்துதல்.

(இ) குடும்பத்தின் ஊட்டச் சத்து, சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாகத் தேவையான பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேலோங்கச் செய்து அதன்மூலம் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னுரிமை மேம்பாட்டினை உயர்த்துவது.

(ஈ) தமிழ் நாட்டை ஊட்டச்சத்து பற்றாக்குறை அற்ற மாநிலமாக மாற்றி வறுமைக் கோட்டிற்குள் உள்ள கர்ப்பிணிகள், சிறார், குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் முதியோர்களுக்கு முழு வாழ்க்கைக்கான ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



2005 மார்ச் 18]

**இத்திட்டத்தின் பயனாளிகள்**

- 0–3 வயது குழந்தைகள்
- 3–6 வயது குழந்தைகள்
- கர்ப்பிணிகள்
- பாலூட்டும் தாய்மார்கள்
- வளரிளம் பெண்கள்
- முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்கள்
- சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்

**அங்கன்வாடி மையத்தில் அளிக்கப்படும் சேவைகள்**

- வளர்ச்சி நிலை உயர்த்துதல்
- தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவு அளித்தல்
- குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி முன்பருவக் கல்வி
- ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி
- சுகாதாரப் பணியாளர்கள் மூலம் சுகாதாரப் பணிகள் அளித்தல்
- மேல் மருத்துவ சிகிச்சைக்காக பரிந்துரைத்தல்

**சேவை அளிக்கும் வழிமுறைகள்**

- அங்கன்வாடி மைய அளவில் சேவை வழங்குதல்
- தொடர்புடைய நிறுவனங்களை இணைத்து உரிய பயனாளிகளுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார சேவைகள் வழங்கல்
- சுகாதார மற்றும் ஊட்டச் சத்துப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து அங்கன்வாடி மைய அளவில் நலப் பணிகளை அளித்தல்
- சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து மேற்பார்வையாளர்கள் இணைந்து ஆய்வு செய்தல்

[2005 மார்ச் 18

- வட்டார மற்றும் மாவட்ட அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இணைந்து ஆய்வு செய்தல்
- பயிற்சி மற்றும் தொடர்புத் துறைகளின் மூலமாக திட்டத்திற்கு ஆதரவு அளித்தல்.
- கிராம செயல் குழு உறுப்பினர்கள் மூலமாக, சமுதாயப் பங்கேற்பினை ஊக்குவித்தல்

**2005-2006-க்கான திட்டங்கள்**

பல்வேறு பிரிவுகளின்கீழ் செயல் உத்திகளும் பல செயல்பாடுகளும் 2005–2006 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட உள்ளன. திட்டத்தின் முக்கிய குவி மையமாக "ஊட்டச் சத்து குறைபாடு மேலாண்மை" என்கிற யுக்தியிலிருந்து "ஊட்டச் சத்து குறைபாட்டினைத் தவிர்த்தல்" என்கிற யுக்திக்கு மாற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக வளரிளம் பெண்களின் ஊட்டச் சத்து மற்றும் உடல் நலம் ஆகியவை அவர்களின் தாய்மைப் பேற்றுக் காலத்திற்கு முன்னதாக மேம்படச் செய்ய முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்த தொடர்புடைய துறைகள் கீழ்க்கண்டவாறு ஒருங்கிணைந்து செயல்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1 ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கருத்துகளை மக்களுக்கு விளக்கும் குவி மையங்களாக, அங்கன்வாடி மையங்கள் செயல்படும்.

2 தனி நபர் மற்றும் சமூக சுகாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுத்தல், முக்கிய இலக்காக அமையும்.

3. குழந்தைகளின் இயலாமையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்துவதற்கு அனைத்து அங்கன்வாடி மையங்களும் தொடர்பு மையங்களாக முக்கிய பங்கு வகிக்கும்.

4. பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் முயற்சிகளோடு குழந்தை ஊட்டச்சத்துத் திட்டத்தையும் சேர்ப்பதால், குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களின் நலிவுற்ற குடும்பங்கள் தங்கள் வருமானத்தை உயர்த்தி ஊட்டச்சத்து நிலையினை உயர்த்த முடியும்.



2005 மார்ச் 18]

5. சுகாதாரத் துறையின் ஒருங்கிணைப்புடன் வளரிளம்
பெண்களுக்குக் கூடுதல் இரும்புச் சத்து மற்றும் ஃபாலிக் அமிலச் சத்து
இடைக்கும் விதமாக மாத்திரைகள் வழங்குதல் மற்றும் வயிற்றுப்பூச்சி
நீக்க மருந்து வழங்குதல் மூலம் அவர்கள் இரத்த சோகை நோயிலிருந்து
பாதுகாக்கப்படுகின்றனர். ரூபல்லா தடுப்பு ஊசி முறையின் மூலமாக
வளரிளம் பெண்களின் உடல் நலத்தைப் பாதுகாத்தல் 5 வட்டாரங்களில்
முன்னோடி ஆய்வுத்' திட்டமாகத் தொடங்கப்பட்டுள்ளது.

6. கிராம அளவிலான செயற் குழு உறுப்பினர்கள் மூலமாக பேறுகால தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், 0–3 வயதிலான குழந்தைகள் மற்றும் 3–5 வயதுக் குழந்தைகள் ஆகியோர்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நலப் பணிகள் கிடைக்க அங்கன்வாடி மையங்களின் மூலம் வழி செய்தல்.

7. கிராம அளவில் அயோடின் கலந்த உப்பினை உபயோகிக்கச் செய்தல்.

**3.5 உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளுக்கான செயல்பாட்டுத் திட்டங்கள்**

**ஊட்டச் சத்துப் பிரிவு**

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்
3-வது திட்டத்தின்கீழ் பல்வேறு பயனாளிகளுக்கு (பிரதம மந்திரியின்
கிராம யோஜனா திட்டத்தை தவிர்த்து) இணை உணவு வழங்கும் திட்டம்
ரூ. 33 கோடி செலவில் தொடரப்படும்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் 2005–2006 ஆம் ஆண்டில் பின்வரும்
வசதிகள் மற்றும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ரூ. 795 இலட்சம் செலவில் கட்ட ஒப்பளிக்கப்பட்ட 159 திட்ட
அலுவலகம் மற்றும் கிடங்குகளில், 130 கட்டடங்களின் பணிகள்
மேற்கொள்ளப்பட்டு 100 கட்டடங்களின் அனைத்து பணிகளும்
முடிவடைந்து துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள
30 கட்டடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள 29
கட்டடங்கள் இத்திட்ட இறுதிக்குள் (30-6-2005-க்குள்) கட்டப்பட்டுவிடும்.
ஒட்டுமொத்த சேமிப்பிலிருந்து ரூ. 102.50 இலட்சம் செலவில் 82
அங்கன்வாடி மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

[2005 மார்ச் 18

**சுகாதாரப் பிரிவு**

பொது சுகாதாரத் துறையுடனும் ஒருங்கிணைந்து கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 0–6 வயது குழந்தைகள் ஆகியோருக்கு சுகாதாரப் பணிகள் நல்ல முறையில் அளிக்கப்படுகின்றன. 2005-2006-ல் கீழ்வரும் செயல்பாடுகள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

- உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.தி.–3 திட்டப் பகுதிகளிலுள்ள 19,500 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ83 இலட்சம் செலவில் மருந்து உபகரணப் பெட்டிகள் வாங்கி வழங்குதல்.
- பொது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்திற்கென ரூ. 64 இலட்சம் செலவில் மருந்து உபகரணப் பெட்டிகள் வாங்கி ஒ.கு.வ.தி. மையங்களுக்கு வழங்குதல்.
- குழந்தைகள் மற்றும் வளரிளம் பெண்களுக்காக அல்பெண்டசால் (மென்று உண்ணக்கூடிய) மாத்திரைகளை (வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து) ரூ. 15 இலட்சம் செலவில் வாங்கி வழங்குதல்.

**முறைப்படுத்துதல் பிரிவு**

கடுமையான ஊட்டச் சத்து குறைபாட்டைத் தடுத்து, ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்தும் வகையில் முக்கிய பகுதிகளில் சிறப்பு ஆய்வுகள் மேற்கொண்டு அதன் மூலம் பிரச்சினைகளைக் கண்டறிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு கிராமத்திலும் அதே கிராமத்தைச் சேர்ந்த கிராம அளவிலான செயற் குழுக்கள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 15 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுக்கள் கிராம அளவில் இத்திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பதோடு திட்டப் பணிகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு அங்கன்வாடிப் பணியாளருக்கு ஒத்துழைப்பினை அளிக்கின்றன. 14 மாவட்டங்களில் உள்ள கிராம செயற் குழு உறுப்பினர்களுக்கு திட்டம் தொடர்பான நோக்கங்கள், கண்காணிப்புப் பணிகள் மற்றும் திட்டப் பணிகளில் அவர்களின் பங்களிப்பு தொடர்பான அனைத்துப் பயிற்சிகளும் ரூ. 2.14 கோடி செலவில் அளிக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட மொத்த 9 செயல்முறை ஆய்வுகளில் 6 ஆய்வுகள் முடிக்கப்பட்டன. மீதம் உள்ள 3 செயல்முறை ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஒரு தொடர்ச்சியான சமுதாய மதிப்பீட்டு ஆய்வு மீனவ சமுதாயம் மற்றும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர்



2005 மார்ச் 18]

ஆகியவர்கள் அடங்கிய 5 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்/பொது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் நிறைவு ஆய்வு 434 திட்டப் பகுதிகளில் ஏப்ரல் 2005 முதல் நடைபெறவுள்ளது.

**தகவல் தொடர்பு பிரிவு**

**தகவல், கல்வி மற்றும் செய்தித் தொடர்பு**

இப்பிரிவின் செயல்பாடுகள் இலக்குப் பிரிவுகளிடையே இத்திட்டத்திற்கான தேவைகளை அதிகரிக்கச் செய்து மனப்பான்மை மற்றும் பழக்கவழக்கங்களின் மாற்றங்கள் ஏற்படுத்துவதன் மூலம் ஊட்டச் சத்து குறைப்பாட்டைக் குறைக்கும் நோக்குடன் அமைந்துள்ளன. சுகாதாரப் பணிகளை மேம்படுத்தும் வகையில், மக்கள் தொடர்பு சாதனங்களான தொலைகாட்சி, வானொலி, மாநில மற்றும் மாவட்ட அளவில் கண்காட்சிகள் மற்றும் கிராம அளவிலான நாடகங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலமாக பல தகவல் தொடர்பு செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பான நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மாதமிருமுறை வெளிவரும் "சிட்டுக்குருவி சேதி தெரியுமா?" என்னும் இதழ் 2005-2006-லும் தொடர்ந்து வெளியிடப்படும்.

கிராம அளவில் சமுதாயச் சந்தை உத்திகள் மற்றும் சமுதாயப் பங்கேற்பு ஆகியவற்றில் மேற்பார்வைப் பணியாளர்களுக்கும் வாழ்க்கைத் திறன்கல்வி, தன்னுரிமை மேம்பாடு போன்ற பயிற்சிகள் வளரிளம் பெண்களுக்கும் ரூ.44 இலட்சம் செலவில் அளிக்கப்பட உள்ளன.

தகவல் தொடர்புப் பிரிவில் 2005–2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள்

- 24 மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து தொடர்பான 600 நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- சுகாதாரக் குறிப்புகளை சென்னை தொலைக்காட்சியில் ஒலி ஒளி பரப்ப 20 வினாடிகளுக்கு ஓடக்கூடிய 7 குறும்படங்கள் தயாரித்தல்.
- அந்தந்த மாவட்டங்களில் ஏற்படக்கூடிய குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

[2005 மார்ச் 18

- தகவல், கல்வி மற்றும் செய்தித் தொடர்பு பணிகளை ரூ.127 இலட்சம் செலவில் நிறைவேற்றுதல்.

### 3.6 உதிஷா பயிற்சி

மைய அரசின் மூலம் அளிக்கப்படும் உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் உதவியுடன், பணி பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி மற்றும் புத்தறிவுப் பயிற்சி ஆகியவை பணியாளர், உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 1-4-1999 முதல் 5 வருடங்களுக்கு தேசிய அளவிலான பயிற்சி அளிக்க ரூ.15.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 2005–06 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பயிற்சிகள் நடத்தப்பட உள்ளன:

1. சமுதாய அடிப்படையிலான ஊட்டச்சத்து குறைபாட்டை தவிர்க்கும் உத்திகள்
2. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு துறைகளுக்கிடையேயான கூட்டுப் பயிற்சி
3. அங்கன்வாடி பணியாளர்களுக்கான பணிப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சி
4. உதவியாளர்களுக்கான புத்தறிவுப் பயிற்சி
5. மேற்பார்வையாளர்களுக்கான பணிப் பயிற்சி, புத்தாக்கப் பயிற்சி
6. மேற்பார்வையாளர்களுக்கான மேலாண்மைப் பயிற்சி
7. தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து மற்றும் சுகாதார அறிவுரைகளை சிறந்த முறையில் புரிந்துகொள்வதற்கான பயிற்சி
8. மாநகராட்சி / நகராட்சி / பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான பயிற்சி

உதிஷா திட்டத்தின் பல்வேறு வகையான பயிற்சிகளுக்காக 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ. 9 கோடி நிதி ஒதுக்கீடு வேண்டி மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.



2005 மார்ச் 18]

### 3.7 தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றும் கொள்கை

தமிழ்நாட்டை ஊட்டச்சத்துக் குறைபாடற்ற மாநிலமாக மாற்ற, அங்கன்வாடி மையங்களின் மூலம் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி சிறார், வளரிளம் பெண்கள், மகளிர் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரை பயன்பெறச் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. ஊட்டச்சத்துக் குறைப்பாடுச் சிக்கலைத் தவிர்க்கும் பெரிய அளவிலான முனைப்பாக "தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றுவதற்கான மாநில வரைவு கொள்கை" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும், தகவல், கல்வி மற்றும் தொடர்பு முகாம்களை நடத்தி மக்கள் இயக்கத்தின் மூலம் குறிப்பாக, பஞ்சாயத்து உறுப்பினர் மற்றும் தலைவர்கள் மூலம், ஊட்டச்சத்து குறைவினைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுகாதாரம் / மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களின் அனைத்து ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து, ஊட்டச்சத்துக் குறைபாடற்ற நிலையை அடைய அவர்களுக்கு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தகவல் மற்றும் பயிற்சிகளை ஒருங்கிணைக்க சுகாதாரத் துறை ஈடுபடுத்தப்படும். மேற்படி நோக்கத்தினை அடைய ஏனைய தொடர்புடைய துறைகளும் ஈடுபடுத்தப்படும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் மற்றும் சுகாதாரத் துறைகளின் களப்பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தேவையான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.8 பிரதம மந்திரியின் கிராமோதய யோஜனா திட்டம்

மத்திய அரசின், பிரதம மந்திரியின் கிராமோதய யோஜனா திட்டம் கடந்த 2000–2001 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டு, கிராம மக்களின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம், இதுவரை பயனடையாத மற்றும் திட்டம் சென்றடையாத பகுதிகளில் உள்ள 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு இணை உணவு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டுக்கென ரூ. 20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

## 3.9 ஊட்டச்சத்து குறைபாடுள்ள கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு 6 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம்

திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள, 40 கிலோ எடைக்கும் குறைவாக உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மற்றும் 35 கிலோ எடைக்கும் குறைவாக உள்ள வளரிளம் பெண்களுக்கும் மாதமொன்றிற்கு 6 கிலோ அரிசி இலவசமாக வழங்கும் முன்னோடித் திட்டம் 25-11-2002 முதல் மத்திய அரசின் வழிமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 52,780 கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 36,750 பயனாளிகளும் பயன்பெற்றனர்.

## 3.10 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (பொது)

இத்திட்டம் 1975 ஆம் ஆண்டு, சென்னை, நிலக்கோட்டை மற்றும் தளி ஆகிய பகுதிகளில் 3 திட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது மொத்தம் 116 திட்டங்கள் 23,177 மையங்களில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் மாவட்டம் முழுவதிலுமாகவும், ஏனைய இதர மாவட்டங்களில் பெரும்பாலான நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

- **கிஷோரி சக்தி யோஜனா** – வளரிளம் பெண்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி முகாம் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து கிஷோரி சக்தி யோஜனா என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் புதுக்கோட்டை, தருமபுரி, நாகப்பட்டினம், நீலகிரி, சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், திண்டுக்கல், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 37 திட்டங்களாக (ரூ.40 இலட்சம் செலவில்) செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, சட்ட உரிமை, வீட்டைப் பராமரித்தல் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு ஆகியவற்றில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த 11-15 வயதிலான வளரிளம் பெண்களுக்கு தொழிற் கல்வி பயிற்சியும்



2005 மார்ச் 18]

அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென ஒவ்வொரு வருடமும் ரூ.40 இலட்சம் அளிக்கப்பட்டு வருகிறது.

- **மருந்துப் பெட்டி வழங்குதல்** - இருமல், சளி மற்றும் தோல் வியாதி போன்ற சாதாரண உடல் நலக் குறைவுகளை குணப்படுத்தக்கூடிய எளிதில் உபயோகப்படுத்தக் கூடிய மற்றும் வழங்கக்கூடிய மருந்துகள் அடங்கிய மருந்துப் பெட்டி ஒன்று வாங்க ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் மைய அரசு ஆண்டுதோறும் ரூ. 600/- வழங்கி வருகிறது. தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் இந்த மருந்துப் பெட்டிகள் ஒவ்வொரு வருடமும் வாங்கி வழங்கப்படுகின்றன.

- **முன்பருவக் கல்வி, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள்** – முன்பருவக் கல்வி குழந்தைகளுக்கு முறைசாரா மற்றும் விளையாட்டு முறையில் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் ரூ.500/- மதிப்புள்ள முன்பருவக் கல்வி உபகரணங்கள் மைய அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

- **பொது ஒ.கு.வ.தி. செய்தி, கல்வி மற்றும் தொடர்பு பணிகள்**– ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் நோக்கங்கள் பற்றிய விழிப்புணர்வினை சமுதாயத்தில் ஏற்படுத்தி, இத்திட்டத்தின் சேவைகளுக்கு மக்களிடையே தேவை ஏற்படுத்திட, குழுக் கூட்டங்கள், கிராம அளவிலான முகாம்கள், வீடுகளைப் பார்வையிடல், தாய்மார்களின் சந்திப்பு, பத்திரிகை செய்திகள், மாத இதழ்கள் அச்சடித்து வெளியிடுதல், செய்தி மடல்கள், விளம்பரச் சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் ஆகிய செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு பணிகள் ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூ.25,000/- செலவில் ஒவ்வொரு வருடமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் குழந்தைகள் பராமரிப்பு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் பற்றிய மக்களின் பழக்கவழக்கம் மற்றும் மனப்பாங்கு ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி நிலையான சமுதாய பங்கேற்பிற்கு வழி வகுக்கின்றன.

மேற்கண்டவை தவிர ஒவ்வொரு வருடமும் அலுமினிய பாத்திரங்கள், அங்கன்வாடி மையங்களுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து வழங்கப்படுகின்றன.

[2005 மார்ச் 18

ஒ.கு.வ. திட்டத்திற்கான மொத்த செலவினம் மைய அரசால் ஈடுசெய்யப்படுகின்றது.

### 3.11 தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்

குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டினை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ள இவ்வரசு, 1993 ஆம் ஆண்டு "டாக்டர் ஜெ ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தினை" ஆரம்பித்து செயலாக்கியது. இத்திட்டத்தின் சமீபத்திய வளர்ச்சிகளை கருத்திற் கொண்டு, தொடர் நடவடிக்கையாக 2001–2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேம்படுத்தப்பட்டு "தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்" என மாற்றம் செய்யப்பட்டது.

இத்திட்டம் தமிழக அரசின் முக்கிய துறைகளான சமூக நலம், கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் இதர சம்பந்தப்பட்ட துறைகளின் பணிகளை ஒருங்கிணைந்த மகளிர் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்கான இத்திட்டத்தின் குறிக்கோள்களை அடையச் செய்வது ஆகும்.

இத்திட்டத்தில் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டு மற்றும் 2006 ஆம் ஆண்டுக்கென இடைக்கால இலக்குகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் பொருட்டு மாநில அளவிலான குழு, துறைத் தலைவர்கள் அளவிலான குழுக்கள் மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 3.12 சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கன்வாடி மையங்களில் நிவாரண உதவி

சுனாமியால் கடலோரப் பகுதியில் அமைந்துள்ள 351 அங்கன்வாடி மையங்கள் பாதிக்கப்பட்டன. மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் நாகப்பட்டினம், கடலூர் மற்றும் கன்னியாகுமரி ஆகும். தற்காலிகமாக நிறுவப்பட்ட கூடாரங்களில் அங்கன்வாடி மையங்கள் தற்காலிகமாக திறக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு கூடுதல் அளவு இணை உணவு வழங்கப்பட்டது. 10.5.125 மெ. டன் இணை உணவு சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன. அதனுடைய மொத்த செலவு ரூ.21.36 இலட்சம். 'யுனிசெப்' உதவியுடன் 351 தற்காலிக அங்கன்வாடி மையங்கள் 8 மாவட்டங்களில் திறக்கப்பட உள்ளன.



2005 மார்ச் 18]

'யுனிசெப்' நிறுவனம் அங்கன்வாடி மையங்களுக்குத் தேவையான பாத்திரங்கள், விளையாட்டுப் பொருட்கள், தளவாடச் சாமான்கள், எடைக் கருவிகள் என பல பொருட்கள் அனுப்புவதற்கு இசைந்துள்ளது. தயார் நிலையில் உள்ள ப்ளாஸ்டிக்கால் செய்யப்பட்ட கூடாரங்கள் (Pre-fabricated shed) 351 அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்பட உள்ளன. 'யுனிசெப்' நிறுவனம், தமது முதல் தவணையாக ரூ.16.19 இலட்சம் விடுவித்துள்ளது.

**2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்**

**உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்–3**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | சென்னை–113, தரமணி, உலக வங்கியின் நிதியுதவிபெற்ற ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி மையத்திலுள்ள மாணவர் இல்லம் மற்றும் வகுப்பறைகளின் தரம் உயர்த்துதல். | 10.00 |
| 2. | உடல் நலம் மற்றும் சத்துணவு குறித்த நடவடிக்கைகள் பற்றி வளரிளம் பெண்களுக்கு அறிவுறுத்துதல். | 3.17 |
| 3. | **ஊரக வளர்ச்சி (சத்துணவு திட்டம்)**<br>புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் – ஊரகப் பள்ளிகளைச் சேர்ந்த அனைத்து சத்துணவு பயனீட்டாளர்களுக்கும் ஒரு எவர்-சில்வர் தட்டு மற்றும் ஒரு டம்ளர் வீதம் வாங்குதல். | 100.00 |
| | மொத்தம் | 113.17 |

[2005 மார்ச் 18

# அத்தியாயம்–4

## மகளிர் நல மேம்பாடு

**4.1 1983 ஆம் ஆண்டு, தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழக அரசால் மகளிரது அதிகார பகிர்விற்காக நிறுவப்பட்டது. இந்நிறுவனம் கீழ்க்கண்ட திட்டங்களை பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தி வருகிறது.**

- தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம், (மகளிர் திட்டம்)
- மகளிர் மனமகிழ் மன்றம் அமைத்தல்
- பெண்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்
- மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையம்
- வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரி வாயு இணைப்பு வழங்கும் திட்டம்
- வாழ்க்கை மற்றும் தொழில் திறன் பயிற்சித் திட்டம்
- 25, 000 சுய உதவிக் குழுக்களை உருவாக்க உதவியளிக்கும் திட்டம்
- தேனி ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்
- உலக வங்கி உதவிபெறும் தமிழ்நாடு அதிகாரப் பகிர்வு மற்றும் வறுமை குறைப்பு திட்டம்

### 4.2 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டம் (மகளிர் திட்டம்)

1991–92 ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவன வெளிநாட்டு நிதியைக் கொண்டு தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் பரிட்சார்த்த முறையில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் வளர்ச்சி பெற்று முதன்மையாக செயல்பட்டதால் 1992–1994 ஆம் ஆண்டுகளில் சேலம், தென்னாற்காடு, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் மிகவும் சிறப்பாகவும், பயனுள்ள வகையிலும் செயல்படுத்தப்பட்டதால், 1995-1996 ஆம் ஆண்டு, எதிர்கால வளர்ச்சிக்கு மாதிரி திட்டமாக மாநில வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு அனைத்து இதர மாவட்டங்களுக்கும்



2005 மார்ச் 18]

விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் மிகவும் அறிமுகமான "மகளிர் திட்டம்" என்ற பெயரில் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு சுய உதவிக் குழுக்கள் என்ற இணை வலையமைப்பு மூலம் செயல்படுகிறது. சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சி திட்டமிடப்பட்டு நிலைத்த தன்மையை அடையவும் மற்றும் தொலைவிலுள்ள குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புற குடிசைகளுக்கும் விரிவாக்கம் செய்யும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை சீராக வளர்ந்து கொண்டிருக்கிறது. 2005 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் தேதி வரை, கிராமப்புறங்களில் 1,67,090 சுய உதவிக் குழுக்கள் (28,17,817 உறுப்பினர்கள்) மற்றும் நகர்ப்புறங்களில் 25,803 சுய உதவிக் குழுக்கள் (4,23,190 உறுப்பினர்கள்) ஆக மொத்தம் 1,92,893 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இச் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 32.44 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நாள் வரை சுய உதவிக் குழுக்கள் சேமிப்புத் தொகையாக ரூ. 621.92 கோடி திரட்டியுள்ளனர். சுய உதவிக் குழுக்கள் வணிக வங்கிகளில் மட்டும் அல்லாது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் தமிழ்நாடு மகளிர் மேம்பாடு திட்ட வரைமுறைக்குட்பட்டு, வங்கிக் கணக்கு தொடங்கி கடன் பெற்று வருகின்றன.

கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்காக மகளிர் திட்டமும், ஊரக வளர்ச்சித் துறையின் பொன் விழா கிராமப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதே போன்று நகர்ப்புற சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் மகளிர் திட்டமும் பொன்விழா நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிர் திட்டம், பெண்களிடையே அவர்கள் தங்களின் பலம், குடும்ப நிதி ஆதாரம் மற்றும் அவற்றை சமாளிக்கும் திறமை ஆகியவற்றை நன்கு அறியும் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது. மேலும் வங்கிக் கடனை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு குழு மற்றும் குழு மகளிருடையதாகும். ஆகையால் எந்தத் தொழில்கள் செய்யலாம் என்பதையும், அதற்குத் தேவையான கடனின் அளவையும் குழு உறுப்பினர்களே நல்ல முறையில் தீர்மானிக்கின்றனர். திட்ட அமலாக்க அலுவலகங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆலோசகர்களாகவும் வழி நடத்துனர்களாகவும்

மட்டுமே செயல்பட்டு வருகின்றனர். முடிவு எடுப்பது பங்கேற்கும் மகளிரிடமே முழுமையாக விடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கடன் பெறும் தகுதியை அடைந்தவுடன், வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி கடன் பெற்றுத் தரப்படுகிறது. 31-01-2005 நிலவரப்படி, வேளாண்மை, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, குடிசை மற்றும் கிராமத் தொழில்போன்ற கிராமப்புற தொழில் செய்யவும், நகர்ப்புறத்தில் இதர சிறு வியாபாரம், மிகச்சிறிய தொழில்கள் செய்யவும் 1,78,251 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1054.10 கோடி வங்கிக் கடன் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளில், வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் குடும்பத்தைச் சார்ந்த சுமார் 15 இலட்சம் பெண்களை சுய உதவிக் குழுக்களாக அமைக்க தமிழ் நாடு அரசு ஊக்கமும், உதவியும் அளித்து வருகிறது. சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நலனுக்காக, சொந்தமாக மிகச்சிறிய தொழில்கள் தொடங்க ஏதுவாக சிறப்பு முனைப்புடன் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும் அதனைத் தொடர்ந்து வாழ்க்கை தொழிற் திறன் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. மகளிரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 2005–2006 ஆம் ஆண்டில் ரூ.20.00 கோடி நிதி மகளிர் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2005–2006 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ள பணிகளாவன:**

- சிறுபான்மையின, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மகளிர் சமூக பொருளாதார நிலையில் அதிகார பகிர்வு அடையவும், சுரண்டுவதிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும், அவர்களை சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர வைத்தல்
- சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருள்களை விற்பனைச் செய்ய பேருந்து நிலையம், அரசு வணிக வளாகம் போன்ற பொது இடங்களில் கடை அமைத்து தருதல், தேசிய, மாநில, மண்டல மற்றும் மாவட்ட அளவில் அரசு துறைகள் நடத்தும் விற்பனை கண்காட்சி/பொருட்காட்சிகளில் சுய உதவிக் குழுக்களை பங்கேற்கச் செய்தல் போன்ற வசதிகள் செய்யப்படுகின்றன. இதை தவிர, சுய உதவிக் குழு பெண்கள் விற்பனை தொழில்நுணுக்கம் பெறவும், விலை, தரம் நிர்ணயம் செய்தல், பொட்டலம் கட்டுதல்/பைகளில்



இடுதல், விற்பனையை உயர்த்துதல் போன்றவற்றில் தேர்ச்சி பெறவும் மாவட்ட, வட்டார அளவில் விற்பனை பணி பட்டறைகள் நடத்தப்படவுள்ளது.

- இதர அரசுத் துறை திட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பயன்பெறவும், பொருளாதார மேம்பாடு அடையவும் அவர்களை மகளிர் திட்டத்தின்கீழ் கொண்டுவந்து அவர்களுக்கு மகளிர் திட்டத்தில் உள்ள அனைத்து உதவிகளும் அளிக்கப்படவுள்ளது.
- கிராம மற்றும் வட்டார அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்பு பணிகளை வலுப்படுத்தும் பொருட்டு இக்கூட்டமைப்புகளுக்கு திறனூக்கப் பயிற்சி அளித்தல் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் குழு பராமரிப்புப் பணிகளில் அவர்களை ஈடுபடச் செய்தல்.
- கடலோர மாவட்ட மீனவ சுய உதவிக் குழுப் பெண்களுக்கு நூதனமான மீன் வகை உணவு பண்டங்கள் தயாரித்தல் மற்றும் பதப்படுத்துதல் போன்றவற்றில் சிறப்புப் பயிற்சிகள் அளித்தல்

## 4.3 மகளிர் மனமகிழ் மையங்கள்

சத்தான உணவு, உடல் நலம், கல்வி போன்றவை தவிர உழைக்கும் ஏழைப் பெண்களுக்கு மனமகிழ்ச்சியும் மிக இன்றியமையாத தேவையாகும். எனவே கிராம பஞ்சாயத்துக்களில் சுய உதவிக் குழு பெண்களின் பயனுக்காக மனமகிழ் மன்றங்கள் உருவாக்கப்படுகின்றன. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஏனைய சுய உதவிக் குழு உறுப்பினர்களுடன் ஒன்று கூடி தங்களுக்கு ஆர்வமுள்ள நல்ல கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும், சமூகப் பிரச்சினைகளைக் கூடி விவாதிக்கவும், விளையாட மற்றும் பிறவற்றிற்கும் இந்த மையத்தைப் பயன்படுத்துகின்றனர். குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள், செய்தித்தாள்கள் மற்றும் வார இதழ்கள், முற்றம் உட்பட மாத இதழ்களை இம்மையங்களில் படிக்கிறார்கள். தமிழ்நாட்டில், 2004-2005-ல் ஏற்படுத்தப்பட்ட 25 மகளிர் மனமகிழ் மையங்கள் உட்பட இது நாள் வரை 300 மனமகிழ் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினால் 20,000 ஆதிதிராவிட/பழங்குடி மகளிர் உட்பட சுமார் 60,000 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறுகின்றனர்.

[2005 மார்ச் 18

### 4.4 மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையங்கள் அமைத்தல்

தகவல் தொழில் நுண் பிரிவில் உள்ள சிறு தொழில் விவரங்களை
சுய உதவிக் குழு பெண்களுக்கு விளக்கிக் கூறவும், அவர்களை
இத்தொழிலில் ஈடுபட ஊக்கமளிக்கவும், ஏழை எளிய மற்றும் ஆதி
திராவிட பழங்குடியின இளம் பெண்களுக்கு கணினி பயிற்சி அளிக்கவும்,
மாவட்டந்தோறும் ஒரு தகவல் மற்றும் இணைய தள மையம் உருவாக்க
திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை, 12 இணையதள
பார்வை வசதியுடன்கூடிய கணினி பயிற்சி மையங்கள் தலா ரூ.2.50
இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில்
மேலும் மூன்று மையங்கள் உருவாக்க அரசு ரூ. 7.50 இலட்சம் நிதி
ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.5 புதுமண தம்பதியினருக்கு இலவச எரிவாயு இணைப்பு அளித்தல்

இத்திட்டம் 2001–2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
இத்திட்டத்தின் மூலம் இந்நாள் வரை வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும்
7,343 புதுமணத் தம்பதிகள் பயன் அடைந்துள்ளனர். இவர்களுக்கு தலா
ஒரு சிலிண்டர் இணைப்பு வழங்குவதற்கு வைப்புத் தொகையாக
ரூ. 56.48 இலட்சம், மாவட்டங்களில் உள்ள சம்பந்தப்பட்ட எரிவாயு
நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வீட்டில் மாசு ஏற்படுவதைத்
தடுக்கவும், ஏழை பெண்களது வேலைப் பளுவைக் குறைப்பதற்காகவும்
செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு வரும் ஆண்டுகளில் முக்கியத்துவம்
அளிக்கப்படும். இத்திட்டம் தொடக்கத்தில் மகளிர் சுய உதவிக் குழு
குடும்பங்களுக்காக திட்டமிடப்பட்டாலும், தற்போது அரசின் உதவியுடன்
செயல்படுத்தப்படும் பல்வேறு திருமணத் திட்ட புதுமணத் தம்பதிகளும்
பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வரும்
2005-2006 ஆம் ஆண்டில் மேலும் 5,000 புதுமணதம்பதிகள் பயன்பெறும்
வகையில் ரூ. 40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.6 25,000 சுய உதவிக் குழுக்களை உருவாக்க உதவி அளிக்கும் திட்டம்

சுய உதவிக் குழு இயக்கத்திற்கு உத்வேகம் கொடுக்கும் பொருட்டு
2003–2004 முதல் 2005–2006 வரையிலான மூன்றாண்டுகளில் 15 இலட்சம்
பெண்களை இத்திட்டத்தில் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது.
அதற்கிணங்க 75,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்க அரசு
ரூ. 262.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. அதன்படி, அரசு 2003–2004
மற்றும் 2004–2005 ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.87.50 இலட்சம்



2005 மார்ச் 18]

வீதம் மொத்தம் ரூ. 175.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இத்தொகையை
பயன்படுத்தி இதுவரை 50,000 புதிய சுய உதவி குழுக்கள்
உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 8.52 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக
சேர்ந்துள்ளனர். 2005–2006 ஆம் ஆண்டில் தொலைவிலுள்ள கிராமப்
பகுதிகளில், பழங்குடியினர் வாழும் இடங்களில், மீனவ கிராமங்களில்,
நெசவாளர் வாழும் இடங்களில் மற்றும் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில்
மேலும் 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கிட ஏதுவாக அரசு
ரூ. 87.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.7 தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 1
இலட்சம் பெண்கள் வீதம் 5 இலட்சம் பெண்களுக்கு தொழில்
முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் திட்டத்தை 2001-2002 ஆம்
ஆண்டில் அறிமுகப்படுத்தினார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்தும்
முன்னோடி நிறுவனமான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
பிற அரசுத் துறை நிறுவனங்களான தாட்கோ, ஊரக வளர்ச்சித் துறை,
குடிசைப் பகுதி மாற்று வாரியம், வேளாண்மைத் துறை, தொழில் மற்றும்
வணிகத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, பட்டுப்புழு வளர்ச்சித் துறை
போன்றவற்றுடன் இணைந்து செயல்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளில்
4,74,254 பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி
அளித்துள்ளது. இதில் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மட்டும் 83,881
பெண்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் 22,000
சுய உதவிக் குழு பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு
பயிற்சியும், 3,000 பெண்களுக்கு தொழில் திறன் பயிற்சியும், 650
பெண்களுக்கு தொழில் திறன் உயர்வு பயிற்சியும் வழங்க அரசு ரூ.166.95
இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.8 வாழ்க்கை மற்றும் தொழில் திறன் பயிற்சி

அரசு 2003–2004 ஆம் ஆண்டு, 50,000 தொழில் முனைவோர்
மேம்பாட்டு பயிற்சி பெற்ற சுய உதவிக் குழு பெண்கள் வருமானம்
தரும் பொருளாதார தொழில்களை சுயமாகத் துவங்க ஏதுவாக வாழ்க்கை
மற்றும் தொழில் திறன் பயிற்சி வழங்கும் திட்டத்தைத் தொடங்கியது.
2003–2004 முதல் 2007–2008 வரையில் உள்ள 5 ஆண்டுகளில் ஆண்டு
ஒன்றுக்கு 12,500 பெண்களுக்கு பயிற்சியளிக்க ஆண்டொன்றுக்கு ரூ.100
இலட்சம் வீதம் இத்திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.500 இலட்சமாகும்.
இசைவளித்தபடி 2003–2004 மற்றும் 2004–2005–ம் ஆண்டுகளில் தலா

12,500 பெண்களுக்கு, வாழ்க்கை மற்றும் தொழில் திறன் பயிற்சி அளிக்க ஆண்டொன்றுக்கு ரூ. 100 இலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 31-1-2005 வரை ரூ. 173.00 இலட்சம் செலவில் 19,282 பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர். அரசு 2005–2006 ஆம் ஆண்டில் மேலும் 12,500 பெண்களுக்கு பயிற்சி அளிக்க ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாநில அரசு அளித்துள்ள நிதியைத் தவிர, மத்திய அரசுத் திட்டங்களான நொராடு (NORAD) மற்றும் ஸ்டெப் (STEP) திட்ட நிதிகளையும் சுய உதவிக் குழு பெண்களுக்கு தொழில் திறன் பயிற்சி வழங்க பயன்படுத்தப்படவுள்ளது.

## 4.9 தேனி மாவட்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, தேனி மாவட்ட ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டிற்கு இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள பல்வேறு அரசு நிறுவனங்களின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். இம்மாநிலத்தில் வறுமை ஒழிப்புக்கு சுய உதவி ஒரு சக்தி வாய்ந்த வழிகாட்டு முறையாக திகழ்கிறது. தேனி மாவட்ட ஒட்டு மொத்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தினை 2003–2004 முதல் 2006–2007 வரையிலான 4 ஆண்டுகளில் செயல்படுத்திட ரூ. 220.57 இலட்சம் நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் அனைத்து கிராமங்களிலும் குழுக்கள் அமைத்தல் மற்றும்

- தகுதியுள்ள அனைத்து குழுக்களுக்கும் கடன் வசதி ஏற்படுத்தி தருதல்
- தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி
- தொழில் திறன் மற்றும் தொழில் திறன் உயர்வு பயிற்சி, குறிப்பாக நிலம் சார்ந்த தொழில்களில் பயிற்சி அளித்தல்
- சுகாதாரம் மற்றும் சத்துணவு அளிப்பதன் மூலம் ஊட்டச்சத்து குறைவில்லா மாவட்டமாக்கல் மற்றும் அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் எழுதப் படிக்க தெரிந்தவர்களாக்கல் போன்றவை ஆகும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பாதிக்கப்பட்ட நெசவாளர்கள், சிறுபான்மையின குடும்பங்கள், ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் மலைவாழ் மக்கள் வசிக்கும் இடங்களில் புதிய சுய உதவிக் குழுக்களை





உருவாக்குவது மற்றும் அந்த சுய உதவிக் குழு உறுப்பினர்கட்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் மற்றும் வாழ்க்கை தொழில் திறன் பயிற்சியும் அளிப்பதாகும்.

2004–2005 ஆம் ஆண்டிற்கு அரசு வழங்கிய ரூ. 55.30 இலட்சத்திற்கு தேனி மாவட்டத்திற்கான சிறப்பு செயல் திட்டம் தயாரித்து மாவட்ட ஆட்சியரின் நேரடிப் பார்வையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு, ரூ. 55.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.10 மகளிருக்கான அரசின் மாநிலக் கொள்கை

இந்த அரசு, மகளிருக்கான மாநிலக் கொள்கையினை திறம்பட முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்தி வருகிறது. இது அனைத்து துறைகள் மற்றும் பிரிவுகளின் மேம்பாட்டு கொள்கைகளுக்கு வழிகாட்டுதலாக அமைந்து, பாலின பாகுபாடுகளை நீக்கவும், பெண்கள் வள ஆதாரங்களில் சம பங்கு அடையவும், முடிவு எடுக்கவும் மற்றும் தரமான உயர்வாழ்க்கை பெறுவதற்கும் உதவுகிறது.

அரசுத் துறைகள் மற்றும் கொள்கைகளில் உள்ள பாலின பாகுபாடுகளை சீர்படுத்த ஏதுவாக, அரசின் மகளிருக்கு சாதகமான கொள்கை மற்றும் திட்டச் செயல்பாடுகளின் முன்னேற்ற பலன்களை அளவிட்டு மதிப்பீடு செய்ய மகளிர் வளர்ச்சிக் குறியீடு மற்றும் மகளிர் அதிகாரப் பகிர்வு அளவீடுகள் அடங்கிய மகளிர் மேம்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 4.11 தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி.)

2001 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் தன்னார்வலர்கள் வள ஆதார மையம், ஒரு வள ஆதார மையமாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம், மேம்பாடு நிறுவனங்களின் (அரசு சார்ந்த, அரசு சாரா மற்றும் சமூகம் சார்ந்த) ஊக்கத் திறமையை மேம்படுத்துதல், ஆராய்ச்சி, ஆவணம் தயாரித்தல் மற்றும் தொண்டு மனப்பான்மையை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நிதி அளித்து கண்காணித்து வருகிறது. இந்நிறுவனம் தன்னார்வத் தொண்டு நிறுவன அலுவலர்களின் திறமையை மேம்படுத்த பலவிதமான பயிற்சிகளையும், பணிப் பட்டறைகளையும் நடத்தி வருகின்றது.

[2005 மார்ச் 18

*2004-2005* ஆம் ஆண்டில், டி.என்.வி.ஆர்.சி. மகளிர் மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள, முக்கியமாக மகளிர் திட்ட தொண்டு நிறுவன அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளை நடத்தியுள்ளது.

- அறிக்கை மற்றும் ஆவணங்கள் தயாரிப்பு பயிற்சி ஒன்று
- புத்தக பராமரிப்பு மற்றும் கணக்கீடு பயிற்சி மூன்று
- தகவல் தொழில் நுட்ப விழிப்புணர்வு பயிற்சி இரண்டு
- கணினி பயிற்சி ஆறு
- கிராம மக்கள் பங்கேற்புடன் கூடிய புள்ளி விவர சேகரிப்பு பயிற்சி ஒன்று
- நிறுவன அமைப்புகளின் ஒழுக்க நெறிமுறைகள் போன்றவை குறித்து இரு பணிப் பட்டறைகள்

இப்பயிற்சிகள் மகளிர் திட்டத்தை செயல்படுத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஆற்றலை மேம்படுத்துவதால், சுய உதவிக் குழுக்களை சிறப்பாக கண்காணிப்பதற்கு உதவியாகவுள்ளது.

பயிற்சி நடவடிக்கைகள் தவிர, இந்நிறுவனம் பொன்விழா ஆண்டு நகர்ப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்மூலம் ஏற்படுத்தப்பட்ட அண்டைக் குழுக்களின் தேவைகளை மதிப்பீடு செய்யும் ஆய்வும் நடத்தியுள்ளது. ஒரு மாநில அளவிலான, ஆறு மண்டல அளவிலான மற்றும் இருபத்தி இரண்டு மாவட்ட அளவிலான திட்டங்களை ஒருங்கிணைப்பு பணிப் பட்டறைகளையும் நடத்தியுள்ளது.

மேலும், இந்நிறுவனம், தற்போது உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் அதிகாரப் பகிர்வு மற்றும் வறுமை குறைப்புத் திட்டத்திற்கு, பாலின நிலைப்பாட்டிற்கான வழிகாட்டு முறைத்தாள் தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. மகளிர் வளர்ச்சிக்கான பகுதிகளில் தர உயர்வு மற்றும் தர கணக்கீடு செய்யும் பணிகளில் அதிக கவனம் செலுத்த திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம், *2005–2006* ஆம் ஆண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கான மேலாண்மை பயிற்சி மற்றும் வரவு செலவு கணக்கு மென்பொருள் பயிற்சி, அரசு அலுவலர்களுக்கு தகவல் தொடர்பு மற்றும் கூட்டு பணி பயிற்சிகள் வழங்கவும், தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியினை ஆய்வு செய்தல், தமிழ்நாட்டில் குறு நிதி உதவி குறித்த ஆய்வு போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.



2005 மார்ச் 18]

## 4.12 தரிசு நில மேம்பாடு மற்றும் நீர்வள ஆதாரங்களை வளப்படுத்துதல்

உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணவும், விவசாயிகளுக்கு போதுமான வருமானம் கிடைக்கவும், மற்றும் வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், இந்த அரசு தரிசு நில மேம்பாடு, நீர்வள மற்றும் மண்வள, நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் இந்நிறுவனம் பிற அரசு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு/சுய உதவிக் குழுவிற்கு தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்து வருகின்றது. மாவட்ட அளவில் மகளிர் திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேசிய வேளாண்மை வளர்ச்சி வங்கி (நபார்டு) மற்றும் அரசு சாரா தொண்டு வங்கிகளுடன் இணைந்து நிலம் உள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நிலங்களை மேம்படுத்த தேவையான செப்பனிடு வழிமுறைகளை செய்து வருகின்றது. மாவட்டங்களிலுள்ள வேளாண் இணை இயக்குநரின் ஒத்துழைப்புடன் நிலம் சார்ந்த வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள் மற்றும் மிகச் சிறு வியாபாரம் போன்றவற்றில் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

## 4.13 உலக வங்கி உதவி பெறும் தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமை குறைப்புத் திட்டம்

தமிழக அரசு, உலக வங்கியின் உதவியுடன், தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமை குறைப்புத் திட்டத்தினை செயற்படுத்த முனைந்துள்ளது. தமிழகத்தில் வறுமையைக் குறைக்கவும், பெண்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர்களை ஆற்றல்படுத்துவதும், இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் முதன்மையான இலக்கானது, தமிழக அரசின் ஊரக வறுமைக் குறைப்பு செயற்திட்டத்திற்கு உறுதுணையாக இருப்பது மற்றும் முற்றிலும் மக்கள் பங்கேற்பின் அடிப்படையில், வறுமையைக் குறைக்கவும், பொருளியல் மேம்பாட்டிற்கான செயற்பாடுகளுக்கு துணை நிற்பது மற்றும் நிதியளிப்பது போன்ற பணிகளைச் செய்வதும் ஆகும்.

இத்திட்டம் ஊரக மக்களின் வறுமையைக் குறைப்பதற்கும், வாழ்வாதார மேம்பாட்டிற்கும் கீழ்கண்டவாறு, வழிமுறைகளைக் கையாள உள்ளது.

(அ) ஏழைக்கு உதவும் உள்ளூர் நிறுவனங்களை/குழுக்களை பலப்படுத்துவது மற்றும் அதன் வளர்ச்சிக்கு உதவுதல்

(ஆ) ஏழைகளின் ஊக்கத் திறன் மற்றும் தொழில் திறனை வளர்த்தல்

(இ) உற்பத்தி தேவைக்கான நிதி அளித்தல் – பங்கேற்பு ஆற்றல் துணைத் திட்டங்களுக்கு முதலீடு செய்தல்

இந்த நூதன திட்டத்தை செயல்படுத்த மாநில அளவில் ஒரு சங்கம் அமைக்கப்படும். மேலும் இத்திட்டத்தை செயல்படுத்த மாவட்ட அளவில் சுயமாக இயங்கும் பதிவு பெற்ற சங்கங்கள், 15 திட்ட மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படும்.

இத்திட்டம், தமிழ்நாட்டில் உள்ள 15 மாவட்டங்களிலும், 70 வட்டாரங்களிலும், 2,300 பஞ்சாயத்துக்களிலும் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 3.5 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும்.

ஏழைப் பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர் போன்ற பாதிக்கப்பட்ட மக்களை சுய உதவிக் குழுக்களாக மற்றும் குழு கூட்டமைப்பாக உருவாக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் குறிப்பிட்ட வாழ்வாதாரத்தை நோக்கமாகக் கொண்டது மற்றும் தொடர்ந்து வாழ்வளிக்கும் தொழில்களை மேற்கொள்ள சுய உதவிக் குழுக்கள் மற்றும் தொழில் சார்ந்த குழுக்களுக்கு திறன் ஊக்கம் அளிக்க உள்ளது. சுய உதவிக் குழுக்கள் வருமானம் ஈட்டும் தொழில்களைத் தெரிவு செய்தல், வங்கிகளில் கடன் வசதி பெற உரிய தொழில்நுட்ப உதவிகளை அளிப்பதுடன், விற்பனை இணைப்பு மற்றும் சந்தைப்படுத்தும் வசதி ஏற்படுத்துவதன்மூலம் அவர்களது தொழில் நடவடிக்கைகள் நிலைப்படுத்தப்படும். உடல் ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்றோர், விதவைகள், கணவரால் கைவிடப்பட்டோர் போன்ற பாதிக்கப்பட்ட பிரிவினர்களுக்கு மறு வாழ்வு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான சிறப்புக்கூறுகள் இத்திட்டத்தில் உள்ளன. இத்திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரத்தில் உயர்வு அடையவும், வருமானம் ஈட்டும் தொழில்களில் நிலைத்த தன்மை அடையவும் உதவுகின்ற சுய உதவிக் குழுக் கூட்டமைப்பு மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ள குழுக் கூட்டமைப்புகளை ஊக்கமளித்து உதவி செய்ய உள்ளது.

பஞ்சாயத்து அளவில் ஒரு கிராம வறுமைக் குறைப்பு குழு உருவாக்கப்படும். இக்குழு, திட்டப் பணியாளர்களுடைய வழிநடத்துதலுடன் இத்திட்டத்தினை செயல்படுத்தும் பணியில் முக்கிய பங்கு ஆற்ற உள்ளது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.715/– கோடியாகும். திட்ட தயாரிப்புப் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. உலக வங்கியின் ஒப்புதலுக்குப் பிறகு இத்திட்டம் 2005–2006–ல் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.



# அத்தியாயம்–5

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

5.1 அனைத்துப் பிரிவு மக்களின் நல்வாழ்விற்கு பொறுப்பேற்றிருப்பதே ஒரு நல்லரசின் கடமையாகும். அரசின் உதவிக்கரம் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மக்களையும் ஊனமுற்றோரையும் சென்றடைதல் வேண்டும். பல்வேறு நவீன திட்டங்கள் பொதுவாக இந்நோக்கத்தைச் சார்ந்தே உள்ளன.

ஊனமுற்றோருக்கான நல்வாழ்விற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாநில அரசால் கடந்த 1992-1993-ல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. ஊனமுற்றோருக்கான சட்டம், 1995–ன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டு ஊனமுற்றோருக்கான இயக்ககத்தை நிர்வகித்து வருகிறார்.

ஊனமுற்றோருக்கான அரசின் கொள்கை ஊனத்தைத் தடுத்தல், உரிய நேரத்தில் அவர்களுக்கு உதவுதல் எனும் நோக்கத்துடனும், சாதாரண மனிதர்களைப் போல அவர்களும் சமுதாயத்திலும் குடும்பத்திலும் வாழ்க்கை நடத்த பிரதானமாக வகுக்கப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த கொள்கை ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தேவையான மருத்துவ வசதி மற்றும் தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக அளவில் அவர்களை சுயசார்பு குடிமக்களாக முன்னேற்றி, சமுதாயத்தில் அவர்களையும் மற்றவர்களோடு ஒன்றிணைத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் அரசு, தொழில் முனைவோர், தயாள மனம் கொண்டோர் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உட்பட அனைத்து சமுதாயத்தினருக்கும் ஒருங்கிணைந்த பொறுப்புணர்ச்சி உண்டு.

மேற்காணும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன:

- ஊனமுற்றோர் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சிரமமின்றி சென்று வர வழிவகை செய்தல்
- அவர்கள் உடல் தகுதிக்கு ஏற்ப உதவி உபகரணங்கள் வழங்குதல் உட்பட ஊனத்தின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் கண்டறிதல், ஊனத்தின் காரணத்தை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்து நிவர்த்தி செய்தல், அதற்கான தடுப்பு நடவடிக்கையாக போலியோ, அம்மை, ருபெல்லா, பொன்னுக்குவீங்கி-போன்ற நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசி போடுதல்.

- மேலும், ஒவ்வொரு ஊனமுற்ற குழந்தையும் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி பெறவும் ஊனத்தின் அளவுக்கேற்றவாறு சிறப்புக் கல்வியோ அல்லது ஒருங்கிணைந்த கல்வியோ பெறவும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
- ஊனமுற்றோரின் தகுதி, தேவை, அளவுக்கேற்ப அவர்களை சாதாரணமானவர்களோடு ஒன்றிணைந்து வாழும் அளவுக்கு உயர்த்துதல்.
- ஊனமுற்றோரின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்ட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்க உரிய ஆசிரியர் பயிற்சி மையங்கள் அமைத்தல்.
- ஊனமுற்றோர்களுக்கு உதவிடும் வகையில் கல்வி உதவித்தொகை, இலவசப் பயணச்சலுகை, கல்வி உபகரணங்கள், சிறப்பு உதவி உபகரணங்கள், சிறப்பு ஆசிரியர்கள் நியமனம், விடுதி வசதி ஆகியவற்றை அளித்து உயர்கல்வி பெற தேவையான உதவிகள் செய்தல்.
- ஊனமுற்றோருக்கான உரிய தொழிலைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய நிறுவனத்தில் பயிற்சி அளிக்க பயிற்சி மையங்களை நடத்துதல்.
- இவர்கள் செய்யும் தொழிலுக்கேற்ற தேவையான உபகரணங்கள் வாங்கிட நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தல்.
- சுயதொழில் செய்திட கடன் பெறும்வகையில் வங்கி மற்றும் இதர நிறுவனங்களின் மூலமாக உதவிடல்.
- அனைத்து பொதுக் கட்டடங்களிலும் ஊனமுற்றோருக்கு கட்டட அமைப்பில் தடையற்ற சூழலை உருவாக்குதல் மற்றும் ஊனமுற்றோருக்கு ஏற்படும் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.
- சாதாரணமானவர்களைப் போல ஊனமுற்றவர்களும் சமூக, கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வண்ணம் வழிவகைகள் செய்தல்.

## 5.2 ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ஐ அமலாக்குதல்

ஊனமுற்றோருக்கு சமவாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்தினரோடு இணைந்து



அவர்கள் முழுவதுமாக பங்கு பெறும்வகையில் கடந்த 1995-ல் ஊனமுற்றோருக்கான சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில் இச்சட்டம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்கக இயக்குநரை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமித்து துறைத் தலைமை பதவியோடு இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 5.3 மாநிலத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை

தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில் 1.9 சதவிகிதம் ஊனமுற்றவர்கள். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் 16,42,497 நபர்கள் ஊனமுற்றவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

## 5.4 ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின்மூலம் அவர்களுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் மானியம் பெறாத சிறப்புப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சி பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மானியம் பெறும் பள்ளிகள் | மானியம் பெறாத பள்ளிகள் | | |
| 1 | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 5 | .. | 27 |
| 2 (அ) | பேச்சுத் திறன் குறைந்து செவித் திறன் இழந்தோர் பள்ளி | 10 | 20 | 41 | 1 | 78 |
| (ஆ) | முன்பருவப் பள்ளி | 2 | .. | 4 | .. | .. |

| வ. எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சி பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மானியம் பெறும் பள்ளிகள் | மானியம் பெறாத பள்ளிகள் | | |
| 3 | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 12 | 88 | .. | 101 |
| 4 | கடும் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி | 1 | 14 | 44 | .. | 59 |
| 5 | தொழு நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | .. | 1 | .. | .. | 1 |
| | மொத்தம் | 25 | 58 | 182 | 1 | 266 |

அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:

| பார்வையற்றோருக்கான பள்ளிகள் | பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்தோருக்கான பள்ளிகள் | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் (1–5 ஆம் வகுப்பு) | கடலூர் (1–8 ஆம் வகுப்பு) | மதுரை (1–8 ஆம் வகுப்பு) | சென்னை (தாம்பரம்) (கல்வி கற்கும் மற்றும் பயிற்சி பெறுபவர்களுக்கு மட்டும்) |
| கடலூர் (1–5 ஆம் வகுப்பு) | தருமபுரி (1–12 ஆம் வகுப்பு) | | |





| பார்வையற்றோருக்கான பள்ளிகள் | பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்தோருக்கான பள்ளிகள் | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் |
|---|---|---|---|
| தருமபுரி (1–5 ஆம் வகுப்பு) | ஈரோடு (1–10 ஆம் வகுப்பு) | | |
| மதுரை (1–6 ஆம் வகுப்பு) | காஞ்சிபுரம் (1–10 ஆம் வகுப்பு) | | |
| நாகர்கோவில் (1–5 ஆம் வகுப்பு) | தாம்பரம் (1–8 ஆம் வகுப்பு) | | |
| பூவிருந்தவல்லி (1–12 ஆம் வகுப்பு) | உதகமண்டலம் (1–10 ஆம் வகுப்பு) | | |
| புதுக்கோட்டை (1–5 ஆம் வகுப்பு) | புதுக்கோட்டை (1–8 ஆம் வகுப்பு) | | |
| சேலம் (1–8 ஆம் வகுப்பு) | சேலம் (1–10 ஆம் வகுப்பு) | | |
| சிவகங்கை (1–5 ஆம் வகுப்பு) | தஞ்சாவூர் (1–12 ஆம் வகுப்பு) | | |
| தஞ்சாவூர்* (1–8 ஆம் வகுப்பு) | விருதுநகர் (1–7 ஆம் வகுப்பு) | | |
| திருச்சிராப்பள்ளி (1–12 ஆம் வகுப்பு) | இராமநாதபுரம் (முன் பருவப்பள்ளி மட்டும்) | | |

*2005-2006 கல்வி ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:

(அ) இலவசக் கல்வி, உணவு மற்றும் உறைவிடம்

(ஆ) ஆண்டிற்கு இரண்டு இணை இலவச சீருடை

[2005 மார்ச் 18

பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 19 முன் பருவப் பள்ளிப் பிரிவுகள் கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசு காது கேளாதோருக்கான பள்ளிகளிலும், வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் இணைந்து இயங்கி வருவதுடன் இராமநாதபுரத்தில் உள்ள அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன.

2005–2006–ல் இதற்கென ரூ. 799.77 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**5.5 (அ) ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை**

இத்திட்டத்தின்கீழ் பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோருக்கு படிப்பிற்கான பொருட்கள் வாங்குவதற்கு நிதியுதவி அளித்திட கீழ்க்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது:

| வகுப்பு / படிப்பு | தொகை (ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|
| (அ) 1 – 5 ஆம் வகுப்பு வரை | ரூ. 250/– |
| (ஆ) 6 – 8 ஆம் வகுப்பு வரை | ரூ. 750/– |
| (இ) 9 – 12 ஆம் வகுப்பு வரை | ரூ.1,100/– |
| (ஈ) பட்டப் படிப்பு | ரூ.1,500/– |
| (உ) தொழில் மற்றும் முதுநிலை பட்ட மேற்படிப்பு | ரூ.1,950/– |

**5.5 (ஆ) வாசிப்பாளர் உதவித் தொகை**

பார்வையற்ற மாணவர்களுக்கு பாடங்களை வாசித்து காட்டுகிறவர்களுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகை இதுவரையில் கல்வி உதவித் தொகையின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டு வந்தது. 2004-2005 முதல் வாசிப்பாளர் உதவித் தொகைக்கு தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கீழ்க்கண்ட முறையில் உயர்த்தியும் வழங்கப்படுகிறது.



2005 மார்ச் 18]

| வ. எண் | வகுப்பு | 2003–2004-ல் வழங்கப்பட்ட வாசிப்பாளர் உதவித் தொகை | உயர்த்தப்பட்ட வாசிப்பாளர் உதவித் தொகை (2004–2005 முதல்) |
|---|---|---|---|
| 1 | 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை | ரூ. 500/– | ரூ.750/– |
| 2 | பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம்., | ரூ. 750/– | ரூ.1,250/– |
| 3 | எம்.ஏ., எம்.எஸ்.ஸி., எம்.காம்., பி.எட்., பி.எல்., எம்.எட்., மற்றும் இதர தொழில் படிப்புகள் | ரூ. 1000/– | ரூ.1,500/– |

2005–2006–ல் இத்திட்டத்திற்கென ரூ. 117.72 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**5.6 பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் பள்ளித் தேர்வுகள் எழுத பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

இதற்கு உதவி புரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ. 50 வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடையும் 225 பார்வையற்ற மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை–56.
2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
4. புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை.

[2005 மார்ச் 18

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 2.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.7 அரசு மண்டல பிரெய்லி அச்சகம்

பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளி, பூவிருந்தவல்லியில் இயங்கிவரும் மண்டல பிரெய்லி அச்சகம் மூலம் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு பிரெய்லி புத்தகங்கள் அச்சடித்து வழங்கப்படுகின்றன. இந்த அச்சகம் நவீனமயமாக்கப்பட்டு இரண்டு புதிய கணினிமயமாக்கப்பட்ட சிறிய பிரெய்லி அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இந்த இரண்டு அலகுகளும் இயங்கி வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 4.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.8 சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பல்வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாடம் கற்பிக்கும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு பிரத்தியேக பயிற்சி தேவைப்படுகிறது. இந்த சிறப்புப் பயிற்சியின் காலம் பத்து மாதங்களாகும். பயிற்சிகளின் விவரங்கள்கீழ் வருமாறு:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை–56 | பார்வையற்றோருக்கு போதிக்கும் இளநிலை பட்டயம். | 20 |
| 2 | பாலவிகார் பயிற்சிப் பள்ளி, கீழ்ப்பாக்கம், சென்னை–10 | மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிக்கும் இளநிலை/முதுநிலை பட்டயம் | 25 |
| 3 | சிறுமலர் காதுகேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை–6 | காதுகேளாதோருக்கு போதிக்கும் இளநிலை/முதுநிலை பட்டயம் | 50 |



2005 மார்ச் 18]

2005–2006–ல் இதற்கென ரூ. 15.62 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5.9 பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சி

பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேனிலைப் பள்ளி வளாகத்தில் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சி மையம் (ஆசிரியர் கல்வி பட்டயம்) 2004 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் 20 பார்வையற்றோர், மற்றும் 20 கை, கால் ஊனமுற்றோர் ஆசிரியர் பயிற்சி பெறுவார்கள். இப்பயிற்சி பெங்களூரில் உள்ள மண்டல தேசிய ஆசிரியர் கல்வி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இப்பயிற்சியைப் பெறுவதன் மூலம் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும்.

2005–2006–ல் இதற்கென ரூ. 7.38 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 5.10 நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம்

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் தற்சமயம் கிண்டி தொழிற்பேட்டையில் ஊனமுற்றோருக்கான மாநில சிறப்பு ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இங்கு ஆண்டுதோறும் உடல் ஊனமுற்ற நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வரும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் அனைத்தும் ரூ.45 இலட்சம் செலவில் இக்கூடத்திலேயே தயாரிக்கப்பட்டு அவை யாவும் மாவட்ட மறுவாழ்வு மையங்களின் மூலம் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 23.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.11 பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற, அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு இவர்களுக்கு சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருட்கள் அரசு மருத்துவமனை மற்றும்

பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தம் 20 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் தங்கி பயனடைந்து வருகிறார்கள்.

**5.12 மாவட்ட மறுவாழ்வு மையம் மூலம் ஊனமுற்றோருக்கான பயிற்சிகள்**

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின்கீழ் செயல்படும் மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக ஒவ்வொரு வருடமும் கீழ்கண்ட பயிற்சிகள் இலவசமாக முறையே வழங்கப்பட்டு வருகின்றன:—

1. மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்ப பட்டயப் பயிற்சி (ஈராண்டு காலம்) (சென்னை, சேலம், கோவை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை)

2. க்ணினி பயிற்சி (ஆறு மாத காலம்) (சென்னை, சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி)

இப்பயிற்சிகள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. கல்விக் கட்டணம் மற்றும் பயிற்சிக் கட்டணம் உட்பட அனைத்தையும் அரசே ஏற்றுக்கொண்டு மேலும், பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.300/- வீதம் உதவித் தொகையாகவும் வழங்கி வருகிறது.

மேற்கூறிய பயிற்சிகளில் உடல் ஊனமுற்றோர், வாய் பேசாத மற்றும் காது கேளாத மற்றும் கண் பார்வையற்ற மாணவ மாணவியர்கள் சேர்ந்து பயன்பெற்று எதிர்காலத்தில் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள ஏதுவாக அமைகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு மேற்கண்ட பயிற்சிக்காக ரூ. 20.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.13 ஊனமுற்றோருக்கான பயிற்சி**

சென்னை, பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு மேனிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் 24 பார்வையற்றோருக்கு கீழ்க்கண்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:—

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)

2. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்)



3. வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (ஓராண்டு காலம்) (பெண்களுக்கு மட்டும்)

மேற்கூறிய பயிற்சிகள் பெறும் பயனாளிகளுக்கு அவ்விடத்திலேயே இலவசமாக உணவு, பயிற்சி, இருப்பிடம், மற்றும் இரண்டு சீருடைகள் வழங்கப்படுகின்றன.

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத ஊனமுற்ற நபர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சிறப்புப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு தற்போது பொருத்துநர் பிரிவில் 16 நபர்கள் பயிற்சிகள் பெற்று வருகின்றனர். மேலும், பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் கல்வி உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 20.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.14 போலியோ மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதித்தோருக்கான இலவச அறுவை சிகிச்சை**

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின்கீழ் செயல்படும் அனைத்து மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக முகாம்கள் நடத்தி அந்தந்த மாவட்ட பகுதிகளில் போலியோ மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு "இலவச சரி செய்தலுக்கான அறுவை சிகிச்சை" மேற்கொண்டு அந்த ஊனமுற்ற நபர்களின் உடல் உறுப்புகள் மேலும் ஊனமாகாமல் தடுத்து சாதாரண நிலையில் நடந்து செல்ல ஏதுவாகவும், அவர்களது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள ஏதுவாகவும் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது.

இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஊனமுற்ற நபர்களுக்கு ரூ.500/– உதவித் தொகையாகவும் மற்றும் மருத்துவமனையில் தங்கும் செலவிற்காகவும் வழங்கப்படுவதுடன், அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் மற்றும் செவிலியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.300/–ம் வழங்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 4.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**5.15 ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள் வழங்குதல்**

பல்வேறு வகையான ஊனத்தினால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு இத்துறை மூலம் கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள் அவரவர்

தகுதி, திறன், பாதிப்பு மற்றும் தேவைக்கேற்ப இலவசமாக அளிக்கப்படுகின்றன:-

1. மூன்று சக்கர வண்டிகள்
2. சக்கர நாற்காலிகள்
3. கறுப்பு கண்ணாடிகள்
4. மடக்கு ஊன்றுகோல்கள்
5. பிரெய்லி கைக் கடிகார்ங்கள்
6. காதொலிக் கருவிகள்
7. சோலார் மறு செறிவூட்டக்கூடிய பாட்டரிகள்
8. காலிப்பர்கள் அல்லது கால் தாங்கிகள்
9. கிரட்ச்சஸ் அல்லது தோள்பட்டை தாங்கிகள் மற்றும்
10. செயற்கை அவயங்கள்

மேற்கூறப்பட்ட அனைத்து உதவி உபகரணங்கள் மூலம் ஊனமுற்ற நபர்கள் சமுதாயத்தில் அவர்களுடைய அன்றாட பணிகளையும் அவர்களே செய்துகொள்ள ஏதுவாக இருப்பதனால் பிறர் உதவி எவ்விதத்திலும் இல்லாமல் அவர்கள் சமூகத்தில் மற்ற நல்ல நிலையிலுள்ள நபர்களைப் போலவே நடமாட முடிகிறது.

மேலும் காலிப்பர்கள், கால்தாங்கிகள் மற்றும் செயற்கை அவயங்கள் போன்ற உதவி உபகரணங்கள் மாவட்ட மறுவாழ்வு மையங்களில் உள்ள முடநீக்கு பிரிவில் அளவுக்கு ஏற்றவாறு தயாரித்து இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ. 75.01 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.16 ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில் மூன்று சதவீதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவீதத்தில் ஒரு சதவீதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவீதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.



கல்வித் துறையில் ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு இரண்டு சதவீதமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் காது கேளாத பேசும் திறனற்றவர்களுக்கு இரண்டு சதவீதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.17 வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை 5 வருட காலத்திற்கு, அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படுகிறது.

(அ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம் பின்வருமாறு:

| கல்வித் தகுதி | வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 1 பட்டதாரிகள்/ முதுநிலைப்பட்டதாரிகள் | ரூ.300/- |
| 2 புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேர்ச்சி/பட்டப் படிப்பிற்குக் கீழ் | ரூ.250/- |
| 3. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக் கீழ் | ரூ.200/- |

(ஆ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்தபட்சம் ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் 1200 பார்வையற்ற நபர்கள் பயனடைகிறார்கள்.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 42.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. [2005 மார்ச் 18

**5.18 சுய வேலைவாய்ப்பு**

ஊனமுற்றோருக்கு உதவும்பொருட்டு அவர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ளவும், பெட்டிக்கடை அமைத்துக்கொள்ளவும் இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. ரூ.2,000/– அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டிலிருந்து மானியம் ரூ.3,000/– ஆக உயர்த்தப்படுவதுடன் பயன்பெறுவோரின் எண்ணிக்கையும் 875 லிருந்து 1,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பெட்டிக் கடை வைக்க விரும்பும் ஊனமுற்ற நபர்களுக்கு ரூ.5,000/– அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது பெட்டிக் கடை மானியமாக வழங்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் 1,050 நபர்கள் பயன் பெறுவர்.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 32.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கான சுய வேலை வாய்ப்புக்கு மேலும் உந்துதல் அளிக்கும்பொருட்டு, தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெறப்படும் கடன்களுக்கு அரசு முழு உத்தரவாதம் அளித்துள்ளது.

**5.19 சிறப்பு மருத்துவர்கள் கௌரவ ஊதியம்**

அடையாள அட்டை/மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றில் சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள் ஆகியோரின் கையொப்பம் பெறும்பொருட்டு ஊனமுற்றோர் எதிர்நோக்கும் சிரமங்களை நீக்கும்வகையில் ஒற்றைச் சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பு மருத்துவர்கள் (காது மூக்கு தொண்டை நிபுணர், மனநல மருத்துவர், முடநீக்கியல் நிபுணர், கண் மருத்துவர் போன்றோர்) மாவட்ட மறுவாழ்வு மையங்களுக்கு ஒரு குறிப்பிட்ட நாளில் வருகை புரிந்து அனைத்து ஊனமுற்றோர்களையும் பரிசோதித்து, தேவையான அடையாள அட்டை மற்றும் மருத்துவச் சான்றிதழ் அதே நாளில் வழங்கப்படுகின்றன.



2005 மார்ச் 18]

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 1.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.20 ஊனமுற்றோரை திருமணம் செய்துகொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கான சலுகைகள்**

ஊனமுற்றோரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவி | பயனாளிகள் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) 2005–2006 |
|---|---|---|---|---|
| 1 | பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ. 3,000/- 2. ரூ. 7,000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரம் | 100 | 10.00 |
| 2 | ஒரு கை அல்லது கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவர்களுக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ. 3,000/- 2. ரூ. 7,000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரம் | 145 | 14.50 |
| 3. | காதுகேளாத வாய்பேசாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கு சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ. 3,000/- 2. ரூ. 7,000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரம் | 145 | 14.50 |

[2005 மார்ச் 18

### 5.21 உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்

பார்வையற்றவர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது. ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் கல்விக் கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர வழங்கப்படுகிறது. பார்வையற்றவரும், கால் முடமானோரும், விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை அவர்கள் சொந்த ஊருக்குச் சென்றுவர, இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். மனவளர்ச்சி குன்றியவர்களைப் பொருத்தமட்டில் ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை அரசு விலக்கி ஆணையிட்டுள்ளது. அனைத்து மன்வளர்ச்சி குன்றியவரும் உதவியாளர் ஒருவருடன் இலவச பேருந்துப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.22 ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென பணியாற்றும் அரசு சாரா நிறுவனங்களைப் பதிவு செய்தல்

ஊனமுற்றோருக்கென எவ்விதமான மறுவாழ்வுப் பணியை மேற்கொண்டிருந்தாலும், அத்தகைய அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் அனைத்தையும், ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ன் 52-வது பிரிவின்கீழ் பதிவு செய்ய ஊனமுற்றோருக்கான சிறப்பு ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### 5.23 ஊனமுற்றோருக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல்

ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ல் குறிப்பிட்டுள்ளவாறு ஊனமுற்றோருக்கு தடையில்லா சூழ்நிலையை ஏற்படுத்தி, உடல் ஊனமுற்றோர் பயனடையும் வகையில் பொதுக் கட்டடங்களில் சாய்வு தளம் மற்றும் இதர தடையில்லா சூழ்நிலையை ஏற்படுத்த சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பகுதிக்கான வளர்ச்சி கட்டுப்பாடு விதிகளுக்குத் தக்க திருத்தங்களை அரசு வெளியிட்டுள்ளது.



2005 மார்ச் 18]

### 5.24 கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை

கடுமையான ஊனமுற்றோர்களுக்கு மாதம் ரூ.200 வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1–1–2003 முதல் பராமரிப்பு உதவித் தொகை பயனாளிகளுக்கு பண அஞ்சல் (Money order) வாயிலாக மாதந்தோறும் அவர்களுடைய வீட்டிற்கே அனுப்பப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் 8400 கடும் ஊனமுற்ற நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

2005-2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 211.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.25 மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிருக்கான பாதுகாப்பு இல்லம்

14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு 30 பெண்கள் பயனடையும் வண்ணம் ஆண்டுதோறும் தலா ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 நிறுவனங்களுக்கு (மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் வேலூர்) மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 12.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.26 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான தேனி மாவட்டத்தில் இரண்டு பகல் நேர மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தும் திட்டம்

தேனி மாவட்டத்தில் 60 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் இரண்டு பகல் நேர பராமரிப்பு மையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் 2003–2004 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 9.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

## 5.27 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு தேனி மாவட்டத்தின் சிறப்பு மையம்

தேனி மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் மனவளர்ச்சி குன்றிய 25 குழந்தைகள் பயனடையும் வகையில் அரசின் நிதியுதவியுடன் சிறப்பு மையம் ஒன்று துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

*2005–2006* ஆம் ஆண்டில் இதற்கென ரூ. *1.59* இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.28 மனநோய் மறுவாழ்வு மையங்களைப் பதிவு செய்தல்

மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை வரன்முறைபடுத்த வேண்டி, இந்தியாவிலேயே முதன் மாநிலமாக தமிழ்நாடு, மனவளர்ச்சி குன்றியோர் மறுவாழ்வு மையங்கள் விதி இயற்றப்பட்டுள்ளது. அதன்கீழ் நிறுவனங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

## 5.29 சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி

*10* உடல் ஊனமுற்ற சட்ட பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொருவருக்கும் ரூ.*3,000/*— உதவித் தொகை வழங்கப்படுகிறது.

*2005–2006* ஆம் ஆண்டில் இதற்கென ரூ.*0.30* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.30 அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள்

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தைப் பின்பற்றி ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதம் *3* ஆம் நாள் "அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளாக" கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஊனமுற்றோரின் கலை மற்றும் விளையாட்டுத் திறமை மற்றும் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து காண்பித்தலை ஊக்கப்படுத்துவதே இந்த விழாவின் முக்கிய நோக்கமாகும். அக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக டிசம்பர் மாதம் முதல் நாளன்று ஊனமுற்ற குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சென்னை, இராசரத்தினம் விளையாட்டரங்கில் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் *5000* ஊனமுற்ற மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். *102* வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் மற்றவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



*2005 மார்ச் 18*]

இதன் தொடர்ச்சியாக டிசம்பர் *3* ஆம் நாள், கலைவாணர் அரங்கில் ஊனமுற்ற குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறும் பள்ளிகளிலிருந்து *1,200* குழந்தைகள் பங்கு பெற்றனர். இவ்விழாவில் சிறந்த வேலைவாய்ப்பு அளித்தவர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர் மற்றும் சிறந்த நிறுவனத்திற்கான விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நாளில் தமிழக அரசின் மாநில விருதுகள் வழங்குதல் மற்றும் ஊனமுற்றோருக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

*2005–2006* ஆம் ஆண்டில் இதற்கென ரூ. *5* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

## 5.31 மாநில விருதுகள்

ஊனமுற்றோருக்கான சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு கீழ்க்கண்ட மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்றும், அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்றும் வழங்கப்படுகின்றன:

ஆண்டுதோறும் சுதந்திர தின விழாவன்று வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| *1* | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த நிறுவனத்திற்கு விருது | *10* கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| *2* | ஊனமுற்றோருக்கான மிகச் சிறந்த நிறுவனத்திற்கான விருது | *10* கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.*50,000/*– ரொக்கப் பரிசு |
| *3* | மகளிர் நலத்திற்காக மிகச் சிறந்த சேவை புரியும் நிறுவனத்திற்கான விருது | *10* கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் மற்றும் ரூ.*50,000/*– ரொக்கப் பரிசு |
| *4* | ஊனமுற்றோருக்காக மிகச் சிறப்பாகப் பணி புரிந்த சமூக பணியாளருக்கான விருது | *10* கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

[2005 மார்ச் 18

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 5 | மகளிர் நலத்திற்காக மிகச் சிறப்பாகப் பணியாற்றிய சமூகப் பணியாளருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | ஊனமுற்றோருக்கு அரும் சேவை செய்த மருத்துவருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | ஊனமுற்றோர் நலனுக்காக அரும் பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 8 | மிகச் சிறந்த மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்று (டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி) வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்

| வ. எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பளித்த தொழிலதிபர்களுக்கு விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஊனமுற்றோரில் மிகச் சிறந்த பணியாளர் விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியருக்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | சிறந்த நிறுவனத்திற்கான விருது | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | இலட்சுமிகாந்தம் அம்மாள் விருது (பார்வையற்ற சிறந்த மாணவர்களுக்கானது) | சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.1,200/- |



2005 மார்ச் 18]

## 5.32 தேசிய விருதுகள்

இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் அளிக்கும் அமைச்சகம், ஒவ்வொரு ஆண்டும் ஊனமுற்ற பணியாளர்கள், ஊனமுற்றோரை மிக அதிக அளவில் பணியமர்த்தும் நிறுவனம், ஊனமுற்றோருக்குச் சிறந்த மறுவாழ்வு உதவிகள் வழங்கும் நிறுவனம், ஊனமுற்றோரை அதிக அளவில் பணியமர்த்திய அலுவலர், திறன்மிகு ஊனமுற்ற சிறார்கள் ஆகியோரை ஊக்குவிக்க தேசிய விருதுகளை அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளாகக் கடைபிடிக்கப்படும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் வழங்கி வருகிறது. மேலும், ஊனமுற்றோருக்குப் பயன்படும் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் தேசிய விருது வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி, ஒவ்வொரு ஆண்டும், இந்த அமைச்சகத்தால் தேசிய அளவில் மொத்தம் 12 பிரிவுகளில் 70 தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டுக்காக அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்று வழங்கப்பட்ட 58 விருதுகளில் 14 விருதுகள் தமிழகத்திற்கே வழங்கப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம், ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்குவதில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாவட்டமாக இந்திய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## 5.33 மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

இந்திய அரசின் உதவியுடன் செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று பலவகைப்பட்ட ஊனமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. சுமார் 2,000 பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள்.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 26.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தின் இதர 28 மாவட்டங்களிலும் இதைப் போன்ற மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாநில அரசின் நிதியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும் உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.345.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

**5.34 மாவட்ட மறுவாழ்வு மையங்களில் பணியாற்றும் பார்வையற்ற பணியாளர்கள்**

சென்னை மற்றும் மதுரை நீங்கலாக இதர 27 மாவட்ட மறுவாழ்வு மையங்களில் ரூ.2100–30–2400 என்று வரையறுக்கப்படாத சம்பள ஏற்ற முறையில் நாற்காலி ஒயர் பின்னும் பார்வையற்ற பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

2005–2006 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.11.27 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.35 ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் (National Programme for Rehabilitation of Persons with Disabilities)**

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகளை வழங்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசியத் திட்டம் தேனி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.178 கோடியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட மாவட்டங்களில் மறுவாழ்வுப் பணிகள் ஒன்றியம் மற்றும் ஊராட்சியளவில் செயல் படுத்தப்படுகின்றன. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணியாளர்கள் 2,200 பேர் மற்றும் 60 பல்நோக்கு மறுவாழ்வுப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இவர்களுக்கு மறுவாழ்வுப் பணியில் பயிற்சி முறையே ஒரு மாதம் மற்றும் மூன்று மாதங்கள் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐம்பது மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் ரூ.168.14 மற்றும் ரூ.153.30 இலட்சம் செலவில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தினை மேற்கண்ட நான்கு மாவட்டங்களில் 2005–2006 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்த ரூ.153.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னையில் மாநில அளவிலான ஊனமுற்றோருக்கான வளம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

**5.36 சுனாமியால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு உதவிகள் வழங்குதல்**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை 26-12-2004 அன்று தாக்கிய சுனாமி ஆழிப்பேரலைகள் கடுமையான உயிர்ச்சேதத்தையும்,



2005 மார்ச் 18]

பொருட்சேதத்தையும் ஏற்படுத்தி வீடுகளையும், உடைமைகளையும் இழக்கச் செய்தது.

தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 13 மாவட்டங்கள் சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலர்கள், முகாம்களில் உள்ள பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்களைக் கணக்கெடுத்து அவர்களுக்குத் தேவையான மறுவாழ்வு உதவிகளை வழங்கும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

தமிழ்நாட்டில் 2,494 ஊனமுற்றவர்கள் சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 1007 ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி போன்ற உதவிப் பொருட்கள் தேவைப்படுகின்றன. போர்க்கால அடிப்படையில் இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டு ஊனமுற்றோருக்கான உதவிப்பொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**5.37 அரசு மறுவாழ்வு இல்லங்கள்**

தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளுக்கு புனர்வாழ்வு அளித்திட 10 அரசு மறுவாழ்வு இல்லங்களை தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துள்ளது:—

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் | |
|---|---|---|
| 1. | பர்கூர் | தருமபுரி மாவட்டம் |
| 2. | தேவியாக்குறிச்சி | சேலம் மாவட்டம் |
| 3. | மல்லவாடி | திருவண்ணாமலை மாவட்டம் |
| 4. | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் மாவட்டம் |
| 5. | பரனூர் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 6. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| 7. | செல்லியம்பட்டி | தருமபுரி மாவட்டம் |
| 8. | உளுந்தூர்பேட்டை | விழுப்புரம் மாவட்டம் |
| 9. | விண்ணப்பள்ளி | ஈரோடு மாவட்டம் |
| 10. | யா.புதுப்பட்டி | மதுரை மாவட்டம் |

[2005 மார்ச் 18

ஒவ்வொர் அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாக சேர முன்வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்தியபின், இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் கணவனோ அல்லது மனைவியோ எவரேனும் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் இல்லத்தில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இல்லங்களில் தங்கும் இல்லவாசிகள் முழுமையாகக் குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ இல்லத்தை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி, இவற்றுடன் வெவ்வேறு தொழில்களில் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. திரைப்படம், வண்ணத் தொலைக்காட்சி, நூலகம், விளையாட்டு போன்ற பொழுதுபோக்கு வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. இல்லத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.15/– மதிப்பீட்டிலும், அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.10/– மதிப்பீட்டிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களில் சிறப்பு உணவு கூடுதலாக ரூ.5/– மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன் பொங்கல் அன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுக்கு ஒரு முறையும், போர்வைகள் மூன்று ஆண்டுக்கு ஒருமுறையும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் முழுமையான மருத்துவ வசதிகளுடன் மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவினம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இல்லவாசிகளுக்கு, வழங்கப்படுகிறது.



2005 மார்ச் 18]

| வ. எண் | செலவினம் (ஆண்டொன்றுக்கு) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | செயற்கை காலணிகள் மற்றும் செயற்கை கால் அவயங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | 1000/– |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | 2000/– |
| 3. | பற்பொடி மற்றும் பல்துலக்கும் புருசு வழங்குவதற்கு (வருடமொன்றுக்கு) | 2000/– |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் வாங்கிட | 1200/– |
| 5. | இசைக்கருவிகள் வாங்கிட | 400/– |

மேலும், இல்லவாசிகள் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/– வழங்கப்படுகிறது.

1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வழங்கிட ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உடல் தகுதியுள்ள இல்லவாசிகளுக்கு பாய், துணி நெய்தல், தையல், காலணிகள் உற்பத்திப் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவர்களின் உடல் உழைப்பிற்கு ஏற்றவாறு போதுமான கூலி வழங்கப்படுகிறது. பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் விசைத்தறி ஒன்று இயங்கி வருகிறது.

2005–2006 ஆம் நிதியாண்டிற்கு ரூ.496.45 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.38 அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்

1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் பிச்சை எடுப்பவர்களைத் தடை செய்து நீதிமன்றங்கள் மூலமாக தண்டிக்கப்பட்டவர்கள், சென்னை மாநகரில் மேல்பாக்கம் ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் பாதுகாப்புடன் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு வரையிலான தண்டனைக் காலம் வரை அவர்கள் பராமரிக்கப்படுவதற்காக 1954 ஆம் ஆண்டு மார்ச் முதல் நாள் முதல் 950 (ஆண்கள் 770 + பெண்கள் 180) என்று நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டது. நீதிமன்றங்கள் வாயிலாக தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு இவ்வில்லத்தில் இலவச தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மண்பாண்டம் மற்றும் தையல் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

[2005 மார்ச் 18

மேலும், இல்லத்திலுள்ள ஆண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டு, இரண்டு இணை சட்டைகள் மற்றும் கால் சட்டைகளும், பெண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு இணை சேலைகள் மற்றும் ஜாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. மேலும், பொங்கல் நாளன்று இலவச வேட்டிகளும் சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, டம்ளர், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன் சொந்த ஊருக்குச் செல்வதற்கு இருப்பூர்தி பயணச்சீட்டு / பேருந்துக் கட்டணங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வில்லத்திற்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.44.87/- இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல் ஊனமுற்றோர் நலம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | கை, கால் ஊனமுற்றவர்களுக்கு / முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து சரி செய்தல் | 4.00 |
| 2 | கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்குதல் | 75.00 |
| 3 | இயலாமையுற்றோருக்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி | 20.00 |
| 4 | ஒவ்வொன்றும் ரூ.60,000 மதிப்புள்ள புள்ளிவரிசை அச்சுப் பொறியுடன் கூடிய கணினிகளை 13 துணை இயக்குநர் வட்டார அலுவலகங்களுக்கு வழங்குதல் | 7.80 |
| 5 | அறைக்கலன் மற்றும் எல்சிடி புரொஜெக்டருடன் கூடிய மாநாட்டுக் கூடம் ஒன்றை ஆணையரகத்தில் அமைத்தல் | 1.75 |
| 6 | இலக்குமறை படிப்பெருக்கியை/ நகலெடுக்கும் சாதனத்தை வழங்குதல் (பழைய படிப்பெருக்கி சாதனத்தை திரும்ப வாங்கிக் கொண்டு) | 1.93 |
| 7 | ஜெஸ்ட்னர் டிஜிட்டல் படிப்பெருக்கி வழங்குதல். (நெட்வொர்க் / அச்சுப்பொறி / ஸ்கோர் / மின் அஞ்சலுக்கு ஸ்கேன் செய்தல்) | 1.40 |



2005 மார்ச் 18]

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 8 | ஊனமுற்றோருக்கான சுய வேலைவாய்ப்பு உதவித் தொகையை அதிகரித்தல் | 12.50 |
| 9 | தருமபுரி காது கேளாதோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கணினி கல்வியை அறிமுகப்படுத்துதல். | 3.40 |
| 10 | தஞ்சாவூரிலுள்ள பார்வையற்றோருக்கான நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துதல். | 5.06 |
| 11 | தாம்பரத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான அரசு நிறுவனத்திற்கு கூடுதலாக மாணவரில்லம் மற்றும் பள்ளிக் கட்டடம் கட்டுதல். | 24.00 |
| 12 | தாம்பரத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான அரசு நிறுவனத்திற்கு உடற்பயிற்சி சாதனங்களை வாங்குதல். | 1.00 |
| 13 | பார்வையற்றோருக்கான 8 சிறப்புப் பள்ளிகளுக்கும், காது கேளாதோருக்கான 9 சிறப்புப் பள்ளிகளுக்கும் தொலைபேசி சாதனம் வாங்குதல் | 1.56 |
| 14 | காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிக்கு வகுப்பறைக் கலன்கள் (ரூ.5000 X 12 சாய்வு மேசைகள் X 10 பள்ளிகள்) வழங்குதல் | 6.00 |
| 15 | பார்வையற்றோருக்கான 11 சிறப்புப் பள்ளிகளுக்கும், காது கேளாதோருக்கான 10 சிறப்புப் பள்ளிகளுக்கும் கடுமையாக கை, கால் ஊனமுற்றோருக்கான 1 சிறப்பு பள்ளிக்கும் கல்வி கற்பிப்பதற்கான கருவிகள் ( ரூ.8000 X 22 பள்ளிகள்) வழங்குதல் | 1.76 |
| 16 | பார்வையற்றோருக்கான 2 மேனிலைப் பள்ளிகளுக்கும், காது கேளாதோருக்கான 2 மேனிலைப் பள்ளிகளுக்கும், காது கேளாதோருக்கான 2 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் குறிப்புப் புத்தகங்களையும், நூலகப் புத்தகங்களையும் வழங்குதல். | 1.20 |
| 17 | அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்களுக்கும் மற்றும் மேல்பாக்கத்திலுள்ள இயலாமையுற்றோருக்கான அரசு பாதுகாப்பு முகாமிற்கும் சமையலுக்கான பாத்திரங்களை வாங்குதல். | 3.00 |
| | மொத்தம் | 171.36 |

[2005 மார்ச் 18

# அத்தியாயம் 6

## சமூகப் பாதுகாப்பு

### 6.1 முன்னுரை

துயருரும் சூழலில் உள்ள சிறார்களுக்கு சேவை புரிவதில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. ஆதரவற்ற, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக முதல் சீர்திருத்தப்பள்ளி 1887 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் செங்கல்பட்டில் துவங்கப்பட்டது.

சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக இளைஞர் நீதிச்சட்டம், 1986 (மத்திய சட்டம்) 02-10-1987 முதல் அமலாக்கம் செய்யப்பட்டது. குழந்தைகள் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் சாற்றுரையின் அடிப்படையில், மத்திய அரசு 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தை மறு ஆய்வு செய்து 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) என்ற புதிய சட்டம் இயற்றி உள்ளது. இப்புதியச் சட்டத்தின் விரிவான விதிமுறைகளை தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் எண் 94 நாள் 14-2-2002-ல் அறிவிக்கை செய்துள்ளது. இச்சட்டத்தினை அமல்படுத்தியதில் தமிழக அரசு முதன்மையாகத் திகழ்கிறது. திருத்தப்பட்ட சட்டத்தின்படி தற்போது சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய இளைஞர் நலக்குழுமம் குழந்தைகள் நலக்குழுவாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இளைஞர் நீதி மன்றங்கள் இளைஞர் நீதிக்குழுமமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு குழுமங்களும் நிறுவப்பட்டு நன்முறையில் இயங்கிவருகின்றன. இதேபோன்று, பல்வேறு சிறார்கள் கவனிப்பு நிறுவனங்கள், இச்சட்டத்தின்கீழ் பெயர் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

### இளைஞர் நீதிக் குழுமங்கள்

திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் சட்டத்தின்படி 8 இடங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் பிரிவு 4(1)-ன்படி அமைக்கப்பட்டு, (சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கடலூர், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர்) தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் குறித்த வழக்கு விசாரணைகள் இளைஞர் நீதிக் குழுமங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குழுமங்கள் பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியாளர்கள் (ஒரு பெண் சமூகப் பணியாளர் உட்பட) 1973 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை



2005 மார்ச் 18]

விதித்தொகுப்பின்படி அதிகாரங்களைக் கொண்ட நீதிமன்ற நடுவர் குழுவாக இளைஞர் நீதிக் குழுமங்கள் செயல்படுகின்றன. வாரத்தில் திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் சம்பந்தப்பட்ட கூர்நோக்கு இல்லங்களில் இளைஞர் நீதிக் குழுமங்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வழக்குகளை விசாரிக்க கூடுகின்றனர்.

### கூர்நோக்கு இல்லங்கள்

தவறிழைத்ததாகக் கருத்தப்படும் சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள் மூலமாக கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அரசு சாரா அமைப்புகளின்கீழ் இயங்கும் கூர்நோக்கு இல்லங்களுக்கு பராமரிப்பு மானியமாக, அரசு மாதம் ஒன்றுக்கு ஓர் இல்லவாசிக்கு ரூ.225/– வீதம் வழங்குகிறது.

தற்போது, மாற்றி அமைக்கப்பட்ட சட்டத்தின்படி, சட்டத்திற்குப் புறம்பாக (தவறிழைத்த) செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் மட்டுமே கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். தற்போதுள்ள 8 கூர்நோக்கு இல்லங்களின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர்.) | 6 |
| 2 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூர்நோக்கு இல்லங்கள் (மதுரை மற்றும் கோயம்புத்தூர்) | 2 |
| | மொத்தம் | 8 |

### சிறுவர் / சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் பிரிவு 9(1)-ன்படி, சிறுவர்/சிறுமியருக்கான 2 சிறப்பு இல்லங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் மூலம் தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் அனுமதிக்கப்பட்டு அச்சிறார்களுக்கு கவனிப்பு, பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு ஆகியவை அவர்கள் வீடேகும் நாள் வரை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் சிறுமியருக்கான சிறப்பு இல்லம், சென்னை | 1 |
| 2 | அரசினர் சிறுவருக்கான சிறப்பு இல்லம், வேலூார் | 1 |
| | மொத்தம் | 2 |

2005–2006 ஆம் ஆண்டில் இளைஞர் நீதிக் குழுமங்கள் / கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களைப் பராமரிக்க ரூ. 135.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குழந்தைகள் நலக் குழுக்கள்**

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் பிரிவு 29(1)-ன்படி, கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் சிறார்களுக்கு கீழ்கண்ட இல்லங்களில், 18 குழந்தைகள் நலக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. சென்னை | 7. சேலம் | 13. தஞ்சாவூர் |
| 2. செங்கல்பட்டு | 8. கோயம்புத்தூர் | 14. திருச்சிராப்பள்ளி |
| 3. இராணிப்பேட்டை | 9. விருதுநகர் | 15. மதுரை |
| 4. கடலூர் | 10. திண்டுக்கல் | 16. திருநெல்வேலி |
| 5. தருமபுரி | 11. காரைக்குடி | 17. நாகப்பட்டினம் |
| 6. ஈரோடு | 12. தூத்துக்குடி | 18. திருவள்ளூர் |

ஒவ்வொரு குழந்தைகள் நலக் குழுவும் ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் கொண்ட (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) குழுவாக அமைக்கப்பட்டுள்ளது. பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்ட நடுவர் குழுவாக குழந்தைகள் நலக் குழுக்கள் செயல்படுகின்றன. இக்குழுக்கள் வாரத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் சம்பந்தப்பட்ட குழந்தைகள் இல்லங்களில் கூடுகின்றன.

**சிறுவர் / சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்**

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் அமையப்பெற்ற 31 சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களில் பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (செங்கல்பட்டு, தட்டப்பாறை, இராணிப்பேட்டை, தஞ்சாவூர், சென்னை–13, மல்லிப்புத்தூர், பஞ்சப்பள்ளி, ஈரோடு, விழுப்புரம் மற்றும் காரைக்குடி) சிறுமியர் – 1 (சென்னை) | 11 |





| | | |
|---|---|---|
| 2. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (சென்னை–21, சென்னை–113, சென்னை–8, சென்னை–93, சென்னை–17, சென்னை–107, சென்னை–39, சென்னை–10 (2 இல்லங்கள்), காந்திகிராம், கோயம்புத்தூர், தருமபுரி, சேலம், மதுரை, திருவள்ளூர், திருவண்ணாமலை, விருதுநகர், மயிலாடுதுறை, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி) | 20 |
| | மொத்தம் | 31 |

மாற்றியமைக்கப்பட்ட சட்டத்தின்கீழ் குழந்தைகள் நலக் குழுவின் ஆணைப்படி, கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக மட்டும் அனுமதிக்கப்படும் சிறார்கள், குழந்தைகள் இல்லங்களில் அனுமதித்து பராமரிக்கப்படுகின்றனர்.

அரசு சாரா நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.225/– என பராமரிப்புத் தொகை அரசால் வழங்கப்படுகிறது.

**பிற்காப்பு நிறுவனங்கள்**

சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து வீடேகும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு, பிற்காப்பு நலத்திட்டங்களைச் செயல்படுத்த கீழ்குறிப்பிட்ட இடங்களில் மூன்று "பிற்காப்பு நிறுவனங்கள்" செயல்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) | 1 |
| 2 | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், மதுரை | 1 |
| 3 | அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம் (வேலூர்) | 1 |
| | மொத்தம் | 3 |

பிற்காப்பு நிறுவனத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு, திரை அச்சுக்கலை, இருசக்கர வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல், மற்றும் கணினி பயிற்சி (டி.டி.பி) போன்ற வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சிகள் கற்பிக்கப்படுகிறது. குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியேறும் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் தங்கள் உயர் கல்வியினைத் தொடர பிற்காப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

[2005 மார்ச் 18

2005–2006 ஆம் ஆண்டில் குழந்தைகள் நலக் குழுக்கள்/குழந்தைகள் இல்லங்கள் மற்றும் பிற்காப்பு நிறுவனங்களைப் பராமரிக்க ரூ. 773.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.2 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள்**

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களில் இவர்களுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு வழங்கப்படுகிறது. மேலும் இவ்வில்லங்களில் ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர், பாதுகாப்பிற்காக தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் தங்குவதற்கு, இயக்குநர் அனுமதியுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆறு மகளிர் காப்பகங்கள் பாதுகாப்பு இல்லங்கள் கீழ்குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

| | |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 1 |
| திருச்சி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| மொத்தம் | 6 |

**(அ) மீட்பு புகலிடங்கள்**

இச்சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கென 6 மீட்பு புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்புகலிடங்கள் அந்தந்த இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து செயல்படுகின்றன.

**(ஆ) மணமாகாத தாய்மார்கள் இல்லம்**

பாலியல் கொடுமைகளால் பாதிப்புள்ளாகி மகப்பேறடைந்த பெண்கள் மற்றும் சிறுமியர் கீழ்குறிப்பிட்டுள்ள இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:



2005 மார்ச் 18]

1. அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் ஸ்ரீசதனா, சென்னை–4

2. புனித பிரான்சிஸ் சேவியர் மீட்பு இல்லம், அடைக்கலாபுரம், தூத்துக்குடி மாவட்டம் (தன்னார்வத் தொண்டு நிறுவனம்)

**(இ) குறுகியகால இல்லம்**

மேற்குறிப்பிட்டவை தவிர திக்கற்ற மகளிருக்கென சென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் "அபய நிலையம்" என்ற இல்லம் இயங்கி வருகிறது. இத்தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு பராமரிப்புத் தொகையாக ஒரு பெண் இல்லவாசிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.225/– வீதம் வழங்கப்படுகிறது.

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டிற்கு மேற்குறிப்பிட்ட இல்லங்களைப் பராமரிக்க ரூ.90.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) இடைவழி இல்லம்**

பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர் மற்றும் மகளிருக்கு புகலிடம், கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கும் விதத்தில் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 1999–2000 ஆம் ஆண்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஒரு இடைவழி இல்லம் 25 பெண்களைப் பராமரிக்கும் வகையில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2005–2006 ஆம் ஆண்டில், இடைவழி இல்லம் பராமரிக்க ரூ. 0.81 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.3 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்**

இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களின் சிறார்களின் பிரச்சினைகளை உளவியல் ரீதியாக ஆய்ந்து தகுதியுடைய அதிகாரிகளுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கின்றன.

சென்னை (2), மதுரை, வேலூர், மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கி வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இளைஞர் வழிகாட்டி நிலையங்களைப் பராமரிக்க ரூ.5.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.7 மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகள்/இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

1. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்கு திருமணக் கொடையாக ரூ.3,000/–மும் திருமண நாள் செலவாக ரூ.2,000/–மும் வழங்கப்படுகிறது.

2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு நல நிதி, விதிகள் 2002–ன்படி நிறுவனங்களுக்கான உள்ளமைப்பு வசதிகள், முற்றிலும் அநாதை/ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி உதவி ரூ.5,000/–க்கு மிகாமலும் மற்றும் பொருளுதவி ரூ.10,000/–க்கு மிகாமலும் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் வீடேகும் இல்லவாசிகளுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் நிறுவனங்களுக்கு தற்போதுள்ள கட்டடங்களில் சிறிதளவில் பழுதுபார்த்தல் மற்றும் கட்டுவதற்கு, நிறுவனத்திற்கு விளையாட்டு / பொழுதுபோக்கு சாதனங்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் ஏனைய செலவுகளுக்கு உதவும் வகையில் ஆண்டுக்கு ரூ.20,000/–க்கு மிகாமல், செலவிடப்படுகிறது. அரசு செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை தலைவராகக் கொண்டு, சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் உறுப்பினர் செயலாளராக கொண்டு, அரசு துணைச் செயலர்/கூடுதல் செயலர், நிதித் துறை உறுப்பினராகக் கொண்ட ஆட்சிக் குழு அமைக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட தொகை பராமரிக்கப்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நலநிதியில் இருந்து வீடேகும் மகளிர் காப்பகங்கள் /பிற்காப்பு நிறுவன இல்லவாசிகளுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5,000/–வரை, சிறுகடைகள், தையற்கடை, ஆடு, மாடு வளர்த்தல் ஆகிய தொழில்களைத் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 153 முன்னாள் இல்லவாசிகள் பயன் பெற்றுள்ளனர்.

3. மேலும் அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் கீழ்க்கண்ட பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும்



2005 மார்ச் 18]

இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க உதவுவதற்காக, கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது.

| வ. எண் | தொழிற் பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| 1 | தச்சு | 5 | 2000 |
| 2 | நெசவு | 2 | 1000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 3 | 1000 |
| 4 | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5 | கொத்து பிரிவு | 2 | 500 |
| 6 | தையல் | 10 | 2500 |
| 7 | பூத்தையல் | 2 | 1000 |
| 8 | உலோக வேலை | 4 | 1000 |
| 9 | பாய் நெசவு | 4 | 1000 |
| 10 | வீட்டு மின் இணைப்பு, கம்பி சுருள் சுற்றுதல் மற்றும் குழாய் பணிகள் | 2 | 1000 |
| 11 | மின் பற்றவைப்பு | 2 | 1000 |
| 12 | இரண்டு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் பழுதுப்பார்த்தல் | 2 | 2000 |

2005–2006 ஆம் நிதி ஆண்டில் இதற்காக ரூ. 0.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.8 குடும்ப உதவித் திட்டம்

பின்தங்கிய பொருளாதார சூழ்நிலை காரணமாக குழந்தைகள் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில், குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள், இல்லநீக்கம் செய்யப்பட்டு, குடும்பத்துடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற சிறார்களுக்கு, அவர்களின் கல்வியினைத் தொடரும்பொருட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அமைக்கப்பட்ட குழு மூலம், சிறார்கள் கண்டறியப்பட்டு அவர்கள்

## 6.4 கல்விப் பயிற்சி

[2005 மார்ச் 18

அனைத்து அரசு சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் / சிறப்பு இல்லங்களில் 8 ஆம் வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு அரசினர் சிறுவர் குழந்தைகள் இல்லம் மற்றும் சென்னை அரசினர் சிறுமியருக்கான குழந்தைகள் / சிறப்பு இல்லத்தில் 10 ஆம் வகுப்புவரை கல்வியுடன், கணிப்பொறி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

மேலும் சிறார்களின் உயர் கல்வியைத் தொடரும் பொருட்டு, வெளியில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள், பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் சார்ந்த பட்டப் படிப்பு ஆகியவற்றில் தற்போது கீழ்குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர்.

| | |
|---|---|
| மருத்துவ பட்டப்படிப்பு | 3 |
| பொறியியல் பட்டப்படிப்பு | 5 |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 47 |
| தொழில்நுட்பக் கல்வி | 6 |
| உயர்நிலைக்கல்வி | 21 |

2005–2006 ஆம் ஆண்டில் இத்துறை இல்லவாசிகளின் உயர் கல்வி செலவினங்களுக்காக ரூ.7.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.5 தொழிற்பயிற்சி

சிறார்களுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லங்களில் பின் குறிப்பிட்ட தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர்கள் மூலம் புத்தகம் கட்டுதல், மின் தச்சு, கொத்து வேலை, மின் சலவையகம், சோப்பு தயாரிப்பு, மெழுகுவர்த்தி தயாரிப்பு, பனியன் தைத்தல், தோல் பொருள் தைத்தல், தோட்டம் மற்றும் வேளாண்மை, இசைக் கருவி பயிற்சி, தையல், மின் விசைத்தறி நெசவு, மின்பற்ற வைப்பு, பாய் நெசவு, பூ தையல், மனையியல் பயிற்சி, வெற்றிட தின்காரை கற்கள் தயாரிப்பு மற்றும் சுகாதார துண்டுகள் ஆகியவற்றில் இல்லவாசிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி பின்வரும் குறுகிய காலத் தொழிற்பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன.



2005 மார்ச் 18]

1) மாவு அரைத்தல்
2) தானியங்கி பழுதுபார்ப்பு
3) திரை அச்சு கலை மற்றும்
4) கணினி பயிற்சி

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.8.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | முழுத்திறன் பெற்ற சிறார்கள் | ரூ.70/– மாதம் தோறும் ஒரு சிறாருக்கு |
| 2 | பாதி திறன் பெற்ற சிறார்கள் | ரூ.50/– மாதம் தோறும் ஒரு சிறாருக்கு |

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத்தொகை சேமிக்கப்பட்டு இல்லவாசிகளின் கைசெலவுக்கணக்கில் மாதம்தோறும் வரவு வைக்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.6 வெளியேறும் இல்லவாசிகளுக்கான தொழிற்பயிற்சிகள்

காஞ்சிபுரம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு நோக்குடன் தொழிற் பிரிவுகளில் இல்லநீக்கம் செய்யப்பட்ட இல்லவாசிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆத்தூர், அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவன வளாகத்தில் திரை அச்சுக்கலை, கணினி பயிற்சி (DTP) மற்றும் தானியங்கி பழுது பார்த்தல் ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 189 மாணவர்கள் பயிற்சி முடித்து பயன் அடைந்துள்ளனர்.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்துடன் இணைந்த தொழிற்கூடத்தில் மகளிருக்கு, ஊசி வேலைப்பாடு மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

[2005 மார்ச் 18

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.7 மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகள்/இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

1. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்கு திருமணக் கொடையாக ரூ.3,000/–மும் திருமண நாள் செலவாக ரூ.2,000/–மும் வழங்கப்படுகிறது.

2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப்பாதுகாப்பு நல நிதி, விதிகள் 2002–ன்படி நிறுவனங்களுக்கான உள்ளமைப்பு வசதிகள், முற்றிலும் அநாதை/ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி உதவி ரூ.5,000/–க்கு மிகாமலும் மற்றும் பொருளுதவி ரூ.10,000/–க்கு மிகாமலும் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் வீடேகும் இல்லவாசிகளுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் நிறுவனங்களுக்கு தற்போதுள்ள கட்டடங்களில் சிறிதளவில் பழுதுபார்த்தல் மற்றும் கட்டுவதற்கு, நிறுவனத்திற்கு விளையாட்டு / பொழுதுபோக்கு சாதனங்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் ஏனைய செலவுகளுக்கு உதவும் வகையில் ஆண்டுக்கு ரூ.20,000/–க்கு மிகாமல், செலவிடப்படுகிறது. அரசு செயலர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை தலைவராகக் கொண்டு, சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் உறுப்பினர் செயலாளராக கொண்டு, அரசு துணைச் செயலர்/கூடுதல் செயலர், நிதித் துறை உறுப்பினராகக் கொண்ட ஆட்சிக் குழு அமைக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட தொகை பராமரிக்கப்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நலநிதியில் இருந்து வீடேகும் மகளிர் காப்பகங்கள் /பிற்காப்பு நிறுவன இல்லவாசிகளுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5,000/–வரை, சிறுகடைகள், தையற்கடை, ஆடு, மாடு வளர்த்தல் ஆகிய தொழில்களைத் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 153 முன்னாள் இல்லவாசிகள் பயன் பெற்றுள்ளனர்.

3. மேலும் அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் கீழ்க்கண்ட பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும்



2005 மார்ச் 18]

இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க உதவுவதற்காக, கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது.

| வ. எண் | தொழிற் பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| 1 | தச்சு | 5 | 2000 |
| 2 | நெசவு | 2 | 1000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 3 | 1000 |
| 4 | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5 | கொத்து பிரிவு | 2 | 500 |
| 6 | தையல் | 10 | 2500 |
| 7 | பூத்தையல் | 2 | 1000 |
| 8 | உலோக வேலை | 4 | 1000 |
| 9 | பாய் நெசவு | 4 | 1000 |
| 10 | வீட்டு மின் இணைப்பு, கம்பி சுருள் சுற்றுதல் மற்றும் குழாய் பணிகள் | 2 | 1000 |
| 11 | மின் பற்றவைப்பு | 2 | 1000 |
| 12 | இரண்டு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் பழுதுப்பார்த்தல் | 2 | 2000 |

2005–2006 ஆம் நிதி ஆண்டில் இதற்காக ரூ. 0.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.8 குடும்ப உதவித் திட்டம்

பின்தங்கிய பொருளாதார சூழ்நிலை காரணமாக குழந்தைகள் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில், குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள், இல்லநீக்கம் செய்யப்பட்டு, குடும்பத்துடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற சிறார்களுக்கு, அவர்களின் கல்வியினைத் தொடரும்பொருட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அமைக்கப்பட்ட குழு மூலம், சிறார்கள் கண்டறியப்பட்டு அவர்கள்

பெற்றோர் வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200/– வீதம் நிதி உதவி அவர்களின் குடும்பத்திற்கு இல்லவாசியின் வீடேகும் நாள் வரை வழங்கப்படுகிறது. இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், தாமாகவே பயிலும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.9 சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்**

சிறார்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்குத் சிறார்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கும் வகையில் சென்னை, இந்திய குழுந்தைகள் நலச் சங்கம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று தமிழ்நாடு அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றது.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.1.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.10 சிறப்பு பராமரிப்பு மையங்கள்**

குழந்தைகள் இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு பெற்றோர்களின் அரவணைப்பு கிடைக்கும் வகையில் ஒரு சிறப்பு பராமரிப்பு மையம் (சிறுமியர்) தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் சென்னையில் நடத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்கீழ் 50 சிறுமியர் பயன்பெறுகிறார்கள்.

2005–2006 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.1.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.11 ஆதரவற்ற மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்களின் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம்**

குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு, இந்திய குழந்தைகள் நலச் சங்கம் (தமிழ்நாடு கிளை) வாயிலாக ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்த வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தற்காலிகப் பாதுகாப்பு மற்றும் புகலிடம் அளிப்பதுடன்,





குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் உரிய வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.12 சாலையோரச் சிறார்களுக்கான விரிவான திட்டம்**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் ஆறு நகராட்சிகளில் இயங்கி வந்த சாலையோர சிறார்களுக்கான இரவுப் புகலிடத் திட்டம், சாலையோர சிறார்களுக்கான விரிவான திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. பராமரிப்பு மானியமாக ரூ.65,500/- ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு என்ற விகிதத்திலிருந்து ரூ.1,35,000/- ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு உயர்த்தி வழங்க அரசாணை (ஒரு இல்லவாசிக்கு ஒரு மாதத்திற்கு ரூ.225/- வீதம் x 50 இல்லவாசிகளுக்கு) வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு புகலிடத்திலும் 50 சிறார்கள் பயன்பெறும் வகையில் உணவு, முறை சாராக் கல்வி, தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது.

கீழ்குறிப்பிட்ட இடங்களில் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 2 | திருநெல்வேலி | 1 |
| மதுரை | 2 | சேலம் | 1 |

சாலையோரச் சிறார்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், தொழிற்பயிற்சி மற்றும் முறைசாராக் கல்வி மற்றும் உணவு வழங்கும் வகையில் இப்புகலிடங்கள் அமைந்துள்ளன. 300 சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர்.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.8.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாலையோர சிறார்கள் நிலைமை குறித்து ஆய்வு**

ஆறு நகராட்சிகளில் இயங்கும் சாலையோர சிறார்கள் நிலைமை குறித்து ஆய்வு செய்ய ருபாய் 6 இலட்சம் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சாலையோர சிறார்கள் நிலைமை குறித்து ஆய்வு செய்ய சென்னை பல்கலைக்கழகத்தின் குற்றவியல் துறையின்கீழ் இயங்கும் இந்தியன்

சொசைட்டி ஆப் விக்டிம்மாலஜியிடம் ஆய்வுப்பணி மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**6.13 குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் (Childline)**

துன்பச் சூழ்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு உதவ குழந்தைகளின் இலவச தொலைபேசித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பெரு நகரங்களான சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றில் மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இலவச தொலைபேசி எண் 1098 நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சமீப காலங்களில் இத்தொலைபேசி வசதி அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு குழந்தைகளின் சேவைக்காக மாநிலம் முழுவதும் அமலாக்கப்பட்டுள்ளது.

**6.14 காணாமற்போன சிறார்களுக்கான தகவல் மையம்**

காணாமற்போன சிறுவர்களை அவர்களுடைய குடும்பத்துடன் சேர்க்க உதவும் வகையில் உயர் தொழில் நுட்பத் தகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இத்தகவல் மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.15 சமூகப் பாதுகாப்புத் துறை இணைய தளம்**

இத்துறை செயல்படுத்தும் குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டம், காணாமற்போன சிறார்கள் தகவல் மையம், சாலையோரச் சிறார்கள் நலத் திட்டம் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து பொது மக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இத்துறைக்கென இணைய தளம் மார்ச் 2002-ல் தொடங்கப்பட்டது. இந்த இணைய தளம் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தின் முகவரி : **www.tn.nic.in/socialdefence**

**6.16 திட்ட முன்னேற்றம் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு**

சமூகட் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத்திட்டங்களைக் (நிறுவனங்கள் மற்றும் நிறுவனம் சாராத பணிகள்)



கண்காணிக்க யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்கங்கள் நடத்துவதோடு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சாலையோரச் சிறார்களுக்கான நலத் திட்டங்களை இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.8.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6.17 பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் மற்றும் வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கான ஒரு பிரிவு**

பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் மற்றும் வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்காக ரூ.2.00 இலட்சம் செலவில் இயக்ககத்தில் ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

**6.18 மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு வணிக ரீதியில் பாலியல் கொடுமை செய்யப்படுவதைத் தடுப்பது தற்போது மாநிலத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- மாநில அளவில் தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் நவம்பர் 2001-ல் ஒருங்கிணைப்புக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இதுவரை ஆறு முறை கூட்டம் நடத்தப்பட்டு கடத்தலைத் தடுக்க முக்கியமான பல்வேறு நடவடிக்கைகளும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இதே போல மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது.

- ஒவ்வொரு கிராமத்திலும் இப்பிரச்சினைகளை மேற்கொள்ளவும்/ தடுக்கவும் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் இக்குழுமங்களுக்கு தலைவர் ஆவர். பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுப்பதற்காக இம்மூன்று அடுக்குத்திட்டம் தோற்றுவிக்கப்பட்டதில் தமிழ்நாடு முதன்மை வகிக்கின்றது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் மற்றும் வணிக ரீதியாக பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் மற்றும் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் பணிகளை மேற்பார்வையிடுவது மற்றும் அவை எவ்வாறு செயல்படவேண்டும் என்பதற்கான விதிமுறைகளை ஏற்படுத்தி கூராய்வு செய்வதற்காக தமிழக அரசின் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**2005–2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல் சமூகப் பாதுகாப்பு**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | சென்னை, பாலவிஹார் நடத்துகிற மன நலம் குன்றிய வயது வந்த மகளிர் இல்லத்தின் பணிக்களரி கட்டடத் திற்கான பராமரிப்பு மானியத்தை அதிகரித்தல். | 0.50 |
| 2 | வேலையை நோக்கமாகக் கொண்ட வாழ்க்கைத் தொழிற் பயிற்சி வகுப்புகளைத் தொடங்குவதன் மூலம் ஆத்தூர், செங்கல்பட்டு ஆகிய இடங்களிலுள்ள பிற்காப்பு இல்லங்களை வலுப்படுத்துதல் | 2.80 |
| 3 | மதுரை வட்டார அலுவலகத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்றை வழங்குதல் | 1.00 |
| 4 | 3 அரசு நிறுவனங்களிலுள்ள துயிற்கூடங்களில் மின் இணைப்புகளைச் சீரமைத்தல் மற்றும் மின் விசிறிகளைப் பொருத்துதல் | 4.50 |



| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 5 | சென்னை, அரசு கண்காணிப்பு இல்லத்திலும், வேலூர், அரசு மகளிர் பிற்காப்பு இல்லத்திலும் மின் இணைப்புகளைச் சீரமைத்தல் | 2.60 |
| 6 | தஞ்சாவூர், அரசு சிறார் இல்லத்திலுள்ள பணியாளர் குடியிருப்புகளில் சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் | 10.00 |
| 7 | செங்கல்பட்டு, அரசு சிறார் இல்லத்திலுள்ள பணியாளர் குடியிருப்பிற்கு மின் இணைப்பு வழங்குதல் | 0.84 |
| 8 | மத்திய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன் சென்னை–10-ல் உள்ள அரசு கண்காணிப்பு இல்லத்திற்கு உணவருந்தும் கூடம் கட்டுதல் | 5.72 |
| 9 | மத்திய அரசின் 50 சதவீத நிதியுதவியுடன் சென்னை–10-ல் உள்ள அரசு கண்காணிப்பு இல்லத்திற்கு சமையலறை கட்டுதல் | 4.00 |
| 10 | சேலம், அரசு கண்காணிப்பு இல்லத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் | 3.50 |
| 11 | இயக்ககத்திற்கு இரண்டு கணினிகளை வாங்குதல் | 1.00 |
| 12 | ஈரோடு, அரசு சிறார் இல்லத்தில் கண்காணிப்பாளர் களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் | 2.40 |
| 13 | திருச்சி, அரசு கண்காணிப்பு இல்லத்திற்குக் கட்டடங்கள் கட்டுதல் | 16.71 |
| 14 | தட்டப்பாறை, பஞ்சபள்ளி ஆகியவற்றில் உள்ள அரசு சிறார் இல்லத்தில் துயிற் கூடங்கள் கட்டுதல் | 10.00 |
| 15 | பயனற்றவையென கழிக்கப்பட்ட வண்டிகளுக்குப் பதிலாக 2 புதிய வண்டிகள் வாங்குதல் | 8.75 |
| 16 | மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு கண்காணிப்பு இல்லத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டுதல் | 5.00 |
| 17 | இயக்ககத்திற்கு அகத் தொலைபேசி வசதி செய்து கொடுத்தல் | 0.50 |

[2005 மார்ச் 18

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 18 | திறன் உருவாக்கம் / பாலியல் தொழிலை ஒழித்தல் மற்றும் பெண்கள், குழந்தைகள் ஆகியோரை பாலியல் ரீதியில் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் ஆகியவை குறித்த பாலின நேர்மை நெறி பயிற்சித் திட்டம். | 1.00 |
| 19 | இரண்டு குழந்தைகள் நலக் குழுக்களுக்கு அறைக்கலன்கள் வழங்குதல் | 0.50 |
| 20 | அரசு குழந்தைகள் / கண்காணிப்பு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லங்களுக்கு இணையாக அரசு கண்காணிப்பு இல்லங்கள் மற்றும் பிற்காப்பு இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்கான உணவு, உடை மற்றும் ஒப்பனைப் பொருட்களின் அளவை அதிகரித்தல். | 4.00 |
| | மொத்தம் | 85.32 |



2005 மார்ச் 18]

# அத்தியாயம் 7

## முதியோர் பாதுகாப்பு

### 7.1 முதியோருக்கான ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாட்டில் உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்ற முதியோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு சமூக நலத் துறையின் கீழ்க்கண்ட ஐந்து சமூக நலத் திட்டங்களை வருவாய்த் துறை மூலம் செயல்படுத்தி வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம் | (1–4–1962 முதல்) |
| 2. | ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் | (1-11–1974 முதல்) |
| 3. | ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் | (1–6–1975 முதல்) |
| 4. | ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் | (15–3 –1981 முதல்) |
| 5. | கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | (25–4–1986 முதல்) |

பயனாளிகளுக்கு மாதம் ரூ.200/– மாவட்டங்களிலுள்ள நலிந்தோர் நலத்திட்ட வட்டாட்சியர்களால் பணவிடை மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

### (1) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம்

இத்திட்டம் பிழைப்புதவி இல்லாமலும், காப்பாற்றுபவர் இல்லாமலும் உள்ள அனைத்து முதியோருக்கும் ஓய்வூதியம் வழங்க அறிமுகப்படுத்தப்பட்டு 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதரவற்ற நிலையில் உள்ள பார்வையற்றோர், தொழுநோய், மனநோய், பாரிசவாயு மற்றும் அவயம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெறக் குறைந்த பட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பு 65 ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெற பயனாளிகள் வருமானமின்றி இருத்தல் வேண்டும். பிச்சைக்காரர்களாக இருத்தல் கூடாது. 20 வயதுக்கு மேற்பட்ட மகனோ அல்லது மகனுடைய மகனோ இருக்கக் கூடாது. சொத்து மதிப்பு ரூ.5,000/–க்கு மேல் இருக்கக் கூடாது.

65 வயதுக்கு மேல் உள்ள பயனாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு முதியோர் ஓய்வூதியம் ரூ.200/– வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தொகையில் மாதம் ஒன்றுக்கு ரூ.75/– மத்திய அரசின் பங்காகும். 4,30,300 பயனாளிகளுக்கு மத்திய அரசு உதவித் தொகை வழங்குகிறது. மீதமுள்ள பயனாளிகளுக்கு ஓய்வூதியமான ரூ.200/– முழுவதும் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 31–1–2005 தேதியில் 4,68,398 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

**(2) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்**

உடல் ஊனம் 50 சதவிகிதம் அளவும் அதற்கு மேலும் உள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் பயன்பெறக் குறைந்தபட்ச வயது வரம்பு 45 ஆகும். முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழுவை ஏற்படுத்தி, அக்குழு ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப அவர்களுக்கு வயது வரம்பின்றி ஓய்வூதியம் வழங்க அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தொழுநோயாளிகளும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 31–1–2005 தேதியில் பயனடைவோர் எண்ணிக்கை 58,618.

**(3) ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்**

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆதரவற்ற விதவைகளும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வயது வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற விதவைகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைய தகுதி பெற்றவர்கள் ஆவர். முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31–1–2005 தேதியில் பயனடைவோரின் எண்ணிக்கை 4,79,680.



**(4) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்**

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் பயனடைய பயனாளிகளின் குறைந்தபட்ச வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31–1–2005 தேதியில் பயனடைவோரின் எண்ணிக்கை 91,446.

**(5) கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம்**

இத்திட்டம் கணவனால் கைவிடப்பட்டு சட்டப்படி பிரிந்துவாழ நீதிமன்றத்தின்மூலம் சான்று பெற்றவர்கள் அல்லது குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு மேல் கணவரைப் பிரிந்து வாழும் ஆதரவற்ற 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் தகுதியின் அடிப்படையில் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறலாம். முதியோர் ஓய்வூதியத் திட்டம் (பொது) திட்டத்திற்குரிய பிற நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 31–1–2005 தேதியில் பயனடைவோர் எண்ணிக்கை 80,758.

**பிற உதவிகள்**

**(1) இலவச வேட்டி / சேலை வழங்குதல்**

மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின்போது ஆண்களுக்கு இலவச வேட்டியும், பெண்களுக்கு இலவச சேலையும் வழங்கப்படுகிறது.

**(2) முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல்**

முதியோர் ஓய்வூதியம் பெறும் அனைத்துப் பயனாளிகளும் 15–9–1991 முதல் கீழே கண்ட அளவுகளின்படி இலவச அரிசி பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 4 கிலோ இலவச அரிசி வழங்கப்படும்.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒருமுறை தலா 2 கிலோ இலவச அரிசி வழங்கப்படும்.

### 7.2 சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு முதியோர் ஓய்வூதியம் மற்றும் இதர ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டங்களின்கீழ் உதவித் தொகை வழங்குதல்

26-12-2004 அன்று சுனாமி இராட்சத அலைகள் தமிழ்நாட்டைத் தாக்கியதன் விளைவாக பொருளீட்டும் குடும்ப காப்பாளராக இருந்த கணவர்களை இழந்து பல பெண்கள் விதவைகளாகவும் ஆதரவற்றோராகவும் மாறியுள்ளனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னயாகுமரி மாவட்டங்களை சேர்ந்தவர்கள் அடைந்துள்ள பாதிப்பினைக் குறைத்து, தங்களது இயல்பான வாழ்க்கையினை மீண்டும் பெறும் வகையில் முதியோர் / ஆதரவற்றோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள நபர்களுக்கு கீழ்க்காணும் திட்டங்களில் உதவித்தொகை பெற அரசு ஆணையிட்டுள்ளது.

1. முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம்
2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்
3. ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்
4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்
5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்.

மேற்கண்ட ஆணையின்படி, மாவட்ட ஆட்சியர்கள் போர்க்கால அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்கியுள்ளனர். மேற்கண்ட 5 திட்டங்களில் 364 நபர்கள் இதுவரை பயனடைந்துள்ளனர்.

### 7.3 அன்னபூர்ணா திட்டம்

தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் இடம் பெறக் கூடிய ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கு அன்னபூர்ணா திட்டத்தின்கீழ்



2005 மார்ச் 18]

மாதந்தோறும் 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. இம்மாநிலத்திற்கு பயனாளிகளின் எண்ணிக்கை 71974 என மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென மைய அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் இத்திட்டத்தை செயல்படுத்தும் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மைய அரசால் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையரால், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உப ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தேசிய முதியோர் ஓய்வூதியதாரர்களிலிருந்து, இத்திட்டப் பயனாளிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளிலிருந்து மாறுபட்டு வேறு வண்ணங்களில், தனியாக, அடையாளக் குறியீட்டுடன் குடும்ப அட்டைகள் அச்சிட்டு இத்திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### 7.4 தேசிய குடும்ப நலத் திட்டம்

இத்திட்டம் தமிழ்நாட்டில் 02-10-1995 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் குடும்பங்களில் குடும்பத் தலைவர் இயற்கை அல்லது விபத்து மூலம் இறந்து விட்டால் அக்குடும்பத்தின் காப்பாளருக்கு ரூ.10,000/- நிவாரணத் தொகையாக மத்திய அரசு மூலம் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நலிந்தோர் நிவாரணத் திட்டம் மற்றும் தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வரும் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு ரூ.15,000/- நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேற்காணும் தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ. 10,000/-மும், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.5,000/-மும் ஆகும். இத்திட்டம் 2002-2003 முதல் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு திட்டத்தின்கீழ் மாற்றப்பட்டுள்ளது.

2005-2006 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ.0.85 கோடியும் தமிழ்நாடு நலிந்தோர் நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.63.31 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 18

## 2005-2006 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்

### தலைமைச் செயலகம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | மொத்தம் |
| 1 | சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறைக்கு ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்றை வாங்குதல் | 1.52 |

### தொகுப்புரை

வலுவான மன உறுதியுடனும், அசையாத நம்பிக்கையுடனும், எடுத்த கடமையை திறம்பட நிறைவேற்றும் ஒருமித்த குறிக்கோளுடனும் செயல்படுவதன் மூலம் எதனையும் சாதிக்க முடியும் என்பதற்குச் சான்றாக அமைந்த மகத்தான வெற்றிகளைக் கண்ட குறிப்பிடத்தக்க ஆண்டாக கடந்த 2004 ஆம் ஆண்டு அமைந்திருந்தது என, மேதகு ஆளுநர் அவர்கள் ஜனவரி 2005 மாதத்தில் சட்டப் பேரவையில் ஆற்றிய உரையில், குறிப்பிட்டுள்ளார்கள். இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக நமது தமிழகத்தை சிறப்புறச் செய்யும் உன்னத நோக்கோடு, யாராலும் எண்ணிப்பார்க்கவும் இயலாத வகையில் வீரத்தோடும் துணிச்சலோடும் மன உறுதியோடும் அல்லும் பகலும் அயராது தனது உழைப்பை வழங்கி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையே இப்பெருமை சாரும்.

தமிழகத்தில் வறுமையில் வாடும், மகளிர், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் நலிந்த பிரிவினருக்கென பல சீர்மிகு திட்டங்களைத் தீட்டி அவற்றை செவ்வனே நிறைவேற்றுவதோடு, சுனாமிப் பேரலைகளால் பெற்றோர்களை இழந்து நிராதரவாக நிற்கின்ற குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் திருமணம் ஆகாத பெண்கள் ஆகியோருக்கு உடனடியாக குழந்தை காப்பகங்களும், சேவை இல்லங்களும் ஏற்படுத்துமாறு உத்தரவிட்டு, அவர்களுடைய எதிர்காலத்தை



2005 மார்ச் 18]

உறுதிபடுத்தும் வகையில் நிதி உதவிகளும் அளித்து அவர்களின் வாழ்வில் வளம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அவர்களின் அறிவுரையை நமது இலட்சியமாகக் கொண்டு தொடர்ந்து செயலாற்றுவோம்.

நாம் அனைவரும் உறுதியோடும், கட்டுப்பாட்டோடும், கடமை உணர்வோடும், கருத்தொருமித்து செயல்பாட்டால், வளமிக்க தமிழகத்தை உருவாக்க நல்ல அடித்தளம் அமைக்கப்படுவதோடு, அனைத்து பிரிவினரும் முன்னேற்றம் அடைவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க இயலும் என உறுதியாக நம்புவோம். இக்கனவுகள் நனவாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் நாம் அல்லும் பகலும் அயராது உழைத்திட உறுதி கொள்வோம்.

22264
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.